சிவமயம்

கணபதி துணை

ஸ்காந்த புராண கீர்த்தனை.

இஃது

இராமநாதபுரம் சிவகங்கை

என்னும் உபயஸமஸ்தான வித்துவான்

பெருங்கரை

பிரம்மஸ்ரீ கவிகுஞ்சர பாரதி

அவர்களால் இயற்றப்பட்டு

அவர்கள் பேரன்

சென்னை ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேடர்

N. கோடீசுவரய்யர், B.A.,

அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

Madras:

PRINTED AT THE SCOTTISH PRESS.

1914

உ

பதிப்பித்தோர்

முகவுரை

ஸ்காந்தபுராண கீர்த்தனை யென்ற இவ்வினிய தமிழ்நூலை யெழுதிய மாதா மகராகிய பிரம்மஸ்ரீ கவிகுஞ்சர பாரதியவர்கள் தமது ௰௫-வது வயதில் பாடத்தொடங்கி கூ௰-வது வயதில் பாடி முடித்தனர். இவரிதை யியற்றிய பிறகு சுமார் ௨௰௭ வருஷகாலம் ஜீவித்திருந்தும் இந்நூலை யச்சிட்டதுமில்லை. இயற்கையில் ஒழிந்த சுபாவமுடைய இவர் இது பாடிய பிறகு பக்தி முதிர்ச்சியையும் அதிவிவேகத்தையு மடைந்து வெளியேறிப்பல இடங்களிற் சஞ்சாரஞ் செய்து [illegible] டையுந்தனிலாபத்தையுங் கீர்த்தியையும் ஒரு பொருட்டா எண்ணாமல் தமது [illegible] தமது கிரகத்திலேயே ஸதாபூஜையும், பஜனையும், செய்துக்கொண்டு நிச்சிந்தையா யிருந்து விட்டார்கள். தவிரவும், இந்நூலை இயற்றுங் காலத்தில் தன் மாமனார் கவிகுஞ்சர பாரதியவர்கள் கூடவே யிருந்து ஸமயோசிதமான வர்ணமெட்டுகளை யமைத்து பாரதியவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தை யளித்து இந்நூலைப்பாடி முடிக்கும்படி செய்த வரும் எனது சிறியதாயார் புருஷனுமான பிரம்மஸ்ரீ ஆளுடையார் கோ [illegible] ஆத்மநாத பாகவதரவர்களும் எனது [illegible] சிறிய தாயார் குமார பிரம்மஸ்ரீ குஞ்சரமையரவர்களும் [illegible] இக்காந்தபுராண கீர்த்தனை இதிலுள்ள நவரஸங்களும் புலப்படும்படி [illegible] தமிழ் நாடுகளிலெல்லாம் பரவச்செய்து வந்தமையால் இதை அச்சிடாத குறைவு விசேஷமாய் தோற்றவில்லை.

நான் இந்நூலை அச்சிட முன்பலதடவைகளில் முயன்றும் பலவகை அசௌகரியங்களாலும் அவகாச மின்மையாலும் அம்முயற்சி பயன்படவில்லை. இப்படி யிருக்க, ஆத்மநாத பாகவதரவர்களும் சென்ற தை மாதத்தில் தமிழபிமானிகளும் ஸங்கீத [illegible] சர்களும் மிகவிசனப்படும்படி தேகவியோக மடைந்தார். சுமார் ஐந்தாறு வருஷங்களுக்கு முன் இவரும் குஞ்சரமையரும் சென்னைக்கு வந்து இதைப்பாடிப் பிரசங்கித்ததைக் கேட்டுப் பரவச முற்றிருந்த சென்னை ஹைகோர்ட்டு மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ குப்புஸாமி ஐயரவர்கள் ஆத்மநாத பாகவதர் காலமானதைக் கேட்டு அதிவியாகூல மடைந்து இந்நூலையச்சிடுவதே இதற்கொரு வகையான பரிகாரமென்று நினைத்து தான் முன்பணமும் போடுவதாகச் சொல்லி இதை யச்சிடும்படி யென்னைக் கேட்டுக் கொண்டார். வெகு காலமாய் நிறைவேறாதிருந்த என் மனோபீஷ்டம் பூர்த்தியாவதற்கு இதுவே தக்க சமயமென்று கருதி அதற்

கிணங்கி இதை யச்சிடத் துணிந்தேன். மனுஷகாயத்தின் நிலையின்மையைக்கருதி இக்காரியத்தைக் காலத்தாழ்வின்றிச் செய்து முடிக்க வேணுமென்கிற எண்ணத்தை மேற் கொண்டு என்னிடமிருந்த பழைய சுத்தப் பிரதிப்படி இதை யச்சிடலானேன்.

என்னுடைய பாட்டனார் கவிகுஞ்சர பாரதியவர்கள் பக்தி பூர்வகமாயு மனதுருகியும் பாடிய இச்சாந்தபுராண கீர்த்தனை பாடக் கேட்கும் சிலர்க்கன்றி உலகத்தார்க்கு எளிதிற் பயன்படாமற் போகின்றதே யென்பதைத் தம்மனத்தில் மிக உணர்ந்து இதை யச்சிடுவதற்கு வேண்டிய பொருளுதவியையும் மனோவாக்குக் காயங்களால் வேண்டிய இதர சகாயங்களையும் செய்து வந்த ம-ா-ா-ஸ்ரீ K. குப்புஸாமி ஐயரவர்களும், இதை யச்சிட்டுத்தர ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய சகாயத்தைச் செய்த ஸ்காட்டிஷ் பிரஸ் ப்ரோப்ரைட்டர் ம-ா-ா-ஸ்ரீ T. V. துளஜாராமாராயரவர்களும், அச்சிடுங் காலத்தில் படித்துப் பார்த்துப் பிழைகளை யாராய்ந்தும் இன்னும் பலவகையிலும் உதவி செய்த தஞ்சை கல்யாண சுந்தரமையரவர்கள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ K. ராமரத்னமையரவர்களும், சிரமப்பட்டுத்தாமே அச்சுப் பிழைகளைப் படித்துப் பார்த்துத் திருத்தியும் எனக்குச் சில சந்தேகங்களை நீக்கியும் உதவிய என் நண்பர் கம்பராமாயணப் பிரசங்கி பிரம்மஸ்ரீ வசிஷ்ட பாரதியவர்களும், பிரியத்தோடு செய்த உபகாரத்தை ஒருபொழுது மறக்காம லிருத்தலன்றி அவர்களுக்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு யாதுளது? இதை அச்சிடுவதில் அதிசிரத்தையும் எடுத்துக்கொண்டு வெகு நேர்த்தியாக அழகாயும் அச்சிட்டுத்தந்த ஸ்காட்டிஷ் பிரஸ் T. N. ரத்தின முதலியார் முதலானவர்களுக்கு நான் உபசாரம் சொல்லி முடியாது. இதில் இவ்வாறு உதவியவர்கள் ஒவ்வொருவரும் பிரயாசையெடுத்துக்கொண்டு கலியுகவரதனான சுப்பிரமணியக் கடவுளது பூர்ணகிருபைக்குப் பாத்திரராகி விட்டபடியால், இவர்களுக்கு என் உபசார வசனமுமிகையே.

இதை விரைவில் அச்சிட்டு முடிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு ஆபீஸ் வேலை செய்தது போக எஞ்சிய சொல்ப நேரங்களில் இதை நான் பதிப்பித்து வந்ததால் இதில் ஏற்பட்டிருக்கும் பல பிழைகளைக் கற்றறிந்தோர் தெரிவித்தால் அவர்களுக்கு என் வந்தனத்தை யளிப்பதுடன் அப்பிழைகளையும் மறுபதிப்பில் திருத்திவிடுகிறேன்.

சென்னை,
6—11—1914

N. கோடீசுவரன்.

ஸ்காந்த புராண கீர்த்தனை.

முகவுரை.

இயல், இசை, நாடகமென்னுந் தமிழ்ப் பகுதி மூன்றனுள் இந்நூல் நாடகத் தமிழைச் சார்ந்தது. இக்காலத்து நாடகத்தமிழ் நூல்களில் முதன்மைபெற்று விளங்கும் அருணாசலக் கவிராயர் இயற்றிய இராமநாடகத்தைப் போலவே இதுவுமொரு சிறந்தநூல். கவிச்சக்ரவர்த்தி கம்பர் பதினாயிரங் கவிகளாற் செய்த இராமாயணம் என்னும் பெரிய காவியத்தை இருநூற்றைம்பது கீர்த்தனங்களிலும் இருநூற்றைம்பது விருத்தங்களிலும் அடக்கி எளிய உலக நடையைத் தழுவிய நாடகத்தமிழில் அருணாசலக் கவிராயர் இயற்றியவாறு, அதே பதினாயிரம் பாடல்களாற் கச்சியப்ப சிவாசாரியர் இயற்றிய கந்தபுராணமென்னும் விரிந்தநூலை கவிகுஞ்சரபாரதியவர்கள் இருநூற்றிநாற்பது கீர்த்தனங்களிலும், முந்நூறு விருத்தங்களிலும் கதாபாகத்தைச் சிறிதும் விடாது சுருக்கிச் சொற்சுவை, பொருட்சுவை, நிரம்ப மிகவழகாய்ப் பாடியிருக்கின்றனர்.

தமிழில் கீர்த்தனரூபமான நூல்கள் சிலவே; அவற்றுள்ளும் நாற்பொருட் கேதுவாகிய புராண காவியங்களைத் தழுவியுள்ளன மிகச்சொற்பம். முத்துத் தாண்டவர், மதுரகவி இவர்கள் பாடிய தனிப்பதங்களும், கீர்த்தனங்களும், கோபால கிருஷ்ண பாரதியின் நந்தன்சரித்திரமும், வேதநாயகம்பிள்ளையின் சமரஸ கீர்த்தனங்களுந்தவிர, பெருங்காவியத்தைப் பற்றியுள்ளன அருணாசலக் கவிராயர் பாடிய இராமாயணக்கீர்த்தனமும், இராயபுரம் சுப்பராயரவர்கள் செய்த திருவிளையாடற்கீர்த்தனமும், மஹாவைத்தியநாதையரவர்கள் தமயன் இராமஸ்வாமி ஐயரவர்களியற்றிய பெரியபுராணக் கீர்த்தனமுமே. இம்மூன்றனுள் அருணாசலக்கவிராயரியற்றிய இராமநாடகம் இவ்வகை நூல்களுக்கு ஆதிநூலாகவும், சொன்னயம், பொருணயம், கற்பனாவிசேஷம், பிராஸபுஷ்டி முதலிய நிரம்பியதாயும், உலகநடையை மிகத்தழுவிக் கற்றோர், கல்லாதவர், ஸ்திரீகள், பாலர் யாவர்க்கும் எளிதிற் பொருள் விளங்கும் இனிய திராக்ஷாபாகத்தில் அமைந்ததாயு மிருக்கின்றது. ஆனாலிப்பொழுது இவ்வரிய நூலின் கௌரவத்திற்குத் தகுந்த நல்லபதிப்பில்லை. இக்குறை எப்பொழுது நீங்குமோ? அருணாசலக்கவிக்குப் பின்பு இவ்வகை நூல் இயற்றியவர்களுள் அவருடைய தமிழ் நடையைப் பெரும்பாலுந்தழுவியவர் நமது கவிகுஞ்சர

பாரதியவர்கள். இவர்செய்த இக்காந்த கீர்த்தனங்களும், விருத்தங்களுடி இராம நாடகக் கீர்த்தனங்களையும், விருத்தங்களையும் மேற்கூறிய அம்சங்களில்மிகவும் ஒத்திருப்பினும் இவருடைய பாடல்களின் சொல்லுறுதியும், இலளிதமும், மதுரமும் கேட்போர்க்கு ஒரு தனியின்பத்தை விளைவிக்கத்தக்கன. கவிகுஞ்சர பாரதியவர்கள் ஸம்ஸ்கிருதம், தமிழ், ஸங்கீதம் இம் மூன்றிலும் அதிபாண்டித்ய முடையவராயும், தவிரவும் பொன்மலருக்கு வாஸனையும் பொருந்தியவாறு சிவபக்தியுடையவராயும் இருந்தமையால் இவ்விசேஷங்களை இந்நாலில் ஒருங் கேகாணலாம்.

இதுவன்றிப் பெருங்காவியங்களுக்கு இன்றியமையாத நவரஸங்களும் இதில் அமைந்திருக்கின்றன. இந்நூலைத் தமது மாமனார் கவிகுஞ்சர பாரதியவர்கள் காலத்தும் பிந்தியும் பலவிடங்களிலும் பாடிப் பிரஸங்கித்துத் தென்னாட்டாரில் இதனிடத்தியாவர்க்கும் மதிப்பும் அபிமானமும் உண்டாகும்படி செய்த சிறந்த ஸங்கீதவித்வானான ஆளுடையார்கோயில் ஆத்மநாத பாகவதரவர்கள் இக்கீர்த்தனங்களின் உட்பாவங்களையெல்லாம் நன்கு புலப் படுத்திப் பாவசராய்ப் பாடக் கேட்டவர்களுக்கு இதை எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. சிலமாதங்களுக்குமுன் இவர் தேகவியோகமானது இந்நாற் கொரு பெருங்குறையே.

அந்யபாஷாபிமானத்தாலோ, அறியாமையாலோ, தமிழ்ப்பாஷையிலும் படிக்கத்தக்க நூல்களும், அறியத்தக்க விஷயங்களும் உளவோவென்று நம் மவருஞ் சந்தேகிக்கும் இக்காலத்தில் இத்தகைய நூல்களைத் தமிழ்ச் சங்கங் களிலும், கான ஸபைகளிலும் பாடிப் பிரஸங்கிக்கச் செய்தால் அதனாலேனுங் கேட்போர்க்கு நம் தமிழ்ப்பாஷையினிடத்து அன்புதித்து, இதரத் தமிழ்நூல் களையும் படிக்க விரும்பும்படி அவரைச் செய்யுமென்று நம்புகிறேன்.

இதுவுமன்றி, கலியுக வரதனான ஷண்முகக் கடவுளிடத்து மெய்யன்பு பூண்ட பக்தநேயர்களுக்குச் சூரன் முதலிய அவுணரை அமராடிக் குமைத் தழித்து இந்திராதி தேவர்களின் இடுக்கண்களைந்த குமரவேளின் திருப் புகழை மனமகிழ்ந்து போற்றிப்பாட இந்நூல் ஒரு பெரிய சாதனமாயிருக் கும். இதுவே, ஏட்டுப்பிரதிகளினின்றும் இதைப் பெயர்த்தெழுதி ஒழுங்குப் படுத்தி அச்சியற்றிய கோடீச்சுர ஐயரின் முக்கிய நோக்கம்.

இந்நூலைத் தாம் சிரமப்பட்டுக் கண்சலிக்கப் பலகாற் படித்தனுப வித்த இன்பத்தைப் பிறர் எளிதிலடைய வேண்டுமென்ற விருப்பமும் இப் பிரயத்தனத்தில் இவரைத் தூண்டிற்று.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

சிலகாலத்துக்குமுந்தி நான், இந்நூலின் ஒருபகுதியாகிய வள்ளிபரிணயத்தைக் கோடீசுவர ஐயர் ஓரிடத்திற் பாடக்கேட்டேன். அன்றே எனக்கு இந்நூலில் ஓரபிமானம் பிறந்தது. பிறகு இது அச்சிடப்படவில்லையென அறிந்து இதையச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்ற எண்ணமும் உதித்தது. ஆனால் கோடீசுவர ஐயர் பரிச்சயம் அப்பொழுது எனக்கில்லாமையால் அவருடன் கலந்து என்னபிப்பிராயத்தை அவருக்குத் தெரிவிக்கக்கூடவில்லை. ஆயினும் அதேகாலத்துக் கோடீசுவர ஐயரின் நெருங்கிய நண்பர்கள் சிலர் மனதில் குருநாதன் திருவருளின் பிரேரணையால் இதேயெண்ணந் தோன்றி அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தார்கள். அச்சிடக் கொடுபட்டு ஒரு பாகம் அச்சிலிருந்தது. அப்பொழுது நான் அதை, இப்பிரயத்தனத்துக்கு முக்யகாரணரும், எனது பால்யநண்பருமான ஹைகோர்ட் மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ கே. குப்புஸாமி ஐயரவர்களாலறிந்து என்சம்மந்தமின்றியே என்னெண்ணம் இவ்வளவு சீக்கிரம் நிறைவேறினதை நினைந்து மிகச் சந்தோஷமுற்றேன். அதுமுதல் இதையச்சிடும்வேலைக்கு என்னாலியன்றதைச்செய்து கோடீசுவர ஐயருக்கு ஊக்கமளித்து வந்தேன் இதுபற்றியே இந்நூற்கு முகவுரை யானெழுதவேண்டுமென்று கோடீச்சுர ஐயர் விரும்பினார். இக்கௌரவத்திற்குரிய யோக்யதை சிறிதுமில்லேனேனும் மறுத்தற்குமனமிலாதிசைந்து இதை எழுதினேன்.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல் ஒருவித சம்மந்தமும் சிரமுமின்றி என்பெயரும் இந்நூலோடு சேர்ந்துலவும்படிசெய்த திருவருளைத் தியானித்து வணங்குகின்றேன்

பரசை,
1—10—1914

K. இராமரத்நம்.

நூலாசிரியர் வரலாறு

"ஸ்காந்தபுராண கீர்த்தனை" என்ற இவ்வருமையான தமிழ்நூலைச் செய்தருளிய ஸ்ரீமான். கவிகுஞ்சர பாரதி அவர்கள் சென்ற நூற்றாண்டில் மதுரை ஜில்லாவில் மிகக் கியாதிபெற்று விளங்கிய ஒரு மகாவித்வான்.

இவர் 1810௵ (ஆங்கிரச௵ ஆடிமீ) இராமநாதபுரம்ஜில்லா சிவகங்கை சமஸ்தானத்தைச்சேர்ந்த "பெருங்கரை" என்னுமூரில், சுப்பிரமணியபாரதி என்பவருக்கு அருமைப்புதல்வராகப் பிறந்தார். இவருடைய முன்னோர்கள் ஆதியில் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து, பிறகு சுமார் 250-வருஷத்திற்கு முந்தி இராமநாதபுரம் மகாராஜா இரகுநாத சேதுபதியவர்கள் அவர்களுக்குத் தானமாகக்கொடுத்த "பெருங்கரை" யில் குடிப்புகுந்து தங்கியவர்கள். சீலமு மொழுக்கமுஞ் சிறந்து விளங்கிய இவ் வேதவித்துக்களின் பரம்பரையில் தேர்ந்த பலவித்வான்களிருந்ததாகத் தெரிகிறது. இவர்களுள் கோடீசுவர பாரதியென்று தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் மிகக் கல்வித் தேர்ச்சிபெற்ற வித்வானொருவரிருந்தார். அவருடைய புத்திரராகிய சுப்பிரமணிய பாரதியென்றவர்க்கு வெகுகாலம் புத்ரசந்ததியில்லாக் குறையால் மிக மனத்துயருற்று, தமதூருக்கருகிலுள்ள கொடுமளூரில் கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ குமரகுருபர சுப்பிரமணியஸ்வாமி சந்நிதிக்கு தம் பத்னியோடு விரதம் நடந்து விரதமிருந்து, பூஜித்து வணங்கிய மெய்யன்புக்குவந்த முருகக் கடவுளது திருவருளின் பெரும்பயனாய் ஓர் புதல்வனையடைந்தார். அவரே நமது கவிகுஞ்சரபாரதியவர்கள்.

இவர் தக்கபருவத்தில் கல்விகற்க ஆரம்பித்து, அதிபால்யத்திலேயே தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் மிக்கக் கல்வித்திறம் வாய்ந்து, கவிபாடுவதில் அதிபாண்டித்யம் பெற்று, ஸங்கீதத்திலும் நல்ல தேர்ச்சியுற்றிருந்தார். தவிரவும், இவர் அவ்விளமைப் பருவத்திலேயே, அக்காலத்தில் பதஸாகித்யம் செய்வதில் மிகப்பிரபலமடைந்திருந்த மதுரகவி பாரதி அவர்களோடு புத்ரமித்ரராக நெருங்கிப் பழகிப் பயின்று வந்ததனால், இவருக்குப் பன்னிரண்டாம் பிராயத்திலேயே பதங்கள், கீர்த்தனங்கள் பாடும் அற்புதசக்தி உண்டாயிற்று. ஆனால் இவ்வாறு தமக்குக் கிடைத்த அருள்வாக்கைத் தங்கள் குலதெய்வமான ஸ்ரீ. சுப்பிரமணியஸ்வாமிமீதும், ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரேசுவரர்மீதும், இதர தெய்வங்கண்மீதும் தோத்திரப்பாக்களும், கீர்த்தனங்களும், பிரபந்தங்களும் பாடுவதில் உபயோகித்தாரேயன்றி, நரஸ்துதியில் வினியோகிக்காமலிருந்தது, மிகவும் மெச்சிப்பாராட்டற்பாலது. இதற்கு முக்கிய காரணம் இவரது ஆழ்ந்து தெளிந்த தெய்வபக்தியே.

இவரது பதினெட்டாவது வயதில் இவருக்குக் கடுமையான ஜ்வரநோயுண்டாய், அதனால் தேகமிகமெலிந்து, பலஹீனமுற்றுச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். இப்படியிருக்கையில் ஓரிரவில் அவ்வூர்க் கிராம தேவதையான தருமசாஸ்தா இவர்முன்தோன்றி, தன்மீது ஒரு பிரபந்தம் பாடினால் ஜ்வர நோய் தீருமென்றருளியதாக ஓர் கனவு கண்டார். மறுநாட் காலையில் விழித்தெழுந்ததும் தமக்கு முன்னுண்டாயிருந்த அசக்தி மிகக்குறைந்து, மனோதைரியமும் உற்சாகமும் அதிகரித்திருக்கக்கண்டு அவை தாம் கனவிற் கண்ட தருமசாஸ்தாவின் திருவருட்பயனெனத் தெளிந்து, அக்கடவுளர் ஆக்ஞாபித்தவாறே அவர்மீது "பள்" ஒன்று இரண்டுதினத்திற் பாடிமுடித்து, அவருக்கு அபிஷேக பூஜைகள் சிறப்பாய் நடத்தி, அவர் சந்நிதியில் தாம்பாடிய பிரபந்தத்தை அரங்கேற்றிச் சமர்ப்பித்தார். உடனே ஜ்வரநோயும இவரை அடியோடு விட்டுநீங்கியது. அதுமுதல் இவர் காலத்திலும், பிறகும் இவர் சந்ததியார்கள் வருஷந்தோறும் அத்தருமசாஸ்தாவின் சந்நிதியில் இப்பள்ளை நாடகமாக நடத்தி வருகிறார்கள். இவ்வாறு தெய்வ பக்தியும், கல்வித்திறமும் ஒன்றற்கொன்று உதவியாயிருந்து மேன்மேல் முதிர்ந்துவர, தமது வாணாளையும் வாக்குவிசேஷத்தையும் வறிதே செலவிடாது, மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மையின்மீது "அடைக்கல மாலையும்," "கயற்கண்ணி மாலையும்," திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதிமீது "திருவேங்கட மாலையும்," திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது ஒரு "குறவஞ்சியும்," "திருமுக விலாஸமும்," இன்னுமநேக தனிப் பாசுரங்களும், கீர்த்தனங்களும், பதங்களும்பாடி கடவுளைத் துதித்து வணங்கி வழிபட்டு வந்ததுடன், தமது கிருஹத்திலும் பூஜை உற்சவாதிகளும் சம்பிரமமாய் நடத்தி வந்தார்கள்.

இவருடைய கவிகளையும், சாகித்தியங்களையும், கேட்டோரியாவரும் அவற்றின் சொற்சுவை, பொருணயம், கானரஸம், பக்திக்கனிவு இவைகளை மிக வியந்து பாராட்டிக் கொண்டாடவே, நாளடைவில் இவர் கீர்த்தி வெளிப் போந்து நிலவலாயிற்று. அக்காலத்தில் சிவகங்கை ஸமஸ்தானாதிபதியாயிருந்த கௌரிவல்லப மகாராஜா அவர்கள் இவர்களுடைய கீர்த்தனங்கள் சிலவற்றை தமது ஸமஸ்தான சங்கீதவித்வான்கள் பாடக்கேட்டு, பாரதியவர்களை தமது ஸ்தலத்துக்கு வரவழைத்து, இவரியற்றிய பிரபந்தங்களை தமது வித்வான்கள் முன்னிலையில் இவர்களையே பாடிப் பிரஸங்கிக்கச்செய்து கேட்டு, மிக்க ஸந்தோஷமடைந்து, இவர்களுக்குத் தக்க ஸம்மானங்களளித்து மரியாதை செய்ததுமன்றி, அச்சபையிலுள்ள வித்வான்களால் "கவிகுஞ்சரம்" என்ற சிறப்புப் பெயருமளித்து, தமதாஸ்தான வித்வான்களுளொருவராய்த் தமது ஸ்தலத்துக்கோர் பெரும்பூஷணமாய் இருக்கும்படி விரும்பி வேண்டினார். அவ்வாறே மகாராஜாவின் வேண்டுகோளுக் கிணங்கி, தம்மூரைவிட்டு, சிவ

கங்கையிலேயே கௌரிவல்லப மகாராஜாகாலத்தும், அவர்க்குப் பிறகு பட்டத்துக்குவந்த சத்ரபதி போதகுரு மகாராஜா காலத்தும், மிக்க மரியாதையோடும் அன்போடு மாதரிக்கப்பெற்று வசித்து வந்தார்கள். ஒரு சமயம் மகாராஜா, வேட்டைக்குச்சென்று பதினாறடி வேங்கையொன்றைக் குத்திக் கொன்ற தீரச்செயலைக்குறித்து ஸமஸ்தான வித்வான்கள் புகழ்ந்து பாடிய பாடல்களெவற்றினும், பாரதியவர்கள் பாடிய "வேங்கைக் கும்மி" நவரஸங்களும் பொதிந்து வெகு இனிமையாயிருக்கக் கண்டு நன்குமதித்து அதைத் தமது ஸதஸிலரங்கேற்றச்செய்து அதற்கு ஸம்மானமாகக் "கொட்டகச்சியேந்தல்" என்னுமொரு கிராமத்தை தானசாஸனஞ் செய்து கொடுத்து, ஆடையாபரணாதி பரிசுகளுமளித்து, சிவிகையிலேற்றி ஊர்வலமுஞ்செய்வித்துச் சிறப்பித்தார்கள்.

இவ்வாறு சிலவருஷங்கள்கழிய, தெய்வபக்தியும், தமிழிடத்துத் தளராத பேரன்பும், வித்வான்களிடத்து அபிமானமும் தங்குலபூஷணமாகப் பூண்ட இராமநாதபுரம் சேதுபதியவர்களுள், அப்பொழுது விளங்கிய முத்துராமலிங்க சேதுபதியவர்கள், சிவகங்கையிலிருந்த பாரதியவர்களின் கவித்திறத்தையும், வித்வத்தையுங் கேட்டறிந்து, இவர்களைத் தமது ஸதஸுக்கு வரவழைத்து, இவர்களியற்றியுள்ள பிரபந்தங்களை தமது ஸபையிற் பாடிப் பிரஸங்கிக்கச் செய்து கேட்டுப் பேரானந்தமுற்று, வியந்து புகழ்ந்து பாராட்டி, உயர்ந்த ஸம்மானங்களும் மரியாதைகளுமளித்து கௌரவப் படுத்தினதுமன்றி, தமது ஸமஸ்தானவித்வான்களில் ஒருவராகவு நியமித்துத் தம்மிடத்திலேயே இருக்கும்படி செய்துகொண்டார். இதுவன்றி, மகாராஜாவின் தமயனாரும்; தமிழிற் சிறந்த வித்வானும், அரிய பெரிய பல பழைய தமிழ் நூல்களை தக்க வித்வான்களைக் கொண்டு பரிசோதித்துச் செவ்வனே அச்சிற் பதிப்பித்துத் தமிழ் நாட்டிற்குதவிய பரமோபகாரியுமான பொன்னுச்சாமித் தேவரவர்களும் இவர்களை வரவழைத்து மகாராஜாவைப் போலவே தாமும் மிக நன்குமதித்து அபிமானித்து வந்தார்கள்.

இவ்வாறு சிவகங்கை, இராமநாதபுரம் இவ்விரண்டு ஸமஸ்தானாதிபதிகளாலும், வித்வான்களாலும், மதுரை ஜில்லாவிலுள்ள தக்க கனவான்களாலும், நன்குமதிக்கப்பெற்று, பாரதியவர்கள் யாதொரு குறைவுமின்றி, சந்தான சம்பத்துடன், சுகமாயிருந்துவந்தார்கள்.

இப்படியிருக்கையில், இவர்களுடன் அளவளாவிப் பழகி, இவரது பக்தி விசேஷத்தையும், கல்வித் திறத்தையும், எளிதிற்பொருள்விளங்கும் இனிய கவிபாடுமாற்றலையும், சங்கீதவித்வத்தையும், நன்குணர்ந்த பொன்னுச் சாமித் தேவரவர்களுக்கு, இவைகளெல்லாம் ஒருங்கேசேர்ந்து பரிமளிக்கத்

தக்கதோர் பெருநூலை பாரதியவர்களைக் கொண்டு இயற்றுவிக்க வேண்டுமென்ற பேரவா உண்டாயிற்று. அதுவிஷயமாயாலோசித்து, கம்பராமாயணத்தை கீர்த்தனமாக மகாவித்வான் அருணாசலக் கவிராயரியற்றிய "இராம நாடகம்" என்ற அரியநூலைப் போலவே, கச்சியப்பரது கந்தபுராணத்தை இனிய தமிழ் நடையில் கீர்த்தனங்களாகவும், விருத்தங்களாகவும் செய்வித்தால் உலோகோபகாரமாயிருக்குமெனக் கருதி, தமது அபிப்பிராயத்தை பாரதியவர்களுக்குத் தெரிவித்தார் இவர்களும் அருணாசலக் கவிராயர் நூலில் தாம் வைத்திருந்த மதிப்பினாலும், பிரியத்தினாலும், குமரக் கடவுள் தங்கள் குலதெய்வமாதலாலும, தமக்கே சுப்பிரமணியக் கடவுளிடத்துள்ள பக்தி மிகுதியாலும், தமது வாழ்நாளுட் சென்றதுபோக எஞ்சிய சிறுபாகத்தையும், பூர்வபூஜாபலத்தாலும், தெய்வகிருபையாலும் தமக்குக் கிடைத்துள்ள கவித்துவத்தையும் வினியோகிக்க இதைக்காட்டினு மேலான விஷயமொன்று இல்லையென்ற பூரண நம்பிக்கையாலும், பொன்னுசாமித் தேவரவர்கள் வெளியிட்ட அபிப்பிராயத்தை அன்போடங்கீகரித்து, அவ்வாறே செய்ய உடன்பட்டார்கள். தேவரவர்களும் மனமகிழ்ந்து அப்பொழுதே சம்பந்த சரணாலயரியற்றிய "ஸ்காந்த புராணச்சுருக்கப்" புஸ்தகமொன்றைப பாரதியவர்களுக்குக் கொடுத்தார்

இப்பெரிய காரியத்தைத் தாமேற்றுக் கொண்டதும், பலவகை உற்சாக உத்சோஷங்கள் ஒருபொழுதுமடங்காத இராஜாங்கமத்தியிலிராது, தமதூரிலேயே மனவமைதியோடு தனித்திருந்தாலொழிய, இதைத் தக்கவாறு செய்து முடித்தல் அசாத்யமாகுமெனக் கருதி, தமது அபிப்பிராயத்தை மகாராஜா அவர்களுக்கும், தேவரவர்களுக்குந் தெரிவித்து, அவர்களிடம் விடை பெற்றுப் பெருங்கரைசேர்ந்து அங்கே வசித்துவந்தார்கள் அப்பொழுது இவர்களுக்கு வயது ஐம்பத்தைந்து அது முதல் ஐந்து வருஷத்தில் நவரஸங்களும் பொதிந்துள்ள "ஸ்காந்தபுராண கீர்த்தனை" என்ற இச்சிறந்த நூலை இயற்றிப் பூர்த்திசெய்தனர் இந்தச் சற்காரியத்தின் முற்பயனாய் முந்தியே பக்தியிற் கனிந்திளகிய இவர்மனது அதிபக்குவத்தையடைந்து, பிரவிர்த்தியிற் செல்லாது நிவிர்த்தியை நாட, இவர் திரும்பவும் இராஜஸ்தலஸ்தலக்குப் போக விரும்பாமல் தமதூரிலேயே தங்கினர். அதுமுதல் அநேகமாய் வெளியிலே சஞ்சரிக்காமல் தமதூரிலே யிருந்து சற்புத்ர பௌத்ர சந்தான சம்பத்துடன், யாதொரு குறைவுமின்றி, நித்ய நைமித்திய கர்மாக்களை ஒழுங்காய்ச் செய்தும், தெய்வபூஜை, பஜனை, ஆராதனை இவைகளைச் செம்மையாய் நடத்தியும், சுகமாய்த் தம் வாழ்நாட்களைக் கழித்து வந்தார்கள்.

இவர் காலத்திலேயே, சிறந்த ஸங்கீத வித்வானான இவருடைய மருமகன், ஆவுடையார்கோயில் ஆத்மநாத பாகவதரவர்கள் இதைப் பலவிடங்களிலும்

பாடிப் பிரஸங்கித்து வந்தமையால் இதற்குத் தென்னாடுகளில் மிகப் பிரசித்தியுண்டாயிற்று. இப்படியிது பலராலும் விரும்பப்படுவதையும் நன்கு மதிக்கப்படுவதையுங் கேட்டறிந்த பாரதியவர்கள் அவைகளையே பெரிய ஸம்மானமாகநினைத்து திருப்தியடைந்து சந்தோஷமுற்றிருந்தார்கள். இதற்குப் பிந்தி இவர்கள் வேறு நூலொன்றும் இயற்றியதாகத் தெரியவில்லை. ஆனால் பல சமயங்களிற் பாடிய தனிப்பாடல்கள் அநேகமுண்டு. இவருடைய வாக்கை அருள்வாக்கென்றும், நிக்ரகாநுக்ரக சக்தியுடையதென்றும் யாவரும் மதித்து வந்தார்கள். ஒரு சமயம் ஊரில் மழையில்லாமற் பயிர்கள் வாடக்கண்டு,

கந்தநீ தந்தகொட்டக் கச்சி யேந்தற்
கணையைமறிச் சான்வயலின கதிர்களுக்கு
வந்துமழை பொழிந்துசெந்நெல் விளைந்து நன்றாய்
மனைநிறைந்து பரிபூர்ண மாக வென்றன்
சிந்தைமகிழ்ந் துனதுசங்கீர்த் தனங்கள் பாடித்
தினந்தினமும் பஜனைசெய்து க்ஷேம மாகச்
சந்ததிகள் மேன்மேலுங் குறைவில் லாமற்
சகலவள முந்தழைக்கத் தயைசெய் வாயே.

என்னும் பாடலைப்பாட, உடனே மழைபெய்து சுபிக்ஷ முண்டாயிற்று. இவ்வாறு இவர்கள் பாடிய பாடல்களும் பலவுண்டு. பின்னொருசமயம் இவர் வீட்டு எருமைக்கு நோய்கண்டு சாகக் கிடக்கையில்,

வேலவனே செம்பொன் விலைகொடுத்து வாங்கியவென்
பாலெருமைக் குற்றிடுநோதன் பங்களைத்தீர்த்—தேலுவையாய்
வாலெடுத்து வீசி மடிசுரந்து மென்மேலும்
பால்கறக்கச் செய்வாய் பரிந்து.

என்றொரு வெண்பாப்பாட வியாதி நீங்கி மாடு பிழைத்ததென்றும் சொல்லுகிறார்கள். இதனால், அற்பவிஷயங்களிலும் தெய்வகிருபையையே பெருந்துணையாக நம்பியிருந்தார் என்பது நன்கு விளங்கும்.

மேலும், இவர்காலத்து வித்துவான்கள் இவரை ஒரு தெய்வமாகவே பாவித்துவந்தார்கள். இக்காலத்துக் காளமேகமென்று பேர்பெற்றிருந்த வேம்பத்தூர் பிச்சுவையரவர்கள் ஒரு சமயம் இவரிடம் விபூதிவாங்கி நெற்றியிலணிந்துகொண்டவுடன்

நெற்றி தனிலணிந்தே நீங்கினேன் கர்மவினை
யெற்றிவிட்டே னின்பநிலை யெய்தினேன்—முற்றுமுணர்ந்து
கந்தனருள் பெற்ற கவிகுஞ்சரமறையோன்
தந்த விபூதி தனை.

என்ற வெண்பாவைப் பாடியருளினார்.

1894-ம்௵ ஆயிரம்பிறைகண்ட எண்பத்திரண்டாவது வயதில் இவருக்கு வேதோக்தமாக சாந்தி ஜபங்கள் செய்து, சதாபிஷேகம் நடத்தப்பட்டது. இதற்கு இரண்டு வருஷத்துக்குப் பிறகு (ஹேவிளம்பி௵ கார்த்திகை௴) எண்பத்தியாறாவது வயதில், தமது புத்ர புத்ரிகள் பௌத்ர பௌத்ரிகள் பந்துக்கள் மத்தியில், தேகாவஸ்தைகள் சிறிதுமின்றி, நல்லறிவோடு கடவுளிடத்துச் செலுத்திய மனதினராய், இவர் பரமபதத்தையடைந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.”

சிவமயம்.

தஞ்சாவூர், சதாவதானம்

பிரம்ம-ஸ்ரீ: சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய

சிறப்புக்கவி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

கார்பூத்த கங்கையிடைக் கார்த்திகைபால் கடைவாயிற்
கமழுங் கந்தன்
பேர்பூத்த காந்தமதை முதலின்முதற் கூடவுள்சொலப்
பின்னர்க் காஞ்சி
யூர்பூத்த கச்சியப்ப னியற்றமிழி லோதினன்முன்
னென்று தென்பார்
வேர்பூத்த நமக்கெதிராந் திசைத்திரிசொல் மற்றொன்று
விருத்த மாமால். (க)

தாரணியோ ரிதுபதமே யென்னக்கொண் டாடவிசைத்
தமிழி யற்சொல்
பாரியலப் புனைந்துசிர வணித்தவர்மேற் பதம்பெறவே
பதமாக சொற்றான்
காருறையும் பெருங்கரையிற் பிறந்துமுத்திப் பெருங்கரையைக்
கண்ட மேலோன்
கூருதமிழ் மதம்பெய்கவி குஞ்சரபா ரதியெனும்பேர்
கொள்மகானே. (உ)

அன்னதையன் னவன்போ ஞங்கிலமு நற்றமிழு
மமையக் கற்றோன்
இன்னிசைக்கோ டீச்சுரனுத் துமகாத பாகவத
னிவன்றா னென்ன
வாங்கிலமெய் கணும்பரவப் பிரசங்க மழைபொழிய
வெல்லோ ருங்கேட்
டென்னியுளத் தானந்த முற்றுகந்து கந்தனரு
ளுற்றா ரன்றே.

அக்காந்த புராணபதங் கையெழுத்தொவ் வோர்பிரதி
யாய வத்தம்
மிக்காகி வழங்காம லுள்ளதுவே யுள்ளதுவாய்
விளங்க வேட்டெண்
பக்கங்கள் புகழ்சென்னை யுயர்வீதித் தானத்திற்
பதிவு மேவிச்
சொக்கத்தங் கம்போன்று விளங்குகுப்ப சாமியெங்கள்
சுகுணன் மாதோ. (௪)

உளத்தாலும் வாக்காலு மெய்யாலுஞ் செய்தபல
வுதவி யாற்பொன்
வளத்தாலோங் கியதுளஜா ராம்ராவச் சிறப்பித்து
மலியத் தந்தான்
விளக்காமெய் யெழுத்துண்முதல் மெய்*க்கர மாமிந்த
விடயத் திற்சேர்ந்
துளக்காத புகழ்பெற்றோர் பேர்முதல்மெய் *யஃதாஞ்சி
ரளக்கற் பாற்றே (௫)

---

* குறிப்பு:—கதாநாயகன் ... கந்தன்.
நூற்பெயர் ... கந்தபுராணம்.
முதற் பிரசங்கி ... கடவுள்.
இரண்டாம் பிரசங்கி ... கசியப்பர்.
மூன்றாம் பிரசங்கி ... கவிகுஞ்சரபாரதி
நான்காம் பிரசங்கி . கோமடீச்சுரர்.
அச்சிட முயன்றவர் .. குப்புசாமி ஐயர்.
அச்சிட்ட யந்திரசாலை ... சாட்டிலக்ஷ் பிரஸ்

சாற்றுக் கவிகள்.

முறையூர் - பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாரதியவர்களியற்றிய
வெண்பா.

கந்திருவர் தானுவுற்றார் கண்ணனுமே மாலானு
னிந்திரன்கண் காதாக வில்லையென்றான்—செந்திருதோய்
சாந்தக் கவிக்குஞ் சரமறையோன் வாய்மலர்ந்த
காந்தப் பதமகிமை கண்டு

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோ
உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்க ளியற்றிய

வெண்பா.

வான்றோய்சீர் வையைமருங்கார் பெருங்கரைவாழ்
சான்றோன் கவிகுஞ் சரவேள்செய்—தேன்றோய்வின்
நந்தாச்சொற் காந்தபுரா ணக்கீர்த் தனைபதித்துத்
தந்தான்கோ டச்சரவேந் தல்

மதுரை வித்வான் பிரும்மஸ்ரீ நா. சுந்தரேசுவர ஐயரவர்களியற்றிய

விருத்தங்கள்.

சீரோங்கு மறையனைத்துந் தேடரிய பரஞ்சுடர்முத்
திறம தாகும்
பேரோங்கு முயிர்க்கருள்வான் றனதருளாந் திருமேனி
பிறங்கக் கொண்டு
நீரோங்கு முலகினிடைத் திருவிளையாட் டினிதியற்றி
நின்ற யாவும்
பாரோங்கு புராணமென மூவாறு வியாதமுனி
பகர்ந்திட் டானால். (௧)

அன்னபுரா ணங்களினுட் சிறந்ததுசீர்க் காந்தமென
வறையா நிற்பர்
சொன்னவதி லொருபகுதி யாறுதிரு முகங்களுந்திண்
டோளீ ராறும்
பன்னரிய கருணைவிழி மூந்நான்குந் திகழ்வடிவேற்
பரமன் காதை
தன்னைவட மொழிக்கியையக் கச்சியப்ப முதல்வனியற்
றமிழிற் றந்தான். (௨)

நாட்டகத்தி லுள்ளார்கள் வேட்டகத்துக் கினிசிறந்து
நாளும் பாடக்
கேட்டகத்து மகிழ்சிறப்ப விருமையின்பு மெளிதினெய்திக்
கிளர்ந்து வாழக்
கோட்டகத்தின் மான்மகளை மணந்தகுகன் றிருவருண்மேற்
கொண்டு செய்ய
பாட்டகத்தி னிசைமிகமற் றதனையுயர்கீர்த்தனமாப்
பாடி னானால். (௩)

அத்துணையோன் யுரவெனெனிற் றுசித்தோர் பாவமெலாம்
அறவே போக்கு.
மூத்தமசே துவின்மார்க்கத் துளதால வாய்க்கயற்க
ணுமையோர் பாகன்
வித்தகமெய் யருள்வினவிக் கரிக்குருவி ஞானமுற்ற
மேலாந் தான
மூத்தமெறி புனற்றஞ்சீரீடபுரம் பெருங்கரையா
மொழியு மூந்தார். (ச)

அந்தவளம் பதிவாழு மந்தணர்தங் குலமணியாம்
அறிவின் மிக்கோன்
சொந்தமறை பயில்சுப்ரீ மணியசன்மா வியற்றுதவத்
தோன்ற லாக
வந்தயனற் கல்வியறி வொழுக்கமெலா மியற்கையினில்
வாய்ந்த சீலன்
சந்ததமு மராறுமைமால் மருகன்டி மலர்ப்பசனை
தவிரா நேயன் (ரு)

என்னதா னமுமிதனுக் கிணையில்லை யெனத்தன்ன
இல்லத் துற்றோர்க்
கன்னதா னம்புரிவோன் பன்னிலமன் னவர்தங்க
ளக மகிழ்ந்தே
சொன்னதா னமுமீபூதா ஞ முஞ்செய்யப் பெற்றுவந்த
தூயோன் யார்க்குங்
கன்னதா னங்குளிர இசையமுதக் கவிபொழியுங்
கருணைக் கொண்டல் (சு)

பயன்மரமுள் ளூர்ப்பழுத்த பான்மையினன் படைத்தசெல்வப்
பயனீ தென்ன
அயன்மருவு சுற்றமெலாம் புடைசூழ ஆதரிக்கும்
அருமை யாளன்
நியமநெறி வழுவாதா யிரம்பிறைக்கு மேற்கண்டு
நெடிது வாழ்ந்தோன்
சயமிகுநாற் கவிஞர்சிகா மணிகவிகுஞ் சரநாம
நாவல் லோனே. (எ)

புதுக்கோட்டை சமஸ்தானம் வித்வான் பிருமஸ்ரீ மதுரமொழி வசிஷ்ட பாரதி யவர்களியற்றிய

விருத்தங்கள்.

கச்சியப்ப முனிவர்திருக் காந்தத்தை விருத்தமதாக் கழற வன்பு
வச்சமனச் சம்பந்த சரணமுனி யதன்சுருக்கம் வரைந்தான் பாரு
மெச்சிடவே யதைநாட கத்தமிழிற் பொருளெவர்க்கும் விளங்கச் செய்தா
னுசிதமா கக்கவிகுஞ் சரமறையோ னென்னுமோ ரொப்பி லோனே.

அன்னவர்த மருசனவ ரிந்நூலை யியற்றுகையி லவரோ டிய்ந்தே
யுன்னரிய ராகதா ளங்கள்சம யோசிதமா யுதவித் தானுங்
கன்னல்ரச பாகமெனப் பலவிடத்தும் பிரசங்கங் கார்போற் றந்தான்
மன்னுபெருந் துறைவாசி யாத்துமநா தப்பெயர்கொள் மறையோன் றானே.

பாட்டன்செய் நூலிதனைப் பன்னாளும் படித்தறிந்த பான்மை யாலே
நாட்டிலுளோர் யாவர்க்குந் தானறிவித் தல்கடனென் றாடி மிக்கத் [லோன்
தாட்டிகஞ்சேர் சங்கரமால் துணைவன்கோ டீசுரப்பேர்த் தமிழ்ப்பா வல்
லேட்டிலிருந் தியற்றியவா றெடுத்தெழுதிப் பதிப்பித்தே யிசைகொண் டானே.

சொன்னயமும் பொருணயமும் கானரஸ மெனுநயத்தின் சுவையு மார்ந்த
விந்நூலை யுலகிலென்று நிலவவச்சு வாகனத்தி லேற்று வித்தான்
துன்னுபல வளமுதவித் தாயினுநன் னலம்பயக்குந் தாநீர்ப் பொன்னி
மன்னுதஞ்சை நகர்க்கரந்தைக் கிருஷ்ணயமந லுதவுகுப்புச் சாமி மாதோ.

ஆசகலிந் நூலினையச் சியற்றுகையில் வழுக்களையாய்ந் தகற்றி யிந்நூ
லாசிரியர் வரலாறு முகவுரையு மன்புடனே யமைத்தின் றானம்
நேசனுயர் தஞ்சைநகர்க் கல்யாண சுந்தரமா னேர்மை மைந்தன்
பேசுபுகழ் ராமரத்ந மின்னோர்செய் யுதவிமிகப் பெரிது மாதோ.

மதுரை வித்தியாபாநுப பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களியற்றிய

விருத்தங்கள்.

திருமகளு மருமகளு மொருமையுடன் மருவிவளர்
செழிய னாட்டிற்
குருமொழியா லெளியகய வாயொன்று வலியானைக்
குலவ ஞானந்
தருமகிமைப் பெருங்கரையா மூதூரிற் பாஞ்சசந்ய
தரனம் போல
மருவுமொரு நாற்குலத்தின் மேற்குலத்தி லவதரித்தான்
மறைநூல் வல்லா

நலம்புரிசுப் பிரமணிய சன்மாசெய் தவந்திரண்டு
நளிர்நீர் சூழிந்
நிலம்புரிபுண் ணியப்பேற்று ஞுருவெடுத்தாங் கவதரித்தோ
னிமலன் கோயில்
வலம்புரியும் பதமலரு மலர்சொரியுங் கரமலரு
மனத்தில் வேட்ட
தலம்புரியுந் துதிமலரும் வாயமலருங் பூத்ததெய்வ
தாரு நேர்வான் (உ)

சரியைமுத லற்பாதங் கொண்டுதுதிக் கையுபேவித்
தமிழ்ப்பா வெல்லாம்
பெரிதுமுறச் செவிமடுத்துக் களகவள மும்பெற்றுப்
பிறங்கன் மன்னி
யரியபல் தானமும்பெய் தேறிவரும் பாகனுமைக்
கூட்டங்கி நாளு
மருவுதலாற் பொருந்துகவி குஞ்சரமாந் திருநாமம்
வாய்ந்த மேலோன். (௩)

கந்தபுரா ணக்கடலுள் ளாறுதிரு முகம்படைத்த
கருணைச் செவ்வேள்
சந்தமலி கதையமுதைப் பதமாக்கி யிசையகப்பை
தன்னால் வாரிச்
சிந்தைகுளி ரொண்டுண்ணத் தாலத்தி லினிதளித்தான்
றிருமான் முன்பு
தந்ததினு மிதுசிறந்த தாமுருகன் றண்மலரைத்
தழலான் மன்னோ. (௪)

சிவகங்கை சமஸ்தான இராஜ குரு பிரம்மஸ்ரீ தேவசிகாமணி ஐயரவர்கள் மாணாக்கரும், மு. பஞ்சாக்ஷரம் பிள்ளையவர்கள் குமாரரும் சிவகங்கை ராஜாங்க ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருமான **M. P.** கணபதியா பிள்ளை யவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

திருமலிவாவியிற் - றிகழனமடவியர்
குருமலிநடைபெறக் - குலவியவீதியும்
மஞ்சுடன்மதியமும் - வந்துறைந்தேய்முடி
விஞ்சலாலரனென - விளங்கியமாடமும்

மாலவன்வயிறென - வளம்பலமன்னிய
கூடலமுமணிக்ளின் - குலைகளுநெருங்கிய
தினகரனனையசாத் - திரர்தினமருவுகோ
கனகமாதார்பெருங் - கரையெனுந்தலத்தினன்
சொற்பிறழாதவன் - றூயசற்குணத்தவன்
விற்பனனரனடி - விழையுளத்தின்னழுறை
விப்பிரமணியென - வியாதுல்கறைந்திடச்
சுப்பிரமணியனுத் - தோன்றியதோன்றல்செய்
மாதவத்தால்வரு - மணிதிருவள்ளுவர்
ஓதியவுண்மை - யுரைத்திடவந்தவன்
துன்னுமாபத்தம்ப - சூத்திரத்தின்மதி
மன்னியபரத்து - வாசகோத்திரத்தினன்
பாவமர்தாமரை - மாலையம்மார்பினன்
தாவில்சீரெசுச் - சாகாத்தியாபகன்
பாவலரேத்தப் - பதிகம்பலவுடன்
ஆபல்சேர்திருவிளை - யாடலின்கீர்த்தனம
இருவிகவின்பத் - தியலுகீர்த்தனங்கள்
மருவிதஞ்சேரிரா - மாயணக்கீர்த்தனம்
கறபனைமிகுவேங் - கைக்குமியோடினும்
பறபலபனுவற் - பாடியபண்பினன்
எப்புவிவேந்தரு - மெதிர்கொளவ்வைசயுறும
திப்பியவாக்கினன் - சிகிவாகனனீடி
கருதுளத்தான்சிவ - கங்கையம்புகவை
இருதுரைத்தனத்து - மிசைசெலுத்தியகவிக்
குஞ்சரமெனப்பெயர் - கொண்டகோடீச்சுரன்
பஞ்சலக்கணமறி - பாவலரேறனன்
கங்கையஞ்சடைக் - கடவுளெம்பரமனு
துங்கநல்லருளாற் - றோன்றிமாதவத்தினன்
குடமுனிபேணக் - குலவிக்குமரிவேங்
கடங்குணகடல்குட - கடலெனுமெல்லைசூழ்
இடமதினிலையியன் - றினிமையேய்ந்தார்க்கலாற்
றடவுலகினிலருந் - தமிழெனும்பாஷையில்
கந்தன்கயிலையன் - கனற்கட்பொறிதனில்
வந்தவனொருத்தன் - மகளைமணந்தவன்
தேவர்க்கிடுக்கண் - செய்துலகினுக்கோர்
ஏவந்தருங்கே - டியற்றியசூரன்

பந்துமித்திரரொடும் - பாறிவேறறவே
லுந்தியகதையினை - யுயர்வடமொழியதாற்
சொற்றனன்சூதனத் - துணைகொடுதிப்பக்
கற்றவர்மகிழக் - கற்பனைதிகழ
புவிதனிற்கந்தப் - புராணமென்றிசைப்பத்
திவ்யகச்சியப்ப - சிவாசாரியன்சொனன்
வென்றிசேரிரண்டும் - விற்பனர்தமக்கே
யன்றிப்பொருள்படா - தாகையாலெவர்க்கும்
எளிதினிலுணரற் - கேற்றதாயினிய
அளிதருபண்ணு - லடிதொறுமழகாய்க்
கட்டாய்ச்சுவைநயங் - கருதுபல்வர்ன
மெட்டாய்ப்புவியர் - விரும்பியாய்ந்திம்மையிற்
சகலசம்பத்துந் - தாங்கியிறுதியில்
அகளநிர்க்குணபர - னடியிணைமருவிட
எண்ணியுரைத்தா - னிதற்குவேறுவமை
பண்ணுதற்கென்ஞ - பலவலவொன்றதே.

ஸ்காந்தபுராணப் பிரசங்கியார் பிரும்மஸ்ரீ ஆத்மநாத பாகவதர்மீது மேற்கூறிய முறையூர் பிரும்மஸ்ரீ கிருஷ்ணபாரதி யவர்களியற்றிய

வெண்பா.

வாணி யுடல்வெளுத்து மாவே தனையடைந்தாள்
நாணிக் கரகன்மலை நாடுறைந்தான்—சேணிலுயர்
சாந்தகவி யாத்துமநா தன்கனிவா யைத்திறந்து
காந்தப் பதமுரைக்கக் கண்டு.

மேற்கூறிய தஞ்சாவூர், சதாவதானம் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் இதைப்பதிப்பித்தோர் மீது பாடிய

வெண்பா.

கோடீச் சுரன்சேய் குணப்பிரசங் கத்திற்குக்
கோடீச் சுரருங் கொடையினுக்கு—நாடுங்காற்
பற்றாதெதஞ் சீரென்பார் பாவலரும் பாக்கொடுக்கப்
பற்றாதெங் கல்வியென்பார் பார்த்து.

முற்றிற்று.

ஸ்காந்த புராண கீர்த்தனை,

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

சித்தி விநாயகர்.

வெண்பா.

பொன்பூத்த கஞ்சப் புனற்றடங்க ணீக்குடபான்
மினபூத்த சித்திமத வேழமே—யன்பூற்றுங்
கந்தாகதை கீர்த்தனமாக கட்டுரைக்க இட்டமதாய்
வந்துதவி செய்வாய் மகிழ்ந்து (௧)

(௧) கீர்த்தனம் இராகம் - ஆரபி—ஆதிதாளம்.

பல்லவி

சித்திவி நாயக னே - கிருபைபுரிவாய்
சித்திவி நாயக னே

அநுபல்லவி

அத்தனருளால்வருக - சத்திதா ஞகிய
முத்தமிழ்த்கலைவன்ச - ரித்திரந்தனைசசொல்ல (சித்தி)

சரணங்கள்

(௧) சுத்தபோதமில்லாத - சிற்றறிவுடைய நான்
உத்தமர் புகழுங்கார - தத்தைக் கீர்த்தனஞ்சொல்ல. (சித்தி)

(௨) சிரத்தையுடன் றுதிகரு - கருத்துளன்பர்கருசசுப
காத்தையருள்குமரன் - சரித்திரந்தனைச்சொல்ல (சித்தி)

(௩.) ரஞ்சிதமொழிவள்ளி - குஞ்சரியருவுங்கு
றிஞ்சிமன்கதைகவி - குஞ்சர நாமன்கூற (சித்தி)

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள்.

விருத்தம்.

வானவ ரிடுக்கண் டீர்க்க மலர்ச்சர வணத்திற் றோன்றிச்
சேனைமா வீரர் சூழத் தென்றிருச் செந்தூர் மேவித்
தானவர் குலத்தை வாட்டத் தடக்கையில் வடிவேல் கொண்ட
ஞானசே கரனும் சாமி நாதன்பொற் பாதம் போற்றி. (க)

கந்தர்கதைச் சங்கிரகம்.

(உ) கீர்த்தனம். இராகம் - கேதாரகௌளை—தாளம் - திருபுடை.

பல்லவி.

மதிக்குஞானதிசை - துதிக்கவாமருள்வாய் - சிவ
ஸாமிநாதா - மதிக்குஞானதிசை

அனுபல்லவி.

மதிக்குஞானதிசை - கதிக்கவருள்புரி
மதிச்சடையர்திரு - நுதற்கணினின்றறு
விதப்பொறியெனவே - பதர்க்கண்மயல்சுப
நதிக்குள்வருசர - வணக்குமரனே (மதி)

சரணங்கள்.

(க) இலக்கணமிகும - தலைப்பருவத்தடி
எடுத்துவிளையாடி - நடிக்கும்பொழுதெழு
மலைத்திசைகளெங்கும் - நடுக்கமுறவெழு
அலைக்கடல்சுவறக் - கலக்குங்குகனே (மதி)

(உ) முடுக்கியசுரர்கள் - இடுக்கண்செய அயன்
முதற்சுரர்கள்பணிந் - துரைக்க அசுரரை
மடித்துங்கள்கவலை - விடுத்திடுதுமென
மலர்க்கையாலபயம் - அளித்ததுரையே (மதி)

(ங) பெருக்ககாரதன்செய் - மகத்திலசந்தனைப்
பிடித்துப்பரியென - நடத்திபலரவன்
செறுக்கடங்கச்சிறை - இருத்திபலரவன்
சிருட்டிசெய்துமகிழ் - திருக்குமரசே (மதி)

(ச) தனிப்பிரணவத்தை - உரைத்தருளித்த
சத்திகொண்டுவிடை - பெற்றுநவவீரர்
கனத்தபடைசூழ - முனைத்தெழுந்துதார
கனைக்கிரவுஞ்சமொடு - துணித்தவீரனே (மதி)

(௫) சூரர்க்குரியதெய்வ - கிரிக்குள்வந்தமரர்
துதிசெய்திடவுயப் - பதின்றெழுந்துதென்
திருக்குன்றில்முனிகு - மரர்க்கருளிஉயர்
திருச்செந்தூரினில்வந் - திருக்குமையனே (மதி)

(௬) வளப்பிலுயர்துணை - வரிற்சிறந்தவீர
வாகுத்தலைவனை - ஓகையுடனேதூ
தனுப்பியசூரன்றன் - கருத்தையறிந்துகொண்
டதிர்த்தெழுந்துசமர் - விளைத்ததீரனே (மதி)

(௭) சிங்கமுகன்பானு - கோபன்முதலான
திரளவுணர்முடி - உருளக்கண்டுசூரன்
உங்கரித்துவரச் - செங்கைஅயில்விடுத்
துடற்கிரிபிளந்த - அடற்சண்முகனே (மதி)

(௮) பிளந்தஉடல்சேவல் - மயிலுமாய்வணங்கப்
பெற்றெழுந்துமிகு - வெற்றியுடன்தேவர்
தளங்கள்சூழப்பரங் - கிரிவந்துதெய்வகுஞ்
சரியைமணந்தசுந் - தரமுருகனே (மதி)

(௯) சிறக்கும்விண்ணகரம் - புரக்கஇந்திரனைச்
செம்பொன்முடிசூட்டிப் - பின்புவேள்விமலைக்
குறத்தியைமணந்தின் - புறத்தென்கந்தமலைக்
குகைக்குளமர்ந்தினி - திருக்கும்தெய்வமே (மதி)

அறுபடை வீடுகளின் விருத்தங்கள்.

திருப்பரங்குன்றம்.

தருப்பரங்கந் திகழரங்கன் மருகனைச்சூர் தடிந்தசத்திதரனை வெள்ளிப்
பொருப்பரங்கத் தமர்ந்தருளை முகனருள்சண் முகனைமிகுபொற்பா ருங்கோங்
கருப்பரங்கோ கனகமுற்ற தனவிழிவ தனமயிற்றெய் வானை யோடுந்
திருப்பரங்குன் றிருப்பவனை மருப்பொலிமா மலர்தூவிச்சிந்தை செய்வாம். ()

திருச்சீரலைவாய்.

நிதியானை அருள்வளர்சந் நிதியானைக் கருணையிலாநெஞ்சர் பால்வந்
துதியானை யண்டரெலாந் துதியானை முகன்றுணையாயுவந்த வேற்றுக்
கதியானை மறைமூலக் கதியானை வியனுலவுகாவோர் சேனு
பதியானைச் செந்தில்வளப் பதியானை யனுதினமும்பரவி வாழ்வாம்.

திருவாவினன்குடி.

அலைக்குமர வொடுகங்கை அம்புலிபூண் டவன்பாகத்தமர்ந்து ளன்பு
நிலைக்குமர கதவல்லி திருமதலை யாய்த்தோன் றிநிருதர் கும்பைக்
குலைக்குமர னெனவயில்கொண் டமராஞ்சு தலையினைநீக்குதலைக் காறு
தலைக்குமர னம்பழனி மலைக்குகன்பொன் னடிக்கமலந்தலைமேற் கொள்வாம

திருவேரகம்.

கந்தனையென் னன்குடைய னோதரிய மறைமூலாக்கரமாந் தார
கந்தனைநா னுணர்வனெனத் தந்தைசெவிக் குரைத்திடலுங்களிமை கூர்ந்து
கந்தனைப மலைமகிழக் குருபரனென் றானளிக்கக்களிப்புற் றே
ந்தனைமே வியவறுமு கநதனையர் கந்தனையுட்கருத்துள வைப்பாம் (ரு)

குன்றுதோறாடல்.

வெண்பா

வீறுடல் கொண்டெழுந்த வெஞ்சூ ரதிந்துகுன்று
தோறுடன் மேவிச் சுதந்தமா—யாறு
நனைத்துடனே வள்ளிதெய்வ நாயகிதோள் சேர்ந்த
வனக்குமர னைத்துதிசெய் வாம் (உ)

பழமுதிர்சோலை.

ஆய்ந்தவரைக் கிறைவரைத்தெய் வானைகுற மங்கையிருவரைநாண் மாலை
வேய்ந்தவரைச் சரணடைந்த விண்ணவரைப் புரந்துமறமிகுவெஞ் சூரைக்
காய்ந்தவரைக் கைலைவரைச் கடவுளர்க்குக் குரவரைச்சங்கத்தார் செஞ்சொ
லாய்ந்தவரைச் சோலைவரை யமர்ந்தவரைப் பணிந்துதுயரனைத்துந் தீர்ப்பாம்.

குன்றைக்குடி.

படித்தானை யசுரருகும் படியானை யுடையனருள்படையினைக்கொண்
டடித்தானை யடியவருக் கடியானைச் சூர்வலியையழிய வேலான்
முடித்தானை மூவிரண்டு முடியானை யுமையவடன்முலைபின் பாலைக்
குடித்தானை யிலகுகுன்றைக் குடியானைச் சார்ந்துகளிகூர்ந்து வாழ்வாம். (எ)

திருத்தணிகை.

கருத்தணிகை யுறப்பணிவோ ருளத்துறையு மறுகிதழிகங்கை திங்கட்
குருத்தணிகை லாயபதி நுதற்கணினின் றுதித்தமரர்குறைக டீர்த்துப்
பருத்தணிகை பாமுகமா னருட்டுணையாற் குறக்கொடிகைப்பற்றிமேவுந்
திருத்தணிகைச் சேயனடி வந்திப்போர் பவவினைகள்சிந்திப் போமே. (அ)

பாயிரம்.

பரசிவம்.

திருமானைப் பிரிக்கவந்த செம்மானைக் கணைதொடுத்த சீமானைச் செல்வ
மருமானைத் தினைப்புனத்த மருமானை மணந்தான்மா சரிதை கூற
இருமானைக் கரஞ்சிரங்கொண் டெழுமானை அதளுடுத்த எம்மான் கூடற்
பெருமானைக் கயற்கணிசேர் பெம்மானைச் சுந்தரனைப் பேசுவாமே. (௧)

அம்பிகை.

கானவளைப் புணர்ந்தசெந்திற் கந்தனெழிற் சரிதைதனைக் கனிவாய்க் கூற
வானவனைப் பிறையணிநாயன் மாடக்கூ டற்கடவுள் மதிக்குஞ் சத்தி
ஆனவளைப் பாண்டிநன்னா டாண்டவளைத் தமிழ்மாற னருளும் செல்வ
மீனவளை உளத்திலுன்னி வினைத்துயர்தீர்ந் தருட்செல்வ மிகுத்து வாழ்வாம். (௨)

வீரபத்திரரும் அரியரபுத்திரரும்.

முக்கண்ணனருள் திருநுதலவோர் மையிலுதித்து
முகம்போ ராயிரத்துடனே வெகுண்டெழுந்து
தக்கன்மக பழித்தரண வீர பத்ர
சாமிமலர்த் தாளிணையு மரிய ரன்றன்
மெய்யகுமரன் திருவடியுஞ் சிரமேற் கொண்டு
வெள்விமலைச் சாரலின்மான் வயிற்றின் வந்த
பைச்சருங்கட் குறத்தியிடர் தீரமா வுக்காய்
மாயங்கரந் தவன்கதையை யெழுத்து வாமே (௩)

நவவீரர் இலக்கவீரர்.

விருத்தம்

உலைவுறுமுன னெழுபொறியான் மலைவுடனூ புரமணிகளொலியிட் டோட
மலைவலிசென றிடுபெழில்கண் டரன்மயல்கொண் டிடலுமந்த [illegible]
விலையதியா மணியிலவந்த நவசத்தி மாபயந்தவீர வரருக்
தலைவன்முத னவவீர ரிலக்கவீ ரர்களடிகள்சார்ந்து வாழ்வாம்.

கலைமகள்.

வெண்பா.

செந்திலுறை கந்தன் திருக்கதையைக் கீர்த்தனமாய்ச்
சிந்தை மகிழ்ந் தடியேன் செப்பவே—ஏகாந்தனக
வேணிபதா மத்தலைவன் மேவிமகிழ் தேவிகலை
வாணியென்ற னாவில்வருவாய்? (௪)

(ங) கீர்த்தனம். இராகம் - செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி

கலைமகளே - வெண் - கமலையே என்தாயே
கருதியென்னுளில்வந் - தருள்புரி வாயே (கலை)

சரணங்கள்

(க) மலரவன்றனைக்கூடி - மகிழ்ந்தருள் ராணி
வாக்கின்செல்வியாகிய - பாக்கிய வாணி (கலை)

(உ) பைந்தமிழிலக்கணம் - பகுத்தறியேனே
பான்மொழியே அடி - யேன்சிறியேனே (கலை)

(ங) சனிந்தசொற்பதங்களுடன் - கனிந்துவந்தார
காந்தமெனுங்கடலை - நீந்திநான்கரையேற (கலை)

(ச) கவிகுஞ்சரமென்றிந்தப் - புவியெங்குந்துதிக்கவே
கவிப்புலவர்களிரு - செவிக்கின்பம் உதிக்கவே (கலை)

மூவர்கள்.

விருத்தம்.

முற்றாத முலைக்குறத்திக் கன்பூறுஞ்சண்
முகநாதன் சரிதையைக் கீர்த்தனமாய்க் கூற
வற்றாத வைகையினை யெதிர்ந்து செல்ல
மணிக்கடலிற் கல்தோணி யாய்மிதப்ப
வற்றாழுங் குழற்பாவைக் கரன்றா தேக
வருந்தமிழ்ப்பா சுரமுரைத்த வடிகளென்னுஞ்
சொற்றமிழாச் சம்பந்த முனிவா கீசர்
சுந்தரர்மூ வரைவணங்கித் துதித்து வாழ்வாம். (௰ங)

வாதவூரடிகள்.

வெருவாத சூர்தடிந்த குகன்கதையைக் கீர்த்தனமாய்விளம்பச் சென்மக்
கருவாதனையிலமுழ்ந்தாக் கண்ணருவி யானந்தக்கடலின் மூழ்கிப்
பெருவாதரம்பொருந்தத் திருவாசகப்புகன்றுபேறடைந்த
திருவாத வூரடிகள் திருவடித்தாமரைமலரைச்சென்னி சேர்ப்பாம். (௰ச)

திருநந்திதேவர் மற்றை நாயனமார் நந்திமுதற் றிருத்தொண்டர்கள்.

மருத்தண்டார்க் கடம்பனெழிற் சரித்திரத்தை யின்னிசையின்
　　மகிழ்ந்து கூறப்
பருத்தமலர்க் கரத்தினில்வேத் திரம்பிடித்துத் திருப்புகழைப்
　　பாடி யாடி
நிருத்தர்திருச் சந்நிதிக்குட் புடைவிலக்கும் விமலனந்தி
　　நியமலன் முளும்
திருத்தொண்டர் தொகுதிகளின் செழுமலர்ப்பூந் துணைத்தாளுஞ்
　　சிரமேற் கொள்வாம். (௰௫)

அவையடக்கம்.

கார்க்கடன்மே னியன்றுயிலு பாற்கடலைப் பூசையுண்ணக்
　　கருதி னற்போற்
போர்க்கடனேர் தாரகன்ற னூரயனை யுமறவனை யும
　　புகுந்து வீட்டிச்
சூர்க்கடலை யடுத்தமரர் சுகக்கடலில் வசிக்கமுடி
　　சூட்டுஞ் செந்தூர்ச
சீர்க்கடம்பன் சரிதைதனைக் கீர்த்தன்மா யான்பாடச்
　　சிந்தித் தேனே (௰சா)

சேந்த னுங்கும ராதிபன் றிருக்கதை சிறந்த
காந்த மானதென் கருத்தெனு மூசியைக் கவரித்
தோய்ந்த வாவினுற் கீர்த்தனை யிசைகளாற் றொடுத்தே
னாய்ந்த நாவலர் பிழைபொறுத் தருள்புரி வீரே (௰எ)

வாதரா யணர்சூதர்க் குரைத்த கதை
　　வடமொழியைக் கச்சியப்பக் குருக்க ளென்னும்
போதமிகு வேதியரும் விருத்தப் பாவாற்
　　புனைந்தனரப் பாலதனைப் புலவோ ரெல்லாம்
பேதமின்றித் துதித்திடல்கண் டாசை யாலே
　　பேதையுங்கீர்த் தனவிசையாற் பிதற்றினேன்கற்
றோதியுணர்ந் தடக்கமுற்ற பெரியோர் நன்றென்
　　றுன்னுவீர் பிழைபொறுத்துக் கொள்ளு வீரே. (௰அ)

ஸ்காந்த புராண கீர்த்தனை.

(௪) கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

குற்றங்கள் பொறுத்தருள் வீரே - சற்
குணமுள்ளபெரியோரே

அநுபல்லவி.

முற்றியவசுரனை - வெற்றிகொண்டிசை பெற்ற
மூர்த்திகுகன்மேற்சொன்ன - கீர்த்தனங்களி லுற்ற (குற்ற)

சரணங்கள்.

(௧) மெய்முகில்வண்ணனுரு - எய்திஅவதரித்த
வேதவியாசமுனி - சூதமு னிக்குரைத்த
சைவபுராணமின்னதாம் - அவருமைமி
சாரண்யருக்குச்சொன்னதாம் - வடமொழியை
ஐயமின்றித்தமிழிற் - செய்யுட்கவியாய்க்கச்சி
அப்பர்முதலாகிய - விற்பன்னருரைத்ததைப்
பொய்கையிற்கமலங்கள் - பூத்திடல்கண்டுங்கொட்டி
பூத்திடுந்தன்மைபோலே - சாற்றினேனுமையாலே (குற்ற)

(௨) கற்பனைகளெழுத்துச் - சொற்பொருள்யாப்பலங்
காரங்களொடுவிவ - காரங்களும் பொருந்தச்
செப்புமுங்களைப்போலே - கவிதைசொல்லத்
திறமையில்லாமையாலே - என்னென்னமோயான்
பற்பலசந்தங்களால் - ஒப்புமிசைப்புலவர்
படிக்குங்கீர்த்தனையாகத் - தொடுத்தேனிதனையுங்கள்
மெய்ப்புதல்வர்கள்கூத - லைப்பனுவலென்றெண்ணி
மிகுந்துளன்புபதித்துப் - புகழ்ந்துநன்குமதித்துக் (குற்ற)

(௩) பாலுடன்கலந்தநீர் - பால்நிறந்தனையுற்றுப்
பனிமலரிற்றொடுத்த - நாரும்பூமணம்பெற்றுச்
சீலங்கொள்வதுகண்டு - தேவரீருங்கள்
திருவருட்கருணைகொண்டு - வண்மையாகவே
எனுமனமுயற்சி - யாலியைந்தமட்டிலும்
யான்சொலுங்கிருதிபுண்ய - மாஞ்சரிதையாகையால்
மேலோரிதைநன்றென்று - ஞாலமெங்குங்கொண்டாட
விரித்துநல்வளமாக்கிக் - கருத்துவந்துசீர்தூக்கிக் (குற்ற)

பாயிரம்.

புராணவரலாறு.

விருத்தம்

கயிலையிறை யருள்பெற்ற வயனிடமு னிவர்சென்று
கருதிநற் - றவமியற் - றிக்
கதிகள்பெற விடமொன்றை யருளெனக் குசையைக்
கரங்கொடு வளைத்துருட் - டிங்
கவனமுட னிதுசென்று நின்றவிட மானதுங்
கட்குத் தவஞ்செய் திடக்
கனதையென வதுநின்ற நைமிசா ரண்யமாங்
காவிலற வோர்தவஞ் செய்
தியல்புட னிருக்கையிற் சூதமுனி யங்குவந
தெயதினது கண்டு முனிவ
ரிறைஞ்சிக குமாரபுண் ணியசரிதை யெங்கட்
கியமபுமென் றினிது -கூற
இதமுறச சூதமுனி சொல்வீர்முக் காலத்தி
லிறைவனருண மறைக ளெல்லா
மிடைமுடிவு தமொற முனிவர்முத லனைவரு
மிருணமனத் தவாக ளாகி
மயன்மீறி யிருவினைப் பயனையும பரமனது
மனுவையு மறந்த பொழுதின்
மாலயன் கைலையிற் சென்றிவைகள் கூறிட
மகிழ்ந்துசிவ னரியை நோக்கி
மாநிலந் தனில்வேத வியாசனென நீவந்து
மறைபைநான் காயப்ப குத்து
மதியுற வுணர்த்தியா னந்திக்கு முன்னம்
வகுத்தபதி னெண்பு ராணம்
பயனொடு சனற்குமா ரற்கவ னுரைத்தது
பணித்திடு வெனபுகல வே
பங்கயன் மரபினி லுதித்திடு பராசரன்
பாலனா கத்தோன்றி யே
பாரிலுய ரேர்பதரி காச்ரமந் தனில்வந்து
பணிசெய்மா ணாக்கரின் மெய்ப்
பரிசுத்த னென்றெனக் கறிவித்த காதையுட்
பகுதிபெறு -காந்த மிதுவே (௨௧)

நூற்பயன்.

விருத்தம்.

புத்தியுண்டா மெய்ஞ்ஞான போதமுண்டா மில்வாழ்க்கை
பொருந்து மிட்ட
சித்தியுண்டாஞ் சௌபாக்கிய விருத்தியுண்டாம் பிணிவகைக
ளர்க்கு மர்த்ர
சத்தியுண்டாம் ராஜவசி கரமுண்டாஞ் சயமுமுண்டாந்
தகைசா லின்பப்
பத்தியுண்டாங் காந்தமிதைப் படிப்பவர்க்குங் கேட்பவர்க்கும்
பாரின் மாதோ. (உம)

(ரு) கீர்த்தனம். இராகம் - ஆரபி—ஆதிதாளம்.

பல்லவி.

தெய்வச ரித்ரமிதைக் கேளும் - பரமபவித்
திரமென் றெண்ணி யெந்நாளும் (தெய்வ)

அனுபல்லவி.

சைவபு ராணம்பத் தாகும திலுயர்ந்த
தாந்தகு தியாய்வந்த காந்தமாகிய இந்த (தெய்வ)

சரணங்கள்.

(க) கற்றவர் நாவிற்செந்தே னூறும் - கேட்போர்
காதுக்கின் னமுதப்போ லேறும் - மனச்
சிற்றறிவு போயுள்ளந் தேறும் - ஞான
தீபம்போ லரனருள் மீறும் - கனு
வுற்றகருப்பப் பனிப் - பற்றியருந்துமான
உருசிபோன்மேன் மேலாசை - தருமின்பரசமான (தெய்வ)

(உ) கிரக வக்கிரங்களை விடுக்குஞ் - சுபக்
கிரகத் துறும்பலன்வந் தடுக்கும் - பொல்லா
நரகவாதையுற்றமற் றடுக்கும் - உயர்
நான்கு பதங்களையுங் கொடுக்கும் - நன்றாய்
திரிகரணசுத்தியாய்ப் பரவுவோர்க் கெளிவரும்
திக்கெங்கும் புகழைந் - திக்குஞ்சந்ததி தரும் (தெய்வ)

(௩) க்ஷேத்ர தரிசனஞ்செய் நலனும் - புண்ய
தீர்த்தங்களின் மூழ்கிய பலனுஞ் - சத்
பாத்ரங்கள் பார்த்தைந்து புலனுங் - குளிரப்
பணிந்துப சரித்தணி கலனுட் - பூட்டிச்
சாத்திரப்படிக்கன்னி - தானங்கள் முதற்செய்து
தழைக்குந்தன்ம பலனுஞ் - செழிப்புடனே வந்தெய்துந் (தெய்வ)

(௪) பேயும்பூதமும்நோயும் பறக்கும் - வினைப்
பிறவிப்பந்தந்தீர்ந்தெழில் சிறக்கும் - வஜ்ர
காயசித்திபத்தியும் திறக்கும் - செங்
கமலையருண்மிகுந்து நிறக்கும் - மிகக்
காயுமழுவுமானுந் - தோயுங்கரன் விந்தன்
கருத்துற ப்ரணவமந் - திரத்தையுரைத்த கந்தன் (தெய்வ)

விருத்தம்

விதிக்குமரி தனைகுமரன் றனக்குமன்பு
விளைத்துவடி வேல்பிடித்து வெகுண்டெழுந்து
குதிக்குமவு ணர்கள்குலத்தை வதைத்து வெற்றி
கொண்டபர ருளக்கவலை யகற்றிச் செந்திற்
பதிக்குள்வந்து துணைவர்நந்தி கணங்கள் சூழப்
பரிந்துகொலு விருந்தடியார்க் கருள்சுரந்த
மதிக்குமரன் கதைகவட மொழியாற் றுய்ய
வளஞ்சொல்வேன் தோடயமங் களஞ்சொல் வேனே. (உம்ச)

தோடயம.

(௱) த்விபதை - இராகம் - நாட்டை—ஜம்பைதாளம்.

க. ஜய [illegible] ஜய [illegible]
ஜய [illegible] ஜய [illegible] ஜய ஜய
ஜய [illegible] ஜய [illegible]
ஜய [illegible] ஜய [illegible] ஜய ஜய

உ. [illegible]
[illegible] ஜய ஜய
[illegible]
[illegible] ஜய ஜய

௩. அஷ்ரே தாரவஸஷ்ரே ஷாஷ, அவிரூவஸஜ நதெதாஷ
வஸஶாரஶவாரிவஹீஷ ஶபாரவாரவெஷ ஜய ஜய
வுஶார கரிவிரவொஷஶாஂஹீகநிதெஹ்ராஷ
விஜ்ஞகஜ்ஞரவொஷ|வி நஹதவஸவிரெஷ ஜயஜய

மங்களம.

(ஏ) திபதை இராகம் - பந்துவராளி—ஆதிதாளம்

பல்லவி

ஶிவஸ்ய ப்ரஹ்மண்ய தெத மஂகளஂ
ஶிவஸ்ய தாமஜீத மஂகளஂ ஶிவஸ்ய

சரணங்கள்

௧. வாராஹஹ்ருதவஷித வாயதொகவிகித
தாராஹ்ருவாநீதித மஂகளஂ ஶிவ

௨. வஜ்ரதெநாஷார வாகராணாகர
வஜ்ரவ ஷ்ரஷகர் மஂகளஂ ஶிவ

௩. நவாரவஸஹாஷண நமஷ்ரதொஷண
கவிகஜ்ஞரவொஷண மஂகளஂ ஶிவ

உ

ஸ்காந்த புராண கீர்த்தனை.

சம்பவ காண்டம்.

சிவன் கைலையிற் கொலுவீற்றிருத்தல்.

விருத்தம்

துங்கமறை யாகமங்கள் தொழுது போற்றத்
    துரியசிவ கணங்கள்பல துதிகள் சாற்ற
வைங்கரனுங் கருதலன்வேள் வியை யிவித்த
    வாயிரம்பொன் முடியுளவீ ரனும் பணிந்து
செங்கருணை விழிகாட்டு மேவல் கேட்பச
    சிஙகமா யிரஞ்சுமந்த வணையின் மீதிற்
பொங்குமுமா பதியாகி யடியாாக் கன்பு
    புரிந்திட்டார் திருககொலுவீற் றிருந்திட் டாரே. (க)

(க) கீர்த்தனம். இராகம் - ஸாவேரி—திருபுடைதாளம்.

பல்லவி

ஆதிசிவன்கொலு விருந்தானே - பிரும்
மானந்தமுற்றுரனை வருந்தானே.

அனுபல்லவி.

சோதிநவரத்னச்சிங் - காசனந்தனில்யோக
சாதனஞ்செய்யுமுமை - மாதுஸமேதனாக. (ஆதிசிவ)

சரணங்கள்.

(க) கங்கைகொன்றைமதியி லங்குஞ்செஞ்சடையாட
காமருவுபொன் னுடர் - பூமலர்மாரி போட
மங்களவியங்கள்மு ழங்கியின்னிசை பாட
வணங்கிவணங்கிப்பூத - கணங்கள் துதிகொண்டாட
    வடிவுதிகழ்வெண் - பொடியணிந்துமறை
    முடிவிலுறைசுந்தரன் பதிகளுளிய (ஆதிசிவ)

(உ) குளிர்மதிரவியங்கி-யொளிசேர்விழியுஞ் சங்கக்
குழையுந்திருக்கரத்தின் - மழுவுழையுந் துலங்க
அளவிலாதகருணை யமுதமாரிகள் பொங்க
அடிநடுமுடியில்லா - நெடியோனுகிய துங்க
வைத்துவிதருண - மன்துவாகவேவி
சித்ரமாயிருந்து - முத்தொழினடத்தும் (ஆதிசிவ)

(ங) நந்திகட்டியங்கூறி - நற்பிரம்பொலி யார்க்க
நாரதர்வீணைதோளிட் - டாரமுதிசை வார்க்க
சுந்தரவடிவையு வந்துமையவள் பார்க்க
தொண்டர்கள்பவவினைத் தொடரினைத்தையும் தீர்க்க
அயமலரயன் - மாயவனுமக
நாயகனுமுறை - யாய்வணங்கிநிற்க (ஆதிசிவ)

தக்கன்மகளெனத் தனக்குற்ற பேரை ஒழித்திடென உமை ஈசனை வேண்ட ஈசன் உமையை இமவான் மகளாய் அவதரிக்கச் சொல்லியபடி உமை அவதரித்தல்.

விருத்தம்.

திருக்கொலுவி லிருந்தததனிச சிவனைப் போற்றித்
தீதுறுந்தக் கன்மகளென் றியம்பும் பேரைக்
கருத்துவந்து தீர்த்திடுமென் றுரைகக வீசன்
களிப்புடனே யுமையவள் முகத்தை நோக்கி
வருத்தமொடு தவமியற்று மிமயான்செல்வ
மகளாவா யெனப்பணித்தா னுடனே யந்தப்
பொருப்பினிற்சென் றெழிற்றடமா மலர்க்கு ளன்பு
பொருந்திட்டாள் குழந்தையென விருந்திட் டாளே (உ)

(உ) கீர்த்தனம், இராகம் - கூறட்டி - ஆதிதாளம்.

பல்லவி

கஞ்சமலர்மீதிருந்தாள் - அஞ்சுகமொழியுமையாள்
கஞ்சமலர் மீதிருந்தாள்

அனுபல்லவி.

வஞ்சகனுகியதக்சன் - மகளெனும் பேரையாற்ற
மலையரசன்செய்தவப் - பலன்றனைநிறைவேற்றக் (கஞ்சமலர்)

சரணங்கள்.

(க) உம்பர்கள் துயர்போக - வுயர்ச்சியவர்க்குண்டாகச்
செம்பொன்பாவைபோன்மோகச் - சின்னக்குழந்தையாகக் (கஞ்ச)

(உ) அண்டிமுலைப்பால்வேட்டு - அழுதுமென்குரற்போட்டு
வண்டினங்கள்தாலாட்டு - மலர்ச்செவிதனிற்கேட்டுக் (கஞ்ச)

(ங) முகத்தின்வேர்வைகரும்பின் - முத்துமுத்தாயரும்பிச்
சகத்தைபீன்றுந்திரும்பித் - தாயேன்றாலைபவிரும்பிக் (கஞ்ச)

பார்வதியை இமவானும் அவன்மனைவி மேனையும்
கண்டெடுத்துத் துதித்தல்.

விருத்தம்.

கதியேது மில்லாத மிடியோன் கண்ணுற்
கனகநிதிக் குவையதுகண் டுவந்தாற் போலப்
பதுமமல ரதிலிருந்த குழந்தை தன்னைப்
பருப்பதமன் னவன்றெரிந்து விருப்ப முற்றுத்
துதிசெய்திரு மலாக்கரத்தா லெடுத்துச் செம்பொற்
றோளிலணைத் துடனெழுந்து மனைவி கையில்
மதிமகிழ்ந்து கொடுத்துமிரு வருமா னந்த
வாரித்தா ளனைப்பமனம் பூரித் தாரே. (௧)

(ங) கீர்த்தனம். இராகம் - இந்துஸ்தான் பைரவம்—ரூபகதாளம்.

பல்லவி.

மாதுமையேகண்மணியே - பூவில் - வந்துதித்த - தெய்வ
மாதுமையேகண்மணியே

அநுபல்லவி.

மேதினிதுதிசெய்யும் - விமலனருளாற்செய்த
காதல்சேரெங்கள்தவத்தாற்-பிள்ளைக்-கலிதீர்த்த-தெய்வ (மாது)

சரணங்கள்

(க) அமரர்கள் தொழுமபெண்ணே - யனைவர்க்கு மிருகண்ணே
அமுதசற் குணநிதியே - கரு ணாநிதியே - தெய்வ (மாது)

(உ) புனிதப் பசுங்கிளியே - பொருந்துமின் னலொளியே
யினியசொற் கருங்குயிலே - சே - ரிளமயிலே - தெய்வ (மாது)

(ங) முத்திக்குயர்கதியே - மூதலாதிபதியே
தத்துவமறைமுடிவே - சா - மளவடிவே - தெய்வ (மாது)

எனத்துதித்த அவ்விருவரும உமையை அரண்மனைக் கெடுத்துச்சென்று வளர்க்க உமை வளர்ந்து ஐந்து வயதாகிப் பரமசிவனருளைப் பெறுமாறு தவஞ்செய்ய வேணுமெனல்.

(ச) திபதை இராகம் - பந்துவராளி—அடதாளம்.

(க) அம்மைதிருவழகைக கண்டார் - உமை
யாமென்றுளமகிழ்ச்சி கொண்டார்
செம்மைமேனை தன்கையற் றூங்கினள் - முன்பு
சேயில்லாதகவலை நீங்கினள்

(உ) கொங்கையிரண்டினும்பால்சுரக்க - வம்மை
குமுதவாய் மலர்ந்தருள் சுரக்க
துங்க நறுமஞ்சணீ ராட்டினர் - மணிச
சொன்னப்பணிகளெல்லாம் பூட்டினர்

(ங) ஆணிப்பொன்றொட்டிலி லேற்றினர் - தா
லாட்டியங்களஞ்சொல்லி வாழ்த்தினர்
பாவித்துவகைமிஞ்சித் துதித்தார் - பார்ப்
பதியென்று திருநாமம் பதித்தார்

(ச) அன்னையிளம்பிறைபோல் வளர்ந்தாள் - மலை
யரையன்றேவியுமுளங் குளிர்ந்தாள்
சின்னப்பெண்களுடனே கூடுவாள் - மணற்
சிற்றில்கட்டியும் விளை யாடுவாள்

(ரு) பொன்மணலெடுத்துச்சோ றாக்குவாள் - அள்ளிப்
புசிக்கச்சொல்லிப்பெண்களைத் தாக்குவாள்
கன்னியர்க்கணிகோலஞ் சூட்டுவாள் - பத
கதியபிநயஞ்சொல்லிக் காட்டுவாள்

(சு) பலகறைகழற்காயுந் தேடுவாள் - ரத்நம்
பதித்தவம்மனையெடுத்தாடுவாள்
விலையுயர் பந்தெடுத்தடித்தாள் - இந்த
விதமாகவிளையாடி நடித்தாள்

(எ) சொல்லுங்கலை ஞானங்கள் தேர்ந்தாள் - அதி
சூக்ஷ்மவறிவிலுள்ளஞ் சார்ந்தாள்
மல்லார்படைத்தொழிலுஞ் சோதித்தாள் - சுரி
மாவேற்றங்களுங்கற்றுச் சாதித்தாள்

(அ) ஐந்துவயது நிறை வுற்றாள் - சிவன்
அருளைப்பொருந்தமனம் பெற்றாள்
தந்தைசமுகங்கண்டு போற்றினாள் - யான்
தவஞ்செய்யவேணுமென்று சாற்றினாள்

உமை தவஞ்செய்தல் - பரமசிவன் சநகாதியர்க்கு உபதேசித்தல் - தேவாகள் அசுரவாதைபொறாமல் ஈசனிடம் முறையிடுதல்.

விருத்தம்.

தந்தையருள் கொண்டுமையாள் தவத்தை மேவச்
சனகாதி முனிவருக்கு மோனந் தன்னை
விந்தையுட னரனுரைக்க மயல்போய்த் தங்கள்
மின்னிடையார் புணர்ச்சியின்றிப் புவன மெங்குஞ்
சிந்தைவெறுப் புறமவுனத் திருக்கு மீசன்
திருமுன்னே யசுரர்செயு மிடர்பொ றாம
லிந்த்ரன்முதற் றேவர்வந்து பணிந்து கூவி
யிரைந்திட்டார் குறைகள்சொல்லிக் கரைந்திட் டாரே (ச)

(ரு) கீர்த்தனம் இராகம் - புகாரி—திருபுடைதாளம்.

பல்லவி

இடுக்கண்கள் தீர்ப்பதுன் பரம சாமி
கடைக்கண்பார்த் தருள்வாயிந்நேரம்

அநுபல்லவி.

சடைக்குள்நதிவெண் டிங்கள்
தரித்தவனேய கங்கொள்
அடற்சூரர்கு லங்கள்
அனைத்தையும் தொலைத் தெங்கள் (இடுக்கண்)

சரணங்கள்.

(க) மட்டில்லாதவரம்பெற் றட்டகாசங்கொண் டெட்டி
மலைபோற்கிளம்பிச்சூர்மூ வுலகெங்குஞ்சென்று வெட்டி
தட்டில்லாமலாயிரத் தெட்டண்டங்களுங் கட்டி
தலைகெட்டதால்போனுங்கள் நிலைகெட்டோட விரட்டி
தறித்துக்கரும்பென முறித்தருந்திமிக
வருத்தஞ்செய்வதால்வே றொருத்தர்கதியில்லை (இடுக்கண்)

(உ) தேவருலகத்தையும் பாவிசூரன்றீ யிட்டான்
ஜெயந்தனுஞ்சிறையினிற் பயந்துகொண்டகப்பட்டான்
தாவின்முனிவரெல்லாங் கோவென்றலற விட்டான்.
தரணியிலினியொரு வரையும்பிழைக்க வொட்டான்.
திரிக்கவிடமின்றி நெருக்குந்துன்பமினி
யரைக்கணமாயினும் பொறுக்கவொண்ணதெங்கள் (இடுக்கண்)

(ங) நீடெம்புலிதுரத்த வோடுங்கலைமான் போலே
நீசர்துரத்தககயி லாயவரையின் மேலே
யோடிவந்தோமையனே யுன்றன்றிரு முன்னாலே
உள்ளக்கருத்தைவள்ள லுணர்ந்துகொண்டினிமேலே
யும்பருலகத்த லமபலொழிப்பது
நின்பரமாந்திரி யம்பகனேயெங்கள் (இடுக்கண்)

குமாரனுதித்து அசுரரை வென்று உங்களை இரக்ஷிப்பானென
ஈசன் உரைத்தல.

விருத்தம்

பொன்வியனாட் டமரர்முறை யிடக்கேட் டையன்
பொருந்துதக்கன் மகத்திலெம்மைப் பழித்த வுங்கள்
தன்வினையே யுனைச்சுடவு மசுர வாதைத்
தழல்சுடவு மெலிந்துநம்மைச் சரண் புகுந்த
நன்மையுடை யீர்நீங்க ளஞ்ச வேண்டாம்
நமதருளாற் குமரனுதித் தசுரை வென்று
தொன்மையுங் களிப்பானென் றுரைக்கக் கேட்டுத்
துதிகொண்டா ரமரர்கள்சம் மதிகொண் டாரே. (௬)

பிரமதேவன் மன்மதனை ஈசனிடம் சென்று
புஷ்பபாணத்தைப் போடவேண்டல்.

விருத்தம்.

சம்மதிகொண் டிமையவர்கோன் சசியை மேரு
தனிற்குருவின் மனைவிதன்பால் விடுத்துப் பின்னர்
செம்மலரோன் றனையுமழைத் துடனே சென்று
ஸ்ரீதரனைப் போற்றியரன் செயலைக் கூற
மும்மையுல கையுமயக்கு மதனை யேவி
முக்கணனை மயல்விளைத்தம் பிகைபாற் சேர்த்தா
னன்மையுறு மெனமதிக்க மதன னங்கு
நாடினன் வேதனுரை யாடி னானே. (௯)

(௯) கீர்த்தனம் இராகம் - பியாகு—ஆதிதாளம்.

பல்லவி.

மதனாவுன்வல்லமை யதனாலுய்யவேணும்
வானவர்கருதவிநீ செய்யவேணும் - அடா (மதனா)

அனுபல்லவி.

பதினாலுலகமுஞ் செலுத்துமுன்றன் கரத்திற்
பஞ்சபாணத்தைப்பசு பதிதன்றிரு வுரத்திற்
பதியும்படிக்குத் தாக்கப்
பரமமோனத்தை நீக்க
அதிகமோகமுண் டாக்க
அம்மைமேல்மனம நோக்க (மதனா)

சரணங்கள்.

(க) தனியாமெனதுதொழில் - தடைபட்டிருப்பதாலே
சகத்திற்பிறப்புமில்லை - மிருத்தோரிறப்புமில்லை
இனிதாகவேநீ யின்று
ஈசனெதிரே சென்று
மனஞ்சலியாம னின்று
மதியையமயக்கி வென்று (மதனா)

(உ) உதவிசெய்பவர்க்கிடை - யூறொன்றும்வாராதுயி
ருகுமுடம்பசித்தியம் - புகழுடம்பேநித்தியம
இதிலுனக்குப சாரம்
இயம்புவதென்ன சாரம்
இதிமைந்தர்செய் கொரேம்
தீர்ப்பதுனது பாரம் (மதனா)

(ம.) தன்னினந்தன்னைக்காக்கும் - வேலிபயிரைக்காக்குந்
தகைமையானதைசேர்ந்து - விகிதமென்று நீயோர்ந்து
பொன்னுலகம் பிழைத்து
புலன்கொண்டுயிர் தழைத்து
மன்னும்படிக் குழைத்து
மயலைமிக இழைத்து (மதன)

இது என்னாலாகாத காரியமென்று மன்மதன் மறுத்துக்கூறல்.

விருத்தம்.

நன்மதிபோற் பிரமனிவ்வா றுரைத்த பாற்ற
நடுச்செவியின் முனைவடிவேல் துளைத்தாற் போல
மன்மதன்பின் கேட்டுநடுநடுங்கி நல்ல
மதிசொலவந் தீர்பரம சிவனுன் முன்னே
கன்மதில்சேர் திரிபுரத்தார் பட்ட பாடுங்
கான்முளையைத் தொட்டநமன் பட்ட பாடு
நும்மதியி லுணர்ந்திலிரோ வென்று சொல்லி
நோக்கினன் வணங்கியுரை தாக்கினனே. (எ)

(எ) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆகாதையா - இதுவென்னா - லாகாதையா.

அநுபல்லவி.

வாகுடன்சிவன்வலி தெரிந்துமெக் காலும்
வழுத்தவாதிரதி யாதவர் போலும்
ஓகையினுறுதியி னுமென்றன் மேலும்
உயிருக்குப்பிணியினி யென்னசொன்னாலும் (ஆகா)

சரணங்கள்.

(க) சனகாதியர்க்கரு ளருளுப தேசம்
தனைத்தவிர்த்தாலதில் வருவதா யாசம்
அனல்விழிதிறந்திடி லென்னுடல் நாசம்
அய்யய்யோவிதைவிட வேறுண்டோமோசம் (ஆகா)

(உ) சமயமுணர்ந்திடாமற் செயுமுப சாரம்
தனக்கேதருமேபின் னதிகவி சாரம்
அமையுமென்மலர்க்கணை யாலப சாரம்
ஆகும்பின்னுயிர்கொடுப் பதிலென்ன சாரம் (ஆகா)

(௩) காலமுன்னவனுக்கு விடமமு தாச்சு
கருதாமதுசெயல் வீண்வெளிப் பூச்சு
கோலமறையவரே யிதிலென்னே யேச்சு
கொல்லவேண்டாமுடி யாதிந்தப் பேச்சு (ஆகா)

பின்னும் மன்மதன் கூறல்.

விருத்தம்.

குருகிளிற் கழுவிற் கேத்த கோமட்டி மதன னென்று
பரவிநீ ரியற்று மிந்தப் பயிலெலா மறிவேன் விண்ணோ
ரரியும திடத்தி லென்ற னுண்மைகள் பலிக்கு மல்லாற்
பரமன்பா லியையா தென்னப் பரிந்துவேள் பகர்கின் றானே. (அ)

(அ) கீர்த்தனம் இராகம் - ஸ்ரீ - திருபுடைதாளம்.

பல்லவி.

என்னகாரியம் போமையா - தேவரீர் வார்த்தை
எவர்க்குச்சம் மதியாமையா

அனுபல்லவி

மின்னார்சடையோனிட - மென்னைவிடுத்தாலதில்
விளைவதுங்குறி யாமலேயுன்ன
முளைவதுமறி யாமனீர்சொன்ன (தென்)

சரணங்கள்

(க) உந்தியிலுமைப்பெற்றோன் - முந்தத்துயர்ப் பட்டதும்
உமதுசிரத்திலொன்றை - உகிராற்கிள்ளி விட்டதும்
அந்தமுயலகனை - அடியில்வீழ்த்தி நட்டதும்
அகத்தாரஞ்சேர்தக்கனை - மகத்தழவி விட்டதும்

அறிந்திருந்துமேன் பஞ்சரிக்குறீர் - பொது
வம்பலத்திற்கடை விரிக்குறீர் - சும்மா
வெறும்புளிதின்று நாக்கெரிக்குறீர் - சிவனை
வெல்லலாமென்றுப சரிக்குறீர் - இது (என்ன)

(௨) கருப்புவில்வளைத்தம்பு - தெறிக்கவுங் கூடுமோ
காவனன்முன்மெழுகு - பாவைநின் றாடுமோ
விருப்புற்று நானிகற்ற - வித்தையங்கே நாடுமோ
மின்மினியொளிவெய்யோன் - வெளிச்சத்தினீடுமோ

வீணிலென்ன மொழி படிக்குறீர் - ஆசை
மிகுந்துபிடித்ததே பிடிக்குறீர் - என்றன்
பாணிதொட்டுக்குறம் படிக்குறீர் - என்னைப்
பழிசெய்யவோ துடி துடிக்குறீர் - இது (என்ன)

(௩) அயலாரைவிட்டுக்கிளை - யாழப்பார்ப்பது போலே
அஞ்சாதே நீபோவென்று - லென்செய்வேனினி மேலே
வியனார்கயிலையிற்சென் - றயர்கொண்டுங்கண்முன்னாலே
மீண்டிடுவே னெனவெண்ண - வேண்டா நீயொருக்காலே

மேருவில்லி சொன்ன வாறொன்றுந்தப்பாது
வியந்திடாமன்பன - பயங்குறீ ரிதேது
பாரமவர்க்கென்று நேருந்தவ றாது
பதறாதகாரியஞ் சிதறாது இப் போது (என்ன)

மதனனுரைத்ததைக்கேட்டு பிரமன் நீபோகாவிடில் உன்னைச் சபிப்பேனென மதனன் சம்மதித்து அரனெதிர் சென்று மலர்க்கணை தூவி ஈசனது நெற்றிக்கண்ணால் எரிபடல்.

விருத்தம்.

மதியுறவின் மதனுரைக்க மலரோன் சீறி
வாழ்வதுந்தாழ் வதுஞ்சிவன்றன் செயலா மென்றன்
விதிதவறி லுனைச்சாப மிடுவே னென்று
விதித்திடலு மங்கவன்சம் மதித்துக் கொண்டே
யதிவடிவ விரதியுடன் கயிலை மேவி
யருணந்தி விடையதுபெற் றறவோர் சூழக்
கதிமவுனத் திருக்குமரன் றனைக்கண் டுள்ளங்
கனைக்கின்றான் றெளிந்துவில்லை வளைக்கின் றானே. (க)

பின்னும் விருத்தம்.

இரதிதனைப் பிறகில்வைத்துத் தெளிவு கொண்டே
யிந்தவித மதனனர விந்தஞ் சூதங்
கருமைதிகழ் குவளைநறை யொழுக சோகு
காமுறுமென் முல்லையெனு மலர தான
சுரதபஞ்ச பாணமதை விரைவிற் பூட்டிச்
சுரர்முதலோர் வெருவிநந்தி யருகே நிற்கச்
சுரநதிநஞ் சரவணிந்த பரமன் மீதிற்
சொரிந்திட்டா னுதல்விழியா லெரிந்திட் டானே. (௬)

(௬) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—திருபுடைதாளம்.

பல்லவி.

எரிந்தானேமதனன் - உடல்பொரியாய்ப்
பொரிந்தானேமதனன்

அனுபல்லவி.

விரிந்தசடையோன்செய்கை - தெரிநதும்பரமையினாலே
விளக்கைப்பிடித்துக்கொண்டு - கிணற்றில்வீழ்ந்ததுபோலே (எரிந்)

சரணங்கள்.

(௧) காளகுயில்கள்கூவக - கடன்முரசமடிக்கக
கஞ்சுற்கரிநடகத் - திடகட்குடை பிடிக்க
நீளுங்கடற்கொடியுங - கட்டித்தென்றற்றேரேறி
நிரையாய்ப்பூட்டியகிள்ளைப் - பரியானது நடிக்க
வாளாங்கேதகைசேர்த்து - வலத்திலம்பறுத்தாணி
மாட்டிக்கழைவில்லேநதி - வண்டிசைகள் படிக்க
ஆளும்பஞ்சபாணத்தை - அஞ்சாமலேவிடுகக
வையன்றிருநுதற்கண - ணழலாலுயிர் துடிக்க (எரிந்)

(௨) இந்த்ராதிதேவரை - யாநதரவுலகத்தில்
இருக்கவொட்டாமற்சூரன் - நெருக்கவேறு வேறாகி
சிந்தைவருந்துவதைத் - தீர்க்கவேணுமென்றயன்
செப்பவதற்குமனம் - ஒப்பிமிக வீறாகி
வந்துவெள்ளிமலையிற் - சனகாதியருடன்
வசிக்கும்பரமசிவன் - றவத்துகஙிடை யூறாகி
புந்திமகிழ்ந்தொளிமி - குந்தம்சந்தியைவண்டு
பூவெண்ணெய்மடிந்தாற் - போலேசீறு நீறாகி (எரிந்)

(௫) முன்னொருகாலத்திற் - பொன்னகர்க்கிறைவன்றன்
முனைசேர்குலிசஞ்செய்யத் - தனதுடலத்தை விட்டு
மன்னும்புகழுலகிற் - றுன்னும்படிக்குச்செய்த
மாமுனிவனைப்போலக - காமனும்புனைப் பட்டு
பன்னகமிருக்குமென் - றறிந்துப்புற்றினிற்குள்ளே
பாணியிட்டவனைப்போல் - வீணில்மிகப்போ ரிட்டு
உன்னுமவுனத்திற்குப் - பின்னமுறவேமையல்
உருக்கும்படிசெய்குற்றம் - பொறுக்காமுனிவு சுட்டு (எரிந்)

மதனனிறந்ததற்காக இரதி புலம்பல்.

விருத்தம்.

மாரனிந்தப் படியிறக்கத் தேவ ரெல்லா
மதிமயக்கங் கொள்ளநந்தி வகையாய்த் தேற்ற
வாரணனே டமரருளந் தெளிந்தா ரிப்பா
லாவியெனுந் துணைபிரிந்த மயிலைப் போலும்
பேரெரியில் வீழ்ந்தரவ நீதம் போலும்
பேதையிர தியுங்கலங்கிப் பெருமூச் சிட்டுத்
தாரையென விருகண்ணீர் வாரி சோரத்
ததும்பினு ளழுதழுது வெதும்பி னாளே. (கக)

(ய) கீர்த்தனம் இராகம் - எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

இனிமேல்மதனா - என்னென்று செழிப்பேன்
யார்முகத்தினிக் விழிப்பேன்

அனுபல்லவி.

அனவாகனத்தோன் சொன்மொழியில் நின்றாயே
அரன்கயிலை சென்றாயே
தனிமலரய்பெய்து சமர்புரிந்தாயே
தழல்விழியா லெரிந்தாயே - ஐயோ (இனி)

சரணங்கள்.

(க) அனன் மலையிற்கற்பூரம் பெய்குவாருண்டோ
அய்யோவிதென்ன மிண்டோ - என்றன்
இனியகுடிகெடுக்க இவ்வேடமெடுத்தாயே
எனைத்தெருவினில் விடுத்தாயே - ஐயோ (இனி)

(உ) தாயாதிசொல்லைநம்பிப் பேயானபோதே
தலைவிதி தப்பாதே - நான்
நினைத்தலாயெண்ணின எண்ணம்போலாச்சே
எவர்களுக்குமீ தேச்சே - ஐயோ (இனி)

(௩) என்றபடைக்குமுன்னம் எதிர்கிற்கலாமோ
இப்படிப்புத்தி போமோ - உனக்குத்
தோன்றியமதத்தாலே துடித்துயிரொழிந்தாயே
சொரூபமில்லாம லழிந்தாயே - ஐயோ (இனி)

இரதி புலம்பி மன்மதனைப் பிழைப்பிக்க ஈசனை வேண்ட ஈசன் உமை மணத்தில் மன்மதனைப் பிழைப்பிப்போமெனல்.

விருத்தம்

இரதியிந்த விதம்புலம்பிப் பரமன் பாதத்
    திணைமலரின் முடிதாழ்ந்த திறைஞ்சி நின்று
சுரநதிவான் பிறையணிந்த விறைவா போற்றி
    சோதிமய மானமுக்கட் சுடரே போற்றி
விரையுறுபூ மதன்செய்த பிழைபொ றுத்து
    மெய்யுமுயி ருங்கொடுத்தா தரிப்பா யென்று
பரதவிக்க வுமைமணத்தி லருள்வோ மென்று
    பணித்திட்டார் மனக்கவலை தணித்திட் டாரே (([illegible]))

ஈசன விருத்தரூபத்தோடு உமையாளிடம் செல்லல.

விருத்தம்.

அனங்கன் றேவி யபயம் பெற் றங்கே யிருப்பக் கொங்கலர் கா
வனைன்ற மூலகத் தலைவ னயன் வானோ ரேனோ ரனைவர் களுந்
தனஞ்சேர் மறையாற் றுதித்தி றைஞ்சச் 'சனகா தியரை விடுத்து மரன்
கனஞ்சேர் தவஞ்செய் யுமைய வளைக் கண்டோன் கிழவ கொண்டா னே ([illegible])

(யக) கீர்த்தனம். இராகம் - கேதாரகௌளம்—ரூபகதாளம்.

பல்லவி.

விருத்தரூபங்கொண்டு - நிருத்தரிமயவரை
மீதில்வந்துதித்தாரே.

அநுபல்லவி.

தரித்தகங்கைமதியை - மறைத்துருவம்வேறாக்கித்
தவத்திலிருக்குமுமை - யவட்கருள்தரநோக்கி (விருத்தரூப)

சரணங்கள்

(க) இந்துநுதலில்வெண்ணீ றிலங்கத்திலதப் பொட்டு
மிசையுஞ்செவியதனி லசைசங்கக்குழை யிட்டு
கந்தரந்தனின்மணிக் கண்டிகைமாலை தொட்டு
கட்டங்கந்தாங்கியோகப் பட்டிகைதொங்க விட்டு
கருணை பெருகிய சிறுநகையுங் காட்டி
கதிக்குமன்பர்கள்தம் மதிக்குளின்ப மூட்டி
வரமணிமார்பினிற் புரிமுந்நூலு மாட்டி
மறையெனும்பாதுகை குரைகழலிற் சூட்டி (விரு.)

(உ) சித்திரமாய்மருங்கிற் சுற்றுங்காவி யுடையும்
சீர்த்திமிகுங்கரத்தில் வேத்திரப்பொற் படையும்
பத்தியணியாய்க்கோத்த படிகமணித் தொடையும்
பயின்மிகுமெழிலேறுக்கு மொயிலாகிய நடையும்
பார்த்தவர்கள்புகழ்ந் தேத்தித் திரும்பவும்
பரவியானந்தம் பெருகிப் பொரும்பவும்
மூர்த்தியென்றுபெண்கள் முயங்கி விரும்பவும்
முத்தணிபோல்வேர்வு முகத்தி லரும்பவும் (விரு.)

(ஙு) வருந்திநெடுநோட்பிரிந் திருந்தகவலை மாற
வண்மைமிகுமானவ ரெண்ணங்கள்நிறை [illegible]
பொருந்துதெய்வதருக்கள் சிறந்துமலர்கள் [illegible]
பொருவிலிமவான்மகள் திருவுளங்களிப் [illegible]

பொன்பதிவளர ரம்பையர் நடிக்க
புகழ்வேதாகமங்கள் மகிழ்வுடன் படிக்க
அம்பிகையிடது மொய்ம்பது துடிக்க
வருமையுடன்கூடித் திருமணை முடிக்க (விரு.)

சிவனைச் சகிமார அம்பிகையிடம அழைத்துச் செல்ல
அவ்விருவருக்கும நடந்த சமபாஷணை.

விருத்தம்.

வந்தகிழ வனைச்சகிமார் பணிந்து நோக்கி
மறையவனீ யிங்கெழுந்த வகையே தென்ன
விந்தையுமை தவங்காண்டற் குற்றோ மென்ற
மெய்யுரையம் பிகைக்குரைத்தங் கழைத்துச் சென்று
சுந்தரனை வணங்கியமங கையுநீ நோன்பு
தொடுத்தவகை யேதெனவே யிசைக்கப் பெற்று
வந்தரியுண் மையைக்கூறச் சிவனிங் கேவா
ராவென்பா ராசையைநீ நீரெனபாரே.

(கஉ) உத்தாப்ரதி உத்தர அடிமடக்குத்திபதை இராகம் - நருபாள் / காண்டா.

திருபுடைதாளம்.
ஆதி

(க) தனியிளம்பெண்ணே - யுனக்கேனிந்தத்
தவமேண்டிகண்ணே - உயர்
பனகசயனனயன் றனதாகும பெருவானே
ரனுதினந்தேடிககாணு - வரனிங்கேவருவானோ - தனியிளம்

(உ) வயதுமூத்தோனே - யெனையாரென்று
மதித்தாய்நீதானே - நானு
முயலுந்தபோதனரி - தயமேகோயிலாக்கொண்டோன்
வயபாயென்றவத்தின்முன் - வாராதிருப்பதுண்டோ - வயது

(ங) வார்த்தைதட்டாதே - கொம்புத்தேன்முட
வருக்குக்கிட்டாதே - பெண்ணேயர்தத்
தீர்த்தன்றனைநீகண்டு தெரிசிக்க முடியாதே
வாய்த்திறப்பேசிச்சும்மா மனைப்பானீருகுடியாதே - வார்த்தை

(ச) பித்தாநீபோடா - யிங்கேநின்றினிப்
பிதற்றலாமோடா - உள்ள
தத்துவமாகாசன் - றனைநம்பினோ ரிஷ்ட
சித்திபெறுவதில்ல - ருத்தமென்னடாதுஷ்டப் - பித்தா

(ரு) ஆகட்டும்மானே - யுன்றன்சமத்தை
யறிகுறேனுனே - யதி
மோகத்தினாலென்னை - முனிவுற்று வைகுறாய்
தாகத்தினன்மனோரா ஜாதிபத்தியஞ்செய்குறாய் - ஆகட்டு

(சு) கைக்கனிபோலே - யிங்கிருந்தானீ
காண்பாய்கண்ணாலே - யெழில்
அக்கனிந்தமரென்ற னருகினில்வருவதுந்
திக்கெங்கும்புகழநான் - றிருமணம்புரிவதுங் - கைக்கனி

(எ) மூட்டுண்டபின்னே - குனிவது
முறையாகுஞ்சொன்னேன் - மிக
அட்டாதுட்டிகள்பேசி யதட்டியேதுள்ளுறாய்
எட்டாதபழத்திற்குக கொட்டாவிகொள்ளுறாய் - மூட்டு

(அ) கருத்துக்கூசாமற் - சற்றும்நாவு
காத்துப்பேசாமல் - நீ
யுரைத்தசனமெல்லாம் நரைத்தமறையோ னென்று
வருத்தங்கொள்ளாமன்மனம் பொறுத்தேன்பிழைத்தாயின்று-கருத்

பின்னும் சிவனுரைத்தல.

(கங.) கீர்த்தனம் இராகம் - பூரிகல்யாணி—சாப்புதாளம்

பல்லவி.

பித்தனவன் நீதினில் சித்தப்பிரமைகொண்டேன்
பிதற்றுகிறாயுமையே.

அநுபல்லவி.

எத்தினமும்புலிபாய் பிரண்டோடாடித் திரியு
மெய்ப்புரட்டனெனச்சிற் றினவனுக்குத்தெரியும் (பித்த)

சரணங்கள்.

(க) இருக்கின்றபொருளொற்றைமாடு - ஏந்தி
யிரந்துண்கலமோதலை யோடு - வசித்
திருக்குமிடமோதில்லைக் காடு - சுவை
யில்லாதகொடுவிடஞ்சாப் பாடு - அமைந்
திருக்கின்றதிருக்குமூன் றதிலொன்றம்புலிப் பார்வை
யெரிக்கண்ணென்றொருகண்ணில் லாதவனவன்சேவை
யிருக்குநிலையோமெத்த விருக்குதலையுற்றாதி
யிடைமுடிவுபெற்றாருற் றாரில்லாதவ னாதி (பித்தன்)

(உ) அரைச்சோமனைச்சிரசிற்றரித்தும் - கூத்தோ
டருக்கென்பைமாலையெனப்பரித்தும் - புலி
வரித்தோலையுடையாக வரித்தும் - பாம்பை
மணிப்பொற்கலம்போலலங்கரித்தும் - நெஞ்சி
லிரக்கமின்றித்தக்கமா மனைத்தழலின் மடித்தும்
இதந்தெரியாமலுற்ற மதனன்றனைப்பொடித்தும்
செருச்செய்யாமலேதிரி - புரத்தைநோக்கியேகொஞ்சச்
சிரிப்பினாற்பொடியசசங் கரித்தகொடிய வஞ்சப் (பித்தன்)

(௩) படைத்திரளோபூதபிசாசம் - அவன்
பயிலெல்லாம்பார்க்கிலாகாசம் - உனக்
கடுக்குமோ அவன்சகவாசம் - இன்ன
மன்னங்கண்டறிதல்பிரயாசம் - மேலுஞ்
சடைக் குள்ளகப்பட்டோர்பெண் டதும்பிக் கண்ணீர்துளிக்கச்
சகமலை வுறமுய லகனுடலை நெளிக்க
வுடுக்கைக்கையிற்கொண்டுவீ டுண்டுண்டுண்டென்றடிக்கு
மொலிக்கிணங்கக்கால்தூக்கிப் பிலுக்கின்று நடிக்கும் - (பித்தன்)

(௰௪) **கீர்த்தனம். இராகம் - காம்போதி—சாப்புதாளம்.**

பல்லவி.

பேயாண்டிதனைவேண்டி - நீயேண்டிதவஞ்செய்தாய்
பெண்ணரசியேயுமையே

அனுபல்லவி.

மாயாண்டிசுடலையில - வாழ்வாண்டிகாளிமுன்
வாதாடிச்சூதாடிவழக்காடினாண்டி (பேயாண்டி).

சரணம்.

கண்ணப்பனெச்சிற்கறியைத் தின்றாண்டி
காலனைக்காலாலுதைத்து நின்றாண்டிப்
பெண்ணைத்தலைமீதில்வைத்துக் கொண்டாண்டி
பிட்டாசையாற்பிரம்படியும் பட் டாண்டி (பேயாண்டி)

*

பிறகு கிழவர் தன்னை மணஞ்சூடென உமை செவிமேற் கரம் வைத்து ஒதுங்கிநின்றபொழுது ஈசன் பிரத்தியக்ஷமாகி உமைக்கு அனுக்கிரகம் செய்து கயிலைசென்று ஏழு தபோதனரை அனுப்ப உமைமணம் நிச்சயமாகி இமவான் விசுவகர்மாவைக்கொண்டு மாநகரை அலங்கரித்தல்.

விருத்தம்.

அந்தண ருருவாய் வந்தவர் மொழியை
யம்பிகை மறுத்திட வெனைநீ
யணிமணஞ் சூடென் றுரைத்தலுஞ் செவிமே
லங்கைவைத் தொருபுறத் திருந்தாள்
சிந்தையை யுணர்ந்து நந்தியோ டீசன்
சிவகணஞ் சூழமால் விடைமேற்
றெரிசனங் கொடுத்து வரைமினே யுன்றன்
றிருமண நாளையென் றுரைக்கத்
தந்தைபா லுமையுஞ் சென்றனள் கயிலை
சார்ந்தர னெழுதபோ தனரைத்
தனிவரை யரசன் றிருமுன மனுப்பத்
தவத்தினர் சென்றது மொழிய
வந்துமே னையுமுன் றடுத்திடக் கடிந்து
வதுவையை யுறுதி செய்திமவான்
வளமுற விசுவ கன்மனை யழைத்து
மாநக ரலங்கரித் தனனே. (க௬)

(ய௫) தீபதை. இராகம் - மோகனம் - அடதாளம்.

(க) மருவுமலர்சேர்பஞ்ச தருவைக்கால்களாய்நாட்டி
வான்றொடுபந்தலோட்டினா - ஒளி
சொரியுமணியிழைத்த - நிரையசைந்தாடுமாலை
தொடுத்தணியாகப் பூட்டினார்.

---

* மீதி இரண்டு சரணங்கள் மறு பதிப்பில் வரும்.

(௨) இருளகலும்படிக்குத் - தரளங்களால்விதான
மிசைத்துப்பந்தலிற்கட்டினார் - திவ்ய
சொரூபங்கண்டவர்மன முருகப்பொற்பாவைகளைச்
சுவர்த்தல மெங்குமொட்டினார்.

(௩) ரோபார்புகழவலங் காரமண்டபஞ்செய்து
பளிங்குக்கண்ணாடி பதித்தார் - உயர்
சிரணிமறுகெங்குந் தோரணங்களுந்தூக்கிச்
சிங்காரஞ் செய்துகதித்தார்

(௪) முப்பழமுங்கமுகு மிக்குதண்டமும் பந்தன்
முகப்பிலிலங்கவீக்கினார் - மிகு
பொற்புயர் வாயின்முன்னே - சிப்பிய நூலின்படி
பொன்னின்மேருவுண்டாக்கினார்

(௫) இரதகஜதுரக பததிகள்புடைசூழ
யிராஜரெல்லோரு நிறைந்தார் - பல
வரிசைமிகுந்தகுல 'பருவதராஜன்முன்
வணங்கியருகிலுறைந்தார்

(௬) கலவைசெய் ம்ருகமத களபசந்தனங்களைக்
கரைத்தெங்கும் வாரியிறைத்தார் - தங்கள்
புலனைந்துங்களிகொண்டு நிலமெங்கினும்பரவப்
பொற்சுண்ணங்களை நிறைத்தார்

(௭) காழகிற்சந்தின்புகை நீளும்வெளிகளெங்குங்
கவியத்தூபங்களெடுத்தார் - இசை
யாழுங்கின்னரங்களுந் தோண்மிசையணைத்துக்கா
யகரனைவருமடுத்தார்

(௮) வாருதியொலியெனப் பேரிகைபதினெட்டு
வாத்தியங்களுமடித்தார் - நன்று
யேர்பெருஞ்சுருதி கூட்டிச் - சிருபிநயங்காட்டி
ரம்பையர் நடநடித்தார்

(௯) சிவன்றிருவுளங்கொள்ள நவமாமிந்திரநீலச்
சிங்காதனமு மமைத்தார் - கன
தவமுனிவரமரர் புவியரசரிருக்கத்
தமனியவேதி சமைத்தார்

ஈசன் உமையை மணம்புரிய கைலையிலிருந்து இமாசலத்திற் கெழுந்தருளல்.

விருத்தம்.

மாநகரை யலங்கரித்தங் கமைச்சர் சூழ
மலையரசன் கயிலையிற்சென் றரனைப் போற்றி
மீனமதி யுத்திரநாட் டிருக்கல் யாண
வேள்வியெனப் பணித்தவனு மீண்டா னிப்பாற்
கானமிகு கந்திருவர் வானோர் பூத
கணங்கள்சிவ கணஞ்சூழ விடைமேற் கொண்டு.
தேனவிழ்பூங் குழலுமையாண் மணத்தி லன்பு
தேக்கினர் பனிவரையை நோக்கி னரே. (கசு)

(௰௬) கீர்த்தனம். இராகம் - தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

ஆசைமிகும்பர்வத ராஜன்பதிக்குக்கை
லாசபதியும்வந்தாரே

அநுபல்லவி.

மாசின்மறையோர்விசு வாசமுடனேவேத
கோஷந்துதிசெய்துகொண் டாசிமொழிகள்பேச (ஆசை)

சரணங்கள்.

(க) கஙகைகலாமதிம - ணங்கொள்கொன்றைமாலையி
லங்குஞ்செஞ்சடையுந்து - லங்குங்கண்டித்தொடையுஞ்
சங்கந்திகழ்குழையுஞ் - செங்கைமழுவுழையுந்
திங்கண்முகமுந்திகழ - வுல - கெங்கும்மகிழ்ந்துபுகழச்
செங்கண்மால்விடையின் மீதினிலேறித்
தேவிமீதில்வெகு வாய்மயல் மீறித்
தங்கமேருநிக - பொங்கமாகியபு
யங்கள்பணைத்துமார்த்துப் - புளகம்போர்த்துக்
கிருபைக்கண்பார்த்துப் - பொன்பூத்து (ஆசை)

(௪) சுற்றும்பூதப்படைக்குக் கர்த்தனுகியவீர
பத்ரன்சொல்லரியர - புத்ரனுடனீரேழு
பத்துக்கோடிக்குமாதி - பத்தியன்கூர்மாண்டன்முதல்
வெற்றிமிகுந்தோர்நெருங்க - ஏகாதச - ருத்திரர்களுமொருங்கப்
    பத்திசேர்கெருடக்கொடியனக்கொடியும்
    பணியவணிமிகுந்தமால்விடைக்கொடியும்
தத்திவான்பிறைபை - நத்திமருவுமணி
முத்துவிற்குடைநீட்டத் - தூபங்கள்காட்டக்
கவரியாட்டப் - புகழ்நாட்ட   (ஆனை)

(௫) நந்திகட்டியங்கூறி - முந்திவரவனத்தி
னந்தணன்புள்ளரசு - வந்தவனிருபாலி
சைந்திடவேகாளாஞ்சி - யிந்திரன்றொடவீசானன்
வந்தடப்பம்பிடிக்க - வரம்பையர்ம - இழ்ந்துநடம்நடிக்கக்
    கந்திருவருளமு வாதிசை   ,   'வழங்கக்
    கதிக்குங்கடலொலிபோ லியத்தொனிமுழங்கச்
சொந்தமாமனெதிர் - வந்துபூமழைபொ
ழிந்துமிகவும்போற்ற - வுரைகள்சாற்றத்
தழுவிவாழ்த்தப் - பணிந்தேத்த   (ஆனை)

இமயவரைசேர்ந்த ஈசனே அஷ்டமங்கலங் கொண்டழைத்து வர அவர் ஸமஸ்த தேவரோடும மற்றவர்களொடும் திருமணச்சாலை சேர வடதிசை தாழ்ந்து தென்றிசை உயர அகஸ்தியரைத் தென் திசைக்கு அனுப்பலும உமையாள் மணக்கோலங் கொண்டெழுந்தலும்.

விருத்தம்.

அருட்சிவ னியயப் பொருப்பிடைவிடைமேல்
    அன்னகர் வலமதாய் வர்துங் ❋
கட்மைதன் கோயி னன்மணி முகப்பி
    லமைதல்கண் டஷ்டமங் கலமாம்
விருப்புறும் பூர்ண கும்பமங் குசம்பொன்
    விளக்கிணைக் கயல்கொடி முதல
மெல்லிய ரெடுப்ப மேனையா ளர்த்தி
    வியப்பொடு மெழுந்தியெய் காத்திற்

தெருட்பொரு ளளிக்கச் செயபேரிகை துவைந்து
திருமேனிச் சாதனத் திருத்தி
தேவர்கண் முதலா யாவரும் வரையிற்செறிந்திட
வடதிசை தாழ்ந்து
மருட்படத் தென்பா லுயர்ந்திடக் கலச
மாமுனி வரனையங் கனுப்பி
மகிழ்வுறப் பின்னர் பிதாவுரை கொண்டு
மலைமக ளெழுந்தரு ளினளே (௰௭)

(௰௭) கீர்த்தனம். இராகம் - சுருட்டி—திருபுடை தாளம்.

பல்லவி

திருமணக்கோலங்கொண் - டருமறைப்பொருளினள்
தேவியெழுந்தருளினள்.

அநுபல்லவி.

உருமயிற்குலஞ்சூழ்ந்தோர் - திருவனத்தைத்தொடர்ந்தது
வருமாறெனச்சகிமங் கயர்கள்சூழ நடந்து (திருமண)

சரணங்கள்.

(க) தனிமலரடியிட்ட கனமணிகளின் சொன்ன
தகைமறைச்சிலம்பொலி, மிகவேயெங்கினுந் துன்ன
பணிவளையுயிர்த்ததன் றனையவள்தனக் கென்ன
பைந்துகில்களேய் - வந்துசிறுபத
கொந்திடாதமைத்தி - ருந்ததுபோன்மின்னத் (திருமண)

(உ) பூங்காந்தண்மலர்மிசை பொன்வண்டுவிழுந்தொட்டும்
புதுமையாய்விரல்களி லணிமோதிரங்க ளிட்டுப்
பாங்காய்மணிக்கங்கணந் தாங்குமுன்கரந்தொட்டுப்
பரிந்துதனைவிட்டுப் பிரிந்தரனிடம்போ
யிருந்தநெஞ்சைக்கண்டு பெருந்திடுப்பொருட்டுத் (திருமண)

(௩) திருவுங்கலைமகளு மிருமருங்குமடுக்கச்
செய்யமலர்க்கைபற்றிக் கைலாகுகொடுக்க
வருண்மங்கலமங்கைய ராலாத்தியெடுக்க
அருந்தவஞ்செய்பலன் - விரைந்தன்றுபலிக்க
வருந்துமன்பரனை வருந்துன்பம்விடுக்கத் (திருமண)

ஈசன் கல்யாணத் திருவடிவங் கொள்ளலும்
விவாகமகோத்ஸவமும.

விருத்தம்.

மணமுறு[illegible] பிறிதும் வந்தான்,
மதிமுடிநன் மணிமுடியாய் மயக்கும் பைவாய்ப்
பணிமணியே யணிமணியாய்க் கரிபுலித் தோல்
பைம்பொனெழி லம்பரமா யமைத்து மாலெண்
கணனுமறி வரிதான வடிவந் தன்னைக்
கலியாணத் திருவடிவாய்க் காட்ட வீச
னணியரசன் முனிவர்கடே வருமு வந்தங்
கடுத்திட்டார் வேள்விசெய்யத் தொடுத்திட் டாரே. (௰அ)

(௰அ) தீபதை இராகம் - சங்கராபரணம்—ரூபகதாளம்.

(௧) மஙகளமாகிய சங்கீதவாத்திய முழஙகவே - யாரு
மலையரசன்சொல்லைத் [illegible] வழங்கவே
அங்குள்ளோரெல்லோரும் பொங்குதிரைபோலேசூழ்ந்தார- மறை
யநதணரானவ ரானநதவாரியி லாழ்ந்தார்

(௨) பூணுக்குப்பூணிட்டுப் பாணித்தாற்போலவுங்கோரம - வநது
பூவையரபைக்குச செயதனாகளலங காரம
சேணின்மதிகருண்மு யற்கறையுற்றசீராக - வயா
சித்திரச்சுட்டிய மைத்தனா ரெற்றிகோராக

(௩) இநதுமுகிற்கிடை யிந்திரவில் லொத்த தென்ன - வொளி
யிட்டிடும்பொற்பட்டங் கட்டினர்வாணுதன்மின்ன
செந்திருவாணியுங் கொந்தநறுமலர்சாத்தினார் - அம்மை
செங்கரம்பற்றியி ணஙகுமணைமிசையேற்றினார்

(௪) சத்திமுன்னிங்ஙிய தன்பிறிவாற்றாமை தீர்ந்தான் - மணித்
தம்பத்தரன்பிரதி யிம்பங்கண்டென்னன்புசார்ந்தாள்
கத்துங்கடற்புவிச் சுற்றுபொன்மேருவின்மேலே - கற்ப
கத்திற்படர்ந்தும லர்ந்தருள்வல்லியைப்போலே

(௫) அப்பனுமம்மையு மெய்ப்பாயிருந்திடு மாட்சி - தன்னை
யண்டருமியாவருங் கண்டுவந்தாரேகண்காட்சி
தெர்ப்பைமுதற்கரு விப்பொருள்யாவையும்விரித்தார் - மிகச்
சிந்தையுற்றந்தணர் மந்திரவேதமுச் சரித்தார்

(௬)–உத்தரமாமுக மாகப்பிரமனங் கடுத்தான் - திவ்ய
உத்தமசெங்கைப்ப வித்திரம் சாமிக்குக்கொடுத்தான்
நித்திலமாந்தண்டு லத்தைவிரித்தங்கே நேசித்தார் - பொன்னி
ரத்னமணிமுளைப் பாலிகையும்வைத்துப் பூசித்தார்

(௭) மெய்ப்புடனேயிம வானுஞ்சிவனெதிர் நண்ணினன் - பன்னீர்
விட்டுமலர்த்தாளைத் தொட்டலம்பிப் பூசை பண்ணினன்
அப்பொழுதேயந்தத் தீர்த்தத்தை யாருமுட்கொண்டார்-தங்க
ளாகம்பரிசுத்த மாகிப் பலங்களை விண்டார்

(௮) கஞ்சமலரிலோர் காந்தட்பூப்பூத்தது போலே - யுமை
கையைச் சிவன்கையில் வைத்திமவானுமன்பாலே
அருசொன்மனுவோதி யம்பொற் கரகநீர்வார்த்தான் - ஈசன்
அம்புயபாதத்திற்செம்பொன்மலர் மாரிசார்த்தான்

(௯) மங்கலநாணைப்பொன் னின் கமலத்தினில் வைத்தனர் - செழு
மாமறையோர்முத லோர்கள்தொட்டாசீர்வதித்தனர்
சங்கரனுந்தன் கரங்கொண்டுள்ளத்தி னினைந்தனன் - அம்மை
தன்கழுத்திற்றிரு மங்கல நாணைப்பு னைந்தனன்

(௰) செய்யும்பொரியுஞ்சொன் டையரியோன் வலஞ்சுற்றினன் - ஐயன்
சேரிழைபாதத்தை வேரிமலர்க்கரம் பற்றினன்
மையகைத்தம்மி மீதிட்டருந்ததி காட்டினன் - சுப
பாணிக்கிரகணகல்யாணஞ்செய்து புகழ் நாட்டினன்

(௰௧) தும்புருயாழ்கொண்ட ரம்பையர் நர்த்தன மாடினர் - கொங்கை
தாங்கியமங்கைய ரோங்கியசோபனம் பாடினர்
அன்புடன்வெள்ளிம லைபோற் சமைத்தன்னங்குவித்தார்-வந்த
யாவர்க்கும் ஷட்ரச வர்க்கத்துடன் விருந் தமைத்தார்

ஈசன் இரதியின் வேண் [illegible] எழுப்பி அவன் உருவம் இரதிக்குமட்டும் தெரியும்படிக்கும் மற்றவர்கட்குத் தெரியாதிருக்கும்படிக்கும் அருளியபின் உமையுடன் கைலைசென்று அந்தப்புரத்து சிலநாள் அனுபவித்திருக்கையில் சூரன்செய்வாதையால் தேவர் வந்து முறையிட்டதைக்கேட்டுத் தன் நெற்றிக்கண்ணினின்று ஆறு பொறிகளைவிடுக்க அவைகளைவாயுவும் அக்கினியும் சரவணப்பொய்கையிற் சேர்க்க அவை ஆறு குழந்தைகளாயமைதல்.

விருத்தம்

மாமணஞ்[illegible] வேளை நோக்கி
    மதனை[illegible] இரதி கூறச்
சாமியருட் பார்வையினா லவனும வந்தான்
    சகலருக்கு முருவிலியாய ரதிக்குமட்டுங்
காமாவடி வாயிருப்பா யெனப் பணித்துக
    கயிலைகிரிக குமையுடனே விடைமேற் சென்று
பூமருவந் தப்புரத்து சிலநா ளன்பு
    பொருந்திட்டா ரிபகிழ்வுற் றிருந்திட் டாரே

பின்னும் விருத்தம்

சுந்தரப் பரம னுமையொடு மிருப்புச
    சூரன்செய் வாதையாற் றேவர்
சூழ்ந்துமா லயனைத் தாழ்ந்துநின் றிறைஞ்சுச
    சூழ்ச்சிசெய் ததிலனை யனுப்ப
நந்தியான் மெலிந்து வந்தது தெரிந்து
    நான்முகன் மான்முத லெழுந்து
நற்கயி லாய வரைபுகு தோல
    நவிலவப் பரமனு முவந்து
விந்தையோ ராறு முகமதாய நெற்றி
    விழிகணின் றறுபொறி விடுக்க
வெம்மையுற் றுளரு மமரரைத் தேற்றி
    விடையவ னுரைத்தசொற் படியே
செந்தழ லிறைகாற் றனையொடுஞ் சுமந்து
    திரைதருங் கங்கையில் விடுப்பச்
செஞ்சர வணத்துட் சென்றவை யாறு
    திருவுரு வாயமைந் தனவே—

(௰௧) கீர்த்தனம். இராகம் - காபி—ஆதிதாளம்.

பல்லவி.

திருஅவதாரஞ்செய்தார் - தேவாதிதேவர்

அநுபல்லவி

உரமிகுமசுரரை - யொழித்துத்தேவகணத்துள்
மருவுங்கவலைதீர - மலர்ச்செஞ்சரவணத்துள் (திருஅவ)

சரணங்கள்

(௧) பகரரியசற்குண பரிபூரண னந்த
பரம்பொருளானதருட் சுரந்தினிதுறைந் திருந்த
செகதலத்தினில் யோக
சித்திதரும்வை போக
தகைமைபொருந்து மோக
சண்முகவடி வாக (திருஅவ)

(௨) யாதவ்முனிவர்செய் யகமெங்கும்நிறை வேற
வானவர்களெல்லோரு மகிழ்ந்துதன்பதி யேற
வேதமறையோர் பாட
மெய்யன்பர்கள்கூத் தாட
பூதலத்தோர்கொண் டாட
புலவர்பாமாலை சூட (திருஅவ)

(௩) நாயநவக்கிரகங்கள் சுபஸ்தானத்தி விருக்க
தூயமதியமுதந் துளித்துவாயிற் பெருக்க
சேயர்களாகிக் கஞ்ச
செழுமலரான மஞ்ச
தேயினியகண் டுஞ்ச
சித்தர்கள்கண்டி றைஞ்ச (திருஅவ)

(௪) ஐங்கரனுன்முக னதிவிஷ்ணு ருத்திர
னருண்மகேசுவரன்சிவ னறுவர்களும்வி சித்திர
அங்கம்வேறாக சேர்ந்து
அற்புதமாகச சார்ந்து
செங்கதிரொளி வார்ந்து
சிந்தையிற்களி கூர்ந்து (திருஅவ)

(௫) முழுமலர்களின்மொய்த்து முரல்வரிவண்டு போலே
முகமலர்களிலுற்ற முந்நான்குகண்க ளாலே
எழினீர்முத்தரு சிதற
விருட்கிரௌஞ்சங் குதற
சுழலுற்றுளம் பதற
சூர்மங்கையர் கதற (திருஅவ)

அக்குழந்தைகளுக்குக் கார்த்திகைப்பெண்கள் ஸ்தன்யபானம் செய்வித்தலும் நவசக்தி மாதாகளிடத்தில் இலக்கத்தொன்பது வீரர் உதித்தலும்.

விருத்தம்.

சீருருவ மானபர னாறுருவ மாகியே
செஞ்சரவ ணத்திருக்கத்
தேவர்களெ லோருமிப் பாலரபி விருத்தியைச்
சிந்திக்கு மளவில் வன்னக்
காருருவ மாயனருள் கூறுமொழி தப்பாது
கார்த்திகைப் பெண்கள் வந்தக்
கான்முளைக ளாத்தங்கள் கைவளைய லொலியுறக்
கனிவுபெற் றினிதெடுத்துத்
தாருலவு கொங்கையமு தூட்டநற் குமுதவாய்
தன்னில்வைத் துண்டுபால
சந்திரனென வேதழைத் தந்தமுற வேயொன்று
தவழுமொன் றிசைகள்பாடும்
பேருருவ மாயொன்று விளையாடு மொன்றுளரல்
பேசுமொன் றிருகைகொட்டிப்
பின்னடிந டக்குமொன் றின்னகைத ரும்பாலர்
பெருமையா ரறிவர்மாதோ. (௩௪)

(உ௰) த்விபதை. இராகம் - மத்தியமாவதி—ஆதிதாளம்.

(க) அறுமீன்பெண்கள்வளர்த்த சிறுவரொன்றுபத்துறா
றுபிரமாயுருவங் கொண்டாரே - யதை
யுறுதியாகவெல்லோரு நிறைபரப்ரும்மமென்று
உவந்துமிகவுங்காட்சி கண்டாரே

(உ) முந்தெழுந்தபொறியைக் கண்டுமையும்பயந்து
முனைந்துதேவர்மேற்சினந் தெறித்தாளே - நீங்கள்
எம்தம்சேர்க்கையைப்பிரிந் திடச்செய்தீர் மகவில்லா
திருப்பீர்களென்றுசாபங் கொடுத்தாளே

(ங) சாபமிட்டுச்சிவன்மேற் கோபங்கொண்டம்பிகைதன்
காலிற்சிலம்பொலிக்க வோடவே - அதின்
நீபரத்னஞ்சிதறும் போததிலொன்பதுபெண்
ணெனித்தல்கண்டானருள் னாடவே

(ச) அந்நேரமேயொன்பது கன்னியர்களுங்கர்ப்ப
மடைந்திருப்பதையம்மை நோக்கினா - ளெழி
லுன்னுந்தன்னுருவான மின்னிடையார்கருப்ப
முதிக்காதிருக்கச்சாபந் தாக்கினாள்

(ரு) அருட்கண்ணாலுற்றசாபம பொறுக்காநவசக்திய
ரரனடியைப்பணிந்து போற்றினா - தனியே
விருப்பமுற்றுமையுட னிருக்கும்பொழுதுநீங்கள்
விளம்புவீரிதையென்றுசாற்றினார்

(சு) வெருவிவலிபொறும லருவிமுத்தப்போன்முக
வேர்வையுற்றரொன்பது மாணர்கள் - காலை
யிரவியினொளிபோலே மருவிமுகத்தினின்றும்
இலக்கவீராறற்பத்தியானார்கள்

(எ) திருத்தனுமையோடன்புற் றிருக்கநவசத்தியர்
நேர்ந்துவணங்கிநின்றுபறந்தார்கள் - செழுந்
திருக்கண்கண்டவருக்குத் தீங்கில்லையென்பதுபோற்
செல்வநவவீரர்கள்பிறந்தார்கள்

(அ) வாகைமிகுந்தவீர வாகுதேவனற்குண
மாமணியிடத்தில்வந் துதித்தானே - கரு
மேகநேர்குழன்முத்து வல்லியிடத்தினின்று
வீரகேசரிவந்து குதித்தானே

(கூ) ஏர்பெருகும்வீரம யேந்திரனெழிற்புஷ்ப
ராகவல்லிபானின்று வந்தானே - மதி
வாரமிகுவீரமகேசன்கோமேதக
வல்லிவயிற்றினின்று வந்தானே

(௰) வீரபுரந்தரன்வை டூரியவல்லிசெய்த
மெய்த்தவத்தினால்வந்து தித்தானே - சுக
வாரிவசசிரவல்லி வயிற்றில்வீரராக்கதன்
வந்துபுவியினின்றன் பதித்தானே

(௰க) மரகதவல்லியின் றிருவயிற்றினில்வீர
மார்த்தாண்டன்பிறந்து மகிழ்ந்தானே - செல்வத்
துரைவீரராந்தகன் பவளவல்லியிடத்திற்
றோன்றிமிகவுமெழில் திகழ்ந்தானே

(௰௨) நீலவல்லியிடத்தில் வீரதீரனுற்றதை
நிலைபெற்றனைவாகளும் பார்த்தாரே - ஜெய
வாலகுமாருக்குத் துணையாமிவர்களென்று
மதித்துமனதிலின்பம்பூத்தாரே

ஈசன உமையுடன் சரவணம்சென்று குமாரகளைக்கண்டு மகிழ்தல்.

விருத்தம்.

நவவீரர் பிறந்தரனைத் தொழுது நிற்க
நலஞ்சிறந்த விலக்கத்தோ ருடனே சென்று
சவுரியஞ்சேர் சரவணசெல் வருக்கு நீங்கள்
சாதகஞ்செய் வீர்களென்றுஞ் சத்தி மாலைப்
புவிபுரந்த தலைவியின்பா லிருப்பீ ரென்றும்
புகன்றுமையோ டெழுந்துசர வணஞ்சென் றீசர்
சிவவடிவ மாகியமைந் தரைக்கண் டுள்ளந்
திகழ்ந்திட்டார் விடையினின்று மகிழ்ந்திட்டாரே (௩௩)

(௨௧) கீர்த்தனம் இராகம் - மோகனம்—ஆதிதாளம்

பல்லவி

பாலர்களைவந்துகண்டாரே - சிவனுமையும்
பரவசமிருந்துகொண்டாரே

அனுபல்லவி.

காலையிளங்கதிர்கள் போலுயர்வடிவொடுங்
கஞ்சச்சரவணப்பூ மஞ்சத்தில்விளையாடும்

சரணங்கள்

(௧) மாமுகங்களோராறு மலர்க்கரங்களீராறுங
கோமளசெவிசேருங் குண்டலங்களின்சீரும்
காமயில்கள்கண்டு சீராட்டுவதுங - சிறைக
கருவரிவண்டுகள் தாலாட்டுவதும - வெண்
சாமரைகவரிக ளாட்டுவதும் - நிறை
தண்மதியங்கண்ணாடிகாட்டுவதும் - ஆன

௨) கார்த்திகைப்பெண்கள்வந்து காதலுடனுவந்து
ஆத்திரமாய்மகிழ்ந்து அணைத்துமுச்சிமுகந்து
பூத்தசெழுமுலைப்பால்கொடுப்பதுவும் - சேயர்
புறங்கையிலுற்றனிவிடுப்பதுவும் - பின்பு
வேர்த்துமுழுதும்முகங்துடைப்பதுவும் - ஓடி
[illegible]யில்விழுந்துபடுப்பதுவும் ... - ஆன

(௬) ஆத்துமந்தானேமைந்த னாகுமென்றிசைமுந்தச்
சாற்றுமுயர்வேதாந்தத் தனிப்பொருளானவிந்த
மூர்த்தியாருமென்றும்பருரைப் பதுவுங் - கண்ட
முனிவர்கள்மனமதைக்கரைப் பதுவும் - பால்
வார்த்துண்டதுபோலுள்ளநிறைப்பதுவுஞ் - செழு
மலர்மழைவானவரிறைப் பதுவும் - ஆன (பாலர்)

உமை குழந்தைகளைச் சேர்த்தணைக்க அவை உடலொன்றும் முகமாறும பன்னிரு கரங்களுங்கொண்ட ஒரு குழந்தை ஆக அதை நோக்கி உமையாள் தனத்தில் நின்றும் பெருகியபால் சரவணத்தில் சிந்த அப்பாலை மீன் வடிவாயிருந்த பராசரரிஷி குமாரர்கள் உண்டு சாபம் நீங்கிப் பரங்கிரிசேரப் பிறகு ஈசன் உமா சமேதனாய் திருமைந்தனுடன் கைலைசென்று அம்மைந்தன் பெருமையை உமைக்குரைத்தல்.

விருத்தம்.

கண்டவுடன் பரமனரு கிருந்த செல்வி
 கைமலரா லாறுபுதல் வரையுஞ் சேர்த்துக்
கொண்டணைத்த பொழுதுமுக மாறும் வெற்றிக்
 குவைப்புயமீ ராறுமுட லொன்று மாகித்
தண்டைசிலம் பொலிப்பநின்ற மகவை நோக்கித்
 தடமுலைப்பால் சுரந்தொழுக முனிவன் மைந்த
ருண்டறுவர் தந்தையிட்ட சாப நீங்கி
 யோர்ந்திட்டார் பரங்கிரியைச் சார்ந்திட் டாரே. (௨௯)

பின்னும் விருத்தம்.

பரனருள்கொண் டறுவருநுன் றடைந்தா ரப்பால்
 பரமனுங்கார்த் திகைநல்லீ ருங்க ளானில்
விரதமிருந் தோர்க்கின்ப மருள்வோ மென்று
 விளம்பியுமை மைந்தனொடுங் கயிலை சேர்ந்தார்
தெருணவவீ ரர்களிலக்க வீர ரோடுந்
 திருவிளையா டல்கள்குமரன் புரிய வீசன்
றருமமைந்தன் பெருமைதனை யுமைமின் கேட்கச்
 சாற்றுவான் செவிக்கமுதா யூற்று வானே. (௩௦)

(உஉ) கீர்த்தனம் இராகம் - தோடி—ரூபக தாளம்

பல்லவி

சுந்தரமைந்தன் மகிமை நானே
சொல்லக்கேளுமை மானே அதி (சுந்த)

அநுபல்லவி

சந்ததம் நம்தன்புகழித்த - தாரகப்ருஹ்மமாய் வந்துதித்த (சுந்த)

சரணங்கள்

(க) ஸர்வஞ்ஞத்வம்ஸர் வேசுவரத்வம் ஸர்வநியந்த்ரத்வம்
ஸர்வாந்தர் யாமித்வம் ஸாவகற்ப கத்வம்
ஸர்வசக் தித்வமான ஷண்முகத்தின யகத்வம்
ஸர்வ பரி பூர்ணத்வமாய்த் தழைத்திடுமிது வேதத்வம் (சுந்த)

(உ) முகதிமெய்மொழி யென்றறுமூலவெழுத்தும் சேரே - யுன்
புத்திரனு ரெழுத்தாமெனப் பகழ்ந்தெவருஞ்சொல் வாரே [தன்.
சக்தியோடறு முகமே - நான் - முன்னூமதிப் பாரே
நித்யவஸ்துவிதாகுமென்றுநீ நிர்ணயமாகநினைத்திதைப்பாரேன் (சுந்த)

(ங) வனசசரவணத் துதித்ததாற்சர வணபவனென லாமே-செழு
புனற்கங்கைபெறக காங்கேயனென்று புகழ்ந்துரைத்திட லாமே-ஆறு
கனற்பெண்கள்முலைப் பால்கொடுத்ததாற கார்த்திகேயனு - மாமே
யினித்துநீயெடுத் தணைக்கக்கந்தனென் றேத்தினபோமன தார்த்திகளு
[போமே (சுந்த)

கந்தா இலக்கத்தொன்பது வீரரொடுமெழுந்து திருவிளையாட
டல புரிதலும் அப்பொழுதுதன்னை அசுரனென்றெண்ணி எதிர்த்த
தேவர்களைச்சங்கரித்தலும்.

விருத்தம்

சத்தியிதை யறிந்துமன மகிழ்ந்தா ளப்பாற்
சண்முகவேள் கயிலையின்சூழ் வரையிற் சென்று
மெய்த்துணைவ ரோரிலக்கத் தொன்ப தான
வீரரொடு மெழுந்துமனத் துவகை கொண்டு
மத்தமிகு சூர்குலத்தை யொழித்துத் தேவர்
மாநகரிற் குடியேற வைக்க வேண்டி
யத்தனுமை பதமலரைத் துதித்துக் கொண்டு
[illegible]செய்தார் பலவிளையாட் டன்னெஞ்சு[illegible]

(உ௩) கீர்த்தனம். இராகம் - பந்துவராளி—ரூபகதாளம்.

பல்லவி.

விளையாடினார் - கந்தர் - விளையாடினார் - மிகு
விஜயப்பிர பலமெய்த்திட
விறன்மெய்த்துணை வர்கண்மொய்த்திட (விளை)

அநுபல்லவி

கனைகணுயிர் காக்கும் பெரிய
கடவுளென்றனையோர்க்குந் தெரிய
காட்சிகொடுத்து - மாட்சியடுத்து
ககனத்தினி - லுலவிப்பொரு - கயிலைப்பெரு - வரையுச்சியில் (விளை)

சரணங்கள்.

(க) கனகமேருவிலஷ்டநாகங் களைவடமெனப் பூட்டி - பல
கணமருவியமணிரதமெனக் கரங்கொண்டிழுத்துக் காட்டி - இரு
ளினங்கொளஞ்சனமலையைக்காலினா லெறிந்தந்தரத்திலோட்டி - தாவி
எட்டிப்பிடித்தங்கஷ்டகிரியை வந்திஅம்மனை யாட்டி - எழு
கிளைமுகில்களைசசேர்த்துப்பிழிந்து மூனைபெருங் காற்றில் - எழச்
சிதைத்துப்பஞ்சுபஞ்சாகவேயெங்கும் சிதறிடத் தூற்றி - மார்பில்
அனலொளிக்கொடிமின்னலைப்பூணா லணியென ஏற்றி - வானி
லசைவொடுநவக்கிரகங்கள்நடக்கும் திசைகளை மாற்றி - உயர்
பனகசயனனுலகினுச்சென்று பாய்ந்தெழுந்தரனுலகிற்போய்நின்று
பரசக்தியோடறுவக்திர - பரமப்பிரளய ருத்திரர்
திருநெற்றியிலெழுசித்திர - வுருவத்தொடுவருபுத்திரர். (விளை)

[கத்

(உ) திறத்துருவன்சக்கரத்திருக்குஞ்சூத் திரத்தைப்பிடித்திட்டார்த்து - மே
திரனுறுமிடிக்குலங்களையும்ரத் தினமணியெனக்கோத்து - தோளிற்
றரித்துககண்ணாடியெனசசந்திரனைத் தருவித்தழகுபார்த்து - மலர்த்
தடக்கையில் வீணையெடுத்திசையமு தங்கள்செவியில்வார்த்து - குஞ்
சிரத்திற்கற்பகமலர்த்தொடைகளை வருக்கமாய் முடித்து - ரஞ் [சிச்
சிதவரஸமொழுகுஞ்சிங்கா ரப்பதங்களும் படித்துச் - சபை
நிருத்தனுருக்கொண்டுவந்துநடனந் திருத்தமாய்நடித்துக் - குரல்
நீட்டிக்கவடிப்பாடிவீரரோ டோட்டங்கள் பிடித்துப் - பச்சைப்
பரிக்கதிர்திசைமட்றியொடுங்கப் - பதுங்கியேயஷ்டகஜமுமடுங்கப்
பணிலத்தொகுதிகண்முற்றியே - பவளப்பலமணி சுற்றியே
புணர்பைக்கடல்களையெற்றியே - புவனத்ரயமது சுற்றியே (விளை)

(௧) கானத்திற்றிரிசாபத்தைத்தெழுங் கரத்திறுவெட்டியெடுத்துத் - தாரா
கணங்களையுண்டையாக்கிக்குறிப்புக் காட்டுமிடத்திற்றெறுத்து - கணை
யிகல்செய்வதுகண்டசுரனிவனென் றெதிர்த்துத்தேவர்வந்தடுத்துப் - [பன்
னிருபுயத்திலுஞ்சரவருஷங்க ளிடைவிடாமலேவிடுத்து - மணத்
தகைமலர்கள் கொண் டகமதனிலர்ச் சனைபுரிவதுபோலே - படுஞ்
சரத்தைக்கண்டையன் சிரித்துத்தன்னிச்சா சத்தியினாலே - யொரு
சிகியெனுங் கணைதெறித்திந்திரனைத் திகைக்கமண்மேலே - வீட்டித்
திறல்பருணனக்கினியெமனையுஞ் சிதைத்துமப்பாலே - வரும்
தொகையமரர்கள்தமையுர் விரட்டித் - துடிக்கக்கதை கொண்டடித்துப்
சொலுமெண்டிசை - நிலைவிண்டிட [புரட்டித்
சுரர்மங்கையர் - துயர் கொண்டிட
வுலகெங்கினும் - அனல்மண்டிட
உரகன்றலை - அலைவுண்டிட.

நாரதர் தேவர்களிறந்ததை பிரகஸ்பதியிடம் சொல்ல ஷண்முகனைப் பிரார்த்தித்துத் தேவர்களை எழுப்பவேண்டல்.

விருத்தம்

வித்தகனுங் குமரசரவணவேள் செய்த
விளையாட்டுப் பூசல்வினைப் பூச லாகி
பத்தலத்தி னமரரெலா மடிந்து வீழ
அரமகளிர் முறைபுகன்று கதறு மோசை
சுத்தமுனி நாரதன்கண் டுற்ற வாறு
தூயவட மேருவிற்சென் றுரைக்கக் கேட்ட
புத்திமிகு தெய்வகுரு குமரன் பாதம்
போற்றுவான் மிகவணங்கிச் சாற்று வானே.

(௨௪) **கீர்த்தனம். இராகம் - காம்போதி—அடதாளம்.**

பல்லவி.

ஐயனே கிருபைசெய்யவேணும் - உன்ற
னடைக்கலங் காத்திடுங் காணும். (ஐயனே)

அனுபல்லவி.

வையுந் தேவர்மேற்கோபஞ் - செய்குவதென்னவன்போ
நாக்கைக்கடித்தபல்லைத் - தாக்கியுடைப்பா னென்போ (மெய்

சரணங்கள்.

(ச) தீயவசுரருக்காய் நீசெய் யிந்திர ஜாலம்
தெரியாமலுனைச்சமர் - பொருதினதென்ன கோலம்
வீய்ம்படிக்குப்புத்தி - விளைந்ததவர்கள் காலம்
வினைப்பகுதிகள் தீர - நினைப்பாய்நீ யனுகூலம். (ஐயனே)

(ட) மசகங்களைப்பொருதி - விசயஞ்செய்வதோ வீரம்
மலைப்புயவசுரரைத் தொலைப்பதல்லவோ சாரம்
இசையுமுன் பெருமையைத் - திசைபுகழ வின்நேரம்
எறப்பார்த்தகண்ணாலே யிறங்கப்பார்ப்பதுன் பாரம். (ஐயனே)

(ன) பெற்றபிள்ளைகள்குற்ற - மெத்தனைதான் செய்தாலும்
பேணிப்பொறுத்துமன்னை பூணணிவது போலும்
சிற்றறிவானவிந்தத் - தேவருக்காக நாலும்
தெரிந்த நீயேரக்ஷணை புரிந்திந்திரன் செங்கோலும் (ஐயனே)

ஷண்முகன அனுக்கிரகத்தால பிழைத்தெழுந்த தேவர்கள்
அசுரவாதைகூறி முறையிடல.

விருத்தம்

தெய்வகுரு விந்தவிதந் துதிக்கக் கந்தன்
சிறுநகைசெய் தருட்பார்வை நோக்கத் தேவர்
மெய்வைசே ருயிர்சிறந்து கைகள் கூப்பி
மிகவணங்கி வாய்புதைத்தங் கசுர ...ாலே
நைவதுதீர்த் தருளெனத்தே வருக்கெ லாஞ்சே
நாதிபதி யாகிச்சூர் தொலைத்து நீங்க
ளுய்யும்வகை யருள்வோமென் றிசைக்க நெஞ்சங்
பதிக்கின்றார் முறைகள்சொல்லித் துதிக்கின் றாரே. (உஎ)

(உ௯) கீர்த்தனம். இராகம் - சாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

கார்த்திகேய மூர்த்தி - யுன்னமும் நீயே
காப்பதுனது கீர்த்தி.

அனுபல்லவி.

பேய்த்தனமாகவுன்னோ - டார்த்துச்சமர் தொடுத்த
பிழைக்குணங்கள்பொறுத்துத் - தழைக்கவுயிர் கொடுத்த. (கார்)

சரணங்கள்.

(க) அசுரரிடர்புரியத் திசையெங்கு மோடியொளித் தோமே - நாங்க
ளாலைக்கரும்பெனவே சாலத்துயர் கொண்டு ளைந்தோமே - யினிப்
பசையிலையெங்களுக்கே - யிந்தப் - பாரம்பழியுமுனக்கே - கடு
விசைமிகுந்தபல - நிசிசர கிளைகளை
வேர்களைந்தமரர் குலமெனும் பயிர்களை (கார்)

[ஒன்றும்

(உ) நெருக்கிடைகளுண்டாகிப் பருத்திபடாப்பாடெல்லாம் பட்டோம் -
நீச்சுநிலையில்லாம லாகுதிசேர்பொன்னுலகை விட்டோம் - அதி
வருத்தத்துக்குடம்பெடுத்தோ - முள்ள - வளமையும்பறிகொடுத்தோம் - ஒ
ரரைக்கணம்யுகமென்ப தறிந்துனது கருத்தி
லடிமைகொண்டினியெங்கள் - குடியைநிலை பொருத்தி (கார்)

(ங) தாரகன்கண்டத்தினிற் காரவணனைசக்கரத்தைத்தரித்தான் - சீ[illegible]
தடத்திலெங்களைமச்சம் பிடித்துவரசொல்லியேவரித்தான் - உ[illegible]
சீர்குலைந்திடவானோ - ரென்று - செனித்ததிதற்குத்தானோ - பட்[illegible]
தோரொருதுயரென்று லுரைத்துநின்பால் விரிப்போம்
உயிர்கொண்டினியெப்படி - வியனுலகில் தரிப்போம் (கார்)

தேவர்கள் முறையைக்கேட்ட ஷண்முகன் அவர்களுக்கு அபயமளித்தல்.

விருத்தம்.

இன்னவகை வானவர்கண் முறைகேட் டையு
னீராறு மலர்விழிச்செங் கருணை பூத்துப்
பன்னெடுநா ளிங்கலுற்ற துயர மெல்லாம்
பகலவனைக் கண்டபனி போல நீங்க
வுன்னுபணிக் குலங்களெனு மவுணர்க் கெல்லா
முலைவடி வாகியிட ரொழித்து நாமே
பொன்னுலகுக் கரசுமுடி தரிப்போ மென்று
போதித்தா ரபயமலர் சாதித் தாரே

(உகூ) கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

பயப்படவேண்டாம்நீங்கள் - வானவரே - யெங்கள்
பரமசிவனுக்கன்ப ரானவரே

அநுபல்லவி

வியப்புறும்படிக்கென்றன் - பயத்திறங் காட்டுறேன்
வீரவசுரருடன் போர்செய்து வாட்டுறேன்
உயிர்ப்புவிடவொட்டாம லதிர்த்துநின் றோட்டுறேன்
உம்பருலாக்ஜெயஸ் தம்பத்தை நாட்டுறேன் (பய)

(க) மத்தகசத்திரளி லுற்றசிங்கம்போற் பாய்ந்து
வயிரமிகுமசுரா ருயிர்நிலையையா ராய்ந்து
சித்திரவதைசெய்து வெற்றிமாலைகள் வேய்ந்து
தீயவடவைக்கனல் போலச்சினந் து காய்ந்து
வைத்தடிபெயர்க்கவொட் டாமலே யிறுக்குறேன்
மலைமலையாயுருளத் தலைகளை யறுக்குறேன்
நெற்றிமூளையைத்தேங்காயநெற்றெனை நொறுக்குறேன்
நிருதர்கள்குலமுழுதையுங்கரு வறுக்குறேன் (பய)

(உ) செங்குருதிவெள்ளங்கள் - பொங்கிக்கடலை மூட
தேர்கணிரைநிரையாய் - வாரிக்கபபல்போ லோட
கங்குங்கழுதுநாடக் - கவந்தங்களுங்கூத் தாட
களித்ததலைகளைப்பே யெடுத்தெறிந்துபந் தாட
எங்கும்பூதப்படைத்த ளங்கள்விட் டடிக்கிறேன்
எற்றியாயிரத்தெட்டண் டத்தையு மிடிக்கிறேன்
சங்கந்தொனித்துநின்று ங்கொண்டு பொடிக்கிறேன்
சருவசங்காரஞ்செய்துகறுவத்தை முடிக்கிறேன் (பய)

(ங) முக்கண்ணர்புன் னகையான் முப்புரத்தைச் சுட்டதும்
முதலினுங்கணிமித்தம் மதனெரி பட்டதும்
தக்கன்றலையையறுத் தக்கினியி லிட்டதும்
சண்டன்மார்பினிற்சினங் கொண்டுதைத்து விட்டதும்
மெய்க்குந்தந்தைதொழிலெ மக்கிங்கில்லாமற் போமோ
வித்தொன்றுபோடப்பூவின் மற்றோர்பயிருண் டாமோ
அக்ரமமின்றியழி யாதவரெவர் தாமோ
அதஞ்செய்யாமலினிமேன் மிதுமிஞ்சவிடு வோமோ (பய)

பிறகு ஷண்முகன் கந்தவரையில வீற்றிருக்க, நாரதர்செய்த யாகத்திலெழுந்த அஜத்தைக்கந்தன் வாகனமாய்க்கொள்ளல்.

விருத்தம்

வானவரை யிவ்வாறு தேற்றி வெள்ளி
வரையருகிற் கந்தவரை யெனப்பே ரிட்டு
ஞானகுக னங்கிருந்தான் சுவர்க்க நீது
நாரதன்செய் மகத்தெழுந்த மேடஞ் சீறித்
தானவன்போல் வருதல்கண்டு வீர வாகு
தனைவிடுத்தங் கயனுலகிற் புகுந்த வாட்டைப்
பூனையெனப் பிடித்துவந்து தேவர் துன்பம்
போக்கினன் வயப்பரிய தாக்கி னனே (உக)

பிறகு கந்தன பிருமமாவைச் சிறையிட்டுத் தானே நான்முகப் பிருமமாவாய் உலகசிருஷ்டி செய்தல.

(உம்எ) கீபகை இராகம் - தோடி—அடதாளம்.

(க) முனிவுடனே வந்த மறியைவயமாக்கிப்பின்
முனியைவேள்வி செய்வதற் கேவினன் - துணைப்
புனிதவீரர்கள் சூழக் குமரவேள் கயிலைக்கோ
புரமுகப்பினில் நின்று லாவினன்.

(உ) உலவியங்கிருக்கையில் மலரவன்கயிலைசென்
றுவந்தரனைப்பணிந்து கொண்டானே - பின்பு
மலைமணிவாசலில்வந் துலவுங்குமாசர
வணபவனையுங்கண் ணுற் கண்டானே

(ந) கண்டிவனோர்குழந்தை யென்றெண்ணங்கொண்டு நின்று
கையஞ்சலிசெய்துகும் பிட்டானே - சினங்
கொண்டுநகைசெய்தநத முண்டகன்றனைக்கந்தன்
குறித்து நீயாரென்றுரைத் திட்டானே.

(ச) உரைத்திடலுமுலகம் படைக்கின்ற நான்மறைக்
குரியவனெனமொழிந் திட்டானே - ஆறும்
திருந்தும் பிரணவத்துக் கருத்தைச்சொல்லென வேதன்
றெரியாமனின்று திகைத் திட்டானே.

(ரு) மறைப்பொருளறியாமல் விழிக்குமயனைத்தனை
மாட்டிச்சிறைக்கூடத்தி லடைத்தானே - வர்ண
முறைப்படி நாளுமுயி ரனைத்தையுந் தானேகந்த
மூர்த்திவிநோதமாய்ப் படைத்தானே.

விருத்தம்.

பிரமனை யிவ்வா றருஞ்சிறைப் படுத்திப்
பெருமைசேர் கந்தவேள் வரைமே
லொருகர மதனிற் கண்டிகை யணியு
மொருகர மீதுகுண் டிகையு
மிருகர மதனால் வரதமோ டபய
மேற்றறு முகமுமீ ரிரண்டு
திருமுக மாகித் திசைமுகன் றனைப்போற்
சிருட்டிசெய் தருளினன் றனியே. (௩௰)

கந்தன் பிரும்மாவைச்சிறையில் நின்றும் விடுவித்து ஈசனுக்குப் பிரணவோபதேசம் செய்து ஸாமிநாதன் அல்லது தகப்பன்ஸாமி என்றம்பேரடைதல.

(௨௰௮) தீபதை. இராகம் - பைரவி—ஆதிதாளம்.

(க) தேவர்களிதுசொல்லத் தெரிந்து ஸ்ரீ தாருணி
சிவனடியைப்பணிந்துபோற்றினன் - கந்தன்
பூவிலயனைச்சிறையிட்டுலகம்படைக்கும்
புதுமையைவிவரமாய்ச் சாற்றினன்.

(உ) திருமாலுரைகொண்டயன் சிறைவிடுக்க நந்தியைச்
சிவனனுப்பவவனுஞ் சென்றானே - நந்தி
யுரையறிந்துகுமர னயனுக்குத்துணையாக
உனையுஞ்சிறையில்வைப்பே னென்றானே.

(ந) அந்தச்சேதியறிந்து நந்திகணங்கள்சூழ
அரனுங்குமரனிடம் நாடினன் - எழிற்
கந்தனெதிர்கொண்டுடன் - வந்துபணிந்துதந்தை
கழலிணையைமுடியிற் சூடினன்.

(ச) பணைத்ததோளின்மகனை யணைத்துவந்துசுந்தரப்
பதுமசிங்காதனத்தி லேற்றினன் - ஈசன்
இணக்கமுடன்குகனை நோக்கியயனைச்சிறை
யிட்டதென்வகையென்று கூறினன்.

(ரு) இசையும்பிரணவமுணரா திருப்பவனால
இனிலியலுடல்படைத் திடல் தானே - பருங்
குசவனுருவங்களும் பலபண்டங்களுஞ்செய்யுங்
குணம்போலவன்செய்தொழி லென்றானே.

(சு) முத்தொழிலிலொருவனைத் தளையிட்டிகழ்ந்து
மொழிந்தாயென்றான்கோப மெடுத்தானே - கந்தன்
சத்திவீரவாகுவை விடுத்துமயன்விலங்கைத்
தறித்துக்கூட்டிவந்துமுன் விடுத்தானே

(எ) மலரயன்சிவனடி வணங்கிக்குமரன்செய்த
வருத்தத்தைச்சொல்லிக்கண்ணீ ருதிர்த்தானே - யினி
நலமாயுனதுஸத்ய வுலகஞ்சென்று சிருஷ்டியை
நடத்துவாயென்றானும் விதித்தானே

(அ) பின்புமகனையழைத் தம்புயனறியாத
பிரணவம்நீசொல்லென நவின்றானே - மெய்ப்பா
யும்பர்மகிழ்சசிரக கம்பஞ்செயதுகொண்டதற்
கோமென்றிசைந்தனன்சண் முகன்றானே.

(கூ) அன்னைசெவியின்முன்னஞ் சொன்னமொழியையந்த
ரங்கமாய்ச்சொல்லவேணு மென்னவே - யந்தச
சின்மயகுருசிட மரியாதையாகக்கேட்கத்
திருமூலத்தைககுமரன் பன்னவே.

(ய) தத்துவந்தனைசசொல்ல வத்தன்மகிழ்ந்துகையாற
றழுவியணைத்துமுத்த மிட்டானே - பெரு
மெத்திசையும்புகழத் தகப்பன்சாமிநீயெனி
றியாவருமறியப்பே ரிட்டானே

(யக) அண்டரெல்லோருமதைக் கண்டதிசயங்கொண்டு
அவரவரிருக்கைபோ யுற்றாரே - ஞானக்
குண்டிகைமுனிவரும் ப்ரணவமந்திரமதைக
குகனிடமுபதேசம பெற்றாரே

(யஉ) தந்தைகயிலைபுகக் கந்தவரையிற்சிங்கா
தனத்தின்மணங்களிப்புற் றிருந்தாரே - மகிழ்ந்
தந்தவேளைமான்மகள் சுந்தரவல்லியொடு
மமுதவல்லியுந்தவமிருந்தாரே.

தன்னை மணம் செய்யத் தவஞ்செய்த திருமால் புதல்விகளாகிய அமுதவல்லி, சுந்தரவல்லி இவ்விருவர்களைப் பிறகு மணம் செய்வதாய்க் கந்தன் வாக்களிக்க அவ்விருவர்களும் முறையே தெய்வகுஞ்சரியாகவும் வள்ளியாகவும் அவதரித்துவளர்தல்.

விருத்தம்.

தவமிருந்த மால்புதல்வி யிருவர்க் காகச்
சண்முகவேள் கயிலையின்றாழ் வரையிற்சென்று
சிவனடியை நோக்குமிரு வரில்வா னுளிந்
திரன்மகளா யமுதவல்லி மாதும் பூமேன்
மவுனமுனி மகளாய்ச்சுந் தரியுஞ்சென்று
வாழ்ந்திருங்க ளுங்களையா மணஞ்செய்வோமென்
றுவந்துரைத்த படியிருவர் பிறந்தங் கங்கே
யுறைந்திட்டார் மனதிலன்பு நிறைந்திட் டாரே. (௬௧)

பிறகு கந்தன் கயிலைசென்று அரனுமை யருகில் அமர்ந்திருக்க அச்சமயம் தேவர்கள் சூர்வாதைபொறாது முறையிடல்.

விருத்தம்.

வானுத லமுத வல்லியை யயிரா
வதங்கொடு போய்மகேந் திரத்தில்
வளர்த்திடத் தெய்வ யானையென் றெழிற்பேர்
வழுத்தினர் சுந்தரி மாது
நீணிலத் தொண்டை நாட்டினில் வேள்வி
நெடுமலை வள்ளியின் சார்பில்
நிதியெனக் கண்டு கானவர் வளர்க்க
நிறைபெயர் வள்ளியென் றிருந்தாள்.
பானொழிற் கந்த னாங்குமரேசன்
மகிழ்வுடன் கயிலையிற் சென்று
பதியுமை தந்தை தாய்தனைப் போற்றி
மருங்கினி லமர்ந்திடு மந்நாள்
சேணுல கரசன் மாலயன் முதலோர்
திருக்கயி லைக்குள்வந் தணுகிச்
சிவனடி பணிந்து சென்னியிற் செங்கை
சேர்த்தனர் கூவியார்த் தனரே. (௬௨)

(உக) தீபகை. இராகம் - காபி—அட தாளம்.

முறையோமுறையோ முப்பரம்பொருளாய்
நிறையுஞ்ஜெகதீசனே நின்கிருபையருளாய் (முறை)

(௧) கொற்றசூர்வாதையா லெய்த்துநைந்தோமே
நித்யகண்டந்தீர்க்காயு ளாகிவந்தோமே. (முறை)

(௨) உரித்தாமுயிர்மேலாசை வெறுத்துலைந்தோமே
வரிப்புலிதுரத்திய மான்போல் நைந்தோமே. (முறை)

(௩) எங்குமசுரர்பிரி பஞ்சமாய்ப்போச்சே
தங்கநிழலில்லாமற் றவித்திடலாச்சே (முறை)

(௪) இளைத்தபேரைக்கைதூக்கா திருந்திடப்போமோ
வளர்த்தகிளியைப்பூனை வசஞ்செய்யலாமோ (முறை)

(௫) ஈசனடியவருக கிடருறலாமோ
ராசனிருக்கப்பட்ட ணங்கொள்ளைபோமோ (முறை)

(௬) பொடிக்கப்புரமெரித்த புன்னகையிலையோ
துடிக்கவசுரர்தலை துணிப்பதுமிலையோ (முறை)

(௭) கொடுத்தநந்திசாபத்தை விடுத்திடவேணும்
அடித்தகையாலெங்களை யணைத்திடுங்காணும் (முறை)

ஈசன் தேவதைகளுக்கு அபயமீந்து ஷண்முகனை தேவசே னாதிபதி ஆக்கி, பதினொரு உருத்திரர்களை ஒன்பது படைக்கலமாக வும் சக்தியை வேலாகவும் செய்துகொடுத்து அசுரரைச்சயித்து வரச்சொல்லல.

விருத்தம்.

மாயன்முதல் வானவர்கண் முறைகேட் டையன்
மலர்க்கரத்தா லபயப்ர சாத மீந்து
சேயனெனுஞ் சண்முகனை யழைத்துத் தேவர்
சேனாதி பதியாகப் பட்டங் கட்டி
ஆயபதி னொருருத்ரர் தமைமூ தண்டத்
தந்தகனுக் கந்தகனாய் விளங்கி நிற்குஞ்
சாயபடை யெனச்சத்தி வேலு மாகத்
தொகுத்திட்டார் மகிமைசொல்லிக் கொடுத்திட் டாரே(ஈசன்)

(௧௰) கீர்த்தனம். இராகம் - மத்தியமாவதி—அடதாளம்.

பல்லவி

சேயா என்துரையே - அசுரர்களைச்
செயித்திங்குவருவாயே - அருமைச்சேயா

அநுபல்லவி.

மாயாச்சூர்களை றுஞ்சிங்கத்திரளினில்
வாய்த்தசரபம்போற் பாய்ந்து - கடை
யார்த்தகனலெனக் காய்ந்து - எதிர்
வாய்த்தோர்நிலையையா ராய்ந்து - முனை
வாய்ந்து - வாகை
வேய்ந்து - அருமைச் (சேயா)

சரணங்கள்.

(க) சேகரமாம்பெரும் பூதப்படைகள்
திரைகடல்போற்சூழ்ந்து கொண்டு - வர
ஒகைபெறும்வீர வாகுவொடிலக்கத்
தொன்பது வீரரு முண்டு - அதி
வாகுபெறும் நந்தி யுக்ரதண்டனண்ட
வாபரணனுடன் மண்டு - விட
நாகவீரனமுற் கண்ணன்சிங்கமாசே
நாதிபரோடுந்தி ரண்டு - அவர்க்
காதரவாய்மொழி கிண்டு - அந்தப்
பாதகர்மீது நீ தெண்டு - செய்து
கொண்டு - தகி
கண்டு - அருமைச். (சேயா)

(உ) சத்திவைவேலிந் நித்தியமுன்தனைத்
தாய்போலினிதுடன் காக்கும் - இஷ்ட
சித்திசேர்தோமரம் வாள்குலிசம்புங்கம்
சீராழித்தண்டுவில் லார்க்கும் - பழு
வுத்தமஞ்லமா தேவனரஞ் ருத்திர
னேங்குசங்கரனிதல் தாக்கும் - நீலன்
வெற்றிமயானனுன் மத்தவிசயன்வல்
வீமன் பவோற்பவன் சேர்க்கும் - கொன்றைத்
தாமன் கபாலிதோல் போர்க்கும் - சௌமிய
னுமிவருன்படை யாக்கும் - பகை
தீர்க்கும் - புகழ்
ஈர்க்கும் - அருமைச். (சேயா)

(ங) வேதத்திறம் பஞ்ச பூதத்திறம் மனோ
வேகத்திறமையுங் கூட்டி - வானோர்
ஓதியவிஞ்சைப் பலங்கொண்டொருலகூம்
ஓங்கும்பரித்தேரைப் பூட்டிச் - சென்று
வாதுசெய் சூரன் இருக்கும் புரத்தை
வளைத்தமரிற்றிறங்காட்டி - யுன்ற
னேதுவினாலவன் செய்திடுமாயங்கள்
யாவையும் பஞ்சுபோலோட்டி - யந்தக்
பாவியவுணரை வீட்டி - தேவ
காவலனை முடி சூட்டி - இன்ப
மூட்டி - நிலை
நாட்டி - அருமைச (சேயா)

கந்தன் இப்படைகளைபபெறறு வாயுவினால் சாரத்தியம் செய்யப்பட்ட மனோவேக இரதத்தில ஆரோகணித்து தனது செல்வ மாமன் விஷ்ணு ஸமேதனாய் அசுராமீதுபடையெடுத்துச் செல்லல்.

விருத்தம்.

இன்னது சொல்லி யீந்த வெழிற்படை யாவை யும்பெற்
றன்னையோ டையன் றன்னை யணிவலங் கொண்டு மாயோன்
பன்னுரை கொண்டு வாயு பரிதனை நடத்தத் தேர்மேற்
றன்னிக ரில்லாச் செவ்வேள் தாவினான் மேவி னானே. (கச)

குறிப்பு.—இரண்டாவது சரணத்திற் சொல்லிய பதினொரு உருத்திரப் படைகளின் விபரம்.

மாதேவன்	...	தோமரம்.	மயானன்	..	சக்கரம்.
அரன்	...	வாள்.	விசயன்	...	தண்டு.
உருத்திரன்	..	குலிசம்.	வீமன் }		வில்
சங்கரன்	...	அம்பு.	பவோத்பவன் }		
நீலலோகிதன்	...	அங்குசம்.	கபாலி }		மழு.
			சௌமியன் }		

ஆறு உருத்திரர்கள் பதினொருவரு மொன்பதாயு [illegible]

(கக) கீர்த்தனம். இராகம் - தர்பார்—திரிபுடை தாளம்.

பல்லவி.

இரதங்கொண்டானே - ஷண்முகன்படை
யெடுத்துச்சென்றானே

அநுபல்லவி

வரதன் சிவனடியை வணங்கியே விடை பெற்று
வானவரை ரக்ஷிக்க மனதிற் கிருபை யுற்று
அரஹர வெனச்சிவ னடியார் துதிக்க முற்று
மாதித்த னொளிபோலே சோதிப்பிரபை சுற்று. (இரதங்)

சரணங்கள்.

(க) மெத்தத்தவம்புரிந்து அத்தனருளாற் பண்டு
மேதினிதனிலழியாதவரங்கள் கொண்டு
மத்தமிகுந்தேவுல கத்தினுஞ்சென்று வெட்டி
மட்டில்லாமலாயிரத் - தெட்டண்டங்களுங் கட்டி
வானுள்ளோரொடுங்க -மும்மூர்த்திக
ளானவர் நடுங்க - பொடிப்பொடியா
யெற்றிப்பொன்னுலகைக்கொ - ளுத்தியலற விட்டு
இந்த்ரன்மகனைசயந்தனைச்சிறை யிட்டு
வைத்தவுணனைசசெ குத்துவல்லுயிர வாட்ட
வன்மத்தையொழித்தெங்குந் தன்மத்தை நிலை நாட்ட (இரதம்)

(முருகக்கடவுளுடன்சென்ற பூதபடைச்சிறப்பு.)

(உ) செக்கர்வானிறம்போலே சிவந்தபணிச் சடையர்
திரண்டசந்துருள்போலச் சுருண்டகுழ லுடையர்
அக்கும்பவழமுங்கோத் தணிந்தகண்டித் தொடையர
ஆலகாலம்போலொளி காலுமழுப் படையர்
அடற்கனல்விழியார் - இடியேறுபோ
லெடுத்திடுமொழியார் - விண்பிறையென
வக்ரதந்தர்கண்மலை யிற்குகையெனும் வாயர்
வண்ணமிகுந்ததிரு வெண்ணீறணிந்த காயர்
விக்ரமமுடனேயொ லிக்குங்கடலை யொத்த
வெள்ளமிரண்டாயிரந் துள்ளும்பூதர்கள் சுற்ற (இரதம்)

(அவர்கள்தரித்த அஸ்திரசஸ்திரச் சிறப்பு.)

(௩) அங்குசமுசலங்க ளத்திரவேலாயு தங்கள்
அழிக்கும்பாசுபதங்கள் வழிற்குலிசாயு தங்கள்
துங்கபாசம்பிண்டியி லங்குவாளாயு தங்கள்
தோமரங்கள்பரிசை நேமிசூலாயு தங்கள்
தொடுக்குஞ்செங்கரத்தார் - பகைவோர்கல்வி
யெடுக்குமுக் கிரத்தார் - அண்டங்கண்முத
லெங்குங்கலங்கவெற்றிச் சங்கமுழங்கி யார்க்க
இறைக்குஞ்செந்தூளிகள்விண் - மறைத்தேழ்கடலுந்தூர்க்க
மங்குலினொலிபோன்மு ழங்கியா ர வாரித்து
மண்டிவருஞ்சேனையைக்கண்டுமனம் பூரித்து (இரதம்)

(௪) கந்திருவர்கள்வித்யா தரர்கள்நாகலோ கத்தர்
கருடர்கிம்புருடர்கின் னரர்களுரகர் சித்தர்
அந்தணமுனிவர்கள் சிந்தைமெய்ப்பரி சுத்தர்
ஆகம்புளகமுற்ற யோகியர்சிவ பத்தர்
ஆசிகள்கிறைக்க - கற்பகமலர்
வீசிநின்றிறைக்க - அந்தரமெங்குந்
துந்துபிகண்முழங்கத் தந்த்ரியாழிசை பாடச்
சுந்தரரம்பைய ரிசைந்துநடன மாட
எழுந்துங்க்ரவுஞ்சகிரி கந்துகந்தாய் வெடிக்க
முடிக்குமசுரர்க்கெல்லா மிடக்கண்டோளுந் துடிக்க (இரதம்)

கந்தன் வீரபாகுதேவரை முதலில் தாரகனோடு போர்செய்ய அனுப்ப அவரும் படையுடனசெல்ல பூதப்படையும் அவுணப்படையும் கைகலத்தலும் வீரபாகுதேவருக்கிளைய அஷ்ட வீரரும் தாரகனும் போர் புரிதல்.

விருத்தம்.

சாமிமுன் க்ரவுஞ்ச மலைதனைக் காணச்
சதமகன் வெருவநா ரதனுந்
தடவரை யடைந்தோர் மயக்குறச் சிலையாய்த்
தமிழ்முனி சபியவுணனையுந்
தேமலர்த் துளவன் றிகிரியை யணியாய்ச்
செருவினிற் களமதி லணிந்த
இடாகர் மாய்ா புரிதனை யாளுந்
திணிகொடா ரகனையுஞ் செயித் தாற்

பாமர னுகுஞ் சூரனைச் சயித்தல்
பாரமின் றென்னலும் வீர
பாகுவை யழைத்து விசுவகன் மாவாற்
பணித்திடு மிரதமுங் கொடுத்து
நீமுனம் படையோ டெழுந்துபோர் புரியின்
னிருதனை யழிக்கநான் வருத
னிசமெனப் புகன்ற வேலவன் பதத்தை
நினைந்தன னமர்க்கெழுந் தனனே. (௩௫)

(௩௨) திபதை. இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

(௧) தீரன்குமரன்சொல்ல வீரவாகுதேவர்பின்
றிரைகடற்படைகொண்டு நடந்தாரே - மதி
கோரமிகுங்க்ரவுஞ்சந் தாண்டிமாயாபுரிக்
கோட்டையைச்சுற்றிவளைந் தடர்ந்தாரே.

(௨) வளைந்துமதிலைச்சுற்றி யிருந்தகாவலர்களை
வாட்டியடித்துமண்மே லனைத்தாரே - மன
துளைந்துதூதுவருங்கண் டெழுந்துமக்கணத்தினி
லோடிப்போய்த்தாரகனுக் குரைத்தாரே.

(௩) அங்கதுகேட்டுமனம் பொங்கிக்கசமுகவ
னழற்பொறியெனக்கண்கள் சிவந்தானே - பருஞ்
சிங்கம்புதையைவிட்டெ ழுந்ததுபோற்படைகள்
செறியத்தேரினிலேறி வந்தானே.

(௪) மிக்கவாயிரவெள்ளம் பூதப்படைகள் சூழும்
வீரரனைவரையுங் கண்டானே - கண்டு
கொக்கரித்துச்சிரித்தி லக்கோநமக்கிங்கிந்தக்
கொசுகுத்திரளென்றெண்ணங் கொண்டானே.

(௫) உக்கிரங்கொண்டவனி ருக்கும்போதசுரர்க
ளொறுத்துப்பூதப்படையோ டெதிர்த்தாரே - பல
புட்குலங்களில்ராஜா ளிக்குருவிகள்போலே
பூதத்தலைவர்பாய்ந்து மிதித்தாரே

(௬) தண்டுதோமரங்களும் பிண்டிபாலமும்விட்டுத்
தானவர்சாரதர்மேல் விறைத்தாரே - சடுங்
குண்டுமலையைக்கல்லிக் கொண்டசுரப்படையிற்
கூடிச்சாரதர்வீசி நிறைத்தாரே.

(எ) சிலையிற்கணைகள்பூட்டி நிலையற்றுவிழும்படி
தெய்வப்படையசுரர் விடுத்தாரே - பல
மலையற்றதுபோற்சூர்கள் தலையற்றுவிழும்படி
வாளிதொடுத்திவர்கள் கெடுத்தாரே.

(அ) பின்னும்பூதர்களந்த வவுணப்படைகள்தம்மைப்
பிடித்தலறும்படிக்குத் தாக்கினார் - இன்ன
முன்னதமானதேர்கள் கரிகள்பரிகளையு
முதைத்துநொடிக்குள்பொடி யாக்கினார்.

(கூ) ஆனைத்தலையவுணன் சேனைத்தளங்களும்போ
யழிந்துபிணக்குவையாய் விழுந்ததே - விழுந்
தீனத்தசைநிறைந்து கானத்தாறுகள்போ
லிரத்தமும்கரைபுரண்டெழுந்ததே.

(ய) ஞாளிநரிகளங்கா தாளிகொண்டுதூங் களி
னங்களுண்டிடவிருந் திட்டவே - கன
கூளிபேய்களும்ரண காளிகளுந்தின்றுடல்
கொழுத்துமனஞ்சலித்து விட்டவே.

(யக) இந்தவிதமாய்ப்பூதப்படையாலசுரப்படை
யிலக்கமற்றசேனைகண் மாய்ந்தவே - யேங்கிப்
புந்திகலங்கிமிஞ்சி நின்றபடைகளெல்லாம்
புருவைக்கூட்டம்போற்புறஞ்சாய்ந்தவே.

(யஉ) மாய்ந்ததையுந்தன்படை சாய்ந்ததையுந்தாரகன்
மனங்கொண்டழல்போற்சீறித் துடித்தானே - உள்ளங்
காய்ந்துசினத்துடனே பாய்ந்துலகெங்கும்வென்ற
கதையைத்தன்கரத்தினிற் பிடித்தானே.

(யங) பிடித்துப்பூதப்படைகள் துடித்துத்துடித்துவீழப்
பேய்ச்சூராவளிபோனின் றடித்தானே - மணி
முடிச்சிரங்கள்கரங்கள் கண்டந்துண்டங்களாக
முனைவீரருயிரையுங் குடித்தானே.

(யச) சின்னபின்னமாய்ப்பூத மன்னர்மடியக்கண்டு
சேனைத்தலைவர்வந்துங் கடுத்தாரே - கிட்டி
மன்னும்வில்லைவளைத்துத் துன்னுமம்புகள்பூட்டி
வருஷமாரிபோலவே விடுத்தாரே.

(௰௫) இறுத்திமலையின்மேலே கறுத்துச்சரற்காலத்தி
லிடைவிடாமற்பொழியுமழைபோலே - வீரர்
தெறித்தகணைகளெல்லாந்தாரகன்மேற்படாமற்
சிதறிவிடக்கண்டாரேகண்ணாலே.

(௰௬) தெய்வச்சரந்தொடுத்து மெய்யிலழுந்தாதாலே
சிந்தைமயங்கிவீரர் நின்றாரே - நின்று
வெய்யபாதகன்றன்னை அய்யன்குமரன் செங்கை
வேல்கொல்லுமென்றப்புறஞ் சென்றாரே.

(௰௭) சேனைத்தலைவர்செல்லக் கண்டுவீரகேசரி
சிலைவளைத்துக்கணைகள் தெறித்தானே - யந்த
ஆனைத்தலையசுரன் சேனைத்தொகுதியுங்கொன்
றவன்மணிமகுடத்தைத் தறித்தானே.

(௰௮) மகுடந்தெறிக்கமறு மகுடந்தரித்தசுரன்
வச்ர தண்டையவன்மேல் வீசினான் - இவன்
மிகமயங்கித்தெளிந்து பதினான்குகணைகளை
விடுத்திட்டவனையிகழ்ந் தேசினான்.

(௰௯) துடுக்குப்பேசியவீர கேசரிமார்பிலொரு
சூலம்பாதகன்விடுத் ததிர்த்தானே - வஞ்சன்
விடுத்தசூலத்தைக்கையால் பிடித்துமுறித்தெறிந்து
வீரவாகுசென்றெதிர் குதித்தானே.

வீரபாகுதேவர் தாரகனுடன் போர்புரிந்து அவனை முதுகிடச் செய்தபிறகு அசுரன் மாயத்தால வீரபாகு உட்பட்ட சமஸ்த சயின்யமும் கிரவுஞ்சத்திற் சிக்கல்.

விருத்தம்.

புங்கவன் வீரவாகு போரினி லெதிர்க்கக் கண்டு
வெங்கண னசுரன் றானும் வில்லெடுத் ததிர்த்துக் கொண்டான்
சிங்கமா யிரங்கள் பூண்ட தேரினி லிவன்மேற் கொண்டு
பொங்கிய கடல்போற் சீறிப் போரிட்டா னேரிட் டானே. (௧௧)

(கூ) கீர்த்தனம் இராகம் - அசாவேரி—அடதாளம்.

பல்லவி

தீரன் வீரவாகுவன் தாரகாசுரனுடன்
செய்தனனே சண்டை

அநுபல்லவி.

ஏர்பெருகுங்குமா ணிணையடியைத் துதித்து
இடிந்துபூதப்படைகள் மடிந்ததையும் மதித்து
கோ வசுரர்களைக் கொல்வேனென்று துடித்து
குலிசப்படையுஞ்சேர்த்துச் சிலையுங்கையிற் பிடித்து (தீரன்)

சரணங்கள்

(க) மாயவசுரனுமோ ராயிரங்கணைவீர
வாகுதேவன்மேல்விழ வெய்தானே - நல்ல
தூயவீரவாகுவா யிரங்கணைபோட்டவன்
தொடுத்தகணையைப்பொடி செய்தானே - யதி
மாயமாயவனொரு நூறம்பு தொடுக்கவும்
மறுத்துமிவனூறம்பு தொடுத்ததைத் தடுக்கவும்
ஆயபொழுதிலவன் சரமழை தூற்றவும்
அனுசனும்வெருகணை தொடுத்ததை மாற்றவும்
தீயினம்பையந்தப் பாதகன் றெறிக்க
திரும்பத்தம்பியழற் கணைகொண்டு தறிக்க
நேயவருணத் திரத்தையவன் றொட்டு
நெறிக்கவக்கணைகொண் டறுத்துத் துகளிட்டு. (தீரன்)

(உ) வெய்யவனத்திர மவன்விடக்கண்டது
வேவிட்டுத்தம்பியும் விலக்கினன் - பின்னும்
பொய்யவுணன்வாயு வாத்திரந்தொடவிவன்
பொடிசெய்தவன்மனதைக் கலக்கினன் - இன்னம்
செய்யபிரும்மாத்திர மவன்விட்டுத் தாக்கவும்
சேயனதற்கது வேவிட்டுப் போக்கவும்
மையவன்சிந்தைமன த்தாபந் துன்னியே
மாயையினால்வெல்ல வேணுமென் றுன்னியே
மாயைத்தொழில்கள னேகவிதஞ் செய்ய
மயங்கிவீரப்படை தயங்கிமனம் நைய
ஏகப்பெருங்கணை விடுத்து தடுக்கியே
இரவிமுன்பனிபோ லிதனை முடுக்கியே. (தீரன்)

(௯) செஞ்சரங்களொழிந்து வஞ்சனேறியபரித்
தேரையுந் துண்டுதுண்டாய் நறுக்கினன் - மன
தெஞ்சியரிகண்ட குஞ்சரம்போன்முது
கிட்டவனோடிட நொறுக்கினன் - நேரில்
அஞ்சனமலைபோற்கர்ச் சனையிட்டெழுந்து நின்று
ஆறுமுகனைவெல்லப் போறேனினிப்பா ரென்று
நஞ்சனையவன் விண்ணை நாடிப்போய் மறையவும்
நற்சூரியனுமறைந் திட்டிரு ணிறையவும்
நடையின்றிவீரப் படைகள் சோரவும்
[illegible]முனிசபித்த தொன்மை நேரவும்
[illegible]லனைக்ரவுஞ்சப் படையுட் கவிக்கவும்
[illegible]மரர்கள் கதறித் தவிக்கவும் (தீரன்)

இந்த சங்கதியை நாரதர் ஷண்முகனுக்குக்கூற ஷண்முகனும் கோபாவேசத்தோடு அசுரப்படைக்குட்சென்று கலக்குதல்.

விருத்தம்.

வீரர்களும் பூதர்களுங் க்ரவுஞ்சந் தன்னுள்
விரிவலைக்குட் சிக்கியபட் குலம்போ லேங்க
நாரதன்கண் டறிந்துகந்த ஸாமிக் கோத
நறுநெய்யைக் குடங்குடமாய் கவிழ்க்க வுண்ட
கூரெரிபோற் பொங்கிரத மீதி லேறிக்
கொய்சிலையா ளம்பொடும்பற் படையு மேந்தி
வாரிதிபோ லுறுமசுரப் படைக்குட் சென்று
வருத்தினன் றருமநிலை பொருத்தி னனே. (௬௪)

(௬௪) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்ரியை—அடதாளம்.

பல்லவி

ஷண்முகனடித்தானே - பிரதவிதமாய்ச
சமர்செய்து முடித்தானே.

அநுபல்லவி.

ஷண்முகனடித்தானே - வண்மையைப்பிடித்தானே
தக்கபெரும்பூதரும் - மிக்ககணநாதரும்
தம்பிமாரனைவோரும் - அம்பரமெனநேரும்
தாரகனெதிர்சென்று - போரிலடர்ந்துநின்று

சயித்தபொறுமையாலே - தைத்தியன்மாயையினாலே
தடக்ரவுஞ்சத்துட்பூட்டுண் - டிடக்குண்டாரெனக்கேட்டு
தணலெனவேவெகுண்ட - வுணசேனைதனைக்கண்டட்
சணத்திற்கணைகள்பூட்டி முனைத்தசுரர்களைவாட்டிச். (ஆண்)

சரணங்கள்.

(இரதகஜதுரகபதாதியென்ற நான்குபகுப்பினையுடைய
அசுரப்படையாவற்றையும் ஐயன் அழித்தல்).

(க) மதத்தகரிகளொக்கக் கதித்தடங்கலுமொய்க்க
மணித்துரகதங்களும் அணிப்பொன்னிரதங்களும்
வளமொத்ததானையும் அளவற்றசேனையும்
மார்கடலெனக்கோத்து நேர்வருவதைப்பார்த்து
மாயாபுரியின்கோட்டை வாயினில்ரணவேட்டை
வாய்த்ததுநமக்கின்று கீர்த்திநிலைக்குமென்று
மனங்கொண்டுகுறித்தானே வருபடையைச்
சினங்கொண்டுமறித்தானே அந்தவேளையில்
வல்லசுரர்களங்களெல்லை யின்றித்தளங்கள்
வார்ந்தெதிரடுத்தாரே கந்தனுக்கென்றே
நேர்ந்துயிர்கொடுத்தாரே பின்னுநெருங்கி
மட்டடங்காதசேனை விஷ்ணுவின்மருகோனை
வளைந்திடநோக்கினனே கணைதொட்டவை
குலைந்திடப்போக்கினனே யதையறிந்து
மனவேகமுடனோடி முனையசுரர்கள்கோடி
மறுத்துறவறிந்தானே யவர்களையும்
அறுத்தறுத்தெறிந்தானே யிவ்விதமாக
மண்டைகளழிந்தபேருந் தொண்டைகள்கிழிந்தபேரும்
மருமங்களழிந்தோரும் நினைத்திருந்த
வருமங்களொழிந்தோரும் கையிற்பிடித்த
வாளிழந்தவர்களும் தோளிழந்தவர்களும்
மதிகெட்டலைந்தபேரும் கண்டெரியாமற்
கதிகெட்டலைந்தபேரும் இரதமூர்ந்து
வசமும்பரிபாகன்க வசமுந்துணியும்போய
வசங்கொண்டுவிழிப்பாரும் நம்துவிதி
வசமென்றொழிப்பாரும் மத்தகங்களில்
வதைக்குஞ்சரங்களிட்டு மதக்குஞ்சரங்களடட்டு

மலையெனக்குவிந்தனவே மேகங்கள்கானத்
கலையெனக்கவிந்தனவே மிகக்கலங்கி
மருண்டுபரிகள்கண்க ளிருண்டுசுருண்டுதொண்டை
வரண்டவனேகங்கோடி நிரைநிரையா
யுருண்டவனேகங்கோடி கருவங்கொண்ட
வம்பன்றன் படைகள்க டம்பன்றன்படைக்கன
லின்பஞ்சதெனப்போச்சே யசுரப்படைக்
கும்பஞ்சிவெறுப்பாச்சே பிடித்துயர்ந்த
மதிக்குடைகளும்வெற்றி மலர்த்தொடைகளும்போய
வதிக்குடந்தையாகவே மீந்தவர்கள்தம்
பதிக்குடைந்தோடியேகவே தனிமையாலே
வலமுற்றசமராடி பலமுற்றனேகங்கோடி
வருக்கங்கள்முடிந்தனவே கோருக்குற்ற
நெருக்கங்கள்விடிந்தனவே தவமுனிவர்
மகமெங்கும்நிறைவேறச சகமெங்குங்களிப்புற
மாமறைபுகழ்ந்தேத்த பூம்பாத்தையாற்றச (ஷண்)

(ஐயன் தாரகனுடன் போர்புரிந்து அவனது துதிக்கையையும் நாற்கொம்புகளையும் அறுத்துத்தள்ளி அவன் இரதத்தையும் கொடியையும் அழித்தல்).

(உ) அந்தச்சேதியறிந்து சிந்தித்துமனநொந்து
ஆயிரம்பரிகொண்ட மாயவிரதத்தண்ட
மாயிரமுஞ்சுமந்த தீயசூரன்பின்வந்த
அடல்சேர்தாரகாசுரன் இடர்சேர்குணநீசுரன்
அட்டகாசங்களும்பண்ணி பட்டபேர்தங்களையெண்ணி
அலைக்கும்புலிபோற்சீறி மலைக்கண்மழைபோலேறி
அய்யனைக்கண்ணினிற்கண்டானே இவனோர்சிறு
பையனென்றெண்ணமுங்கொண்டானே இளமைவய
தானநீசண்டைசெய்யத் தானிணையோவையாநின்
னப்பனிடம்போவென்றானே உயிரிழக்க
வொப்பிலிங்கேவாவென்றானே சிங்கக்குருளை
அன்னைவயிற்றிற்செனித் துன்னும்பொழுதேமுனிந்
தானைத்தின்றிடாவெல்லாதோ என்கைவேலுன்ற
னானைத்தின்றுயிர்கொல்லாதோ கடிக்குங்குட்டி
யரவுக்குவிடமென்ன குறைவுமுமோபன்ன

டாவென்றையனுஞ்சிரித்தான் சிரிப்பதுகண்
டேழுடனார்ப்பரித்தான் ஆர்ப்பரித்துக்கொண்
டறுமுகன்மார்பின்முந்தக் கரிமுகவன்முனைந்தை
யாறிருகணைபூட்டினான் சிலவம்பையன்
றாறியதனை போட்டினான் மற்றுமசுரன்
ஆயிரங்கணைவிடச் சேயனதைத்தவிட
தாக்கிவில்லையுமொடித்தான் பின்னுஞ்சரங்கள்
தாக்கியொல்லையிலடித்தான் பறுவில்லெடுத்
தானைமுகன்றானுமலைச் சோனைமுகில்போலநிலை
யத்திரவருஷ நிறைத்தான் சாலையுங்கங்கா
பத்திரம்விட்டதை மறைத்தான் மறைத்தவுடன்
அநந்தமாயிரம்பைச் - சினர்தெய்தவனும் ம்பை
அல்லிடைக்கனல்போல் விளைத்தான் இமைக்குமுன்னம்
சல்லடைக்கண்போலே துளைத்தான் துளைத்தப்புறம்
அதிர்க்கும் புகைகள்கொண்டு திக்கை கொம்பிரண்டும்
அரிந்துபுவியில் வீட்டினான் யாவருமுள்ளம்
பரிந்துமகிழக் காட்டினான் தொங்குகைகொம்பும்
அடித்து விழுந்துருண்டு துடித்திடவதுகண்டு
அயர்வுற்றுள்ளுளை வாகினான் பயந்தசுரன்
துயரக்கடலின் மூழ்கினான் உடன்முழுமூக்
கறையன்படைக்கஞ்சானென றிரதமீதேறிநின்
றைம்பதுகணைகளெய்தான் அதையுமையன்
ஐம்பதுகணையாற் கொய்தான் கொய்ததுமன்றி
அடுக்கிக்கணைகள்பூட்டிக் கடுக்கிமுனைபாராட்டி
ஆர்ப்பரித்தெதிரேநின்று ரபன்பாலுன்னைச்
சேர்ப்பிவித்திடுவேனென்று சபதஞ்சொல்லி
அணிசேர்கொடிகடன்னைத் துணிசெய்ததற்குப்பின்னை
அடித்துத்தேரைநொறுக்கித் தடுத்தவனையறுக்கி. (ஷண்)

(தாரகன் மூர்ச்சையடைதலும், பிறகு வந்துசூழ்ந்த அசுரர் மடிந்த இரணகள வர்ணனையும், தாரகன் தெளிந்து பாசுபதமுதலியதெய்வப்படை விடுதலும் அவை ஐயன் கைவசமாவதும்).

(ரு.) துதிக்கையுடனேதந்தஞ் செதிக்கவுடனேயந்தந்
தொலைந்துமனமுங்குலை குலைந்துகலங்கிமலைச்
சுனையருவிபோற்சோரி நனையவேமறுதேறிற்
றுன்பமுற்றுடனேநி யம்பாயிரமுந்தூறித்

தூண்டும்பாகனைத் தாக்க வாண்டகையதைப்போக்க
தொல்லாயிரஞ்சரத்தை வில்லால்விடுத்தூரத்தைத்
துளைத்திசையேந்தினனே தாரகன் ரெத்தக்
குளத்திடை நீந்தினனே அதுகண்டோடிச
சண்டுபெருங்குருந்தடி குண்டுகவண் யளைதடி
சுக்குத்தடிபொந்தைதரங்கு மெறிந்துநாலு
பக்கத்திடைவந்துநெருங்கும பாதினிலையன்
சுடர்க்கணைவிட்டுவரும் படைக்கலங்களைக்கருந்
தூளியாய்நொறுக்கினனே கையிற்பிடித்த
வாளினை அறுக்கினனே நறுக்கவும்பின்
துதிக்கும்விறற்சேனைகள் கதிக்குந்திறற்றானைகள்
சுற்றிமொய்ப்பாய்க்கவிந்தனவே சாம்கணையாற்
புற்றீசற்போலவிந்தனவே ரணகளத்திற்
சுரந்துகழுகோரியும் பருந்துமிளநரியும்
சுரோணிதமுண்டுடலுதிக்கப் புங்கவன்செய்த
திராணியைக்கொண்டாடித்துதிக்கக் கயந்தங்களைத்
தோண்டிரத்தங்குடித்துத் தாண்டிக்கொண்டானடித்துத்
துள்ளுஞ்சிலதுபேய்கள் மகிழ்ந்துகவி
விள்ளுஞ்சிலதுபேய்கள் இதனைக்கண்ட
துடுக்கன்றேவாத்திரம் விடுக்கவென்றாத்திரந
தோன்றிநாரணாத்திரம் உலகந்தனை
யீன்றவாரணாத்திரம் முதற்படைகள்
தொடுத்தவெல்லாங்கந்தனை யடுத்துவந்துவந்தனை
தொண்டுசெய்துவலம்வந்ததே அசுரன்மனம்
பிண்டுபொறிபிறிக்கநொந்ததே நொந்துபாதகன்
தடுக்காளமொழிபேசி முடுக்காயையனையேசித்
துய்யசிவனடிபணிந்து பாசுபதத்தைக்
கையினிலெடுத்துத்துணிந்து விடுக்கவதிற்
சூலமுற்கரம்பிண்டி பாலஞ்சக்ரமுசண்டி
தொகையற்றசஸ்திரங்களும் கடைக்கனல்போற்
புகையுற்ற அஸ்திரங்களுர் எழுந்துலகைச்
சுற்றியுயிர்வதைத்துண்டு பற்றிவருவதைக்கண்டு
சுயம்புபதத்தைநினைந்தான் குமரன்கையில்
கயம்பெறவதைப்புனைந்தான் தீயவன்கண்டு
சோபமுமுற்றுமனத் தாபமும்பெற்றுப்பரஞ்

சோதியிவனென்றாப் பினன் தன்னுயிர்நிலே
யாதினிமேலென்றுவெம்பினன் இவ்வகையாசக்
தோற்றுப்போரிலிடைந்து வேர்த்துமனமுடைந்து
தூக்கித்தவன்றிண்டாடச் சொர்க்கத்தவர்கொண்டாட (ஷண்)

(பிறகுமாயையால் வெல்லகினேந்து அனேக இந்திரஜாலங்களைச் செய்ததாரகனையும் கிரவுஞ்சனையும் ஐயன்வேலைவிடுத்து ஸம்ஹரித்து வீரபாகுமுதலிய ஸமஸ்த சயின்யத்தையும் மீட்கல்).

(௪) இசையுந்துரகதமும் விசயமணிரதமும்
எதிர்க்கின்றபெருங்கும்பய துதிக்கையீரிருகொம்பு
மெழில்சேர்பாசுபதமும் மொழிசேர்வாயின்மதமும்
இறையும்நிறையும்போகிச சிறைபோனபக்ஷியாகி
இருசன்னைரானைர்நு உருகிலிதியைநொர்து
இகல்சேர்மாயையால்வெல்லத் தருமென்றெழுந்துசெல்ல
இருட்க்ரவுஞ்சத்துட்குதித்தான் மறைந்துவஞ்சம்
பெருக்குஞ்சத்தியைத்துதித்தான் அதனினின்றும்
இடிககும்பன்மேகங்கள் கடிக்கும்பன்னாகங்கள்
இமயம்பல்கந்தரமும் அஷ்டகஜமும்
அமையுந்தொல்மந்திரமும் திரிபுரமும்
எழில்கொடுவான்களும் குழுவொடுமீன்களும்
எரிக்கும்வடவைக்கனலும் உலகையப
கரிக்குங்கடையற்புனலும் மதமிகுத்த
எண்ணிலசுரப்படை நண்ணியேகனபுடை
எறியேவரக்கூவினன் உடன்பாதகன்
சிறியோரதமேவினன் களத்தினில்வந்
நேறுமாறுகண்மீறி வேறுவேறுருமாறி
எஞ்சாதந்திரஜாலம் போலவேயதி
விஞ்சையிந்திரஜாலம் செய்யுங்குரூரன்
இருப்பிடந்தனைமெல்லக் குறிப்பிட்டவனைக்கொல்ல
எதுசெய்வோமென்றுகாலேக் கதிரவன்போற்
சோதிசெய்யும்வென்றிவேலைத் திவ்யமலரா
லீசனைநினைந்துபக்தி பூசனைபுரிந்துசுற்றி
யினறுநீயேசென்றுகலக்கி விநோதமுற்றுத்
துன்றுமாயையெல்லாம்விலக்கித் தாரகாசுரன்
இன்னுயிர்துஞ்சிடவாட்டி மன்னுக்ரௌஞ்சமும்வீட்டி

லெக்கத்தொன்பதுபேரையும் பூதரெனுநம்
பக்கத்தோரனைவோரையும் வீட்டிடுவாயென்
றிணங்கிக்குமரன்கூற வணங்கிக்கொண்டதிவ்ர
மேற்றெழுந்ததுவேலும் ப்ரளயகால
மூர்த்திருத்திரன்போலும் சூரனுயிரத்
தெட்டண்டமும்வெடிக்க தட்டுண்டழல்துடிக்க
வெரிமுகஞ்சுரங்கோடி மாயையைநீக்கிக்
கரிமுகனுரங்தேடிக் கனலிடிபோ
லிடித்துத்துளைத்திரத்தங் குடித்துக்கிளைத்துச்சத்தம்
இட்டுக்ரௌஞ்சமும்பிளந்து எழுந்துசக
சிருஷ்டிப்ரபஞ்சமுமளந்து பின்புஸாமியை
யிறைஞ்சிமூவலம்வந்து கரஞ்சென்றினிதுறைந்து
ஜயமெங்குங்காட்டியதே சோபனைக்கொன்று
விசயங்கள்காட்டியதே வீரர் பூதர்கள்
யாவருமெழுந்துமெட்டள்ள மேலியன்புகந்துதுள்ள
யின்பமுற்றன்பர்கள்போற்ற வும்பர்கண்மலர்கள்தூற்ற. (௩௰)

சந்தவிருத்தம்.

தருநிழ லமரர்கண் மறையவர் முனிவர்கள்
தளர்நடை யொடுமிக விடர்மேவித்
தலைமிசை கரமொடு வெருவிட வுதலகு
தலமுறு மதிர்படை தனையேவிக்
கருமுகி லிறைவிடு கிரியை மகிழ்வொடு
கலனென வணிபெரு மையனேலே
ககனமு மறைபட வுலவையு மசைவறச்
சதிர்பய கிரகமு டுவிண்ணேடும்
நடையுநிலைகெட வுகமு மெளிபட
விடபுகு மொருகரு மலைபோலே
யிருணெரு மொடுபல மயலது விளைவுற
விகல்புரி கரிமுக வவுணேசன்
உரமது சொளைபட மரமது பிளவிட
வுகமுடி வினிலெழு கனல்போலே
உரமுகு தொழிலொடு கரமிசை யணுகின
தொருகும ரணிமல னணிவேலே. (௩௧)

தாரகனிறந்ததற்காக அவன்மனைவி சவுரி புலம்புதல்.

விருத்தம்.

அடற்றா ரகனிவ் வாறிறந்தா னவன்முன் விடுத்த பாசுபத
மதனைக் குமரன் றுணைவனிட மன்போ டீந்தா னமரர்பயம்
விடுத்தார் குமரன் மலர்த்தாளை மேவிப் பணிந்தி யாங்கள்பணி
விடைசெய் தேத்துப் படிக்குனருள் விளைத்துத் தேவ கிரிக்கணிசேர்
கடற்றா னைகளோ டெழுந்தருளக் கருணை புரியென் றுரைத்தமொழி
கருத்துக் கமுதாய்க் கொண்டுசென்றே காட்சி கொடுத்தங் கினிதிருந்
முடித்தா ரகன்றன் மனைவிபதி முகத்தாள் கணவன் படுகளத்தின் [தான்
முசிந்து கிளிபோ லொப்பார் மொழிந்தா ளழுதுள் ளொரர்தாளே. (௩௬)

(௩௭) நிபதை இராகம் - எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

(க) என்றுனை யேயயவுரைசா - விண்ணோ
ரெவர்களுக்கும் பெரியனெங்கயே - ஒயோ
மன்கண்ணையாய்வாழ்ந் திருந்தலல்லவோ
மந்த குமாக்குறிப்போ பங்கயே

(உ) என்பிராணநாயகிநீ உன்பிராணநாதனும்யா
னினைபிரியேனெப்போது மென்றாயே - வீணில்
என்பிராணனிங்கிருக்க வுன்பிராணனைமீட்டிக்கொண்
டெமவிடந்தனிலேநீ சென்றாயே

(௩) சிறிய பகையென்பதைப் - பெரிதாயெண்ணுமல்மனம்
செருக்கினர்படுவரென் பதும்பேச்சே - யாக
உறுதியாயனைவர்க்குந் தெரியுஞ்சாக்ஷியாகவே
உன்றன்மட்டினிலது சரியாச்சே.

(௪) பாபசிவனுடைய வரமுங்கவசம்பாசு
பதமும்பெற்றுமகிழ்ச்சி சிறந்தாயே - நீ
தருமவழிசெல்லாம லூரமும்ரதகஜது
ரகமுஞ்சகலமும்போ யிறந்தாயே.

(௫) கார்முகில்வண்ணனுடன் போர்செய்துசக்கரத்தைக்
கழுத்தறுக்குங்கத்தியாய்ப் பூண்டாயே - யதின்
வீரியத்தைக்காட்டாம வீரச்சேலைபோட்டது
வேகழுத்தறுத்தாற்போன் மாண்டாயே.

(௬) முக்கண்ணன்முதற்றிரு மூர்த்திகளாலும்வெல்ல
முடியாதென்றேவிருது மொழிந்தாயே - செய்த
அக்ரமத்தாலழிந்துன் விக்ரமங்களுமிழந்
தவத்தினிலுயிர்கொடுத் தொழிந்தாயே.

(எ) அடாதுசெய்பவர்கள் படாதுபடுவரென்
றடுத்துநான்சொல்லவெடு வெடுத்தாயே - மறைந்தும்
விடாதுகுமரன்கை வேலுன்னுயிர்குடிக்க
விருதாவினிலென்றனைக் கெடுத்தாயே.

(அ) ஆயுள்செல்வமும்பெற்று மாயாபுரிக்கோட்டையை
ஆண்டுநீசிறந்ததுபொய் யாச்சே - கனி
வாயன்குமரன்வைவே லாயதத்திறைவின்று
மாண்டுநீபறந்தது மெய்யாச்சே.

தாரகன் இறந்ததைச் சூரபத்மன் கேட்டுக் குமரனோடு அமருக்கெழ எத்தனிக்கையில் மந்திரிமார்கள் அதற்கு இது சமயமன்றெனத் தடுத்தல்.

விருத்தம்.

சவுரியிந்த விதம்புலம்பித் தழுவில்விழுந் திறந்தாள்
தந்தைதாய் தமக்குமகன றழற்கடனை முடிக்க
விவரமெலாந் தூதர்முன்போய்ச் சொலவறிந்து சூரன்
மிகக்கலங்கி யசுரேசன் றனைக்கையாற் றழுவி
மவுலிபுனை தாரகனை நினைத்திரங்கும் போது
மந்திரிகளாற் றேற்றவன் றெளிந்துசினங் கொண்டே
சின்மகனை யுயிர்குடிப்பே னென்றெழுந்தா னவனைத்
தேற்றுதல்செய் தமைச்சர்கள்பின் னுற்றுதல்செய் வாரே. (கஎ)

கசு) கீர்த்தனம். இராகம் - சகானு - ஆதிதாளம்.

பல்லவி.

தீர்க்காலோசனை வேணும் - ராஜனேயுன்றன்
சினத்தைவிட்டிடுங்காணும்.

அனுபல்லவி.

ஏர்க்கும்புவியாயிரத் - தெட்டண்டங்களுங்கட்டி
யிசைமிகுந்திடுஞ்சூரா - விஜயரெணகம்பீரா. (தீர்)

சரணங்கள்.

(க) இறந்ததம்பியையெண்ணி - வருந்தியழுதுமனம்
இப்படிநோகலாமோ - எல்லாம்
அறிந்துமெதிரிபலந் தெரிந்தாண்மைசெய்யாமற்கத்
தறிமோழையாகலாமோ - சும்மா

உறங்குமாயக்காரனை - விரைந்தெழுப் பினுற்போலே
ஒடுக்கமன்றி நீசெல்லத் - துடிக்கிறு யொருக்காலே
மறஞ்சேர் புரத்தைவென்றேன் - மைந்தன் பகையினாலே
மதுவிந்துகலகம்போல் - வளர்ந்திடாமன் மென்மேலே (தீர்)

(உ) சிறுபடையான்செல்விடத் திருந்தாலுறுபடையான்
செருக்கழிந்துவிடாதோ - அந்தக்
குறிதெறியாமற்பித்த வெறிகொண்டவன்போல்வீணிற்
குதிக்கிறுயென்னதீதோ - நேரில்
உறுமிப்பேசுவதெங்க ளொருவருக்கு மொவ்வாது
ஊர்க்குமுந்திநீ தானே - போர்க்கேக வுங்கூடாது
பறந்தவன்பயனிழந் திடுவானது தப்பாது
பதறாமலிருந்தல்லோ படுக்கவேணு மிப்போது (தீர்)

(௩) சொன்மனவலிமையுந தன்மனவலிமையுமாற்றான்
துணைவலிமையும் ஆய்ந்து - அதன்
பின்னேநமதுபடை துன்னிமறிக்கூட்டத்திற்
பெருவேங்கையெனப் பாய்ந்து - நன்று
யுன்னியவனிருக்கை தன்னைவளைந்து நோக்கி
ஒறுத்துப்படைகளைவிட் - டறுத்துநின்று தூளாக்கி
மின்னுநமதுபேர்க்குக் குன்னமுறு மற்றாக்கி
வெற்றிகொண்டிரும்பஞ் சத்திகொண்டுசோ தாக்கி (தீர்)

சூரன் சேனன் முதலியஐந்து அசுரர்களை ஏவிக் குமரன் பலத்தை அறிந்துவரச்சொல்லல்; ஷண்முகநாதன் அனேகஸ்தலங்களை தரிசித்து தென்மதுரை நகர்க்குவந்து மீனாக்ஷிசுந்தரேசுவரரை தரிசித்துப் போற்றுதல்.

விருத்தம்.

அமைச்சருரை யாற்றெளிந்து சேன னாதி
 யைவர்களைக் குகன்வளமை யறியப் போக்கிக்
கமுக்கமுட னேயவுண னிருந்தா னப்பாற்
 கந்தனும்பின் றெய்வகிரி கடந்து சென்றங்
குமைக்கதிபன் றலங்களெலாம் போற்றிச் செய்னூ
 ஹூரிலா லயமமைத்தங் கரனைப் போற்றித்
தமைப்பகைத்தோர் களைக்கணத்திற் கணத்திற்சர்வ
 சங்காரஞ் செய்படைபெற் றிருந்தான் றனே. (கஅ).

பின்னும் விருத்தம்.

காங்கய னந்தத் தலத்தினி லிருப்பக்
காழியிற் காரிபா லங்காட்
கனகநாட் டாச னளித்ததன் மனைவி
கலனையக் கடவுளர் கொடுக்க
நீங்குதற் கரிய மயக்கமுற் றழன்று
நேரிழை பிரிவையாற் றாம
னிலையிலாக் காமக் கடலினிற் குளித்தா
னீள்கதி ரவன்குணக் குதித்தீன்
றோங்கபழ் சடப்பன் சேய்ஞலூர் நீங்கித்
தேவர்கோ னியாவருஞ் சூழத்
திருவிடை மருதூர் முதலிய தலங்க
டெரிசனஞ் செய்துபின் றென்பால்
பூங்கடம் படவி தன்னில்வந் தெய்திப்
பொற்கப லத்தீர்த்தம் படிந்து
பூவையங் கயற்கண் பங்கினி லமர்ந்த
புனிதனைப் போற்றிசெய் தனனே (௧௬)

(௧௭) கீர்த்தனம் இராகம் - தறுசா---ஆதிதாளம்.

பல்லவி.

[illegible]
[illegible]—

அநுபல்லவி.

[illegible]
[illegible]

சரணம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]—க

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ.

பிறகு கந்தன் அம்மதுரைக் கருகிலிருந்த பாலை நிலத்தைத் திருப்பரங்கிரித் தலமாக்கி, பராசரரிஷி புதல்வரோடும் இந்திரன் முதலிய ஸமஸ்த தேவர்களுடனும் செந்தின்மாநகர் சேர்தல்.

விருத்தம்.

பாதலமே ழுடுருவி முளைத்த மூலப்
　　பசுபதியை யிவ்வாறு துதித்துக் கந்த
நாதனந்த வழியிலுறு பாலை தன்னை
　　நலம்திகழ்தண் பரங்கிரியா யமைத்து மப்பால்
யாதவன்ப ராசரன்றன் சேயர் வந்து
　　வணங்கவருள் புரிந்தவரோ டெழுந்து பாக
சாதனன்மா லயனொடுதென் கடல்வாய் தன்னைச்
　　சார்ந்திட்டான் செந்திநகர் சேர்ந்திட் டானே. (௬௭)

(௩௮) **கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.**

பல்லவி.

கந்தன்செந்தூரில் வந்தானே - தேவர்கள்செய்வி
ருந்துங்கொண்டங் கமர்ந்தானே

அநுபல்லவி.

வந்தனையன்பர்கள் பயந்தனைத்தீர்க்கவும்
சிந்தனையன்றிய சிஷ் டந்தந்துகாக்கவும். (கந்தன்)

சரணங்கள்.

(க) சந்திரகாந்தச் சிலையிற்பொன் னிழைத்து - ரத்னம்பதித்த
சாதகும்பஜோதியெங்குந் தழைத்து - ப்ரபலமாக
நின்றிறமையெல்லாங்காட்டி யுழைத்து - திவ்யவிமானம்
நிர்மிதஞ்செய்திடுவாயென் றழைத்து - இந்திரன்சொல்லஉ

மந்தாவிசுவகன்ம னந்தனை — மதித்து
விந்தைபெறுந்தன்சிற்பி மந்திரத்தால் — விதித்து
இந்துமண்டலத்தைப்பொருந்தச்செய்து — துதித்து
வந்தவனும்வணங்கச சிந்தையி — லன்புதித்து (கந்தன்)

(உ) பக்கம்லக்ஷவீரர் புடை — யடுக்க - அருகேவீர
பாகுத்தேவனுங்கை லாகு — கொடுக்க - வேதகோஷங்கள்
தக்கவேதியர் புகழ்ச்சி — தொடுக்க - பேரிமேளங்கள்
சத்தமேகத்தின் றொனியை — யொடுக்க - நாகவீரனே
டுக்ரதண்டன்சிங்கன முற்கண்ணனுடன் — கூட
மிக்கண்டவாபாணன் விக்ரமநந்தி — யாட
சக்கைவேத்திரங்கொண்டு றுக்கிக்கட்டியம் — போட
வெக்களிப்புடனேபூ தக்கணங்கள்கொண — டாட (கந்தன்)

(௩) சித்தர்வித்யாதரர்வீணை — படிக்க - அபிநயங்காட்டித்
தேவரம்பையர்கணட — நடிக்க - மிகக்கலங்கி
பத்தவுணருளம்பறை — யடிக்க - அவர்கள்மேவு
மங்கையர்க்குவலப்பயந் — துடிக்க - ஸமுத்ரராஜன்
தத்துமலைகரத்தான் முத்துமணி — யிறைக்க
சித்தமகிழ்ந்துதிறை வைத்ததுபோ — னிறைக்க
சுற்றுங்கேதனங்கள் தொகுத்துவெளி — மறைக்க
முத்தர்கள்வணங்கிமே மொய்த்துப்பல்லாண் — டுரைக்க (கந்தன்)

விருத்தம்

கஞ்சமலர்ச் சரவணத்து ளுதித்த நாதன்
கமலன்மணி வண்ணன்முத லமரர் சூழ
மஞ்சினனுஞ் சூழிந்திரவி மான மீது
மகிழ்ச்சியொடு திருக்கொலுவுற் றருட்கணோக்கி
நஞ்சவுணர் செய்கையினை விடுக்க லுற்று
நைந்தவிண்ணோர்க் கிந்திரனை யினியெந் நாளு
மஞ்சலெனப் பணித்தபய வரப்ர சாத
மருளினா னருமறைமெய்ப் பொருளி னானே

சம்பவகாண்ட முற்றுப்பெற்றது

கீர்த்தனங்கள் ௩௮
விருத்தங்கள் ௪௯

அசுரகாண்டம்.

பிரகஸ்பதிபகவான் ஷண்முகநாதனுக்கு சூரபத்மன் முதலிய அசுரர்களின் வரலாற்றைக்கூறல்.

விருத்தம்.

அலைகடல்வாய்ச் செந்தினக ரமர்ந்த செவ்வே
ளமரநா யகனையழைத் தசுர ரென்னும்
பலர்களிந்த வுலகமதிற் பிறந்த வாறும்
படைத்தபல முங்குலமும் பகர்வா யென்னக்
குலிசனடி வணங்கியந்த வரலா றெங்கள்
குலகுருவைக் கேட்கவெனக் குருவுஞ் சேனைத்
தலைவனருள் திருமொழியைச் சென்னி மீதிற்
றரிக்கின்றா னதின்விவரம் விரிக்கின் றானே. (க)

சுரஸை என்னும் மங்கை சுக்கிரபகவானிடத்தில் இந்திரஜாலங் களைக்கற்றுக்கொண்டு தன்மாயாசக்தியால் அதிசுந்தர வடிவை எய்தி காசிபரிஷி ஆச்சிரமத்திற் செல்லல்.

விருத்தம்.

பொருவில்ஷடாக்ஷரத்தினின்மெய்ப் பொருளே கேண்மின்
பொறைமிகுகா சிபன்பயந்த வவுண வேந்தன்
றெரிவைமங் களகேசி யிடத்தி னின்று
செனித்தெழுந்த சுரஸையெனும் பெண்ணை நோக்கிப்
பரிவுடன்சுக் கிரபகவா னிந்திர ஜாலப்
பான்மையெலா முபதேசஞ் செய்ய நன்றாய்க்
கருதியப்பர் குடிக்கொருநச் சுக்கோ லாகக்
கருக்கொண்டாள் மாயையென வுருக்கொண்டாளே. (உ)

(க) **கீர்த்தனம். இராகம் - எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.**

பல்லவி

சுரஸைமாயையுருக்கொண்டு
தூரிதமாய்வந்தாள்

அநுபல்லவி.

காமிசைமகரயா ழெழுமிசை மீட்டி
கயலனையவிழியி லஞ்சனந் தீட்டி
சரஸசுபலலித அபிநயங் காட்டி
தருபதிவிரதையோ ரனைவிமுகங் கோட்டி (சுரஸை)

சரணங்கள்.

(க)· பைங்களபம்பனிநீர் கலந்து — பூசியே - யெழிற்
பஞ்சவர்னவஞ்சுகம்போற் கொஞ்சிப் — பேசியே - மணிக்
கங்கணந்தோளணியிட்ட செங்கை — வீசியே - புவிக்
காமுகர்மயங்கமுகங் கவிழ்ந்து — கூசியே - செழும்
பங்கஜமுகவிர தியுமுப — சரித்து
பரவிவணங்கும்படி திருவுருத் — தரித்து
எங்கினுந்தனக்கிணை யிலையெனச் — சிரித்து
இருடியோகியர்மன தையுமப — கரித்து (சுரலை)

(உ) தீயதக்கன்வேள்வியின்முன் வாய் — மதத்தாலே - நிந்
தித்தபாவமுருக்கொண்டுதித்தது — போலே - நல்ல
வாய்மைநந்திபிட்டசாப மன்கண் — மையாலே - அஷ்ட
பத்துச்சனியாகவந்து தொட்டு — விண்மேலே - வளர்
தூயவமரர்களைத் துன்பஞ்செய் — தலைக்க
குறையிற்பட்டபஞ்சப் போரெனக் — குலைக்க
வேயமராபதிபட் டினம்புடி — கலைக்க
விதியையொரந்தனைவரு மதிமயங்கி — மலைக்க (சுரலை)

(ந) மாசசுரகுலங்களை வர்த்தனை — பண்ணி - பூவில்
வாழ்விக்கவேணுமென்றுன்னி மைக்கருங்கண்ணி - தானுங்
காசிபனாசிரமந்தன்னைக் காணவென் — றெண்ணி - யந்த
கானத்தின்வழிசென்றவன் றானத்தை — நண்ணி - திவ்ய
வாசமலர்மிகுமுத் யானத்தை — மதித்து
வானுலவுமுபரி மாளிகை — விதித்து
தேசுறுங்கனகவி மானமும் — பதித்து
திருமுனியைமயக்கி மருவவென் — புதித்து (சுரலை)

காசிபராசிரமத்தை யடைந்தமாயை முனிமனதைக் கலைக்க எண்ணி விஞ்ஞகாணம் செய்தது.

விருத்தம்.

காசிபனா சிரமததில்வந்த மாயை தானுங்
கபடத்தான் முனிமனதைக் கலைக்க வேண்டித்
தேசுறுந்தன் வடிவாலவ் வனங்க ளெல்லாந்
திகழ்சோதி மயமாகத் தோன்றச் செய்து
வாசமலர்க் கொடியாடக் கழைவில் லேந்தி
மணிமகரக் கொடியாட மதனன் றானும்
வீசுதென் றற்றேரில்விளை யாட வீணை
மீட்டினள் கனகயம் பாராட்டி னளே. (ங)

(உ) அடிமடக்கு கீர்த்தனை இராகம் - தனாசி—ஆதிதாளம்.

(க) மயல்மீறுதென்செய்குவேன் - உர
மதிவிகலொடுசிலைமதன்விடுசரமதிறல் - அதி மயல்

(உ) வனமே - நானெவ - னமே - என்றன்
மனதிசைபுருஷரத் தினமொன்றுகாண்கிலனே - பூ - வனமே

(ங) அனமே - நீம்பா - லனமே - கசந்
தருவருத்தெனுளம் - பரதவிக்குதய்யோவெழி - லனமே

(ச) மயிலே - நாணிள - மயிலே - நிறை
மதிசொரிகொடுதழல் - விகிக்கமுடியவில்லையே - மா - மயிலே

காசிபர் தவங்கலைந்து மாயையைக்கணுற்று மயங்கி
அவளழகை வியத்தல்.

விருத்தம்

சுரமையின்கா சிபன்றபோ வனத்தி னின்று
தூண்டிலிட்டுப் பருவரா லிழுப்பார் போல
சரஸஸங் கீதவிசை படிக்கு மோசை
தவமுனிதன் செவித்துளைக்கா லோடி நெஞ்சம்
பரிதிநவ நீதமென வுருக்கிக் கண்ணுற்
பார்த்தவுடன் றவவிரத மிழந்து காமத்
திரைகடலின் மூழ்கியவ ளெழிலைக் கண்டு
தியங்கிஞ னறிவுழன்று மயங்கினனே. (ச)

(ங) கீர்த்தனை இராகம் - காபி—ஆதிதாளம்.

(க) மலர்மங்கையோபூ - வனமங்கையோயவ்
வனமங்கை யிவ ளாரோ - மா
நிலமங்கையோவா - னிலமங்கையோவிந்த
நேரிழைக்கென்ன பேரோ.

(உ) கொண்டைச்சொருக்கழகைக் கண்டுபயஞ்செனித்துக்
கொண்டல்கணீர் சொரியுதே - முகத்தை
முண்டகங்கண்டுபங்க முற்று மிகுபயத்தின்
மூழ்கித்தவம் புரியுதே

(ங) மாரன்மதிக்குடையைக் கீறிநுதலெனவ
மைத்ததென்ன வண்மையோ - முனை
வீரவாளையும்வடி வேலையுங்கண்ணிணையாய்
விதிசெய்தவன் கண்மையோ.

(௪) பனியார்குமிழ்நாசியின் - முனையால் வருங்காற்றுச்சென்
பகவாசமது வீசுதே - செங்
கனியாரதரவூறற் கிணையோவமுதந்தானுங்
கடைபட்டதென்று கூசுதே.

(௫) மங்கைமொழியைக்கேட்டுப் பைங்கிளியுங்குயிலு
மயங்கிப்பஞ்சரஞ் சென்றதே - இவள்
செங்கனிவாயினி னகையே பகல்கொண்டந்தத்
திரிபுரந்தனை வென்றதே.

(௬) பூட்டுமதனனம்பு தீட்டுஞ்சாணை நிகர்க்க
போலஞ்சுதரி சனமே - ஊச
லாட்டுஞ்செவியிற்றோடு பூட்டுமணிகண்டுசே
லாடுதையோ மனமே.

(௭) சங்கமிவள்கழுத்தி னங்கங்கண்டுவெளிறித்
தடங்கடல் சேர்ந் திட்டதே - இளஞ்
செங்கரும்புமிவள்பு யங்களைவெல்லமாரன்
செங்கை வில்லாகி விட்டதே.

(௮) பாணியைக்கண்டுமக - நாணிமகரயாழும்
பட்டுறை யுறைந் திட்டதே - இந்த
மாணிழையிருகுப்பத் தனத்தைக்கண்டஞ்சிச் சக்ர
வாகம்வின் மறைந் திட்டதே.

(௯) மட்டார்முலையிணையூ டுற்றகருப்பைரோம
வரிசையென்பது பொய்யே - பொல்லாத்
துட்டமதனன்வில்லி விட்டநாணத்தறித்துத்
தொடுத்திருப்பது மெய்யே

(௰) உந்தியின்சுழியென்ற வனந்தபுலன்களைய
முருக்கியப கரித்ததே - ஆறை
லெந்தவிதழுமன்பு பைந்தொடிக்கிருக்குமென்
றெண்ணியுயிர் தரித்ததே

(௰௧) மழைக்கண் கொடிமின் னலைப் பழிக்குமிடையில்விலை
மதிக்கவொண்ணுதம் பரமே - செம்பொ
னிழைத்தமணிமேகலை யிறுக்கியவெழிலென்கண்
ணிணைக்குற்றசுப கரமே

(௰௨) கனைமாரனரண்மனை - மணிமுகப்பினிலுற்ற
கம்பமோதொடை யெண்டுமே - உய
ரணிசேர்மானதவாவி தனிலனம்பாலினை
யருந்துமோவடை கண்டுமே

(௧௩) மடலார்கூந்தலுஞ்செப்பொன் - பணிமுதலானமுத்து
வடஞ்சேர்பயோ தரமுமே - தாங்கா
இடையொடிந்துவிழுமென் றடியினின்றுமுறையிட்
டிறைஞ்சுதே நூபுரமுமே

(௧௪) திருமகண்முதலான அரிவையரை யிவளாய்த்
திரட்டியே வகுத்தானோ - பிரமன்
மருவிநான்செய்ததவப் பெருமையையறிந்துமைம
மாறெனப் பகுத்தானோ

காசிபருக்கும் மாயைக்கும் நடந்த சம்பாஷணை.

விருத்தம்

இந்தவிதமாய்முனிவன் மயங்கிப் பாம்புக
கிலக்காக வெதிருறுமண் டுகம்போலோடி
வந்துநின்று மயங்கியடி மாமேதேனே
மடமயிலே நீயாரென் றுரைக்கக் கேட்டு
விந்தைபெறு மாயைசிறு நகைசெய் தட்டின்
மேவிவந்த முயலினித்தப் பாதென் றெண்ணி
யுந்தவித்துத் தவம்புரிய முனிக்கீ தென்ன
அடைவென்று ளன்னமதி னடையென் றாளே

(௪) திபிதை. இராகம் - காகரப்ரியா / நவரோஸ் — சாப்புதாளம்

(௧) தனித்து நானிருக்கின்ற வனத்தினி னீரென்ன
தயிரியமாகவந்தீர் முனிவோனே - செய்ய
வனப்பினிலுயர்ந்தவெள வனப்பெண்ணே யுனைக்கண்டு
மயல்கொண்டுவந்தேனடி மடமானே

(௨) மெய்த்தவம்புரிவதற் குற்றசெய்கையோமட
மின்னாரைமுயங்குதல் முனிவோனே - லோபா
முத்திரையுடனேய கத்தியமுனிகூடி
முயங்குவதறியாயோ மடமானே

(௩) தக்கபரிசரியத் தூக்கவலையக்கினி
சாக்ஷியாய்மாலையிட்டார் முனிவோனே - நானு
னிக்கணமந்தபடிக் குமணமும்புரிந்
தேற்றுக்கொள்கிறேனடி மடமானே.

(ச) தவசிக்குப்பணிசெய்ய - அவசியமெனக்கென்ன
தலைவிதியோசொல்லு முனிவோனே - இன்ப
நவரஸமேயுனக் கவசியம்பணிவிடை
நானேசெய்கிறேனடி மடமானே

(ரு) ஒப்பில்லர் நீரெனக் - குப்பணிவிடைசெய்தா
லுலகத்துக்கடுக்குமோ முனிவோனே - நல்ல
இப்பியமென்று நா - னெப்பினபிறகுநிந்
திப்பவராரடி மடமானே.

(சு) அகோர தவசிவிப ரீதநிபுணனென்ப
தறிந்துகொண்டேன்காணு முனிவோனே - மயல்
விகாரங்கொண்டவெனக் காதாரமில்லாமல்வி
ரோதஞ்செய்யலாகுமோமடமானே

(எ) ஆழ்ந்துநானுமைக்கூடிச - சேர்ந்திருமெனக்
காவதுண்டோசொல்லு முனிவோனே - மிக
வாய்ந்தபுதல்வர்களுந் - தோய்ந்ததிதிசகல
வரமுந்தருவேனடி மடமானே

(அ) ஆத்திரத்துக்குத்தக்க - வார்த்தைசொல்லுவதுங்கட்
கடைவானதொழிலல்லோ முனிவோனே - நா
னேத்திடும்யோகத்தி - யானத்தினிலுறுதி
யிட்டுச்சொல்கிறேனடி மடமானே

பிறகு காசிபர் மாயையுடன்சேர அவ்விருவரிடம் சூரபத்மன்
முதலிய அசுரர்கள் உதித்தல.

விருத்தம்

மாதவத்தோ னீதுரைக்கப் புலவி யாகி
மாயைவட மேருவுக்கு வடபாற் சென்று
சீதாதிக் கங்கையரு கிருக்கும் போது
சிவயோகி தொடர்ந்தழல்வாய் மெழுகாய் நொந்து
காதலொடு புலம்புதல்கண் டவளும் வந்து
கனிவாய்முத் தமுங்கொடுத்துக் காம வாரி
மீதிலிரு வரும்புணைபோன் மிதந்து போக
மிகுந்திட்டார் கலவியினி லுகந்திட் டாரே. (சு)

(௬) தீபதை இராகம் - முகாரி—ஆதிதாளம்

(க) மாயையுங் காசிபனும் - நேயமுடனேபெரு
மலையெனவேயுருவ மெடுத்தாரே - கதிர்
தோயும்பொன் மண்டபத்தி - லேயமர்ந்தினிதொடுஞ்
சுரதலீலைகள்செய்யத் தொடுத்தாரே.

(உ) பூரவிமறைந்தமுதற் சாமத்திலிந்தவித
மணைபிரியாமற்புணர்ந் திடும்போது - அந்தச
அசுரசைமாயையிடத்திற் கருமலையை நிகராய்ச்
சூரன்வந்துதித்திட்டான் புவிமீது

(ங) ஆர்வமுடனிருவர் - யோர்வையிலிருந்துமுன்
றயுதவெள்ளமசுரர் குதித்தாரே - யிந்தப்
பாரிலுள்ளோருமவிண் - ணூரிலுள்ளோர்களும்
பதைபதைத்துமனங் கொதித்தாரே.

(ச) ஏமந்தனிலிரண்டாஞ் சாமத்தினிற்சிங்கம்போ
லிருவருஞ்சேர்ந்துகளி கூரவே - சற்றுந்
தாமதமின்றிச்சிங்க - மாமுகச்சூரன்றனுந்
தாரணிதனில்வந்து சேரவே

(ரு) ஆயிரஞ்சிரமிரண் டாயிரங்கரமுள்ள
அரிமுகன்றனைப்பெற்ற தகையாலே - தேக
மேயவேர்வையினுற்பத் தாயிரவெள்ளஞ்சிங்க
மெனவந்துதித்தாரிந்தப் படிமேலே

(௬) தானத்தைவிட்டுமூன்றாஞ் சாமத்தோர் மண்டபத்திற்
றந்திமுகமாயிரு வருங்கூடப் - பரு
யானைத்தலையுங்கொம்பு - நாலுடனேதாரக
னவதரித்தானமரர் பயந்தோட.

(எ) சிந்துமுகத்துடன்புணர்ந்தவேர்விலசுரர்
செனித்தவெள்ள நாற்பதாயிரந்தானே - பூவில்
வந்துதித்திடத்திசை யுந்திடுக்கிடசேடன்
மலைத்தலைந்தாணுயிரஞ் சிரந்தானே

(அ) இருந்தமண்டபத்தைவிட் டிரணியமண்டபத்தி
லஜசந்தஜமுகத்துடன் புல்லவே!-அப்போ
திருந்து நாலாஞ்சாமத்திற் பிறந்தாளஜமுகியுஞ்
சிவவதைகள்செய்து கொல்லவே,

(௩) உபரியாயந்தவேர்வி லசுரராஜமுகத்தோ
டுதித்தனர்மூன்றயுத வெள்ளமே - அந்த
விபரீதரூபத்தைக்கண் - டுயிர்மேலாசையில்லாமல்
விட்டொழிந்தார்முனிவ ருள்ளமே

(௪) அருணோதயத்திற்பரி - யரிகரடிமுதல்
அனேகவுருவெடுத்தங் குறைந்தாரே - செறிந்
திருணிறத்தொடுங்கடல் திரண்டாற்போலவேசூர்மு
விருபதாயிரம்வெள்ள நிறைந்தாரே

விருத்தம்.

அருக்கனும்வந் துதிக்குமுன மிந்த மாறங்
கசுரரிரண் டிலக்கவெள்ள முதித்தெல் லோரும்
பெருக்கமிகு சூரனைச்சூழ்ந் திருக்கும் போது
பெற்றவளுந் தன்னுருவங் கொண்டு சேயர்க்
குரைத்தபடி காசிபனைப் பணிந்து நின்று
ருயர்தவத்தோன் புதல்வர்களை நோக்கி நீங்கள்
கருத்துவந்து சிவனையுன்னித் தவம்புரிந்தாற்
கனங்கொள்வீர் நமதுசொல்லை மனங்கொள் வீரே. (௭)

(௮) **கீர்த்தனம். இராகம் - கானடா—ஆதிதாளம்.**

பல்லவி

மைந்தர்களே கேளும்
மதியோடென் றுரைப

அனுபல்லவி.

[illegible]ந்தவித்திடுமென்ற - னருளாலுலகின்மெத்த
வுந்தவஞ்செய்துபுகழ் - விளங்கும்படி நான்பெற்ற. (மைந்தர்)

சரணம்.

(௧) பரமசிவனைநோக்கித் தவமியற்றிட வேணும்
பரிவாயைம்புலன்களும் ஒருமையுற்றிட வேணும்
தரணிமாயையெனும்வா தனையகற்றிட வேணும்
சதமாய்விளங்குமேலாம் பதவிபெற்றிட வேணும், (மைந்தர்)

காசிபமுனிவர் சூரபத்மன் முதலியோர்க்கு மார்க்கண்டரது சரித்திரத்தைக் கூறல்.

விருத்தம்.

தக்கமைந்தர் முகநோக்கிக் காசிபமா முனிநீங்கள் தடத்த மாகப்
பொக்கமின்றிச் சிவனடியி லுளஞ்செலுத்தி யுவந்துதவம் புரிந்தால் மோக்ஷங்
கைக்கனிபோ லுறுமெனக்குச் சகன்மரபின் மார்க்கண்டன் கதையை நன்று
யிக்குரஸ மெனவிரித்துச் சாற்றுவான் செவிக்கினிதா யேற்று வானே. (அ)

மார்க்கண்டேயரது முன்னோர்களின் வரலாறு.

குச்சகமுனிவரின் புதல்வரான கவுச்சிகர் அருந்தவம்புரிந்து மிருகண்டேயனெனும் பேர்பெற்று தவவொழுக்கத்திலேயே நிற்க விரும்பல்.

(எ) தீபதை. இராகம் - சௌராஷ்ட்ரம்—ஆதிதாளம்.

(க) கடிமலர்ப்பொழில்சூழும் - வளமிகுந்த
கடகநகரில் வாழும் - செழும்
சடைமவுலியிற்கங்கை தரித்தருளிறையவன்
தனக்கன்புநிறைந்த குச்சகனென்றோர்மறையவன்

(உ) இயற்றுந்தவத்திற்பிறந்தோன் - கவுச்சிக
னெனத்திருநாமஞ்சிறந்தோன் - தன்
வயிற்றின்பசிக்குணவும் உறக்கந்தனையுநீக்கி
மனக்கண்ணலரன்றன்சொ ரூபத்தைக்கருதிநோக்கி

(ங) அருந்தவம்புரிதல் கண்டு - திருமண
வாளனங்குவகைகொண்டு - தவந்
திருந்துதாபதருக்கு ளுயர்ந்தவனீயேயென்று
சேயுன்பேர்மிருககண் டேயனெனநவின்று

(ச) சிவபரனருள் படைத்து - தனக்கிஷ்ட
சித்திப்பலனுங்கிடைத்து - செய்யுந்
தவநிலைமையலித்துத் தழைக்கவரமளித்து
சாமளவண்ணன்செல்ல மாமுனிவன்களித்து

(ரு) தந்தைசமுக நாடி - யங்குநடந்த
சரிதையையுரையாடி - நின்ற
மைந்தன்றனைத்துதித்து மார்போடணைத்துப்புல்லி
மாசின்மறைதரு ஞானிவசனஞ்சொல்லி

(சு) இனியென் மொழியையுணர்ந்து - இல்லறத்
தியல்புற மணம்புணர்ந்து - நமக்குற்ற
இனியவறுதொழிலை இயற்றிவருவாயென்று
இயம்பக்கவுச்சிகனு மயங்கிமனங்கவன்று

(எ) தவமகிமையைக் கெடுத்து - படுபா
தலநரகத்தில் விடுத்து - சுகம்போற்
கவைகொடுத்துத்தலைவெட் டிடும்பெண்கள் முகம்பாரேன்
கறைக்கண்டனருளன்றி மறுத்தொன்றையு நான்கோரேன்

(அ) என்றுமைந்தனுங் கூறி - பணிந்திட
வெழுந்துதந்தையுஞ்சீறி - அருள்
துன்றுந்தவத்தினுக்கில் லறமேநலமென்றானே
தொட்டென்மேலாணையிட்டேன் தட்டாதேநீயென்றானே

கவுச்சிகர் இல்லறத்திற்குரிய பெண்ணின் இலக்ஷணம் கூறல்.

விருத்தம்.

சந்தமறை யந்தணன்மு னிந்திவை மொழிந்திடத்
தனயனெதி ரடிவணங்கித்
[illegible]தாய் குருமொழி தனைத்தடுப் பவர்சுருதி
சாற்றுமனு நீதிஞான
சாத்திர புராணபல நூலினைப் பொய்யெனவ
சங்கத மிசைக்குமூடர்
தாழ்விலா நரகத்து மூழ்குவர்க ளாதலாற்
றமியனு மென்றுபகர்வேன்
வெந்தழ லெனக்கடு கடுத்துமண வாளனை
வெகுண்டுபோ ராடல் புரிவோர்
வீட்டத னியற்கையை யிகழ்ச்சியா யயலிடம்
விளம்பிவசை யுறவிசைப்போர்
விருந்தினைக் கண்டுதலை வலியெனக் கணினீர்
விடுத்தழுது பரதவிப்போர்
விரிதலையர் செம்பட்டை மயிரினர்கள் கொட்டாவி
விட்டுவிர லினைநெறிப்போர்
சுந்தர மிருந்தவ னெனப்பிறர்கள் கொழுநனைத்
துதிபுரிந் துரையாடுவோர்
துணைவிழி மருட்டியே கணிகைய ரெனத்தலை
[illegible]கொடு மினுக்குமிந்தத்

துர்க்குண ம இல்லாத நற்குணங் களையுடைய
தோகையரி லொன்றுநேர்ந்தால்
சுபமங்க லம்புனோர் துலகியலில் வாழ்வது
சுதந்திரமெனப் புகலவே
அந்தநிமி டந்தனி லுவந்துகுச் சகமுனிவ
னாய்ந்து சோழநாட்டி
லண்டம தளாவிவளர் தண்டலை சிறந்தரு
ளாரமய மெனும்வனத்தி
லசத்தியமி லாமனவு சத்தியமு னிக்கொருபெ
ணங்கிருப் பதுதெரிந்தவ்
வாச்சிரம மதுதேடி வாச்சுதென மிகநாடி
யதிவிரைவி லணுகினனரோ. (௯)

குச்சகா அராமயவனஞ்சென்று உச்சத்தியமுனிவரின் பெண்ணைக் கேட்டலும் அங்கு நடந்த விருத்தாந்தமும்.

(அ) நீபதை. இராகம் - சுருட்டி—ஆதிதாளம்.

(௧) திருமுனிவன் வரவு தெரிந்து - உசத்
தியமுனிவனும் பரவசமுட னுளம்பரிந்து
மருவுமணி யாசனத்திருத்திக் - கனி
வகையறுசுவைமுல்லை முகையமுதுடனருத்தி

(௨) இங்கெழுந்தருளின தென்ன - வென்று
இயமபிடலு மருமைப் புதல்வியெனு மெவ்வன்ன
மங்கையரசி தனையெமது - தவ
மைந்தன்றனக்குரிய மணம்புரிந்திடவுமது

(௩) சிந்தையென்னெனமென்ள நயந்து - சொல்லச்
சிரமசைத் துசத்தியன்பரிவுடன் மிகவியந்து
இந்துசேகரன்றனைப் போலே - வந்திங்
கெனையொருபொருளென வினவினீரன்பாலே

(௪) இசைத்தமொழியைச் செவியோர்ந்தேன் - என்மு
வேழுகுலமுங் கடைத்தேறியே களிகூர்ந்தேன்
உசத்தியனெனும் பெயர்மாறி - தனக்
குமதுசம்பந்தம் பெற்றுமெமக்கு முண்டோதாழ்ச்சி

(௫) எனவுசத்தியனுப சரித்து - மண
மியற்றுவதற்குகந்த முகூர்த்தமதனைவரித்து
புனிதவம்முனியொடு வனத்தில் - இன்பம்
பொருந்தியே விருந்துண்டங் கிருந்திடு மொருதினத்தில்

(௬) தாயுரைகொண்டுவகை கூடி - பணி
தரித்துத்தோழியருடன் விருத்தையுமனநாடி
தூயமலர்த்தட நீராடி - வண்டு
சுழலுமலர்பறித்துச் சுரிகுழன்மிசைசூடி

(௭) மனைக்குத்திரும்பிவரும் போது - நடு
வழியிற்கொடியடர்ந்து படர்கடுவனமீது
கனத்தமலைகளைத் தூளாடி - மத
கரியொன்றெதிர் துரத்த அரிவையும் பயந்தோடி

(௮) ஆவியுடல் மேலாசை மறந்தாள் - அங்
காழ்ந்தபடுகிணற்றில் வீழ்ந்தவளுயிரிறந்தாள்
பாவையரழுதகன் றனரே - ஓடிப்
பரந்துமங்கலையிடஞ் சென்றிதை நவின்றனரே

விருத்தையின் உயிரை மீட்க குச்சகா யமனை நோக்கித்
தவஞ்செய்தலும் பின் நடந்த விருத்தாந்தமும்.

விருத்தம்.

விருத்தையின்செய் கையைக்கேட்டுத் தந்தை தாயும்
விதனமுற்றங் கோடிவந்து துரவில் வீழ்ந்து
மரித்தபெண்ணை யெடுத்தலறிப் புலம்பும் போதில்
மாமுனிகுச் சகனமர்த்தித் தைலமீதி
லிருத்திடச்செய் தெயராஜன் றன்னை நோக்கி
யினித்தவஞ்செய் திவளுயிரைத் தருவே னென்ன
வருத்தமுற்றுத் தவஞ்செயுங்குச் சகனை யந்த
மதகரிதோண் மிசையெடுத்திட் டகன்ற தன்றே. (௰)

பின்னும் விருத்தம்.

மத்தகஜந் தோள்மிசை யெடுத்துச் சென்றே
வனங்களொடு மலைகளெலாஞ் சுலாவெற்றிக்
கைத்தலத்தா லடித்தடித்து நொறுக்கித் தூளாய்க்
காற்றிலெழச் சிதறியெழு முகிலைக் கோட்டாற்
குத்தியெறிந் துலவுமதி சயத்தை யந்தக்
குச்சகமா முனிவன்முனி வணங்கி நோக்கிப்
பத்திமிகு ஞானதிருஷ்டி யதனு லுள்ளம்
பரிந்திட்டா னதின்விவரந் தெரிந்திட் டானே. (௧௧)

யானை வடிவமடைந்த தருமதத்தனது வரலாறு.

(கூ) திபதை. இராகம் - கல்யாணி—அட்டதாளம்.

(க) கலிங்கிலரி புரமென்றோர் தலத்தில் - உயர்
கனநிதிபடைத்த வணிகர்குலத்தில் - தன்மம்
துலங்குந்தேவதத்தனென்றொருசெட்டி - நாளும்
தூயசத்திரமாலயமுங் கட்டி

(உ) தத்துவச்சிவநெறியிற் சிறந்தான் - அவன்
தனக்குத்தருமதத்தமகன்பிறந்தான் - புவி
மெய்த்திடும் பருவமயதானான் - அன்னை
வீய்ந்தனள்பிறகு தந்தையும்போனான்

(ந) மடிந்தவர்க்குரிய கடனைமுடித்துத் - துக்க
வாரியிலாழ்ந்துதன் மதிமடித்துத் - தேகம்
இடைந்தவன் மிகமயங்கிடும்பொழுது - பொல்லா
இரதவாதியொருவனுடல் முழுதும்

(ச) உத்தமமான விபூதிபுந்தரித்து - காவி
யுடையுமணிந்து செழுஞ்சடைவிரித்து - தோளிற்
பத்திசேர்கண்டிகையணி பதித்து - சிவ
பத்தனைப்போலஞ்சக்கரந் துதித்து

(ரு) பொய்த்திடுந்தவவேடமது புனைந்து - செட்டி
புதல்வனைக்குடிகெடுத்திட நினைந்து - நேரில்
தத்தரமுடனவன் மனைபுகுந்தான் - அந்தத்
தருமதத்தனுங்கண்டு களிமிகுந்தான்

(சு) நற்பதுமாசனந்தனி லிருத்தி - தாளில்
நறுமலர்தூவியின்னமுதருத்தி - இரு
பொற்பதந்தனைப் பணிந்தெழுந்து நின்றான் - வந்த
புதுமையையடியேனுக் கருளுமென்றான்

(எ) பொய்க்குரவனுமவன் முகநோக்கி - ஒரு
பொன்னைப்பற்பலகோடி பொன்னாக்கி - நேரில்
வைக்குந்தொழிலுமென் றனிடத்திலுண்டு - உன்கை
வசமுற்றபொருளினை விரைவிற்கொண்டு

(அ) என்னிடங்கொடுத்துவிட்டாலுடனே - செம்பொன்
இரவிபோற்றருவது மென்கடனே - ஆகு
மென்னவந்தப்புரட்டன் வழுத்துஞ் - சொல்லைநிச
மெனவணிகன்கேட் டகங்கொழுத்து

(௩) முன்செய்ததீவினைப் பயன்மீறி - வரு
மோசப்பேராசைப் பேய்தலைக்கேறி - முன்னம்
தன்வசத்திருந்த சொத்தையுமழித்து - பின்னும்
தர்மப்பொருள்க ளனைத்தையுமொழித்து

(௪) செய்யமகவமுதைக் கையாலே - ஒன்றாய்த்
திரட்டிநாய்தனக் கீந்தகதைபோலே - அந்த
வெய்யபாதகன்கையிற் கொடுத்தானே - வாதி
மெய்த்தவன்மனைக்குட்போயடுத்தானே.

விருத்தம்.

தந்திர மாக மனையறை புகுந்து
தருமதத் தனைமதி மயக்கித்
தமனிய மளைத்துங் கவர்ந்தவன் முன்பாய்த்
தலமிசைக் காட்டொரு வடுக்கி
விந்தையோ டென்கைக் கருவினை யூட்டி
விதிமுறை புடத்தில்வைத் தெடுக்கில்
மிக்கபொற் குவைகள் சிக்கெனப் பலிக்கு
மெனப்பயில் பலமுறை காட்டி
மந்திர மொழிந்து குகையினிற் செம்பொன்
வளமுடன் வைத்தழன் மூட்டி
மண்டுவெம் புகையால் வணிகனு மயங்கி
மழையென விழிப்புன லருவி
சிந்திடச் செய்து திருடனக் கணத்திற்
செம்பொனின் குவையினை யெடுத்துத்
திடுக்கென மறைத்திட் டயத்தையக் குகையிற்
செலுத்தியே கனலிடென் றனனே (௰௨)

பின்னும் விருத்தம்.

வேறு.

கனலையிட்டுத் தருமதத்தன் றனைத்தெளிவித் தென்றனை நீ கருதி யந்தக்
கரணமுடன் றுதிபுரிந்திக் குகையதனின் மூன்றுதினங் கனலை மூட்டி
அனலவித்துக் குகைதிறந்தா லளவிறந்த பொற்குவையுண் டாகு நான்போ
யரிமாலூர் தியைத்தொழுதுன் றனக்குவர மளிப்பேனென் றகன்றானப்பா
லினிதுடனம் மூன்றுதினங் கழிந்தபின்பு வணிகனதை யெடுத்துப் பார்க்க
இரும்புபெருங் கருமலைபோ லிருந்ததுகண் டேங்கியவ னிறந்தா னென்று
மனதறிந்து தருமசொத்தைக் கெடுத்ததினு லிம்மதமா வானு னென்று
மதித்ததற்கப் முனிபுரிந்த தவத்திலொரு நாட்டவத்தை வழங்கி னானே.
(௰௩)

குச்சக முனிவா தன் தவமகிமையால் தருமதத்தனை சாபத்தினின்றும் விடுவித்து, விருத்தைக்கு மீண்டும் உயிரளித்து; அவளைத் தன் மகன் கவுச்சிகனுக்கு விவாகஞ் செய்தலும், பிறகு அவர்களுக்கு மிருகண்டு பிறத்தலும.

(ய) தீபகை இராகம் - ரூபகதாளம்.

(க) உவந்து முனியால் வணிகனுங்கரி யுருவம் போகியே - விடை
உடையவனருள் சிறந்துடன் தெய்வவடிவமாகியே
கவிந்து முனியைப்பணிந்தெழுந்துள்ளங் களித்துலாவினன் - தேவர்
கற்பகமலர் பொழிந்திடப்பர கதியையேவினன்

(உ) தருமதத்தன் செல் பெருமையை யதிசயித்துத்தெரிந்தனன்-முனி
தருமராஜனைக்கருதியேபின்னுந்தவத்தைப் புரிந்தனன்
எருமைவாகனக்கடவுளம் முனிக்கெதிர் வந்தடுத்தனன் - மிக்க
இயல்புடனுள்ளமிரங்கி விருத்தைக்குயிருங்கொடுத்தனன்

(ங) உசத்தியனதை யறிந்தெழுந்து தன்னுள்ளங்களித்தனன் - பூரித்
துடல்புளகித மாகியுவகைக்கடலிற் குளித்தனன்
இசைச்சுமங்கலை சகிப்பெண்களுடனெழுந் தங்குதித்தனள்-பிழைத்
தெழுந்தபெண்ணைக்கண் டிரக்கமுற்றுட னின்பங்கதித்தனள்

(ச) துதித்துவந்துகுச் சகமுனிவனைச்சூழ்ந்து பணிந்தனள் - பெண்
துணைக்கையாலெடுத் தணைத்துப்பணிகள் துலங்கவணிந்தனள் [ணைத்
மதித்தநாமய வனத்துளோரெலா மகிழ்ந்து கூடினர் - முனி
வனைப்பரசிவனெனச்சொலி வெகுவாய்க்கொண்டாடினர்

(ரு) விருத்தையைக்கவுச்சி கற்குக்கொடுக்க விருப்பமிருந்ததன் - பதி
விருதைமங்கலையுடனு சத்தியனுரைகள்பகர்ந்தனன்
கருத்தொடுமென்ற லோலையவற்குக் கடிதில்விடுத்தனன் - அந்தக்
கணத்தநாமய வனத்திலவனும் களிகொண்டடுத்தனன்

(சு) கடிகுழல்விருத்தையைக் கவுச்சிகன் கைக்கொண்டுகந்தனன் - தந்தை
கனகவெற்புறக்கடகயா நகர்கலந்து திகழ்ந்தனன்
உடலு முயிரும் போலிருவரு முற்று முயங்கினர் - கல
முடன் மிருகண்டன் றனைப்பெற்றனந்தவுததியமிழ்ந்தினர்.

மிருகண்டுவின் உபநயனமும், விவாகமும், பிறகு அவர் புத்திரனை வேண்டி வாரணாசியில் மனைவியோடு தவஞ்செய்தலும்.

விருத்தம்.

சொற்கலையைத் தாண்டின்மைந்த னுணர்ந்த பின்பு
தூயமுனி யுபநயந மியற்றி யப்பால்
முற்கலன்பெண் மருத்வதியைத் திருக்கல் யாண
முடித்துடனவ் விருவருநற் றவத்திற் சென்றார்
அற்கலைபூண் டென்மருத்து வதியுந் தானும்
வாரணா சியையடைந்து மகவை வேண்டிப்
பொற்கலைமா மதிபுனைந்த சிவன்பா லன்பு
பொருந்திட்டார் தவநெறியி விருநதிட் டாரே. (ம௪)

(மக) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—ரூபகதாளம்.

பல்லவி.

அருந்தவம் புரிந்தார் - துன்பப்
பெரும்பவம் பிரிந்தார்.

அனுபல்லவி.

அருந்தவம் புரிந்தனர் மிருகண்டர்
ஆரணந்துதித்திடுநதி - வாரணாசிநற்றலமதில் (அருந்)

சரணங்கள்.

(க) கரமிசைகுசைமுடி புனைந்து
கண்டிகை பூதியுமணிந்து
வரியுரியதன்மிசை யிருந்து
மறைமுதன் மனுமுறை மொழிந்து (அருந்)

(உ) அகமுறும் அறுபகை போக்கி
ஐம்பொறி புலன்களை வீக்கி
திகமுள மறிவது சிறந்து
செகமெனு மயலது மறந்து (அருந்)

(ங) அத்து விதத்தி லழுந்தி
அன்புற் றொருமை பொருந்தி
சித்தமதி லுவகை மிகுந்து
சிவபர னருள்தனை நினைந்து (அருந்)

பரமசிவன் பிரத்யக்ஷமாகி என்னவரம வேண்டுமென **வினவல்.**

விருத்தம்.

சிந்தைதனை யடக்கியிந்தப் படிக்கோ ராண்டு
திருமணிக்கர் ணிகையெனுமத் தலத்தி லோர்பா
லந்தமுடன் றவஞ்செயல்கண் டுமையோ டேற்றி
னமர்ந்துடனங் கெழுந்துவந்த சிவனை,நேரிற்
சந்தமறை யாற்றுதித்துப் பரமா நந்தச்
சமுத்திரத்தி லாழ்ந்துபர வசமாய் நிற்கு
மந்தணனை நோக்கியென்ன வரங்கள் வேண்டு
மதைநன்றாய் நமதுமுன மிசை யென்றாரே.   (௰௫)

மிருகண்டு ஸத்புத்ர சந்ததியைக்கோர, ஈசனதைதருள,
மார்க்கண்டர் அவதரித்து வளர்தல்.

(௰௨) **திபதை. இராகம் - கேதாரகௌளம்--ஆதிதாளம்.**

(க) இசையென்றருள்புரிந்த பசுபதியின் பொன்மலர்
இணையடியை முடியிற்   சூடியே - மிகு
உசிதமாகிய நவ ரஸகன நயத்துடன்
உவந்து முனிவனுரை   யாடியே

(உ) அந்தரியாமியாய் நிறைந்து பொன்கருத்தை நீ
அறியாதவகையுண்டோ   தெரிவாயே - உன்றன்
சிந்தைமகிழ்ந்தினிய சந்ததி தழைத்திடத்
திருமைந்தனெனக்கருள்   புரிவாயே

(ங) என்றுமுனிவன்சொல்ல மன்றில் நடம்புரியும்
இறைவன் மிகவுங்களி   கூர்ந்துதன் - அருள்
துன்றுமிவன்பத்தியை யின்றெவர்களுங் காணச்
சோதித்திடவேண்டுமென்   றோர்ந்துடன்

(ச) ஏற்குங்குணங்களின்றித் தீக்குணங்கள்பிணிகள்
இழிந்தகூன்குரு   டசடாகியும் - சன்
மார்க்கசிவபத்தியின் நீர்க்கவறிவில்லாத
வன்கண்மையுடன்   கசடாகியும்

(௫) மாறுகொள்வடிவுடன் றூறுவயதுடைய
மைந்தன்வேணுமோ சிவ   ஞானமும், - கலை
ஊறுஞ்சதுர்வேதமு மாறுபத்துடனோான்
குற்றசகலகலைக்   ஞானமும்

(௬) புத்தியினிலெனது சிந்தனையேதவமாய்ப்
பூசனைபுரிந்திடுஞ் சாதுவாய் - நாளும்
வந்தனைபுரிகின்ற வயதுபதினாறுற்ற
மைந்தன்வேணுமோ தெளிந் தோதுவாய்

(௭) எனப்பரமன்புகல்வ சனத்தைமுனிவன்செவி
யேற்றிதற்கென்விடையென் றெண்ணியே - பின்பு
மனத்திடத்துடனேநல் வினைப்பயனெதிர்கொள்ள
மதித்திட்டாலோ சனை பண்ணியே

விருத்தம்.

மதத்துடன் சிவனை மறந்தவ ருசித
மார்க்க மில்லாத நிர்மூடர்
வயதுநூ றுடையா ராயினும் புவியின்
மங்கியே சடுதியின சிப்பா
ரிதத்துட னேம நிட்டையிற் சிறந்தே
யிடைவிடா துள்ளமோ டுருகி
யெழுதரு மறைநூ லாகமப் படிக்கின்
னிசையொடும் பூசனை புரிவோர்
விதித்திடும் வயது குறையினு நன்மை
மிகுதியா லாயுள் பெற்றோங்கி
மேன்மையுற் றிடுவ ராதலா லுன்றன்
விரைமலர்ப் பதத்தின்மீ தனபு
கதித்திடும் புதல்வ னளித்தெனைக் காக்கக்
கடவையென் றுரைத்தலும் பரமன்
கருத்தினி லுகந்தம் முனிக்கொரு மகவைக்
கருணைகூர்ந் தளித்தகன் றனனே. (௧௬)

(௧௫) தீபதை. இராகம் - எதுகுலகாம்போதி—அடதாளம்.

(௧) வரம்பெற்றரன்கருணை - யுரம்பெற்றுமருத்வதி
மாணாள் - கர்ப்ப - மாணாள் - வசி
கரம்பெற்று மதிக்கொரு - நிறம்பெற்றொளி சிறந்து
கதித்தனள் - உள்ளன் - புதித்தனள்.

(௨) மதிக்கினையவதனம் - பசத்துமூன்றுதிங்களில்
மசக்கையால் - அன்னங் - கசக்கையால் - நன்றாய்த்
திதிக்கும்பாலமுதூட்ட - மருட்டிக்குமட்டிமதி
தியங்குவாள் - மேனி - கயங்குவாள்.

(௩) கனத்துப்பணைத்தெழுந்த - தனத்துமணியிரண்டும்
கறுத்தனள் - அரு - வருத்தனள் - தாய்
மனைக்குளைந்துதிங்களி - லழைத்துப்பொன்வளைகாப்பு
மாட்டினர் - கலன் - பூட்டினர்.

(௪) சட்டமோடறுதிங்கட் - சூரியதியற்றிமலர்
சாத்தினர் - உவந் - தேத்தினர் - மதி
எட்டிற்பூரிகமடி கட்டிமணையின்மிசை
ஏற்றினர் - பேணிப் - போற்றினர்.

(௫) ஐந்திருமதியுநி - றைந்துபூரணகெர்ப்பா
வதியுற்றாள் - நன்கு - வதியுற்றாள் - அர
விந்தமனையமுக - முந்தளிர்த்தரளம்போல்
வியர்வுற்றாள் - தளர்ந் - தயர்வுற்றாள்.

(௬) இரவிதகரின்மன்ன - குருவும்புகருமுச்ச
மேறவும் - பல - மூறவும் - பின்னும்
மருவுமறுகோள்களு முரியசுபக்ரகத்தில்
வதிக்கவும் - நல - முதிக்கவும.

(௭) புதனுக்கினிமையுற்ற - மிதுனலக்கினம்வந்து
பொருந்தவும் - கலை - திருந்தவும் - சிலை
மதனுக்கனையவொரு - சுதனைப்பெற்றனள்முக
மதியினள் - மருத் - வதியினள்.

(௮) தந்தைமிருகண்டரா - நந்தமெனுங்கடலில்
தாழ்ந்தனர் - தீதைப் - போழ்ந்தனர் - உடன்
சிந்தையன்பொடுமறை - யந்தணரனைவர்க்குந்
தெரிவித்தார் - நேரில் - வருவித்தார்.

(௯) கலவைப்பொடிகதம்பப் - பொடிகள் சந்தனமொடு
கரைத்தனர் - வாரி - யிறைத்தனர் - செந்நெல்
நிலமணிநிரைசெம்பொன் - சலவைசோடசதானம்
நேர்ந்தனர் - அன்போ - டீந்தனர்.

(௰). உவக்குங்கலையனைத்துங் - திரட்டிச்சேனைமைந்தனுக்
கூட்டினர் - தன்னீ - ராட்டினர் - செங்கை
குவித்துகவினைத்திற் - குலதெய்வங்களைச்சொல்லிக்
கூப்பிட்டார் - வேண்டிக் - காப்பிட்டார்.

(கக) செனித்ததன்பதினொரு - தினத்திற்சாதகர்மமுஞ்
செய்தனர் - வியப் - பெய்தினர் - எழில்
இனப்பொற்பணிகளலங் - கரித்துமணித்தொட்டிலில்
ஏற்றினார் - கண்ணூ - றாற்றினார்.

(கஉ) மார்க்கண்டனெனவையன் - ஏர்க்கமுடனேநாமம்
வைத்தனன் - கண்டு - மெய்த்தனன் - சன்
மார்க்கமுடனேமூன்று - வயதிற்சௌளமணம்
வரித்தனர் - சிகை - தரித்தனர்.

(கங) ஐந்துவயதிலக்ஷ - ராரம்பஞ்செய்துச்
ராட்டினார் - இசை - நாட்டினார் - பின்னுப
முந்தும்வயதேழில - மைந்தபூணூல்மணப்
முடித்தனர் - வாழ் - படித்தனர்.

மார்க்கண்டருக்குப் பதினாறுமாண்டு நெருங்குதலை கண்டு
மிருகண்டுமுனி விசனமுறல்.

விருத்தம்

கருத்திலுவந் துபநயன முடித்த பின்பு
கலைகண்மறை யாவுமைந்தன் கற்று ராய்ந்து
நிருத்தனரு ளியவயதிற் பதினைந் தாண்டு
நிறைந்துபதி னாறாண்டு நெருங்கக் கண்டு
திருக்குமரன் வடிவையுஞ்செய் கையையு நோக்கிச்
சிந்தைமிகத் தளர்ந்துமிரு கண்டன் றானும்
வருத்தமுற்றுப் புகலினிவே றொன்றுங் காணா
வகையுற்றான் மிகவுமதி திகைவுற்றானே. (௰எ)

(௰அ) கீர்த்தனம். இராகம் - ஆகிரி—திரிபுடை தாளம்.

பல்லவி.

என்னசெய்வேன் - இந்தவிதிக்
கெப்படி உய்வேன்.

அநுபல்லவி.

தன்னெஞ்சறியாவிதற்கோர்
தந்திரமொன்றுங்காணேனே. (என்ன)

சரணங்கள்.

(௧) வாரணாசிதனிற்சென்று வருந்தித்தவமுயன்று
ஆரணப்பொருள்தனைக் கண்டடிபணிந்து
பூரணவயதுள்ளசத் புத்திரன்றனை நீர்வரம்
தாருமென்றுரையாடாமல் தவறிமோசம்போனேனே (என்ன)

(௨) குளிர்ப்பாயின்னமுதூட்டிக் குலமணிக்கலன்பூட்டி
வளர்த்துக்கலைதேர்ந்த யௌவனவயதில்
தளிர்ப்பொன்மேனியுங்குஞ்சிச் சடையுமடையுங்கண்டு
களித்தகண்ணிணைக்கிளறக் கடவுள்சோதனைசெய்தால் (என்ன)

(௩) அருணோதயத்திலேகி ஆர்ந்தநதியில் மூழ்கிச்
சுருதியோடனுட்டானத் தொழின்முடித்துக்
கருதிப்பூசைபுரிந்து கடவுட்கடிமையான
திருமைந்தனுக்கிறுதி தீவரமாகநேர்ந்தால (என்ன)

மேற்கூறிய காரணத்தால் மருத்வதி புலம்பல்.

வெண்பா.

கம்பலையி லாழ்ந்துமிரு கண்டமுனி மைந்தவிதந்
துன்பமுறல் கண்டு துடிதுடித்தே - வெம்பிக்
கருத்துதிரஞ் சோரவிரு கண்ணருவி சார
மருத்வதிமி னுள்புலம்பு வாள். (௰௮)

(௰௫) கீர்த்தனம். இராகம் - நீலாம்புரி—ரூபகதாளம்.

பல்லவி.

அருமைமைந்தா உனைப்பிரிந் தாலெந்தவிதம் சகிப்பேன் - இந்த
அனியாயத்தை யாருடன்சொல்லித் தேறிநிர்வகிப்பேன் - என் அருமை.

அனுபல்லவி.

பரமசிவனைக் கருதிச்சுருதி பகர்ந்தருந்தவம்புரிந்து நிறைந்த
பத்துமாதம் சுமந்துனைப்பெற்று நான் பாரித்துடலம் பூரித்திருந்தேனடா
(என் அருமை)

சரணங்கள்.

(௧) திதிக்கும்பாலுடன முதுமருத்தித்
திருமுகத்தொளிதிருத்தி - நிறை
மதிக்கொருவண்ணமாகமடியில்
வைத்தனைத்துன்றனை நித்தம்வளர்த்தேனடா (என் அருமை)

(உ) புண்ணியைக்கடைந் தமுதங்கண்டவர்
போலுனைக்கண்டு மகிழ்ந்தேன் - செந்
தணல் விழிச்சமன் முனிவுகொண்டுனைத்
தடுத்திழுக்கும் நாளடுத்ததே ஐயையோ (என் அருமை)

மார்க்கண்டேயர் தாய்தந்தையர்களைத் தேற்றுதல்.

விருத்தம்.

தந்தைதா யிருவர்களுந் தயங்கும்போதிற்
றனையனவ ரடிபணிந்திட் டெழுந்துநின்றே
அந்தோவென் னையாவென் னனையே உங்கட்
காகுலமே தெனப்பகர்ந்த சுதனைக்கையாற்
சிந்தையன்போ டணைத்துமுச்சி முகந்து முன்னாட்
சிவனளித்த வரமிதென நவிலக்கேட்ட
மைந்தனிள நகைமுகங்கொண் டிதற்கோ விந்த
மலைவென்பான் வீணிலென்க வலையென்பானே. (௰௧)

வெண்பா.

துஞ்சிடுவோன் மைந்தனென்று துன்பமுற்று ளங்கலங்கி
யஞ்சுவதே னென்மொழியை யாயந்தருள்வீர் - செஞ்சடையின்
மத்தருக்கோ டக்கணிந்த வன்பதத்தி லன்புகந்த
முத்தருக்க வத்தைவருமோ. (உ௰)

(௰௬) கீர்த்தனம். இராகம் - சகானு—ஆதிதாளம்.

பல்லவி.

சிவனை நினைந்தவர் எவர்தாழ்ந்தார் - ஸதா
சிவனை மறந்தவர் எவர்வாழ்ந்தார்.

அநுபல்லவி.

பவுனசித்தர்கள்முதற் சனகமுனிவர்கள்தன்
வசத்திலனுதினமும் வசித்தருளும்பரம (சிவனை)

சரணங்கள்.

(க) மனப்பயங்கரங்கொண்டமரர் வெருண்டு - விழ
மருட்டிவந்த விடத்தைத் திரட்டியுண்டு - வெம்பிக்
கனைத்தலறியதெய்வகன்னியர்கள்திருமங்
கலத்தைக்கந்தரமிசை நிலைக்கச்செய்தருள் பர (சிவனை)

(உ) சிரித்துத்திரிபுரத்தை எரித்தழித்தும் - தக்கன்
சிரத்தையறுத்திட்டழல் தனிலொழித்தும் - அகங்
கரித்துமுனிவர்விட்ட வரிப்புலியைக்கொன்றத
னுரித்திடையிற்றரித்த நிருத்தனெனும் பரம (சிவனை)

(௯) இருப்புத்தப்பத்தைச்சித ளரித்திடுமோ - நெருப்
பிடையிற் - ழுவக்துயிர் தரித்திடுமோ - மன
வருத்தமின்றிக் கண்மலர் பறித்துப்பூசனைசெய்த
மாலுக்குநேமிதந்து பாலித்தருள் புரிந்த (சிவனை)

மார்க்கண்டேயர் காசிசென்று சிவனை ஆராதித்தல்.

விருத்தம்.

அந்திவண்ணன் றனையடுத்துப் பூசை செய்திங்
கழியாத வரம்பெற்று வருவேனிங்கள்
சிந்தைகலங் கிடவேண்டா மெனப்பகர்ந்த
சேயனைக்கை யாற்றழுவித் திருநீறிட்ட
தந்தைதா யடிபணிந்து விடைபெற் றேகிச்
சங்குலவு கங்கைதனிற் றனஞ் செய்து
சந்திவா கனவிசுவே சனைப்பூ சிக்க
நலஞ்செய்தான் சந்நிதிமு னலஞ்செய்தானே (௨௧)

பின்னும் விருத்தம்

இறையவனை வலஞ்சூழ்ந்து சிவனே நானிங்
கியற்றிடும்பூ சனைக் கொன்றுங் குறைவுறாம
னிறைவேறும் படிகருணை புரிவா யென்று
நின்மலன்றன் கோயில்தென்பா லொருபாகத்தின்
முறைவழியோ ரமிர்தலிங்க ப்ரதிட்டை செய்து
மொழிந்திடுஞ்சி வாகமத்தின் படிக்கு நன்றாய்த்
தறுகணமன் றனைச்செயிக்கக் கருதியாரா
தனஞ்செய்தான் பக்திசா தனஞ் செய்தானே (௨௨)

(௰எ) ஆர்யா—இராகம் - பியாக்—ஆதிதாளம்.

ஶிவாய வாஸுதே வஶாய ஶம்பவே ஸாராய நமோ நம.
ஸவாய ப்ராணஸம் ஸவாய ஸர்வதா ஜ்ஞவாய நமோ நம.
ஹராய ஶிவஶம் கராய விஷகம் டராய நமோ நம.
ஸ்ராய சந்த்ரஸம் தராய ஸஜ்ஜஸம் தராய நமோ நம.
ஜிதாய ப்ராணரம் ஜிதாய யோகிஸம் ஸ்திதாய நமோ நம.
ஸிதாய ஹரிஸ ஹ்ருதீய ஸம்ஸ்ரவம் ஸிதாய நமோ நம.

பரமசிவன் பிரத்யக்ஷமாக மார்க்கண்டேயர் துதித்தல்.

விருத்தம்.

அங்கம்வா யகமொருமை யுடனே பூசித்
தைந்தெழுத்தை யுருவேற்றித் தியானஞ் செய்யுந்
துங்கமைந்தன் மெய்யுழுவற் கனுகனுகி
யோமஜடா தரனுவந்து கருணை கூர்ந்து
மங்கையுமை யவளொடுமால் விடையிலேறி
வருதல்கண்டு மார்க்கண்ட முனிவனேரிற்
கங்குகரைக் கடங்காத பரமா நந்தங்
கதிக்கின்றான் முழுமறையாற் றுதிக்கின்றானே (உ.ங.)

(ய௮) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—ரூபகதாளம்.

𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰
𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌪𑌰𑍇𑌶 𑌦𑌯𑌾𑌹𑍋. (௧)
𑌕𑌾𑌰𑍁𑌣𑌾𑌕𑌰 𑌸𑍁𑌰𑌨𑌾𑌯𑌕 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌤𑌫𑌲𑌦𑌾𑌯𑌕 𑌶𑌿𑌵 (௨)
𑌨𑌿𑌜𑌸𑌜𑍍𑌜𑌨𑌪𑌾𑌲𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌭𑍋 𑌶𑌿𑌵 (௩)
[illegible] 𑌶𑌿𑌵 (௪)
[illegible] 𑌶𑌿𑌵 (௫)
[illegible] 𑌶𑌿𑌵 (௬)
[illegible] (௭)

மறலியைச் செயிக்க விரும்பிய மார்க்கண்டருக்கு ஈசன் அபயமளித்துத் திருவடிதீக்ஷை செய்து மறைய மார்க்கண்டேயர் அனேக தலங்களை தரிசித்துப் பிறகு திருக்கடவூர் வந்து ஈசனைப் பூசை புரிதல்.

விருத்தம்.

சுருதியோ டிசையாற் றோத்திரம் பயின்ற
சுந்தரப் புதல்வன்மீ தன்பு
தோய்ந்துநின் றனக்கு வேண்டிய வரத்தைத்
துலக்கமா யெமக்குரை யென்னப்
பரிவொடு வணங்கி மறலியைச் செயித்துப்
பாரிடத் தழிவிலா வாழும்
படைத்துன் றரிய பதயல ரிணையைப்
பண்புடன் பூசனை புரிய

வருள்புரி வாயென் றுரைத்திடப் பரம
னஞ்சலஞ் சலையெனக் களிப்போ
டபயமுங் கொடுத்து முடிமிசை தனிற்பொன்
னடியிணைக் கமலமுஞ் சூட்டித்
திருவுரு மறையச் சிவதலந் தோறுஞ்
சென்றுபூ சனைபுரிந் தப்பாற்
றிருக்கட வூர்சென் றமிர்தலிங் கத்தைச்
சிறப்பொடு பூசைசெய் தனனே (௨௪)

(௧௬) **கீர்த்தனம் *இராகம் - தன்யாசி—ரூபகதாளம்.**

பல்லவி.

விக்ரமமார்க் - கண்டன் சிவனை
விரும்பிப் பூசை செய்தனனே.

அநுபல்லவி.

வற்கலையுடை - யணிந்து பொருந்து
மானதளாசனத் திருந்து
விற்கனகக் கண்டிகையுஞ் சூடி
மிகவுமுள்ளன் கூடி (விக்ரம)

சரணங்கள்.

(௧) திருத்தமாய் மஹன்யாஸ மேகா
தசருத்திரத்துட னனேக
இருக்கொடு மகதாபி ஷேக
மியற்றி முயற்சி யாக (விக்ரம)

(௨) தளிருறும் வில்வ தளங்க ளெடுத்து
சகத்திர நாமங்கள் தொடுத்து
ஒளியுறுந்தூபதீபங் காட்டி
உரிமையோடமு தூட்டி (விக்ரம)

(௩) தங்குமின் மருமலர் சொரிந்து
சந்நிதி மூவலம் புரிந்து
அங்கமுழுதும் படியத்தாழ்ந்து
ஆனந்தக்கட லாழ்ந்து (விக்ரம)

மார்க்கண்டருக்குப் பதினாறு வயதானவுடன் இயமதூதன்வர அவன் அவரிடம் அணுகமுடியாமல் திரும்பி இயமலோகஞ்சென்றதும் அங்குநடந்த விருத்தாந்தமும்.

விருத்தம்

இறைவனையாங் கிடைவிடா தருச்சித் தேத்து
  மியல்புறு மார்க் கண்ட னுக்குப் பதினாறாண்டு
நிறைவுற லறிந்துடனே மதூதன் கண்
  டொருப்பெழுமுச் சுவைக்குலங் காத்திலேந்திக்
கறையுடலோ டெழுந்தொருங்கிப் புதல்வன் றன்னைக்
  கண்டிடலும் பசைபசைத்துக் கனலைக்கிட்டும்
பொறியுடனெ மனமொடுங்கிப் பெருமூச்சிட்டுப்
  புழுங்கினன் அறிவழிந்து புழுங்கினனே (உரு)

(உ௬) திபதை. இராகம் - காம்போதி—அடதாளம்.

(க) அறிவழிந்துடன் றூதன் பறையவன் றனைக்கிட்ட
அணுகவொண்ணுதென் றோட்ட மெடுத்தானே - சென்று
தறுகண் பன்றனைக்கண்டடிப விழ்ந்தேய நாவுந்
தளர்ந்து செய்திகள் சொல்லத் தொடுத்தானே

(உ) சண்டனென்றனைப்பெத்தித் துண்டரீகபா யெங்குஞ்
சட்டஞ் செலுத்திநிற்குமைகழ் போச்சே - பெயர்
தண்டனையென்பது மார்க் கண்டனளவிலின்று
செய்பிற் புளியிட்ட தும்பா லாச்சே

(ங) கறைக்கண்டனை யருச்சித் திருக்குஞ்சூமான் றவக்
கனல்பட்டென்னுடலெங்கும் வெந்தேனே - தலை
முறைக்குமினிமேலவ னிருக்குந்திசையை நோக்க
முடியாதென்றொளித்தோடி வந்தேனே.

(ச) என்றுதூதுவன் சொல்லத் தென்றிசைக்கதிபன் கண்
ணெரிபோற்சிவந்துடலம் வேர்த்தானே - இரு
குன்றென்னும் புயந்தட்டி மன்றிலிருக்குஞ்சித்ரன்
குப்தனிருவரையும் பார்த்தானே.

(ரு) மார்க்கண்டன்றனக்குற்ற வயதையுரைப்பீரென
வணங்கியக் கணக்கவர் விரித்தாரே - அதி
தீர்க்கமுடனதனைப் பார்த்துச்சமனைநோக்கிச்
சிக்கைதெளிந்ததைவி வரித்தாரே.

(௬) நீத்தெருளியிறைவன்முன் சாற்றுமென்றனி விட்டாண்டு
மேற்றுடனே சரியாய்க் தீர்ந்ததே - நிறை
ஆற்றல்சேர்யமன்சீட்டை யாற்றலரிதென்றசொல்
அழிந்தவமானம் வந்து நேர்ந்ததே.

(எ) பூதிகணடிகையணிந் தாதிபினைப்புசை
புரிந்துமகிமை சிறந் தோயேனும் - நல்ல
மூதறிவுடனேந்து புலனையென்றருந்தவ
முயன்றுமுந்மையுந் துறந் தோரேனும்

(அ) எட்டுணையாகிலுமுன் சரிட்ட கட்டளைதன்னை
யாவ ராலுங்கடக்க அரிதாமே - தவச்
சிஷ்டனிவனுக்கந்த அஷ்டருணமூர்த்திரக
திருக்குப்ப மென்னமோ தெரியோமே.

மார்க்கண்டனைப் பிடிக்குவரும்படி இயமன் காலனை ஏவல்.

விருத்தம்

சித்தி னுடைய தப்தனுடைய வார்கூறத்
தென்றிசைக்காலனட யகா முனிவுகொண்டு
பைத்தலையா னடவெனவுங் கரித்திட்டோங்கிப்
படியதுங்காலனயழைத்துப் பரசுகமெனாக்கு
மைச்சடக்கான டனைவர பாடிபற்றிகெருசின்
புதலிதுந்தயாககமாடன் றனைப்போப்பசீறிக்
கைத்தலத்தா லிழுத்தெய்த சபைமுன்யாகக்
காட்டென்பான் பரபடசியா லாட்டென்பானே (உ௧)

(உ௧) கீர்த்தனம் இராகம் - தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

பிடித்துக்கொணர்டென்றன்சபை
முன்னேவிட்டா - அவனைப்

அநுபல்லவி.

சகித்தம்பேசினுன்னைத் - தருபாசத்தைவீசித்
திருவ்வேர்ப்ப—(பிடி)

சரணங்கள்.

(க) சிவனையர்ச்சித் திட்டுளத்தி-லுவகை-முற்றியேயன் பூறி
சிறியவர்செம் பொன்பெற்றுற்போற்-பருமிதந்தலைக்கொண் டேறி
கவலையற்ற வன்வசிக்கும்-கடநகர்சென் றெதிர்த் தேறி
கட்டியடித் திட்டுன்புயந்-தட்டியென்பகழ் கூறி
சமுதியிற்—(பிடி)

(உ) அதனைழைத்தான்வாராய - லேதுக்கிந்தத்திண்டு ண்டோ
சொற்கேளாக்குட் டிபோலிவ னுக்கிந்தட னமு றண்டோ
வேதன்முத லோரும்என்சொன் மீறியே நடந்த துணடோ
விட்டுேரமாகநானிட்ட கட்டளைக்கிடன் டுண்டோ
கதியொடு—(பிடி)

(ங) கைக்கதையாலடித்துடலைக்கலங்கவிழத் தாட்டி
கண்டகமுகொண்டுதுளைத்துத் துண்டரீகம்செய்து வாட்டி
வக்கிரமாகியஉன்றன்-உக்கிரரூபத்தைக் காட்டி
மங்கியலறிடமுன்கைச்-சங்கிலிதனைப் பூட்டிச்
சினமொடு—(பிடி)

காலன் விடைபெற்றேகி மார்க்கண்டரைக்கண்டு அணுகமுடியாமல் தன் உருவங்காட்டி நயந்து வேண்டல்.

விருத்தம்.

கருத்துழன்று தருமனிவ்வா றுரைக்கக்கேட்டுங்
காலனையு னடிபணிந்து விடைபெற்றேகித்
திருக்கடவூ ரீசர்சர ணம்புயத்தைச்
சிந்தையிலுற் றந்தரங்க பத்திபோடு
மருச்சனைசெய் தினிதிருக்குங் குமரனைக்கண்
டதிசயங்கொண் டணுகநம்யான் முடியாதென்றே
வருத்தமுற்றுத் தனதுருவங் காட்டிச்சென்று
வணங்கிநின்று நயந்துரைகள் வழங்குவானே (உஎ)

(உஉ) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—திரபுடைதாளம்.

பல்லவி.

மார்க்கண்டேயரே சொல்லக்கேளும் - மன
வருத்தங்கொள்ளாமலெனை - யாளும்.

அனுபல்லவி.

ஆர்க்கும்உயர் தென்றிசை - காக்கும்காவலனெம
னுலே யனுப்பவந்த - காலனென் பேரையா. (மார்க்கண்)

சரணங்கள்.

(க) எற்றுடையோனுமக்குச் - சாற்றுமெண் ணிரண்டாண்டு
நேற்றுடனே தீர்ந்ததே - இன்றைக்கிறுதிக்
கேற்றகாலமும் சேர்ந்ததே - தலைவிதியை
மாற்றயாவராலு மாகாதே - பர
மன்தடுத்திடினும் போகாதே - எங்கள்
கூற்றுவனருகிலிப் போதே - சித்தங்
கோணுதெ தன்னுடன் வரவேணும் தடையில்லாதே (மார்க்கண்)

(உ) திருத்தன்றனையருச்சித் - திருக்கும்செய்கையை எங்கோன்
திருச்செவியினிலோர்ந்து - உமைரக்ஷிக்கக்
கருத்தினி லருள்கூர்ந்து - அங்கு
வரச்சொன்ன மொழியைத்தள்ளாமல் - அவ
பதிச்சென்னுரை தனை யெள்ளாமல் - இந்தச்
சரித்திரம் எவர்க்கும் விள்ளாமல் - நுங்கள்
தாஸன் என் மீதிலா - யாஸங்கொள்ளாமல் (மார்க்கண்)

(ங) தண்டநாயகனும்மைக் - கண்டவுடனே நேரில்
அண்டிவந் தழைத்திடுவான் - தன்னுநந்தம்
கொண்டிடல் தழைத்திடுவான் - திருத்
தொண்டனென் றுவந்துரை சாற்றுவான் - மலர்
சொரிந்துபசரித்துடைப் போற்றுவான் - வானில்
அண்டர்வாழ்பதவிப் பேற்றுவான் - மிக்க
அவத்தைப்படுத்தும்பிற - வித்துயரை மாற்றுவான் (மார்க்கண்)

மார்க்கண்டர் காலனை இகழ்ந்து ஓடிப்போவெனல்.

விருத்தம்.

நயமுடனிப் படிக்கால னவிலக் கேட்டு
நகைத்துடனே மார்க்கண்ட முனிவன்றானும்
பயனிலசொற் பாராட்டும் பதடி யுன்றன்
பலத்தையறி வேனண்டர் பதியுமாயோ
னயன்பதியுஞ் சிவனடியா ரளித்த பேர்க்குண்
டகம்படியா தெழுந்தோடிப் போவாயென்ன
வியக்தவனும் பயந்துடனே தெற்கே நோக்கி
மேவிலுன் யானிடபபோய்க் கூவிநின்னே (ஏக)

காலன் நடந்ததை இயமனிடம் சொல்ல இயமன் தானே நேரில் மார்க்கண்டரிடம் வருதல்.

பின்னும் விருத்தம்.

விடங்கிளர்கண் டனுக்குரிய மார்க்கண் டன்பால்
 வினைக்காலன் போயவழிப் பட்டுவந்த
தடங்கலுமங் கவையெதிர் நின்றுரைக்கச் சீறி
 யந்தகன்கேட் டரி விழியிற்சிந்த நோக்கி
படங்கலெனை வுறுமியம படர்கள் சூழ
 மகிடவா கனமிசையா ரோகணித்தே
சுடுங்கொடுமை யுடன்றனது புரத்தை விட்டுக்
 கடந்திட்டான் விருதுசொலி நடந்திட்டானே (உக)

(உரு) கீர்த்தனம் இராகம் - ஆரபி—அடதாளச்சாப்பு

பல்லவி.

சண்டன்சினங்கொண்டுத் - தண்டமதாகமார்க்
கண்டன்முன் வந்தானே.

அனுபல்லவி.

துண்டரீகங்கொண்ட - வண்டனுடலைத்
துடிக்கச்செய்தாவி-குடிக்கிறேன் பாரென்று. (சண்டன்)

சரணங்கள்.

(க) அம்பொன்மணிமகு டம்புனைந்தாப
ணங்களும் பூட்டிக்கொண்டு - மலர்த்
தும்பையுடன்பல வம்பவிழ்மாலைகள்
தோள்மிசை சூட்டிக்கொண்டு - வல்வி
ரும்புடைவாள் சுரியுஞ்சமுதாடும்
எடுத்துக்கை நீட்டிக்கொண்டு - ஆ
டம்பரமாகவே சம்பிரதாயம்பா
ராட்டிக்கொண்டுதலை யாட்டிக்கொண்டு - கோரச் (சண்டன்)

(உ) முண்டியமபடர் தொண்டுபுரிந்தெதிர்
முத்துக்குடை பிடிக்க - ஓசை
மண்டிடும்பேரியா லண்டகடாகங்
துண்டு துண்டாய் வெடிக்க - செழும்

புண்டரீகன்முத லண்டர்களெஞ்சம்
புழுங்கிக் கண்ணீர் வடிக்க - சகத்
தண்டியேசேனைக ணின்றெச்சரிகை
படிக்கச சகங்கள் பொடிக்க - துடிப்பொடு (சண்டன்)

(௩) நேசித்தானறனைப் பூசித்திட்டேய்க்குர்கை
பிற்றனை பூட்டுகிறேன் - கால
பாசத்தை யென்கையால் வீசிப்பிணித்துச்
கழுத்தினில் மாட்டுகிறேன் - மிக
எசிப்பறித்திட்ட பாசத்தைநெஞ்சில்வைத்
தென்திறங் காட்டுகிறேன் - முற்றும்
வாசித்தறிவின்றி மாசுற்றறமுடனை
வாட்டுகிறேன்பிடித் தாட்டுகிறேன் - என்று. (சண்டன்)

இயமன்வருபா ...

விருத்தம்.

அதிகமுனி வொருபாறலி வருப்ப மோசை
யருந்தவத்தி லுயர்ந்திடுமார்க் கண்டன்கேட்டிங்
கிதுவுமொரு வதிசயந்தா னெனமனநெஞ்சி
லெண்ணியா லோசனைகள் பண்ணித்தீர்ந்து
புதுமலர்கொண் டருச்சனைசெய் திருகைகூப்பிப்
புரகரா வரகரா சம்போ வென்றே
பதிபுனைந்த வமுதகடேசனை யாசித்து
மறுகுவான் துதிபுரிந்துள் ளுருகுவானே (௩௰)

(௨௪) கீர்த்தனம் இராகம் - நாதநாமக்கிரியை—த்நபுடைதாளம்.

பல்லவி.

அபயாபயஞ்ஜெகதீசா - சம்போ
அபயாபயஞ்ஜெகதீசா

அனுபல்லவி.

விபவப்பிரகாசகை லாஸகிரி வேசா. (அபயம்)

சரணங்கள்

(௧) சரணமணிந்த சுகந்தரனே - இயவிய
சொரூபமலைமடந்தை மருவுஞ்சுந்தரனே. (அபயம்)

(உ) அகமும்புறமு முறைபவனே - உயர்
நிகமமுடிவினி லெஞ்ஞான்றும் வாழ்பவனே (அபயம்)

(௩) அரநதியணிந்த முக்கணனே - மன்றிற்
பரதநடம்புரியும் வரதசற்குணனே (அபயம்)

(௪) தவத்தி னர்க்கருளும் தற்பரனே - தொண்டர்
பவத்தை யகற்றுந்தொழில் படைத்த சங்கரனே (அபயம்)

இயமன் மார்க்கண்டரைத் தன்னூர்க்கழைக்க இவர்மறுக்க அவ்விருவருக்கும் நடந்த சம்வாதமும் இயமன் தன் பாசத்தைவீச எடுத்தலும் மார்க்கண்டர் அமுதலிங்கத்தைத் தழுவி முறையிடலும்.

விருத்தம்.

மறையொடுமவ் வாறுமைந்தன் றுதிக்கும்போதின்
மறலியம படர்களுட னருகில்வந்து
திறமிகுந்த சிவபூசை வேளைபார்த்துத்
திக்கரடி புகுந்ததுபோற் சினந்துநோக்கி
யிறைவனுனக் கன்றளித்த பதினாறாண்டு
மேற்கனவே தீர்ந்ததென் னூர்க் கெழுவாயென்ன
உறுதிகொண்மார்க் கண்டனதை மறுத்திடக்கேட்
டொருஞ்சொல்வான் சமன்கடிந்துக் கரஞ் சொல்வானே. (௧௧)

விருத்தம்.

மிண்டியெதிர் நின்றுமிரு கண்டமுனி மைந்தனை
வெகுண்டு சமனுறும்நோக்கி
விப்பிரகு லத்ததனி லுற்பவித் துச்சகல
வேதமுறை யாகமங்கள்
விரிவொடு முணர்ந்துமன தறிவிலா வெறியர்போல்
விதிவலி யகற்றி யிந்த
பேதினியி லழியா திருக்கலா மெனமதிக
வீணசைகொள்ளவேண்டாம்
அண்டர்பணி யரனையர்ச் சிக்கின்றபலனுன
தரும்பவ மொழிப்பதல்லா
லாசற்ற நமதுகர பாசமதைவீசினு
லெப்படி யதனைனுகராது
ஆற்றுமண லினையெண்ணி முடிப்பினு முயிர்ந்
தவர்களைக் கிடவொணது

ஆதலா லுதைமறுத் தேதயிரி யங்கொடென்
னருகிலினி வருவையானல்
வண்டுலவு தண்டுழா யவனுலகை வேண்டினு
மலரவனு லகைவேண்டினு
மருவுலவு தருநிழலை வேண்டினுந் தடையின்றி
மனதுவந் தருள்புரிகுவோம்
மைந்தனே வாவென விரைந்திட நகைத்துபதி
மார்க்கண்ட னவனைநோக்கி
வாய்ந்தசிவ னடியார்க ளாய்ந்தழு வுலகினையு
மதியார்க ளுனைமதியார்
சண்டனே தொண்டையுப்ப வறண்டனது நாவது
தடித்தெரிவு கொள்ளாமலே
தடையின்றி நீவந்த நடவையைத் தேடெனத்
தணலென முனிந்தெழுந்தே
தாககியம பாசமதில் விக்குதற் கவனுறத்
தனையனுள மலையாமலே
தனதிரு காத்திரு லமுதலிங் கேசனைத்
தழுவிமுறை யிட்டனனரோ. (கஅ)

(உரு) கீர்த்தனம் இராகம் - செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

மிர்த்யுஞ்ஜெயா - ஓ - மிர்த்யுஞ்ஜெயா.

அநுபல்லவி.

மத்தமுயலகன்ப - தைத்துநடுங்கவுட
லத்திலொருபதாப்ப - தித்துநடம்புரிந்த (மிர்த்யும்)

சரணங்கள்.

(க) பத்திசோ தனைகருநான் தரமல்லவே - சிவ
பரனே யெனக்குவேறு - தரமில்லையே - பரு
மத்தினிடைதயிர்போ - லெய்த்துடைந்து நொந்துச
லித்தென்னுளப்பரத - வித்துருகுதென்செய்வேன் (மிர்த்யும்)

(உ) முந்தநீதந்தவரம் பொய்யாமலே - பூசை
முயற்சிக்கோரிடையூறு செய்யாமலே - சற்றுஞ்
சிந்தையறிவில்லாத வெந்தறுகணனை
அந்தகன்பயந்தோட வந்துதவிசெய்குவாய் (மிர்த்யும்)

(௯) பாசத்தைவீசுவேனென் றுறுக்குறுனே - யம
படர்களைக்கொண்டென்றனை யொறுக்குறுனே - சிவ
கோசத்திருந்துவீரா வேசத்துடனெழுந்து
மோசச்சமனைவென்று நேசித்தெனைரெக்ஷிப்பாய். (மிர்த்யும்)

இயமன் பாசத்தைவீசி மார்க்கண்டரை இலிங்கத்தோடு சேர்த்திழுக்க சிவன் இலிங்கத்திருந்து பிரளயகால உருத்திரராயெழுந்து இயமனை உதைக்க அவன் இறத்தல்.

விருத்தம்.

பத்திமைந்தன் மகமுறையிட் டலறமீரிற்
படிறெமனும் பாசமதை முடுகிவீசிப்
பித்துநடங் காதிலிங்கத் துடனே சேர்த்துப்
பிணித்துமைந்தன் றனைச்சுருக்கிட் டிழுக்க ஈசன்
சித்தமகிழ்ந் திளவலையா தரிக்கலிங்கத்
திருந்துதிடு திடுதிடெனப்ரளயகால
ருத்திரனு கிச்சினங்கொண் டெழுந்துகாலா
லுதைக்கின்றான் வீழ்ந்தெமனும் பதைக்கின்றானே (௧௧)

(உசு) கீர்த்தனம் இராகம் - கல்யாணி— ஆதிதாளம்.

பல்லவி.

மடிந்தானே அந்தகன் - மண்ணிற்
படிந்தானேமலைபோல்.

அனுபல்லவி.

திடங்கொள் சிவபத்தனென். - றடங்காமல் மதிகெட்டு
சினத்துடனே சென்றெதிர் - முனைத்திட்டகமே விட்டு
நடுங்கக்காலபாசந்தொட் - டிடஞ்சல் செய்ததைத்தொட்டு
கடித்தெழுந்தருத்திர னிடக்காலாலுதைபட்டு (மடிந்தானே)

சரணங்கள்.

(க) வனத்தனிந்திரன்முதல் - அனத்தனமரர்களும்
வாய்புலர்ந்தரண்டெ லொடுங்கவும் - வனங்
கனத்தபுவியண்டங்க - ளனைத்துமதிர்ச்சியொடு
கலங்கிக் கிடுகிடென நடுங்கவும் - முனைக்
கனற்பொறியாலகில கோடிகளும் வெடிக்க
கயங்கித்திக்கயங்களு மயங்கிக்கிலி பிடிக்க
புனற்கடலும் வறண்டிட் - டுடுக்குலமுந் துடிக்க
புயங்கமெட்டுமெதுங்கித் தியங்கிக்கலாணீர் வடிக்க (மடிந்தானே)

(உ). சூழ்ந்துதனைப்பணிந்து - தாழ்ந்தருகிலிருந்த
துணைக்கிங்கரர்களுயிர் பறக்கவும் - புகழ்
வாய்ந்தமைந்தனெதிரிற்-காய்ந்தெமனேறிவந்த
மகிடவாகனமும்பட் டிறக்கவும் - விசை
ஓய்ந்துதொண்டையும் நாவுங்-காய்ந்து மதிமருண்டு
உண்ணினைவுமறந்து - கண்ணொளியுமிருண்டு
வீந்த மரவட்டைபோற் - சோர்ந்துடலஞ்சுருண்டு
விடவிடெனப்பதறிப் படியிற்புரண்டுருண்டு (மடிந்தானே)

(௩) அத்தனடியவர்ம-கத்துவத்தையுஞ்சிவ
னருளையும்வியந்து கொண் டாடியே - தவச்
சித்தருமுரகரும் வித்தியாதரர்களுந்
திரண்டெழுந்து கீதங்கள் பாடியே - மிக
நத்தியன்புடன்கைகு - வித்துத்தொழுதுமெள்ள
நயந்துள்ளமோடுருகி-யுயர்ந்த மறைகள்விள்ள
கர்த்தன் வரப்பிரசா-தத்தினாலே முன்னுள்ள
சண்டமுமொழிந்துமார்க் கண்டனெழுந்துதுள்ள (மடிந்தானே)

தன்னைத் துதித்த மார்க்கண்டர் என்றும பதினாறுவயதாயிருக்கவும் இச்சரிதையைப் படிப்போர் கேட்போர் ஸந்ததி, செல்வம், ஆயுள்முதலிய தழைத்தோங்கவும வரமருளி ஈசன் திருவுருமறைதல்.

விருத்தம்.

அந்தக னிவ்வா றிறந்தன னப்பால்
அடியரிற் சிறந்தமார்க் கண்டன்
ஆதிநூ லான வேதவாக் கியத்தா
லரன்புகழ் யாவையுந் தொடுத்துச்
சந்தமோ டிசைப்பா வினஞ்சொலித் துதிக்கச்
சதாசிவ னுளங்களிகூர்ந்து
தடையின்றி நாளு மெண்ணிரண் டாண்டு
தரணிவா னுலகமுள்ளளவும்
மைந்தனே வாழ்தி யெனவருள் புரிந்து
மலரடி முடிமிசை சூட்டி
மகிழ்ச்சியோ டினது சரித்திர மதனை
வழுத்துவோ ரறிவொடுங் கேட்போர்
சந்ததி யுயர்வான் செல்வமோ டாயுந்
தழைக்கவென் றனுக்ரகம் புரிந்து
தருநிழலமரர் மருமலர் சொரியச்
சங்கர னுருமறைந் தனனே. ([illegible])

பிறகு மார்க்கண்டர் அனேக தலங்களைத் தெரிசித்துக் கடக நகர் சென்று தாய் தந்தையரைப் பணிய அவர்கள் மகிழ்தல்.

பின்னும் விருத்தம்.

பனகபூ டணரிலிங்க மதனுட்சார்ந்தார்
பாசுபத மார்க்கண்ட முனிவன்றானும்
இனியசிவ தலங்களெலாம் பணிசெய்தேத்தி
யீன்றருள் தாய் தந்தையரைக் காண வேண்டி
மனதுவந்து கடகநக ரதனைமேவி
வளமிகுமாச் சிரமதனிற் புகுந்தபோது
தனையனைக்கண் டிருவர்களு மகிழ்ந்தா நந்தந்
தாங்கினா ருளக்கவலை நீங்கினாரே. (௬௫)

(உஎ) கீர்த்தனம். இராகம் - சுருட்டி — திரிபுடைதாளம்.

பல்லவி.

திருக்குமாரன்றனைக்கண்டு வந்தாரே-கையாற்
சேர்த்தணைத்துட னுச்சிமுகர்ந்தாரே.

அனுபல்லவி.

உருத்திரனருள்செய்த-வரத்தினாலேமிகுந்த
உரமும்பெற்றழிவிலா வரமும்பெற்றெதிர்வந்த. (திரு)

சரணங்கள்.

(௧) அருப்பொருளானவுன்னைப்-பிரிந்தெங்கள் மனந்தாழ்ந்து
ஐம்புலனுங்கலங்கித்- துன்பவாரியில் - வாழ்ந்து
திருந்துபதினாறென்று-நிறைந்திடவறிந்துள்ளந்
தியங்கிப்புவியில் வீழ்ந்து - நாங்கள்
வருந்திப்படிந்திடாமுன் - விரைந்தருகிலடுத்து
மனத்துயரங்களெல்லா மகலும்படிவிடுத்து
பொருந்தும்பரமானந்தப் - புணரிதனில்மடுத்து
போற்றிமாதரித்தாயென் - றேத்திமுத்தங்கொடுத்து (திரு)

(௨) அடுத்தெமனைக்கண்டுள்ளம் - துடித்துப்பயப்பட்டதும்
அரன்றனைநினைந்தன்போ - டிரங்கிமுறையிட்டதும்
தடுத்துத்தனையாட்கொண்டங் - கடக்காலினாலெமனைத்
தாக்கியுதைத்து விட்டதும் - பின்னும்
கடுக்கண்டரினியையோ-டனுக்கிரகங்கள் புரிந்து
காத்தருளிசைந்ததைச் சாற்றிடவுந் தெரிந்து
வடுப்படாமல்வர் தாயே மகனேயெனப் பரிந்து
மனத்தினுக்கடங்காத-மகிழ்ச்சிக்கண்ணீர் சொரிந்து. (திரு)

(௯) அழற்கண்புலிக்குத்தப்பிப்-பிழைத்ததுபோலெந்தாயே
அந்தகனைவென்று சிறந்திசை மிருந்தாயே
மழுக்கையாறுலென்றும்-வாழ்வுபெற்றிருவர்க்கும்
மகிமை மிகவுந் தந்தாயே - என்று
தழைக்குமாசிமுறையா-னுரைத்தருமை பாராட்டி
தகைமைபொருந்துமன்போ டகமகிழ்ந்து சீராட்டி
இழைப்பொன்னணிகளலங் கரித்துப்பணிசீ ராட்டி
இனித்தபாலடிசிற் பொற்கலத்திட்டன்புட னூட்டி (திரு)

பிறகு மார்க்கண்டர் காசி கைலை முதலிய தலங்கள்
சென்று தவத்திற் சிறந்தவராதல்.

விருத்தம்.

மருத்வதியு மிருகண்ட முனிவன்றானும்
மார்க்கண்ட னுடன்குலவி வரிசையாகக்
கருத்துவந்து மனையில்வசித் திருந்துசின்னாள்
கழிந்தபின்பு தந்தைதாய் விடைபெற்றேகித்
திருத்தமிகு விசுவேசர் தனைப்பூசித்துத்
திருக்கயிலை யடைந்தரனைத் தொழுதுபோற்றிச்
சுரற்குரிய தலங்களெலாம் பரிவினோடு
சுற்றினன் றவநெறியின் முற்றினனே. (௩௯)

எமனிறந்ததால் பூபார மிக, விஷ்ணுவும பிரமனுய அரனிடம் முறையிட அரன் எமனை எழுப்பி விபூதி உருத்திராக்ஷம் தரித்துப் பஞ்சாக்ஷரம் ஜபிப்பவர் பால் அணுகாதிருக்க ஆக்ஞாபித்தல்

(உ௮) தீபகை. இராகம் - தோடி—ஆதிதாளம்.

(க) உத்தமமுனிமகன் சிவன்பெருமையை
உணர்ந்தகல்வெளியெங்கு நிறைந்தானே - ஸதா
நித்தியதரிசனங் கொடுத்தன்பர்கள்கண்
ணினைவினுமிடைவிடா துறைந்தானே.

(உ) இத்தராதலமெங்குந் தானுயிருந்து
எண்ணில் பிரமகற்பங்கண்டானே - சீவன்
முத்தராஞ்சிவ பக்தகணங்களுக்குள்
முதிர்ந்தபுகழ் படைத்துக்கொண்டானே.

(ட) எமனிறந்தத னுன்மண்ணி லெண்பத்திரான்
இலக்கஞ்சீவராசி மடியாமல் - அந்த
அமிதபாரம தாகியசுமைதனைப்
புவிமடந்தை சுமக்க முடியாமல்.

(ச) வந்துமுறையிட லுந்தெரிந்துடன்றிரு
மாலயன்சிவனடி போற்றினர் - நேரில்
அந்தகனையெழுப் - பிப்புவிபாரத்தை
அகற்றவேணுமெனச் சாற்றினர்.

(ரு) சிந்தைகூர்ந்தர - னெமனையழைக்கவுயிர்
தெளிந்தவனருகில் வந் துதித்தானே - உயர்
சந்தமாமறை - யாலரனடிமலர்
தாழ்ந்திசையொடுஞ் சொல்லித் துதித்தானே.

(சு) அத்தனவனையு - ற்றுக்கண்டிகைபூதி
அணிந்தஞ்செழுத்தைச் சொலி யுருவோதும் - பிர
சித்தரெனது - வத்ரென்றவர்வசித்
திருக்குந்திசை யினி லொருபோதும்

(எ) அக்கிரமத்துட - னேயந்தவழியனு
காமனன்னெறியொடு யினிநீயே - உன்
தெற்குநகர்சென்று - னக்குரியதொழிலைத்
தீர்க்கமுடன் செலுத்தி வருவாயே

இயமன் தன்னகரம் சேர்ந்து மார்க்கண்டன் சரிதையைப் படிப்போர் கேட்போரிருக்கும் திசையைக்கூட எட்டிப்பார்க்காது முன்போல் அரசு புரிதல்.

விருத்தம்.

மழுவுடையா னிவை கூறப் பிழைத்தெழுந்த
மகிட வா கனமுமெம படருஞ்சூழ
விழைவுடனின் றரனடியைப் பணிந்து போற்றி
வியப்புடன்றன் னகரடைந்தங் கெழின்மார்க்கண்டன்
றழைவுறுநற் சரிதைதனைப் படிப்போர் கேட்போர்
தனிப்பரம னடியரென்றத் திசைநோக்காமற்
பழையபடி யதிகாரஞ் செலுத்திச் செங்கோற்
பண்புற்று னுவந்துசம னின்புற்றானே. (கஎ)

காசிபர்சொற்படி நல்லதபசைச்செய்ய சித்தமாயிருந்த சூரன் முதலியோர் மனதை மாயைகலைத்து செல்வம் சௌரியம் முதலியவைகளை அடைந்து தேவர்களை அழிக்கும் வழியைத்தேட வேண்டுமெனல்.

விருத்தம்.

இக்கதையைக் காசிபனிவ் வாறு கூற
விணங்கிமைந்த ரனைவர்களும் வணங்கி நின்று
தககமதி யுரைத்தீரப் படிக்கே நாங்கள்
தவம்புரிந்து வருகுவமென் றெழுந்த போதி
லக்கணமே மாயைநகை புரிந்து சேய
ரனைவரையும் பார்த்துலகிற் செல்வங் கீர்த்தி
மிக்கசுகங் கனதைமென்மே லுயரு மான
விதஞ்சொல்வே னெனமறுத்திவ் விதஞ்சொல் வாளே. (கஎ)

(உகூ) **கீர்த்தனம் இராகம் - பியாகு—ஆதிதாளம்.**

பல்லவி

சூரர்களே நேரே - என்
சொற்படிசெய்வீரே

அனுபல்லவி

தீரமும்பெற்றியும் - வீரமும்வெற்றியும்
திருந்தும்படிக்குப்புத்தி - பொருந்துஞ்செய்கையைத்திச் (சூரர்)

சரணங்கள்

(௧) செல்வப்பொருள்களிலுங் கல்விப்பொருள்சிலாக்யம்
தெள்ளத்தெளிந்ததனைக் கொள்ளுவதேமனோக்யம்
அல்லலகற்றிநாளும் நல்குஞ்சகலபாக்யம்
ஆர்க்கும்புகழ்ச்சிதந்து சேர்க்கும்போகபோக்யம் (சூரர்)

(௨) அஸ்த்ர சஸ்த்ரவித்தைகள் யாவும்படித்துத்தேர்ந்து
அடல்சேர்கரிமாவேற்றம் அணிரதங்களுமூர்ந்து
சுற்றுந்தொழிலுமல்ல யுத்தங்களிலுஞ்சார்ந்து
தொடுத்தகாரியமெல்லா முடித்திடும்படிக்கோர்ந்து (சூரர்)

(௩) பகல்வெல்லுங்காகத்தைக் கூகையிரவில்வென்று
பழிக்குப்பழிகள்வாங்கும் பழக்கம்போலெதிர்நின்று
சகலதேவர்களெனும் பகைவேர்களைந்துகொன்று
சத்ருசேடமின்றித்தொலைத்திடுவதேநன்று (சூரர்)

மாயை, சூரன் முதலியோரை வடதிசைசென்று பரமசிவனை நோக்கி வேள்வி செய்யச்சொல்லி அவர்களுக்கு வஞ்சனையுற்ற மந்திரதந்திரங்களையும் கற்பித்து மறைந்திடலும், அவள் பிரிவை நினைந்துவருந்திய காசிபரைப் பிரமதேவர் தேற்றியபின் அவர் தவத்திற்கேகப் பிறகு சூரன் முதலியோர் சுக்கிரபகவானிடம் உபதேசம் பெற்று ஓமகுண்டங்கள் வகுத்து வீரயாகம் செய்தல்.

விருத்தம்

மாயையிச்ச விதங்கள்சொல்லித் தவமியற்ற
வளம்பெறுமுத் தரபூமி சென்று நீங்க
ளையமுடன் விரிவுளதா யோமகுண்ட
நிறுவியே பலசமித்தா லழல்கள் மூட்டி
ஆயபல பண்டமாங் கிசங்கள் சோரி
யாகுதிகள் புரிந்தரனை த்யானஞ் செய்தாற்
றூயபலன் முழுதுங்கை கூடுமென்றுள்
ஆதிகொண்டா ரன்னைசொல்லை மதிகொண்டாரே. (கஅ)

பின்னும் விருத்தம்

வாதுறுமந் திரங்களுந்தந் திரங்களுமெந் திரங்களுநல்
வகையாய்க் கற்கப்
போதுமென மாயைசொலி மறைந்திடக்கா சிபன்கலங்கிப்
புலம்பும் போது
வேதனுந்தேற் றிடத்தவத்துக் கேகினனப் பாற்சூரன்
வேள்வி செய்யுஞ்
சேதியைசுக் கிரபகவா னோர்ந்திட்டா னவவிடம்போய்ச
சேர்ந்திட் டானே. (க௯)

(ருய) திபதை. இராகம் - ஸாவேரி—ஆதிதாளம்

(க) வந்தகுலகுருவைக் - கண்டிறைஞ்சியேசூரன்
மகிழ்ந்துமணியாசனம் கொடுத்தானே - பல
தந்த்ரமனுவின்படி - பூசனைசெய்து முடித்
தலைவணங்கியருகி லடுத்தானே.

(உ) அடுத்தசூரனைக்கையா - லெடுத்தணைத்துச்சுக்கிரன்
ஆசிமொழிகள்சொல்லித் துதித்தானே - நீ
தொடுத்தபடியேவேள்வி - முடித்துத்தேவரைவெல்லுஞ்
சூழ்ச்சிசொல்வோமென்றன்பு கதித்தானே.

(௩) கதித்தமனுவிஞ்சைக - ளனைத்தையும்விவரமாய்ச்
காதிலுபதேசித்துப் புகழ்ந்தானே - நெஞ்சிற்
பதித்துக்குருமொழியை - மதித்துநமக்கிதுவே
பாக்யமென்றெண்ணிச்சூரன் மகிழ்ந்தானே.

(௪) மகிழ்ந்துசயினியங்க - ளனந்தஞ்சூழவெழுந்து
வடதிசைசென்றணிகள் தொகுத்தானே - அங்கே
தகுந்தவடரிழலி லயுதயோசனைக்குள்விஸ்
தாரவோமகுண்டங்கள் வகுத்தானே

(௫) வகுத்தனேகஞ்சூரரை - மிகுத்தகாவலாய்ச்சூழ
வைத்தனேகமலைகொண் டடுக்கியே - கோட்டை
பகுத்தணியாகவே - பருத்தசாமத்திருளைப்
பக்கமெங்கினுஞ்சுற்றி யடுக்கியே.

(௬) அடுத்தசூரர்க்குத்தாரங் - கொடுத்துமதிளைச்சுற்றி
அடவியெனவேம்வலி பொருத்தியே - வலி
திடத்தநவசத்திபத் - திரசாஙரியையுமுருச்
செபித்துக்காவலாகவே யிருத்தியே.

(௭) அஷ்டவயிரவரைக் - கிட்டியிருக்கச்செய்தோ
ரயுதஞ்சூரர்க்குத்தாரஞ் சொல்லியே - மண்
வெட்டுங்கருவிகொண்டு - தொட்டகழிக்கிடங்கு
மிகுபாதலம்வரையிற் செல்லியே.

(௮) பாதலக்கங்கையஞ்ச - ஆதிசேடனுநெஞ்சம்
பதறவஷ்டகஜமு நடுங்கவே - இந்தப்
பூதலத்திலெவர்க்கும் - பாதைகண்டுபிடித்துப்
போகவழியில்லாம லொடுங்கவே.

(௯) அஷ்டகோணயாகநூற் - றெட்டுவேதிகையொவ்வொன்
றுயிரம்யோசனையி லமைத்தானே - பின்பு
நட்டநடுவின்மூன்று - வேதிகையுமிசைத்து
நான்குவாசலுநன்றாய்ச் சமைத்தானே.

(௰) சத்திதனைமனதி - னத்திப்பரமசிவன்
தன்னைச்சுழிமுனையி லுன்னியே - ஏக
சித்தமுடன்யோகாச - னத்திலிருந்துதவத்
தியானஞ்செய்தானேயருள் துன்னியே.

விருத்தம்.

சோதி மயமாய் வேதிகையுஞ் சூரன் வகுத்துத் தவம்புரிந்தான்
சொன்ன மலைபோற் பொற்குவையுந் துரங்கஞ் சிங்கம் புலியாளி
மேதி மதமா வசங்கள்முதல் விலங்கி னிறைச்சி விதவிதமாய்
விடஞ்சேர் சோரி மாங்கிசமும் வெறியார் கட்சா ராயமுடன்
சாதி நறுநெய் யெண்ணைகளுஞ் சமித்துத் தருப்பை யட்சதையுஞ்
சமைத்த கறியோ டனக்குவையுந் தயிர்பால் மோர்தாம் பூலமொடு
கோது குறைவில் லாதபடி கொடுத்தே மாயை மறைந்து சென்றாள்
கோர வசுரன் வேள்விசெய்யக் குறித்தே நியமம் பதித்தானே (சய)

(௯க) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்கிரியை—ஆதிதாளம்

பல்லவி.

சூரன்வீரவேள்விசெய்தான் - மாயைசொற்படி (சூரன்)

அநுபல்லவி.

சோரிமுதலாங்கருவி - சாரிசாரியாய்க்குவித்துச்
சுற்றியோமகுண்டமதைப் - பத்திபத்தியாயமைத்துச் (சூரன்)

சரணங்கள்.

[ங்கட்டித்
(க) சிற்பரனைநோக்கியேயவங் கற்பஞ்செய்துபவித்திரந் தரித்து - கங்கண
[க்ஷாமிக்
திக்குபந்தனங்கள்செய்த தற்குதவியானவரை வரித்து - வீரல
கொப்பும்படிக்குப்பலி கொடுத்துமுபசரித்து
உக்ரமமந்திரங்கள்மு ழக்கியேயுச்சரித்து
கற்பனைமிகுந்திடும்பூ தப்பிசாசங்கட்கிரத்தங்
கலந்தோதனங்கொடுத்துப பலன்பெறவேயடுத்துச் (சூரன்)

[றும்
(உ) அஷ்டவயிரவருக்கு மிஷ்டமுடனேபலிகளூட்டி-குண்டங்கள்தோ
அட்டமாங்கிசங்கள்மது விட்டுக்கடுங்கனலினைமூட்டி-தாரகன்றன்னை
திட்டமாயோரோமகுண்டத் திற்கருகிலிருத்தி
சிங்கமுகனையோரோம குண்டத்தினிலிருத்தி
சட்டமுடனர்ச்சனைசெய் திட்டுமெய்வாய்மனமொன்றாய்த்
தற்பரன்றனையேவாழ்த்தி மெய்ப்பணிவிடைசெய்தேத்தி (சூரன்)

(ஞ) நச்சுமரத் துச்சமித்தோ டெச்சமதில் மதுவையுஞ்சொரிந்து மலைமலையாய்
நவவிததானியங்க ளொடுகெட்டாகுதியும் புரிந்து செய்யுமோ
மெச்சியேகுண்டத்தழல்வா னுச்சிவரையிலுமெட்ட [மத்தால்
மேலுலகுங்கீழுலகுஞ் சாலவேபுகைகள்முட்ட
வச்சிரதரனுங்கண்ட யர்சசியுடனே நடுங்க
வானவர்க்குள்ளங்கொதிக்கத் தானவர்க்கின்பங்கதிக்கச் (சூரன்)

இவ்விதம் பதினாயிரம் வருஷம் தவமியற்றியும் பரமசிவன் வராததனால் சூரன் பின்னும் ஆகாயத்திலிருந்து ஆயிரவருஷம் கடுந்தவம் புரிய அதற்கும் ஈசன் இரங்காததால் அவன் ஓமகுண்டத்தில் விழுந்தழிய அதற்குவருந்திய சிங்கமுகன் தனது தலைகளை ஒவ்வொன்றாய் அறுத்து ஆகுதிசெய்ய பரமசிவன் நேரில்வந்து சூரபதுமனை எழுப்பி வேண்டியவரங்களை அளித்துத் தமது சக்தியின்றி அவனுக்கு அழிவில்லை என்று அருளித் திருவுருமறைதல்.

விருத்தம்.

பகுத்தெழுங் கொடுந்தீயென் ஞாயிரம்யோசனைபோய்
மலைவன்மா யவன்முதலோர் மயங்கிடவென் றுண்டு
சகத்திரம்பத் தாகியும்பின் பரமன்வர விலையால்
தனித்துவிண்ணி லிருந்துதச சதவருட முயிரோ
டகத்தைவெறுத் துதிரமொடு சதையையுமங் கோமத்
தழலிடலும் வரவிலையென் றடல்மிகுவெஞ் சூரன்
சிகித்தழலின் வயிரகம்ப முனையில்விழுந் தழியச்
சிங்கமுகன் தெரிந்தலறிப் பொங்கியழுதனனே (சக)

நிலைமண்டில ஆசிரியப்பா.

வெங்கனனசுரன் வீய்ந்திடல்கண்டு
சிங்கமாமுகவன் திகைத்துளம்பிண்டு
ஐயயோவென்ற னருந்துணைவோனே
வெய்யரிவாயினில் வீழ்ந்தழிவானே
வரந்தரவெதிரே வந்திலாத்தாயோ
னரன்றனைத்தேடி யலைந்துநொந்தாயோ
தானவர்க்கெல்லாந் தலைமைமன்னவனே
ஏனையோரெங்கட் கியைந்தமுன்னவனே
பலமிகுமமரர் பழித்திடலாச்சே

தவமெலாம்வீணோ அவமதாய்ப்போச்சே
எனப்பலவிதமா யிகற்சிங்கமுகனும்
நினைத்தழும்போது நேர்ந்துதாரகனும்
சாலையிற்புரண்டு தளர்ந்துவாய்ப்புலம்பி
பேரெலாங்கண்ணீர் விட்டுடலலம்பி
கோட்டினால்நிலமெலாங் குத்தியேயுதறிட
கூட்டுறுமவுணருங் கோவெனக்கதறிட
பாய்மரமிழந்த பருங்கலம்போலும
தாய்முகங்காணாச் சவலையைப்போலும்
அரசனையிழந்து அவனியில்நண்ணி
வரிசையோடிருப்பது வசையெனவெண்ணி
ஆயிரந்தலையோ டமர்ந்தசிங்காசுரன்
மாயிருப்புவியில் வளம்பெருகீசுரன்
ஒழுங்குறுதலைகளை ஒன்றொன்றாய்வீட்டியே
கொழுந்தெழுமக்கினிக் குண்டத்துக்கூட்டியே
செகுத்திடச்செகுத்திடச் சிரமதுதளிர்த்திட
மகத்துவமனுச்சொலி மண்டெரிக்களித்திட
விரைவினிற்கயிலையை விடுத்தருளுவந்து
பரமனுந்தெரிந்து பழிக்கஞ்சிவந்து
நஞ்சரிமுகனை நயஞ்சொலித்தடுத்து
அஞ்சலென்றன்போ டபயமுங்கொடுத்து
மங்கியசூரனை வாழ்விக்கவிரும்பி
கங்கையையழைக்கவக் கன்னியுந்திரும்பி
வந்தரனடியை வணங்கியேயிருந்த
செந்தழன்மகத்திற் சென்றவள்புகுந்த
போதினிற்சூரன் புலனொடுதழைத்து
மேதகுசொரூபம் விளங்கவேபிழைத்து
வந்தடிபணிந்து மகிழ்ச்சியும்பெற்றவன்
நந்தியோடரனை நாடியங்குற்றபின்
புண்டரீகத்துறை போதனுமொடுங்க
விண்டுவேமுதலாய் விண்ணவர்நடுங்க
வீரமுந்திறமும் வெற்றியுங்கதிக்க
ஈரேழுலகமும் இறைஞ்சியேதுதிக்க
வச்சிரகாயமு மனத்திடையூக்கமும்
இச்சையின்படிதனக் கிணையிலாவாக்கமும்
புற்புதம்போன்ற பொறிபுலனைந்தையும்

அற்புதமாகவுள் ளடக்கித்தலைஞ்செயும்
சீலர்கள்முதலெண் டிக்கினுக்குரிய
பாலர்களெல்லாம் பணிவிடைபுரிய
வஞ்சமுஞ்சாலமும் வாய்ந்ததந்திரங்களும
விஞ்சைகள்முதலாய் விளங்குமந்திரங்களும்
சக்கரம்பிண்டி சகலசஸ்திரங்களும்
உக்ரசங்காரத் தொலிக்குமஸ்திரங்களும்
வானமும்புவியு மயங்குமோகனமும்
தீதிறவிழிசேர் சிங்கவாகனமும
அகந்தனினினைத்த அண்டங்கள்நிதமும்
இகழ்ந்துபோய்வருமந் திரஞாலரதமும்
அரும்பாசுபதமும் அபேத்தியகவசமும்
தரந்தரமான தனிக்கொடித்துவசமும்
பகையையேவாகளைந்து படைகொண்டுவெட்டி
அகலுமாயிரத்தெட் டண்டமுங்கட்டி
உகந்துநூற்றெட்டு யுகங்களிசார்ந்து
இகழ்ந்திடாரெனத் திருவருள்கூர்ந்து
மக்களென்பெருமையை வியந்துகொண்டாடித்
தக்கதோர்வரமெலாந் தந்துமையாடி
இயற்சத்தியன்றியே யாவருமடுத்துச
செயக்கவொண்ணாதபோதித்தையுங்கொடுத்துச
சங்கரன்கயிலைச சயிலமுற்றனனே
பொங்கியேசூரன் புகழ்ச்சிபெற்றனனே (சஉ)

சூரன் சுக்கிரபகவானிடத்தில மாயமந்திரங்கள் உபதேசம் பெற்று திக்குவிஜயம செய்தல.

(௩உ) த்பதை. இராகம் - தோடி—அடதாளம்.

(க) அரனலருள்வரங்கள் பெற்றனே - சூரன்
அளவில்லாதமகிழ்ச்சி யுற்றனே - விண்ணில்
வெருவியமரரிதைக் கண்டாரே - தங்கள்
விதிவசமென்றுமனம் பிணடாரே

(உ) துணைவர்முதற்படைகள் கூடியே - வரச்
சுக்கிரனிருக்கையை நாடியே - மல
ரிணையடியைமுடியி லேற்றினன் - தனைக்
கீசனருளியதைச் சாற்றினன்

(௩) தூயகுருகேட்டின்ப மூறியே - கையார்
சூரனையணைத்தாசி கூறியே - கெடு
மாயமந்திரதந்திரவகை தானே - காதில்
வளமுடனுபதேசஞ்செய்தானே

விருத்தம்

தத்துவமாம் பரணிசசா சத்தி ஞான
சத்திகிரி யாசத்தி மூவா தான
நித்தியமாம் புவனத்தின் படைப்புங் காப்புஞ்
சிறவியசங் காரமெனுந் தொழிலை செய்யு
மத்துவித பனைத்தையுஞ்சூ ரனுக்குச் கூறி
அண்டமதி சரியற்கையெலா மளவிட் டோதிப்
புக்கிவிஞ்சை மனுவுமைத்த குருவைப் போற்றிப்
புகழ்ந்திட்டான் சூரனுள்ளந் திகழ்ந்திட் டானே (௨௩)

(௩௩) கீர்த்தனம், சந்ததநா இராகம் - மத்தியமாவதி—சாப்புதாளம்

குருவாய மொழிபோ தமெனசசி ரசினிற்கொண
டொருதா யெனுயா யையிடத்தி னிதுசென்று
திறமும் தவமகிமை யுரமும சிவனருள்செய
வரமும் சரிவரவி வாமுட னேத
மகனே யினியா னவை ச ய பாசெய்த்துத்
திசையா யையுமோர் குடையிற் கயிலணைத்துத்
திருவும் வியனுறையைந் தருவும சுரபியெழில்
மருவு மணியின்வகை யுருவொட னேக
விதமா கியபோ ககுகவை பவமும்பெற்
றளகா புரியா ளரசைச் சமரில்வென்று
நலமு மினிவிசைய பலமும் அதிகபுஜ
பலமும் தனிமது குலமுமெந்நாளும்
அழியா வகைநா னுதவித் துணைபுரிய
வருவேன் புதல்வா வெனவுத் தரவுரைத்த
அனையின் பதமலர்வந் தனையும் புரிந்துதார
கனையு மரிமுகவன் றனையு மனேக
சதகோ டிகளா மசுரப் படையுங்கைக்கொண்
டிடியோ லவேபே ரிகைமத் தளமொலிக்க
மலையுங் கடலிலெழு மலையும்திசையின்கா
மலையுந் தமதுநிலை குலையவுயாதி

சிவனு னவனீ றுசெயப்ர ளையருத்ர
னெனவே வருமா றெனவுக்ர மமிருத்த
கதமுங் கவனதுர கதமும் கரிகளோர
யுதமுங் கனகமணி ரதமுதலான
படையோ டளகா புரியைப் பொரவளைந்து
கொளவே மலர்வா கனம்வைத் தடிபணிந்த
தனதன் றனையுமிக மனஅன்பு தவிபோகி
தனையுந் துணையமரர் தனையும்போராடி
உடனே யவனூரையுமக்கி னிகொளுத்தி
அழலோ னெடுதெற் கெமனைப்பொ ருதிவென்று
இசையுந் திகழ்நிருதி திசையும புனலரசன்
றிசையும் கடுவனிலன் றிசையும்வென் றனனே

தாரகன் மஹாவிஷ்ணுவுடன் போர்புரிந்து அவர் சக்கரத்தைத் தன் கழுத்தில் ஆபரணமாய்த்தரித்தல்.

விருத்தம்

திக்குகளெ லாம்வளைந்து விசையங் கொண்டு
திறலவுணன் றம்பியொடு படையுஞ் சூழ
அக்கணமே கடலேழுஞ் சென்று தாவி
அங்குமுள தீவுகளெ லாஙகைக் கொண்டு
மிக்கபொரு ளானதையுங் கொள்ளை யிட்டு
மீண்டுதிருப் பாற்கடலிற் பள்ளி கொள்ளுஞ்
சக்கரத்த னிடத்தினிற்சென் றுறுமிச் சேனைத்
தளங்கொண்டான் தாரகன்போர் வளங்கொண் டானே.(சச)

(ருச) தீபதை இராகம் - ஆரபி—ஆதிதாளம்

(க) *சக்ரதரனுடனே தாரகாசுரன்மிகச*
சண்டைசெய்யவென்றெதிர் குதித்தானே - திரி
விக்ரமனுமதிக உக்கிரத்துடன்சின
மேவியவனுடன்வந் தெதிர்த்தானே.

(உ) *தீயபாதகனந்த மாயவன்மீதினிலே*
சிலைவளைத் துக்கணைகள் தொடுத்தானே - செழுங்
காயாம்பூவண்ணன்வெகு கணைகள்விடுத்திட்டந்தக்
கணைகளினை திர்வாராமல் தடுத்தானே.

(௩) சித்ரரதத்திலேறி மத்தன்சிலைகணைகள்
ஸ்ரீதரன்மீதுவிட்டுத் தாக்கினான் - மாயோன்
அஸ்த்ரவருஷம்பொழிந் தெற்றியவன்கணையை
அறுத்துத்தேர்தனையுந்து ளாக்கினான்

(௪) இரதநூளாகக்கண்டு மறுதேரிலேறிவஞ்சன்
இலக்கமற்றசர்ங்கள் விளைத்தானே - சிறைக்
கருடன்சரீரமதில் உருவிநுழைந்திரத்தங்
காணப்பக்ஷிராஜனும் களைத்தானே.

(௫) களைத்தவன்றெளிந்தெழுந் திடக்கண்டக்கணத்திலக்
கருடன்மீதிலச்சுத னேறினான் - கோபம்
விளைத்தவுணப்படைக ளனைத்துமடிந்துருள
மீறிவெருகணைகள் தூறினான்.

(௬) கரங்கள்சிரங்களற்று முரங்கள்புரங்களற்றுங்
கால்களற்றுமசுர ரழிந்தாரே - முன்பு
இரங்கியழுதுமெத்தக் கிரங்கியதேவர்விண்ணில்
இருந்துமலர்மழைகள் பொழிந்தாரே.

(௭) படைகள்மடிந்திடக்கண் டடற்றாரகன்றன்னுள்ளம்
பதறிக்கண்பொறிசிந்தத் துடித்தானே - பின்னும்
வடவிலையிற்றுயின்ற நெடியோன்மீதிலிரத்த
வாரிசோரக்கணைவிட் டடித்தானே.

(௮) வானத்தினில்நீருண்ட மேகத்தினிடையந்தி
வானத்தொளிசிறந்திட் டதுபோலே - நறுந்
தேனுற்றமலர்மங்கைபாகத்தனுருவம்
சிவேலென்றொளிமிகுந்தா னதனாலே.

(௯) நீலவண்ணனிவ்விதம் நாலுதினம்வரைய
னேகவிதஞ்சமர்கள் புரிந்தானே - தேவ
காலன்தாரகன்சலியாமற் சண்டைசெய்துபின்
கணக்கில்லாதசரங்கள் சொரிந்தானே.

(௰) பாரளந்தவன்கோடிபாணந்தொடுத்துவஞ்சன்
பரிதேர்வில் லையுமண்ணிற் பொடித்தானே - கடுங்
காரவுணன் வெகுண்டு சீறிக்கர்ச்சனைகொண்டு
கதையைத்தன்கரத்தினிற் பிடித்தானே.

(௰௧) பிடித்தவனெதிரில்வந்தடிக்குமுன்னம்புவிட்டுப்
பெலத்தகதையைத்துண்டாய் முறித்தானே - முறித்
தடுத்துப்பின்னுமாயன்சக் கரத்தைவிடுக்கக்கண்டத்
தணியென வேதாரகன் தரித்தானே.

தேவருலகமுதலிய உலகங்களை ஜயித்தல்.

விருத்தம்.

ஆனையுரி தரித்தசிவ னருளைப் பெற்ற
வவுணனுனக் கிணையாரென் றியம்பி யின்ப
மானபல துதியொடுசூ ரனையும் வாழ்த்தி
யவனியிலுங் களைச்சயிக்க முடியா தென்றே
தேனுறுபைந் துளவனும்பாற் கடலை நாடிச்
சென்றனனப் பாற்சூர னரியை வென்றோம்
வானவரைச் சயித்தனமக் கரிதோ வென்று
மதித்திட்டான் வானுலகிற் குதித்திட் டானே. (௬௪)

(௯௫) கீர்த்தனம். இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

சூரனிரதமிசைபடையொடுஞ்சென்றானே - பொன்னுலகென்னும்
சொற்கங்கள் முதற்பல - திக்கெங்கும்வென்றானே

அநுபல்லவி.

வீரமுடன்விருது கூறிமதமிகுந்து
விக்ரமங்கள்பாராட்டி - வக்ரதந்தத்தைக்காட்டிச் (சூரன்)

(௧) ஓங்குமுகில்களையும் ஆங்குறுந்தேவரையும்பிடித்து - ஆடுமாடுபோல்
ஓட்டிவிலங்குகளை மாட்டிச்சிறைக்கூடத்திலடித்து - வருத்தஞ்செய்ய
ஏங்கிமிகவும்பய மோங்கியமரர்கண்ணீர்வடித்து - நிற்பதனைக்கண்
டிந்திரனும்பயந்து வந்துபணிந்துநயம்படித்து - சூரனைநாடித்
தாங்கினவுடன்சினம் நீங்கியமரர்சிறை
தறித்துவேலைகள்செய்ய மறுத்துத்தரங்கொடுத்துச் (சூரன்)

[டுஞ்சி
(௨) உம்பருலகத்தைவிட் டம்புயனுலகினைநாடி - வரக்கண்
[துவில்
ஓட்டமாயெதிர்சென்றுன் பாட்டனென்றுறவுகொண்டாடி - துதிசெய்
அம்பிரதமுங்கொடுத் தின்பமுடனேயுரையாடி - உபசரித்த
[போதித்
அயனுலகந்தனைவிட் டுயர்மாயவனுலகிற்கூடி - கர்ச்சிக்கும்
செம்பொற்கருடன்மீதி லம்புயக்கண்ணன்வந்து
சிறந்தமுறைகள்சொல்லிப் புகழ்ந்திடலுமகிழ்ந்து (சூரன்)

[ன்று
(ஐ) கர்த்தன்சிவனுலகை நத்தித்துணைவரொடேறி - வேகமாய்ச்சே
களிறுமதங்கொண்டாற்போ லுவகையொடுமதைமீறி - வணங்கிநின்றங்
குற்றரனருளையும் பற்றண்டகோளமதிலேறி - கலித்ததைக்கண்
டுவந்துபூர்வதேவாவந் துறவுசொல்லலுமன்புகூறி - அங்கவரோடும்
பத்துடனொருகோடி ருத்திரரையுங்கண்டு
பகுத்தவர்கதைபுகருன்றத்திடத்துதிகொண்டு (சூரன்)

வீரமகேந்திர நகரைத் தனக்கு ராஜதானியாக அமைத்துச் சூரன் அரசுபுரிதல்.

விருத்தம்.

பெலத்தவுண ரிடர்புரியு மவகையைத் தேவர்
பெருமானும் பிரமனுமா யவனுக் கோத
வலுத்தவன்கீழ் வாழ்கவெ னும் பழமொ ழிக்கோர்
வழக்குமிலை யினியவனை வணங்கிக் காலங
தொலைத்திடுவோ மென்றவரோ டெழுந்து மாபோன்
துதித்திடக்கண் டுளமகிழ்ந்த சூரன் வானத்
தலத்துறையுந் தபதியினை யழைத்துத் தாரந்
தாக்கினு னகரமொன் றுண் டாக்கி னனே. (சகூ)

(நகூ) கீர்த்தனை இராகம் - பைரவி — ஆதிதாளம்.

பல்லவி

வீரமகேந்திரமெனும் பேர்வைத்தொருநகரம்
விதித்துச்சூரனரசுபுரிந்தானே

அனுபல்லவி

தாரணியிலெண்பதா யிரம்யோசனைவிஸ்தாரம்
தனஞ்செய்துதென்கடலில் அளவுசெய்துமந்நேரம்
ஏர்பெறுநவமணிச்சிலையால் மதிளவிண்மேலே
இசையும்படிவிதித்து விசுவகன்மாவினலே (வீர)

சரணங்கள்.

(க) சிலமிகுங்கோட்டைக்கு - நாலுவாசலும்விட்டுச்
சிகரகோபுரங்களுந் துலங்கவே - திரை
வேலைபோலவேயகழ் - கோலுங்கிடங்கிலுற்ற
விடப்பணியநந்தனுங் கலங்கவே - செழும்
நீலமணியிழைத்தசித்ரகூடங்களோட
னேகமாடமாளிகை யிலங்கவே - எழில்
ஏலுமுபரிகையின் காலுஞ்சுதைதையைக்கயி
லையும்பாற்கடலுங்கண்டு மலங்கவே - வச்ரத்
தாலுபரிகையிற்சா ளரவாசலும் வகுத்து
தனிநவரத்நச்சிங்கா சனமுமுடனமைத்து
கோலமணிமுகப்பில் மகமேருவும்பகுத்து
கொலுமண்டபத்திற்செம்பொற்பலகணியுந்தொகுத்து (வீர)

(உ) மனுமுறைவேதஞ்சொல்லி முனிவரமரர்வந்து
மகதாசீர்வாதஞ்செய்யுந் தானமும் - கூடித்
தனியேமந்திரிகளுடன் இனிதுடனேமந்த்ராலோ
சனைசெய்மண்டபமுமாஸ் தானமும் - வா
சனைசேர்குழன்மங்கையர்நடப்புரியும்நாடக
சாலைமண்டபமுமுத் யானமும் - கட
லனைய தகஜதுரகதங்களுக்குநிரை
யானகொட்டகையும்வி மானமும் - மல்லர்
முனைவாள்பயிலுமரண் மனையிலங்காபுரியும்
முடிக்குறுஞ்சிங்கமுகன் றனக்கசுராபுரியும்
கனிநாவற்றீவிற்றுர கனுக்குமாயாபுரியும்
கணித்தகிலங்கள்முதல் அனைத்தும்துதிபுரியும் (வீர)

(ந) அஷ்டதிசையாயிரத்தெட்டண்டமும்புகழ
அசுரர்ஜெயஸ்தம்பங்கள் நாட்டவே - தனக்
கிஷ்டமுடனமைச்சர்மட்டடங்காநவரத்
தினப்பொற்பணிகளெல்லாம் பூட்டவே - கோள
வட்டமெழுகடற்குட்பட்டதீர்த்தங்களெல்லாம்
வானவர்கொணர்ந்துநீ ராட்டவே - பன்னீர்
மட்டித்தகலவைச்சந்தனந்திமிர்ந்துவசந்தன்
மருமலர்கள்சென்னியிற் சூட்டவே - உயர்
சிஷ்டமறையோர்வேதகோஷமார வாரிக்க
செம்பொன்மணியிழைத்த கும்பஜெலம்பூரிக்க
அஷ்டவெட்சுமிசிங்காசனத்தில லங்கரிக்க
அணிசேர்சுக்கிரன்கையால்மணி மகுடந்தரிக்க (வீர)

(௬) பைந்துளவனும்அயனும்துதிபுரிந்திரு
பக்கத்திலுவந்துகொண் டாடவே - பூர்ண
சந்த்ரன்குடைபிடிக்கத்தன தனடப்பங்கட்டச்
சாமரைவருணனும் போடவே - பணிந்
இந்த்ரன்காளாஞ்சியேந்தயமனங்குசன்கட்டியம்
இயம்பநாரதரிசை பாடவே - இகழ்
கந்தமலர்க்குழலரம்பையபிநயங்
காட்டிமயிலெனநின் றாடவே - நிதம்
அந்தணனைப்பஞ்சாங்கம்சொல்லென்றருளிநோக்கி
அருக்கனிளங்கதிராயிருக்கக்கட்டளை தாக்கி
இந்துவைப்பூரணமாயிருவென்றுத்தர வாக்கி
எமவாதையன்றிநீக்கியாவும்தன்வய மாக்கி (வீர)

சூரபத்மன் முதலியோர் விவாகம்.

விருத்தம்

அக்கினியைப் பணிபுரிந்து குளிர்ச்சியொடு மிருப்பாயென் றாக்கைசெய்து
அநிலனையர் நகர்வீதிக் குப்பையெலாங் கூட்டிவள மாக்கசெய்து
மைக்கடல்வாய் வருணனையவ் வீதியிற்பன் னீர்தெளித்து வருகச்செய்து
வன்கணசு ரன்றெய்வ கம்மியன்பெண் பதுமகோ மளையோடின்னஞ்
சொர்க்கவுல கத்திலுறை கின்னராகிம் புருடர்முதற் றொகையிலாத
தோகையரா னேகரைத்தான் மணம்புரிந்து சிங்கமுகச் சூரனுக்கு
வக்கிரகா லன்மகளாம் விபுதைதனை மாலையிட்டு மதஞ்சேர்தந்தி
மாமுகன்சூ ரகன்றனக்கு நிருதிமகள் சவுரிதனை மணஞ்செய்தானே (௪௭)

பல அண்டங்களுக்கும பல அசுரரை அனுப்பிக் காவல்புரிதல்.

வெண்பா.

மாமணங்கள் கூடி மகிழ்ந்துதம்பி மார்களுடன்
சேமமிகு சூரன்தன் சேனைகளை - யேமமுட
னைக்கியுங்கள் பாளையம்விண் ணோர்நடுங்க வண்டமெலாங்
காக்கவென்று சொல்வான் கடிந்து (௨)

(௬௭) கீர்த்தனம். இராகம் - அடாணா—ஆதிதாளம்.

பல்லவி

அண்டங்கள்யாவுக்கும் துண்டுதுண்டாகக்காவல்
அமைத்தானேசூரன்

அநுபல்லவி.

கண்டகனுனசிங்கமாமுகனுக்குவட
கடலசுரபுரத்தைக்கனகமகுடஞ்சூட்டி
விண்டலநடுங்கஇரண்டிலக்கவெள்ளங்கள்
விரிந்தசேனைநிறுத்தி - நிறைந்தணியாய்ப்பொருத்தி (அண்டம்)

சரணங்கள்.

(க) ஆனைமுகத்தவுனை ன்றனக்குமாயாபுரியை
அஷ்டதிசையறியப்பட்டமுங்கட்டிவைத்துச்
சேனையிரண்டிலக்கவெள்ளந்தொகைகொடுத்துத்
திரண்டுவிண்ணினிற்படர்ந்திருண்டமேகம்போல்வைத்து (அண்டம்)

(உ) ஆழியகடல்சூழ்கீழ் ஏழுலகங்களுக்கும்
ஆடரங்காயெண்ணூறுகோடிசேனைவிடுத்துத்
தாழும்புவியதன்மேல் ஏழுலகங்களுக்கும்
தகுந்தசேனை விடுத்துப்பகர்ந்துத்தரங்கொடுத்து (அண்டம்)

(ந) சகலபுவனங்களுமிகவுந்தன்னுக்கினையுள
தாக்கியோர்பகையின்றி நீக்கிவியனுலவு
சிகரகோபுரவாசல் ஒவ்வொன்றுக்கிருகோடி
சேனைகாவல்வகுத்துத் தானுங்கெடிமிகுத்து (அண்டம்)

தேவர்களைத் தினந்தோறும் மச்சம்பிடித்துக்கொண்டு
வரச்சொல்ல அவர்கள் வருந்தல்.

விருத்தம்

வக்கிரகா லன்றரும கோபன் சிங்கன்
மகிடனிகற் சங்குபா லனீக் கண்ணன்
துற்குணனு தியவமைச்ச ரோடுசூரன்
சூட்சிசெய்து தேவர்களை நோக்கி நீங்கள்
மைக்கடலிற் தினந்தொறுமீன் பிடித்துக் கொண்டு
வருவீரென் றுரைத்திடலு மமர ருள்ள
முக்கியவ ரவர்கள்தங்கள் விதியை நொந்தே
புருகுவார் வெளியில்வந்து மறுகு வாரே (௬௪)

(௩அ) திபதை. இராகம் - யமுனாகல்யாணி—ஆதிதாளம்.

(க) ஐயய்யோஇதற்குநாமென்செய்குவோமிந்த
அவதிக்குள் ஆனோமே - கையால்
அரிசியென்றுமுமியென்றள்ளியூதிப்பார்ப்பாரில்
லாமலே போனோமே.

(உ) தையலர்சூழ்ந்திஜந் தருவினிழலிற்குடை
தான்பிடித்ததும் போச்சே - இந்தத்
தாருகனசுரனுக்குப் பயந்துகடலின் மீன்
றான்பிடிக்கவு மாச்சே.

(௩) மட்டித்தனமாய்ப்பேய்க்கு வாழ்க்கைப்பட்டுப்புளிய
மரத்திலேறினாற் போலே - இப்போ
வந்ததேயிந்தவிதி அந்நாளில்நமது
வாயின்மதத்தி னாலே.

(௪) கோபமாய்நந்தியிட்ட சாபந்தானும்பிடித்துக்
கொழுந்துவிட்டுப் படர்ந்ததோ - அது
கோரவசுரனென்ற ரூபமெடுத்துநம்மைக்
குடிகெடுக்கத் தொடர்ந்ததோ.

(௫) அடிக்குப்பெரியமடா உண்டோதுன்பமிதை
யாரிடத்தினிற் சொல்லுவோம் - நம்மை
ஆவென்றலறவிட்டதேவகண்டகனை
னவனையெப்படி வெல்லுவோம்.

(௬) அயன்முதலோர்கள்சாப மாகிற்பரமனைக்கண்
டடுத்தொழித்திட லாமே - அகி
லாண்டநாயகனாலே பூண்டசாபமிதற்கு
யாருடன்சொல்வோம் நாமே.

(௭) குடத்துநீர்கொதித்திட்டாற் குளத்துநீர்தனைக்கொண்டு
குளிரச்செய்வது பாயம் - கடல்
கொதித்தெழுந்ததிர்த்திட்டா லாற்றவும்வசமுண்டோ
கொடுமையிதென்ன மாயம்

(அ) மாசிலீசனைமுன்பு எசினாமனைவரும்
வாய்மதஞ்சொன்ன போதே - இன்னும்
வரும்விதியதுவந்தாற் படும்விதிதீரப்பட
மாட்டோமென்றால்வி டாதே.

சூரபத்மனுக்குப் பிறந்த முதல் மகன் தான் பிறந்தவுடன் சூரியனைத் தொட்டிலில கண்ணுடியாகக்கட்டி பானுகோபனென்னும் பேரடைதல்.

விருத்தம்.

தேவரிந்த விதம்புலம்பிக்கடன் மீன் கொண்டு
 தினந்தொறுஞ்சூ ரனுக்களித்து வரும்நாளிற்
பாவியவுணன்மனைவி கோமளைக்குப்
 பருவயிற்றிற் கருவுதித்தந் தகனைப் போலப்
பூவிலொரு மகன்பிறக்க மகிழ்ந்து சூரன்
 பொன்மாரி நகர்முழுதும் பொழிந்து வாழ்த்திப்
பூவலர்பொற் பணியணிகள் சேய்க்கு நன்றாய்ப்
 பூட்டினன் றொட்டிலில்வைத் தாட்டி னனே (சக)

(௩௧) சந்தத்தரு. இராகம் - அமீர்கல்யாணி—ஆதிதாளம்.

தொட்டிலில் வளர்சிறு புதல்வனு தித்தெழு
 சூரிய னைக்கையி னுற்
றொட்டிட னுடியெ னக்கதி யோடுயர்
 துயில்புரி பாயலி னேர்
கட்டனு மயன்முத லோர்கள்ப யந்திது
 கழறிட வங்கெதிர் சூர்
கண்டுந லஞ்சொலு மென்றலும் வந்திகல்
 கதிர்ப்பகை யெனநாம
மிட்டய னொருபிர மாத்திர மீந்திர
 வியினிடர் நீக்கினன்மூ
வெண்ணுடை தற்கின மூன்றுச கத்திர
 மிளவலு தித்தனர்மேற்
சட்டமொ டரிமுக னுக்கொரு சேயொடு
 சதமரு தித்தனர்மா
தாரக னுக்கசு ரேசனெ னும்மொரு
 தனயனுதித்தனனே.

அஜாமுகி துர்வாசரிஷியின் பலவந்தமாகச்சேர்ந்து வில்வலன் வாதாபி என்ற இரண்டு புதல்வர்களைப் பெறுதல்.

விருத்தம்

மைக்கனைய நிறத்தவுண ரிவ்வாறு மைந்தர்பெற்று
மகிழ்ந்தாரப்பான்
முட்கரவ யாமுகிக்குக் காமவெறி தலைமண்டை
மூளைக் கேறிக்
கட்குடித்துப் பேய்பிடித்துத் தேள்கடித்த வானரம்போற்
கானிற் சென்று
அக்கணமே தவஞ்செயுந்துர் வாசனைப்போய்த் தொடர்கின்றா
ளடர்கின் றாளே. (௩௰)

(சய) கீர்த்தனம் இராகம் - சௌராஷ்டிரம்—சாப்புத்தாளம்.

பல்லவி.

மாயத்தொழில்கொண்ட - ஜாமுகியுந்துரு
வாசனைச்சேர்ந்தனைந்தாளே

அனுபல்லவி.

ஆயமென்கூற்றில் - லையமானையன்
டாள்பொணபத்ர - காளியைப்போலஜி (மாயத்)

சரணங்கள்

(க) அக்கினிகுண்டத் தெரியெனவானிலு
லாவுமயிர்ச்சிகை முடித்து - முலை
வக்கிரதந்தத்தைக் - காட்டியுசடை
மடித்துறிஞ்சிப்பல்லைக கடித்து - எழில்
இக்குமலர்க்கணைதைக்கும் விஷம்தலைக்
கேறிமதனப்பேய் பிடித்து - இரு
பக்கவிலாவும் புடைக்க வொராயிரம்
பானைநிறை கள்ளுங் குடித்து - உறு
மிக்கொண்டொருமலை போலே - நின்ற
மிண்டாளி தன்னைக்கண் டாலே - கண்டு
வெருவியக்கணமே யும்பர்கள்
விதனமுற்றடடாவென் றுயிர்
பரதவித்திடவே நெஞ்சிடை
படிறுமெத்தவுமே மிஞ்சிய (மாயத்)

(உ) மாதவர் கூடியிருக்கும் வனத்தினில்
மாவேகமாகவந் தடுத்து - அங்கே
வேதியர்கள்மறை - ஓதிமகஞ்செயும்
வேதிகையாவையுங் கெடுத்து - பிர
சாத அவிர்ப்பாக ஓதனந்தன்னைப்பி
சாசங்களுக்குண்ணக் கொடுத்து - பரும்
பூதமெனத்துரு - வாசமுனியைப்
புறம்போகவொட்டாமல் தடுத்து - பிரும்ம
காதகனும்சூரன் தங்கை - உன்மேல்
காதல்கொண்டுவந்த நங்கை - என்றும்
கரணவித்தையிலே புளகித
கரமிகுத்திடவே கவரவ
சுரத அற்புதமாவு பரதி
சுகமளித்திடுவே னெனமிகு. (மாயத்)

(௩) வண்டப்பிடாரியென் - றண்டையில் நின்றபன்
மாதவர்கண்டோடி ஒதுங்க - லோக
கண்டகியான அரக்கிவர என்ன
காரணமென்றுநெஞ் சதுங்க - அண்ட
பிண்டத்தை நீறுசெய்யக்கும் துர்வாதனும்
பெட்டியிற்பாம்புபோல் பதுங்க - எதிர்
முண்டியுடன்கட்டிக் கொண்டாளையோ
முனிக்கிருகண்விழி பிதுங்க - கைக்க
மண்டல நீரையும் கவிழ்த்து - காவி
வஸ்திரத்தைக்கையா லவிழ்த்து - பல
வந்தமாகவளைந்துமே விசை
மண்டலாகிருதி கொண்டுமே புவி
யந்தராதிபருந் திகிலென
அஞ்சிவாடிவிரைந்துமோடிட (மாயத்)

(௪) பாகத்துடன்வள - மாகத்திரட்டிய
பாலுங்குமட்டுவ துண்டோ - கனு
வாகிய கட்டிக்கரும்பையருந்திடக்
கைக்கூலிவேண்டுவ துண்டோ - இன்ப
மாகவேயென்தன் ஸம்போகங்கிடைத்தபின்
மற்றோர்தவப்பய னுண்டோ - ஆவி
தேகமிரண்டுமொன்றாகி விட்டோமினிச்
செல்லும்வகையுமக் குண்டோ - என்

பாமரைவாயகம் படித்து - இனிப்
பாரெனவேநொடி நொடித்து - மிகு
பறபறப்புடன் - இடிமுழக்கொடு
பலவிசித்திரமது விளைத்திள
முறுவலக்கினியென வெழச்சின
முனிவனுக்கொருகிலி பிடித்திட (மாயத்)

அவ்விருவரும் தூர்வாஸரிஷி சாபத்தைப்பெற்று தபசியரை வதைத்துண்ண அயனிடம வரம் பெறல்.

விருத்தம்

அக்ஙுாணி வடஞ்சிதற அணிமணிகருண் டலமுதிர அந்திவானச்
செக்கர்நிறச் சடைகுதறத் திருமுனிகோ வெனக்கதறச் சேர்ந்தணைந்த
அக்கணம ஜாமுகியும் வில்வலன்வா தாபியைப்பெற் றகமகிழ்ந்தாள்
தக்கமைந்தர் தாய்மொழிகேட் டகங்கொள்வார் தந்தைமுன்வா சகம்விள் வா
[ரே (இக)

(சக) தீபதை. இராகம் - பியாகடை—ஆதிதாளம்.

(க) சல்லியர்களாகிய - வில்வலன்வாதாபியும்
தந்தைபதம்பணிந்து நின்றாரே - நின்ற
செல்வரைநோக்கியுங்கட்கென்னவேண்டுமதனைத்
தெரியநமக்குச்சொல்வீ ரென்றாரே

(உ) இதுவரைக்கும்நீர்செய்த - தவபலனைத்தையுமெங்கட்
கீந்திடவேண்டுமென்று கூறினார் - வே
றெதுகேட்டாலும் தருவோம் கதிதவம்தரமாட்டோம்
என்று துர்வாஸமுனி சீறினார்

(ங) அதிர்த்திருவர்க்கும் வாய் - மதத்தாலழியக்காலம்
அடுத்துமுனியை வெடு வெடுத்தாரே - நீங்கள்
மதித்தகஸ்தியர்க்கிடர் - விளைத்தவராலேநாச
மாய்ப்போவீரென்றுசாபங் கொடுத்தாரே

(ச) சாபம்பெற்றிருவருமேவியயனையுன்னித்
தவசியர்களைவதைத் துண்ணவே - எண்ணி
மாபத்தியாகஞ்செய்யும் யாகத்திலே தீயினை
வதைத்தக் கினியிலோமம் பண்ணவே

(௬) சதுர்முகன்பின்னையு மங்கெதிர்வாரா திருக்கத்தன்
சதையையறுத்தழலில் சொரிந்தானே - அயன்
எதிர்வந்துடன் தம்பியை - எழுப்பி வில்வலன்றனக்
கிசைந்தவரமுமருள் புரிந்தானே

(௬) அழைத்தவுடனே தம்பி - வரவுமாதவர்களை
அறுத்தருந்தவும் வரம் பெற்றானே - பின்பு
வழிக்கொண்டுடனே சூரன் றனைக்கண்டடிபணிந்துன்
மருமகனென்றெதிர்போ யற்றானே

(எ) கண்டுமகிழச்சூரனன்டையினிற் சிலநாள்
கழித்துக்குடதிசையை மேவியே - வளங்
கொண்டகனி விருட்ச முண்டுபண்ணியே மாயங்
கொண்டு முனிவர்களைக் கூவியே

(அ) அவதந்த்ரம் செய்வதற்கு - நிமந்த்ரணமென் றழைத்து
அநுசனையசமாக்கி வீட்டியே - நன்றாய்ச்
சிவந்தகறி சமைத்துத்தவஞ்செயும் மேவதியர்க்குத்
திருத்தியாகவே விருந் தூட்டியே

(௯) பின்பு வில்வலன்றனுந் தம்பியைக்கூவக்குடல்
பிளந்தவனண்ண னெதிர் குதிக்கவே - மாண்டோர்
என்புதிரங்கள்சதை - யாவையும் பக்குவஞ்செய்
திருவர்களு முண்டு டுதிக்கவே

சூரன் இந்திராணியை மருவ எண்ணங்கொண்டு இந்திரனிடம் தூதனை யனுப்ப இந்திரனும இந்திராணியும குயிலுருவங்கொண்டு தேவலோகத்தைவிட்டு பூலோகத்தில சீகாழியில ஈசனை வழிபடல்.

விருத்தம்

பாவியரிப் படியிருக்கப் படிமிகுவெஞ் சூரன்
பரிவுடனிந் த்ராணிதனை மருவவெண்ண மீறித்
தேவருல கிறைவனிட மசுரர்களை யேவத்
தெரிந்தவனிந் த்ராணியொடுங் குயிலுருக்கொண் டொளித்தான்
காவுறைதந் தையைநினைந்து சயந்தனமு தேங்கக்
கண்டுமுனி நாரதனுந் தேற்றவவன் றெளிந்தான்
பூவுலகி லிந்திரன்சீ காழயடைந் தரனைப்
பூம்பொழில்வைத் தங்கிருந்து பூசனைசெய் தனனே. (௩௨)

(௬௨) கீர்த்தனம் இராகம் - செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி

பூஜை செய்தனனே - இந்திரன் சீகாழியிற்
பூஜை செய்தனனே

அனுபல்லவி

தேசுறமெய்ம்முழுதுஞ் சிறந்தபூதிகண்டிகை
மாசறவணிந்துகை - மாமுகனடி - மாமலர்கருதியே சிவ (பூஜை)

சரணங்கள்.

(க) ஐதிகப்படிமக தாபிஷேகமியற்றி
ஓதிகமுமைபங்கா - அரகரசங் - கரவெனவுரு - கியே சிவ (பூஜை)

(உ) கூவிளம் பாரிஜாதங் கொழுந்து மருமல்லிகை
நீவரசமுதலாய் - நிறைமலர்கொண் - டிறைமலரடிதனைநிதம் (பூஜை)

(௩) அஞ்சக்கரந்தனைத்தன் - னெஞ்சத்துறச்செபித்து
வஞ்சமின்றியேயேக - மனதொடுநின் றினிதொடு பரவியே சிவ(பூஜை)

(௬௩) பின்னும் கீர்த்தனம் இராகம் - பியாகு—ரூபகதாளம்

பல்லவி.

ஶம்போ ஜகதீஶா-ஶிவ-ஶம்போ

அனுபல்லவி

அம்போஜநாபஸுரராஜ தாத்ருநிஷேவ்ய—ஶம்போ

சரணங்கள்

(க) தேஜோமயாநந்த நீல திவ்ய கலாப
ராஜஹம்ஸ மந்தவாஹந ரமண ஹாஹாரா—ஶம்போ
வஸிஷ்டவ்யாஸ வாமதே வாதிமுநி ணாகர - ஸார
ஸித்தகணாயர வரஶம் கரக்ரு பாகர—ஶம்போ

(உ) ஒழுத்தவுணர்கள் துறத்திடத்துடித்
துலைந்த லைந்தேனே - கொள்ளை
பதித்தென்னுலகைக்கொளுத்திடல்கண்டு
பதறி வந்தேனே. (சம்போ)

(௩) வருக்கமுஞ்செல்வப் பெருக்கமுமா
சிருக்கையும் போச்சே - எங்கள்
செருக்குலைந்துதா மரைப்புனலெனத்
தியங்கவு மாச்சே (சம்போ)

(௪) புனற்கடல்கரை கடந்தாற்புவி
பொறுக்க முடியுமோ - இவவி
தனக்கடலினி லமிழ்ந்தவெந்துயர்
தணிந்து விடியுமோ (சம்போ)

சூரன் தூதா இந்திரனைத்தேடிச் சீகாழிக்குச்செல்ல அப்பொழுது இந்திரன் வேயுருவாகி சீகாழியில் ஈசனைப் பூசித்தல்; நாரதா கலகத்தால சூரிய சந்திரர்கள் மறையும்படி ஆகாயத்தில் வளர்ந்து பூமி இருளடையும்படிசெய்த விந்தமலையை யடக்க அகஸ்தியர் சிவனை நோக்கித் தவம்புரிதல்.

விருத்தம்

பொன்னகர்க் கிறைவ னின்னவா றிரங்கிப் பூசனை புரிந்திட வாணிற் [ந்தா
புனிதனே யயங்கா யெனவொரு வாக்குப் பொலிந்திடத் தெளிந்தவ னிரு
ணன்னபோ தசூரன் றூதர்போய்க் காழி யடுத்திட வேயுரு வாகி
யன்புடன் சிவனைப் பூசைசெய் திருக்க வருண்முனி நாரதன் றனுங்
கன்னன்மா வனஞ்சூழ் விந்தமுன் மேவிக் கலகஞ்செய் திடலுமவ் வரையக்
கணமெழுந் துயர்விண் கதிர்மதி யுலகைக் கவர்ந்திடப் புவியிரு ளுறைய
மன்னிய தேவ ரனைவரு மயங்கி வடவரை யடைந்தகத் தியன்பால்
வழுத்திடத் தெரிந்தம் முனிவனும் பரமன் மலரடி தொழுதிருந் தனனே.
(இக)

(௪௪) கீர்த்தனம். இராகம் - கமாஜ—ஆதிதாளம்.

பல்லவி.

ஞானநிஷ்டையிலிருந்தார் - கும்பஸம்பவர்
ஞானநிஷ்டையிலிருந்தார்

அநுபல்லவி.

வானுலாவுமுயர் வானமேருதனில்
வாஸமாக ஈசர்நேச மகலா - ஞான

சரணங்கள்.

(௧) காடுமேடின்மன மூடுநேமல்நெடுங்
காலமாக ஞானமோக மடரா (ஞான)

(உ) தாவராதிதனில் மேவுறுநிலகு
தானதான மோனயோகி அழியா (ஞான)

(ங) வேலையோலமிட வேலைவாய்புகுத
விட்டசிட்டர் வட்டமிட்ட சிலைபோல் (ஞான)

(ச) தேவர்மாமுனிவர் தாபமோடுருக
சித்தமுற்றுச்த்தசித்தர்வடிவாய் (ஞான)

அகஸ்தியா விந்தத்தையடக்கும் வலுவையும காவிரி நதியை யும ஈசனிடமபெற்று வருமார்க்கத்தில் கிரௌஞ்சனை மலையாகிக் குமரக்கடவுளாலழிக வெனச்சபித்து விந்தமலையைப பாதலத்திலமுத்தி வில்வலன் வாதாபியை அழித்தல்.

விருத்தம்

அடியவ ருளத்தி லயர்ந்திடும்பரம னக்கண முனியெதிர் தோன்றி
யடலுறும் விந்த மலைதனை யடக்கு மானமெய் வலிமையுங் கொடுக்க
விடையவன் பொற்று ளிடையரு வன்பின் மிகுந்திடு தமிழ்முனிபின்னும்
வேண்டிய படியேழ் விழுநதி களிற்கா விரிதனை நோக்கியம் முனிவன்
கடமதி லடங்கித் தொடர்ந்துநீ செல்லக் கடனென வானவர் பின்னே
கன்னிய ரேகத் தகாதென வணங்கிக் காவிரி யுரைத்திடச் சிவனும்[ஞன்
வடங்கொள்பூண் முலையா யகத்திய னெனைப்போன் மாசிலா மனத்தனுதலி
மயங்கலீ தென்னப் பகர்ந்தரன் மறைந்தான் வரநதி கடத்திலுற்றனளே
(௧௪)

(௬௫) தீபதை இராகம் - புன்னாகவராளி—ஆதிதாளம்.

(க) தமிழ்முனிவன்றன் கடத்தில் - காவிரி
தனையுங்கொண்டுதென்றிசை வருமிடத்தில் - அங்கே
அமையுங்கொடியக்ரவுஞ் சாசுரன்கண்டானே
இமயம்பல்கந்தர மெனரூபங்கொண்டானே

(உ) கொண்டவனெதிர் நண்ணியே - இதத்தொடு
குத்திரஞ்செய்ய வென்றுக - ருத்திலெண்ணியே - எனை
அண்டிநீர்விந்தகிரிக் கடுத்திடுமென்றுசொல்ல
குண்டிகைமாமுனிவன் குறித்தந்தவழிசெல்ல

(ங) நடவையுந் தெரியாமல் - மெத்தவுள்ளம்
நலிந்து மெலிந்துவகை பிரியாமல் - நேரில்
அடர்பாலைவனத்தழ லதனைக்கண்டுபயங்க
விடமணிகண்டனன்பன் மிகவுமதிமயங்க

(௪) கனவிடிகளுங் குறைய - விசும்பெங்கும்
கங்குன்மயமாகிச்செக வெங்குமறைய - முனி
சினமடங்கியேஞான திருவடியால்மிதித்தானே
வினையக்ரவுஞ்சன்மாய மெனக்கோபங்கொதித்தானே

(௫) கதித்தசுரனைப் பார்த்து - முனிவன்கடைக்
கனலெனவிழிப்பொறி கடுந்தார்த்து - என்றுஞ்
சதிக்கிருப்பிடமாகித் தடச்சிலையுருவாகி
மதிக்குகன்வேலால்மடிந் திடச்சாபங்கொடுத்தேகி

(௬) பாதைவழியைக் கூடி - கங்கையிற்
படிந்தானடிபணிந் தருளைத்தேடி - எதிர்
வாதங்கூறியவிந்த மலையைக்கைக்கொண்டுதாக்கி
பாதலந்தனின்மகப் பதுங்குப்படிக்குப்போக்கி

(௭) அந்தமலையைக் கடந்து - வருகையில்
அசுரன்வில்வலன் வாதாபியுந்தொடர்ந்து - இவன்
முந்தக்கடல்குடித்து நந்தரசனைக்கொன்று
வந்தபழிக்குப்பழியுந்தரவேணு மென்று

(௮) மாமுனிதனை யணைந்து - இன்றைக்கிரை
வாய்ச்சதென்றிருவர்மண்டை ப்பூச்சிகுடைந்து - அதி
நேமவைதீகன்போல வேணிமெத்திர் நின்று
ஆமின்றதிதிபூசைக் கருள்செய்யவேணுமென்று

(௯) பாமரத்தன்மை யாலே - போசஞ்செய்ய
பசுவுரிபோர்த்தியபுலிபோலே - துட்ட
னுமவன்சொன்னதுண்மையாமெனமதித்துமுன்
ஓமெனவேமுனிவனுகந்துசம்மதித்த பின்

(௰) தம்பியையச மாக்கி - வாள்கொண்டு
அறுத்துயிர்தனையமன்வசமாக்கி - மிகு
வம்பாகவே பலவிதங்கறி சமைத்தானே
சம்ப்ரதாயமாய் முனிதனையுண்ண பணித்தானே.

(௰௧) விருந்துண்டமுனி தழைக்க - முன்போலே
விரும்பிவாதாவி வாவென்றவ னழைக்க - வயிற்
றிருந்துதம்பிகர்ச்சனை யிடமுனிவன் வெகுண்டு
இருந்துமந்திரஞ்சொல்லச் சீரணமானது கண்டு.

(௩௨) வில்வலன்மனந் துடித்து - முகம்வெடு
வெடுத்துமுனிவன்றனைப்போய்த் தடுத்து - நின்னைக்
கொல்வேனெனலுங்கையாற் குசைகிழித் தெறிந்தானே
வில்வலனிருகூறாய் விழுந்துடனெரிந்தானே

அசுரர் ஆணையால் மழைபெய்யாது வாடிய நந்தவனத்தை தழைக்கும்பொருட்டு இந்திரன் விக்னேசுவரரை ஆராதிக்க, அவர் காக்கை வடிவாக அகஸ்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பெருகச்செய்தபின் அகஸ்தியர் அக்காக்கையைத் துரத்த, கணேசர் ஓர் பிரமசாரி வடிவங்கொண்டு நிற்க அவரைத் தலையிற்குட்ட அகஸ்தியர் அணுக அவர் தன் சுயரூபங்காட்டித் தரிசனமளிக்க அகஸ்தியர் விநாயகரைத் துதித்தது.

விருத்தம்

தாரணியிற் செடுவாய்மை டென்னு மேதபின்
தனக்குவருப பெருங்கேடென் றுரைக்கு முன்சொற்
பேரதுபோல் வில்வலன்வா தாபி யாண்டார்
பிரமகத்தி முனிவனைச்சூழ் திடப்பெம் மானே
யாராத னஞ்செய்தப் பழயை ந்த்தா
னமரர்கோ னிடத்திலினிறை பதனுந மசலலச்
தீராத துயரமுந்தன் வனபதீ ரின்றித்
தியங்குவதுஞ் சொல்லிமதி மயங்கி னனே (௫௫)

பின்னும் விருத்தம்

இந்திரனிவரா திரங்கரா ரதன்பி னியம்புவா னைங்கரன் றனைத்
யிணையடி தொழுது பூசனை புரிந்தால் யாவையும் பெறுகுவா யென்ன
அந்தவா றவனும் பூசனை புரிய வைங்கரன் காகமாய்க கொங்கி
லகத்தியன் கமண்ட லந்தனைக் கவிழ்க்க வரிவைகா வரியதிா பொங்கிச
சந்தமா வனங்கள் செழிக்கவோர் நதியாய்ச் சார்ந்திடக் குணதிசை நோக்கித்
தமிழ்முனி சினந்தக் காக்கையைத் துரத்தச் சதுர்மறை யவனென நிற்கச
சிந்தையிற் கடிய வேகமா யோடிச சிரமதிற் குட்டவென் றெட்டச
சிந்துர முகத்தோன் தெரிசனங் கொடுக்கத் திருமுனி தொழுதிறைஞ்
சினனே (௫௬)

(௪௬) கீர்த்தனம். இராகம் - பங்காளா—ஆதிதாளம்.

பல்லவி.

கஜமாமுகனே யென்னையாண்டருள்வாய்

அநுபல்லவி.

நிஜமாயுனதம் புஜபாதமலால்
நெறிமற்றவைநான் அறியேன் சிறியேன் (கஜமா)

சரணம்.

அலைகொண்டகமண் - டலநீர்வழியப்
பலலீலை செயுன் பரிசை மொழிய
நிலைமேவிய கண்ணிறை நீர் பொழிய
நலமாய்த்தொழுதின்னலை நானொழிய (கஜமா)

அகஸ்தியர் விக்னேசுவரரிடம் வரம் பெற்று குற்றாலம் சென்று அத்தலத்தில் கோயில்கொண்டிருந்த மஹாவிஷ்ணுவைச் சிவலிங்கமாக்கல்.

(௪௭) கீதை. இராகம் - முகாரி—ரூபகதாளம்

(க) கணபதியைத்தனியே - போற்றிக்
கழலிணையிற்கனியே - வைத்துக்
காவிரிப்புனலையெடுத்தபி
ஷேகமெய்ப்புட னோடத்திடவே

(உ) மணமலர் கொத்தவுமே - மிக
அணிபெற உத்தமமாய் - மறை
ஆகமப்படி பூசனை
நேயமகத்துட னேமுடித்தபின்

(ங) பணிசெய்துநெற்றியிலே - அதி
வடிவுற த்திரமேலே - கூட்டி
பேரமனுசமெசாலி போதுதித்திட
வேமதக்களி றோர்முகத்தினர்

(௪) கமகமதைக்கவிழ்த்தோ - டெனப்
பரிவுடன்வித்தகனை - முனைப்
போலெனக்கெதிரே நுதற்குட்டி
யேதுதிப்பவர் வாழ்வுபெற்றிட

(௫) வரமுமளித்துவிட்டோம் - என
உரைசெயமுத்தமிழோன் - கையில்
வார்கடத்தினிலேகவிழ்த்தநீ
ராறெனச்சடல் சேரவப்புனல்

(௭) கருதிநிதம்படிவோர்க் - கிஷ்ட
காமியசித்தியெலா - முட
னேபலித்திட வேயனுக்கிரக
மேதரச்சொல வேயளித்துடன்

(௮) கரிமுகன்சென்றிடவே - முனி
களிகொண்டெழுந்துடனே - குற்
றாலமெய்ப்பதி மேவியேவிஷ்ணு
வாலயத்தினி லேகயிக்கவே

(௯) புரகடமுற்றவரா - யுள்ள
விரதவயிணவர்கள் - எங்கள்
கோயிலுக்குளே நீபுகச்சரி
யோவெனச்சொல வேயறைந்துடன்

(௰) திருநுதன் பத்தியிலும் - உரப்
திறல்புய முற்றிலுமே - செய்ய
துவாதசத்திரு நாமமிட்டரி
நாமகர்ச்சனை யேமுழக்கவே.

(௰௧) பரவிவயிண வர்கள் - தொண்டு
பணிவிடை செய்துடனே - தங்க
ளாலயத்தினி லேசெலச்சொல
வேயஞ்சக்கர மேசெபித்துடன்.

(௰௨) குறுகுறு குற்றாலனே - எனக்
குறுமுனி கைத்தலமே - வைத்த
போதிலக்கண மேமலர்க்கண
னுதிமெய்ச்சிவ னுகவுற்றனனே.

இந்திரன் சீகாழியிலிருந்தபொழுது தேவர்கள் அவனிடம் வந்து முறையிடல்.

விருத்தம்.

சீதரனைச் சிவலிங்க மாகச் செய்து
திருக்குற்றா லத்தைவிட்டுப் பொதிகை சேர்ந்த
வேதமுனி கமண்டலத்தி லெழுந்த பொற்கா
விரிநதிசெண் பகவனங்கள் செழிக்கப் பாயப்
போதலர்கொண் டரனைநிதம் பூசை செய்து
புரந்தரன்சீ காழிதனி லிருக்க வானின்
மீதுறையுந் தேவர்களெல் லோரு மங்கு
மேவினு ரிந்திரன்முன் கூவி னுரே. ([illegible])

(சஅ) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—சாப்பு

பல்லவி.

இங்கேநீர்வந்திருந் திடலாமோ - அங்கே
எங்களைத்தவிக்கச்செய்திடலாமோ

அநுபல்லவி

பொங்குவிண்ணுலகெங்கும்
புரக்குந் துரந்தரனே
பூவையிந்த்ராணியுடன்
மேவும் புரந்தரனே (இங்கே)

சரணங்கள்

(க) பான்மதியமில்லாத வான்போலவேஅம
ராபதியும்பாழாய்ப் போச்சே - நறுந்
தேன்மலர்த்தருசிந்தா மணியுங்காமதேனுவும்
தீயன்கைவச மாச்சே - எங்கள்
மேன்மையெல்லாமடங்கித் தாழ்மையாகினைந்தோமே
வெங்கனன்மெழுகென அங்கமுமெலிந்தோமே
கானவர்வலைப்பட்ட மான்போலவேநொந்தோமே
காடுமலையுஞ்சுற்றித் தேடியும்பால்வந்தோமே (இங்கே)

(உ) கைத்தலத்திலிருந்த புத்திரன்சயந்தனைக்
கைவிட்டு மறைந்தீரே - வெரு
பத்திரமாகவேவந் துற்றுமதுயிர்கருப்
பட்டியென் றுறைந்தீரே - மிக
எய்த்துக்கடலிற்சென்று நித்தமீன்சுமந்திட்டு
ஈனத்தொழிலைச்செய்து மானமுங்குலைந்திட்டு
கொற்றவசுரர்கையால் மெத்தவும்வாதைப்பட்டு
கொண்டெப்பொழுதுங் கத்தித்திண்டாடும் படிவிட்டு (இங்கே)

(ங) தலைவனில்லாக் குடியும் நிலைகொம்பில்லாக்கொடியும்
தளர்ந்து நின்றலை யாதோ - முன்பு
மலையின் சிறகரிந்த குலிசனுனையன்றிய
மரர்க்கொருகதி யேதோ - பரு
மலையது விழுந்தாலுந் - தலையேதாங்கவேணும்
வாழ்வுந்தாழ்வு மனைத்துயிர்க்கும் சகசங்காணும்
பெலங்கொண்ட புகழ்தானே - நலமென்றறிந்து பூணும்
பேதமை விட்டாலல்லவோ - சாதிக்கும் திறமைதோணும் (இங்கே)

தன்மனைவி இந்திராணியை சாஸ்தாவிடம் அடைக்கலமாக வைத்து, இந்திரன் தேவர்களுடன் கயிலை செல்ல, அஜாமுகி இந்திராணி யிருக்குமிடம் தெரிந்து அங்குவர அவ்விருவருக்கும் நடந்த சம்வாதம்.

விருத்தம்

உரலதுபத் தனத்திடம்போய் மறைமொழிந்த கதையதுபோ
லும்ப ரிஃவா
றுரைக்கமக பதிபுழிது வருத்தமதாற் சசியொடுமிங்
கொளித்தேனென்றே
யருமைமாட னெழுந்தமுதங் கடைபுமநாண் மேனகினிபு
மாணுஞ் சேர்ந்த
வப்பொழுதவ குதித்தவையன் றனைத் துதிக்க வெதிர்வரலு
மடியிற் றழ்ந்து
பரவியடைக் கலமெனத்தன் மனைவியையைத் துடன்கயிலைப்
பதியை மேவிப்
பரபரிவன் சமயநந்திப் பகவனிடம் வினவிரிசப்
பரிந்து போற்றிச
கரரதிப னங்கிருக்கச் சூரபத்மன் றுணைவியஜா
முகிதன் பாங்கி
துன்முகியோ டெழுந்துசசி யிருக்குநிலை யறிந்தவள்பாற்
றொடர்கின் றளே (௧அ)

பின்னும் விருத்தம்

பாய்ந்திடும் புலிபோல் வானிற் பறந்தஜா முகியிவ வாறு
வாய்ந்தசெண் பகப்பூங் காவில் வருந்தியே யானை நோக்கி
யாய்ந்துமெய்த் தவங்கள் செய்யு மயிராணி யருகிற் சென்று
காய்ந்திடு கனல்போல் வார்த்தை கடுக்கின்றுண் முடுக்கின்றளே (௧௯)

(சுகூ) அடிமடக்கு திபதை இராகம் - மோகனம்—சாப்புத்தாளம்

(க) சற்றும்பயமில்லாம லிங்கெயே - வந்து
தனித்திருக்கிறதென்ன நங்கையே - இப்போ
கொத்தசூரர்கிங்கரர் எற்றியுன்கணவனைப்
பற்றிப்பிடிக்கவென்று சுற்றுமிவ்வனத்தினில் (சற்றும்)

(உ) இங்குசேர்வந்தவ ராரம்மா - நன்று
யிசையவும்பேர்சொல்லு வீரம்மா - நான்
என்கணவனைப்பிரிந் - தங்கம்பதறிப்பா
மன்களுணைபெறத்த - வங்கள்செய்யுமிடத்தி (சற்

(௩) சூரன்றனக்குத்தங்கைதானடி - பேர்
சொல்வேனஜாமுகி நானடி - மிகு
வீரமும்புஜபல - தீரமுங்கனவதி
காரமுஞ்சிறந்தவ - கோரவிக்ரமசூரன (சூரன்)

(௪) வந்தகாரியந்தனைச சாற்றுவீர் - என்றன்
மானந்தனையுநீர்காப்பாற்றுவீர் - பெற்ற
தந்தைதாய்துணையின்றி - நொந்துநானொருத்தியா
யிந்தவனத்தில்வந்தேன் - சிந்தையிரங்கியென்முன் (வந்த)

(௫) பருவவயதல்லவோ நீதானே - யான்
பகர்வதைக் கேளடிமடமானே - திவ்ய
மருமலரணிந்தசுந் - தரபுருஷர்களுடன்
சுரதலீலைகள்செய்து - சருவியனுபவிக்குப (பருவ)

(௬) மனைதமிஞ்சிய ப்ரமையுண்டோ - வம்பு
வார்த்தைபேசுறுயென்னகண்டோ நல்ல
இனியவமுதமுண்டெவ - வனமென்றுங்குறையாத
புனிதன் மருவுந்தெய்வ - வனிதையாகிய வென்றன் (மனை)

(௭) தகசுபுத்திசொல்கிறேன் பெண்மணி - என்சொற்
றட்டாமற்கேளடி கண்மணி - இனிச
சக்கரன் றனைவிடுத் - திககண பெனதண்ண
னுக்குமனைவியாவாளென் - மக்கமகிமை யுண்டு

(௮) இந்தவார்த்தை நீசொல்லலாமா - பாரி
லெவர்க்குமிதுஸம்மதமாமா - உய
ரந்தணர் குலந்தனில் - வந்துபிறந்திருந்து
மெந்த வுலகங்களு - நிந்திக்க இடமாய்நீ

(௯) பாயும்புலியின் முன்னே வேதம - சொல்லிப்
படிக்கிறுயென்ன வினோதம் - நாங்க
ளாயுமுன்றனுலகைத் - தீயுங் கொளுத்தியேபின்
ரேயுஞ் சிறைபிடிக்க - வேயுன்னிடத்தில்வந்தேன்

(௰) மானம்போயுயிர் காவலுண்டோ - வீண்
வார்த்தைபேசுறுயென்னகண்டோ - நல்ல
தானத்தவமில்லாத - ஈனன் றங்கையாகிய
நீ தொந்தரை செய்தாலென் - ப்ராணன்றனை விடுவேனடி (மான)

(௩௧) ஜாலஞ்செய்யாதடி நீயே - இந்த
க்ஷணத்திலென்பால்வருவாயே - தநி
காலமும்பலன்களும் - கண்டுபிழையாவிட்டால்
கோலங்கனழிந்துநீ - குரங்காய்விடுவாய்சொன்னேன் (ஜாலஞ்)

(௩௨) அக்ரமஞ்செய்யாதே பாவி - நீயுன்
னண்ணன்குடிக்குப்பச்சை நாவி - நாளும்
பக்கவின்மலங்கள்புசிக்குஞ்சூகரத்திற்குச்
சர்க்கரையமுதம்பு - சிக்கக்கிடைக்குமோவீண் (அக்ர)

அஜாமுகி இந்திராணியைக்கட்டிக் கொண்டுசெல்ல சாஸ்தாகோயிற் காவல்செய்யும் வீரமாகாளன் வந்து அஜாமுகி கரத்தினைத் துணித்து இந்திராணியை மீட்டல்.

விருத்தம்.

காதகிய ஜாமுகிபின் வெகுண்டு நோக்கிக்
கலப்பாலின் னமுதினைச்சா லாலு தைத்த
பாதகிநீ யுன்னைவிட்டுப் போவ தில்லை
பாரெனவே நெறுநெறெனப் பற்கடித்து
மோதியிரு கைப்பிடியாற் கட்டிக் கொண்டு
மூடுகிநடக் கையிற்சசியு முறைபிட் டேங்கச்
சாதவா கனன்காவற் காளன் கண்டு
தடுத்திட்டான் கொடியசண்டை தொடுத்திட் டானே. (௩௰)

(௩௰) கீர்த்தனம். இராகம் - மத்யமாவதி—அடதாளம்.

பல்லவி.

தண்டுகொண்டுமறித்தானே - வீரமாகாளன்
சண்டைசெய்துநெறித்தானே

அநுபல்லவி.

அண்டர்க்கதிபன்றனக் கபயப்ரதங்கொடுத்து
அய்பனிவளையென்ற னடைக்கலமாய்விடுத்து
கண்டித்திருப்பதுங்கண் டங்கடையிவ் வந்தடுத்து
கலங்கச்சிறையெடுத்த கள்ளியென்றுதடுத்து (தண்டு)

சரணங்கள்.

காட்டழற்பொறியென சீறி - அவள்
கையிற்சூலமெடுத்துச் சீறி - மிக
வாட்டமுறயிவளைத் தாக்க - வீரன்
வாளாலதனையுந் துளாக்க - கை

நீட்டியவளோர்கதை - போட்டி வனைக்கடுக்க
செருத்துவீரனோர்கணை - தெறித்ததனை முடுக்க
வாட்டிச்சிலகணையான் - மறுத்துன்றனைக்கடித்து
மாய்ப்பேனென்று துடித்து - வருமவளையிடித்து (தண்டு)

(உ) அக்கணமலையொன்றைப்பறித்து - வீர
னருகிலரக்கியு மார்ப்பரித்து - மார்பிற்
றைக்கும்படிக்கிவன்மேல் விடுக்க - வீரன்
றகர்த்தவளை யோரறைகொடுக்க - அவள்
பக்கத்திலொதுங்கினின் - றட்கியடங்கி
பரவுங்கருடற்கண்ட - அரவம் போலே ஒடுங்கி
பக்கியுடல் தளர்ந்து - வாய்புலர்ந்தேயரற்றி
வாடியெழுந்துபயந் - தோடகண்டு துரத்தித் (தண்டு)

ஙு) இந்த்ராணிதனைக் கட்டியிறுக்கி - விண்ணி
லேகும்போதவளைப் போயுறுக்கி - சசியைத்
தந்து போடியென்றறையாட - சற்றுந்
தருகாமலவளுங்கொண்டோட - உன்னை
முந்தவிடுவேனோவென் - றந்தக்ஷணமேகிட்டி
முடிவரையினில்விழு - மிடிபோலவேயதட்டி
மந்திரத்தினிலினி - மாங்காயவிழாதென்றெட்டி
வாள்கொண்டவளுடைய - தோளிரண்டையும்வெட்டி (தண்டு)

அஜாமுகி சூரனிடம் வந்து முறையிடல.

விருத்தம்

அண்டபா யிரத்தெட்டின் வளமை யெல்லா
மமைச்சருரை யாற்றெரிந்து மகிழ்ந்த சூரன்
றண்டரிக முடன்கொலுவி லிருக்கும் போது
தோளிணையி லிரத்தவெள்ள வருவி பாய
மண்டெரியின் கிளையெனச்செந் தலைவிரித்து
மந்திரி முகவரக்கி மார்கள் சூழ்ந்து
கொண்டிருபா லழுதுவர வஜமுகி கூக்
குரலிட்டா ளண்ணனிட முறையிட் டாளே. (கச)

(ஙக) கீர்த்தனம் இராகம் - காம்போதி—ஆதிதாளம்.

பல்லவி

அண்ணாவுங்களுடன்பெண்பிறந் தேனே - நல்
லருமைத்தங்கையென் றுபேர்சிறந்தேனே

அநுபல்லவி.

நண்ணும்புவியோர்கண்டு நகைத்திடலானேனே
நடையற்றநாயினும் கடையுற்றுப்போனேனே (அண்ணா)

சரணங்கள்.

(க) அசுரகுலத்திற்செனித்தடுத் தேனே - சபைக்
கலங்காரியென்றும்பெயரெடுத் தேனே - இப்போ
சகியையுன்றனக்குச்சேர்த் - திடுமெண்ணங்கொடுத்தேனே
தடந்தோள்களைவீரன்வாள் - தனக்கிரை கொடுத்தேனே (அண்ணா)

(உ) கைபோயினிமேற்பாரிலிருப் பேனோ - அரைக்
கணமாயினுமுயிர்வைத்திருப் பேனோ - என்போற்
தையலரைக்கண்டுள்ளந் தளர்ந்தருவருப் பேனோ
தழைத்துங்களுடனுண்டு செழித்துடல்பெருப்பேனோ (அண்ண

(௩) விஜயமணி மண்டப மிடிந்ததே - மூன்றுன்
வெற்றிக்கொடியிரண்டா யொடிந்ததே - நாளும்
அசையாக்கீர்த்திகளும்பெற் - ற ஆண்டு மிடிந்ததே
அரங்கிற்பிள்ளையார்செய்யக் - குரங்காக முடிந்ததே (அண்ண

(௪) திக்கண்டங்களுங்கட்டி யாழ்ந்தாயே - கண்
தெரியாமலேமருட்கூ் சூழ்ந்தாயே - அகங்
கைக்கொண்டய்யோகருவக - கடலினிலாழ்ந்தாயே
கள்ளவமரர்க்கினி - யெள்ளலாய்த்தாழ்ந்தாயே அண்

(௫) நினைத்திப்படியென்மனம் பறக்குமோ - நான்
நில்லாச்சபையுனக்கு நிறக்குமோ - சபை
களித்தபருப்பில்லாத - கல்யாணஞ்சிறக்குமோ
கைத்தலம்போனதுன்பஞ் - செத்தாலுமறக்குமோ (அ

(௬) மெய்யாயுனக்குப் பாடுபட்டேனே - சும்மா
விருதாவிற் கரங்களுந்திட்டேனே - வீணி
லய்யோவென்னழகுமந் தமுஞ்சிந்திவிட்டேனே
அகத்தாலேதவமும்போ - யவத்திலேகெட்டேனே (அ

தேவரமேற்போர்க்கெழுந்த சூரனை அவன் மகன்
பானுகோபன் தடுத்தல்.

விருத்தம்.

கோரவஜா முகியிவ்வா றலறிச் சூரன்
கொலுவின்முன்னே முறையிட்டுக் கலங்க வென்னை
வீரமா காளனென்றோர் தேவ னிந்த
விதஞ்செய்தா னென்றவுடன் சபை நடுங்கக்

காரவுணன் சினமிகுந்தக் கணமே தேவர்
களையெரித்துக் கொல்வேனென் றெழுந்த போதிற்
றீரமைந்தன் பானுகோ பனும்ப ணிந்து
தேற்றுவான் றந்தைசின மாற்று வானே (சுஉ)

(ருஉ) கீர்த்தனம். இராகம் - தநபாரீ—திருபுடைதாளம்

பல்லவி

ஐயாயிதற்கோவிந்தக்கோபம் - ஆரும்
அறியாரோவுங்கள் ப்ரதாபம்

அநுபல்லவி.

தையலென்னத்தையின் - கையிரண்டரிந்தோன்
றன்னைச்சிதையாமலே - குன்னுந்தேவர்கள்மேலே (ஐயா)

சரணங்கள்.

(க) அசசத்துடனமக்கு மசசம்பிடித்துக்கொண்டு
ஐம்புலனுமொடுங்கி கம்பமுற்றுமருண்டு
இச்சககங்கள் சொல்லியே மெச்சும்பணிபுரிந்து
இணங்கிநம்மைநிதமும் வணஙகுவதுநதெரிந்து (ஐயா)

(உ) காட்டினுழைநரிசிங் கத்தைப்போய்ப்பிடிக்குமோ
கருவரிப்புலிதன்னை வரையாடுகடிக்குமோ
நாட்டில்நிஜமென்றிதைக கேட்டோர்ஸம்மதிப்பாரோ
நரருந்தேவருநம்மைப் பொருளாகமதிப்பாரோ (ஐயா)

(ங) சிட்டுக்குருவிமேலே பாணந்தொடுக்கலாமோ
தேடிநம்மையடுத்த பேரைக்கெடுக்கலாமோ
அஷ்டதிசையாயிரத் தெட்டண்டங்களுக்குற்ற
அரசேவுமக்குத்தெரி யாதுண்டோவெனைப்பெற்ற (ஐயா)

பானுகோபன் தேவலோகஞ்சென்று ஜயந்தனோடெதிர்த்துப் போர்செய்து அவனையும தேவாகளையும பிடித்து வந்து தன்னகரத்தில் சிறைசெய்தல்.

விருத்தம்.

மைந்தனிவவா றுரைத்திடக்கேட் டசுரனதைக் கடிந்து
மறுத்திடத்தே வரைப்பிடிக்க மகன்படையோ டெழுந்தா
னந்தகொடி தனிற்பிரமன றன்னையெதி ரழைத்தே
யனுமுகிக்குக் கைபொருந்தச் செய்துமப்பாற் சூரன்
சிந்தைகவக் கிரகமஷ்ட திக்குளபா லரையுஞ்
சிறையினிலிட் டக்கணமே சித்ரவதை செய்தான்
செருந்தமுடன் பானுகோ பனுஞ்சினந்து வானிற்
றொடர்ந்துசயந் தனைமறித்தங் கடர்ந்தமர்செய் தனனே (சுங)

(ருடு) திபதை. இராகம் - அசாவேரி—ஆதிதாளம்.

(க) சேனையசுரர்சூழப் - பானுகோபனுஞ்சென்று
தேவருலகைசசுற்றிக் கொண்டானே - அங்கே
வானவருக்கதிப - னைவிந்திரன்பெற்ற
மைந்தன்சயந்தனைப்போய்க் கண்டானே

(உ) சயந்தனைக்கண்டசுரன் - பயந்தோடாதேநில்லென்று
தடுத்துநிந்தைமொழிகள் கூறினன் - பாவி
பயந்தோடப்பயந்தோடத் - துரத்துகிறனென்றவன்
பலத்தயிராவதத்தி லேறினன்

(ங) ஊத்தையாகியநீங்கள் - நேற்றுவரையிலெங்கட்
கூழியஞ்செய்ததெல்லாம் போச்சுதோ - இப்போ
தேற்றிவில்வளைத்துக்கொண் - டார்த்தயிராவதமீ
தேறிநின்றெதிர்க்கவு மாச்சுதோ

(ச) நில்லுநில்லென்றதட்டிச் - சொல்லிச்சயந்தன் மீதில்
நெறுநெறெனசசரங்கள் தூறினன் - நிறை
அல்லனையவசுரன் - மல்லார்புயமீதிலோ
ராயிரங்சணைவிட்டுசீ றினன்

(ரு) கண்டுபானுகோபன்வெ குண்டுசயந்தன்மீதிற்
கணக்கில்லாதசரம்விட் டடித்தானே - உடன்
அணடர்க்கதிபன்மகன் கண்டகவசுரரை
அம்புபொழிந்துமண்ணில் மடித்தானே

(சு) சுக்கிரன்சொன்னமனு வைக்கருதியசுரன்
துதிக்கத்தன்படையெல்லாம் பிழைத்தாரே - பிழைத்
தக்கணமேசயந்த னைப்போய்வளைந்துகொண்டே
அதட்டியின்னமுஞ்சண் டைக் கழைத்தாரே.

(எ) ஆயிரஞ்சரத்தினாற் கூறுசெய்துசயந்த
னசுரப்படையைப்பொடி யாக்கினன் - மற்று
மாயிரஞ்சரங்கள்விட் டசுரன்றேர்பரியையு
மதஞ்செய்துசடுதியிற் போக்கினன்

(அ) தேரழிந்திடமறு தேரிலேறியசுரன்
சிலைவளைத்துக்கரத்திற் பிடித்தானே - அதி
வீராவேசங்கொண்டொரு நூறுயிரஞ்சரத்தை
விடுத்துச்சயந்தன்வில்லை யொடித்தானே

(௯) அடுத்துப்பின்னுஞ் சரந்தொட் டயிராவ தத்தோடவ
னலறிவிழும்படிக்குச் சாய்த்தானே - பண்ணில்
மடித்துத்தேவர்களையும் வாய்புலர்ந்திட வஞ்சன்
மசகமெனவேகையாற் றேய்த்தானே

(௰) தேய்த்திடக்கண்டயிரா வதமுஞ்சினந்தசுரன்
தேரைப்பொடித்துமண்ணில் வீட்டியே - எதிர்
வாய்த்தபானுகோபனை யீரிரண்டுகொம்பினல்
மார்பூடுருவக்குத்தி யாட்டியே

(௰௧) வருத்தும்பொழுதிற்கொம்பை முறித்தலகிலவுணன்
வலக்கையினலோரறை போடவே - வாயினா
லிரத்தஞ்சிந்திடச்சயந் - தனைவிடுத்துடனயி
ராவதங்கதறிகொண் டோடவே

பிரகஸ்பதி பகவான் இவ்விதமாக அசுரருடைய சரித்திரத்
தைக்கூறி குமாரக்கடவுளைத்துதித்தல்.

விருத்தம்

வெங்கட் களிறுய் பயந்தோட வெகுண்டு சயந்தன் முதலான
விண்ணோர் களையும் பிடித்தசுரன் விரைவிற் கொணர்ந்து தந்தைமுன்னே
யங்கச் சேதஞ் செய்திடலு மழுதி னுணர்வா லவர் பிழைக்க
வழிக்க முடியா தெனச்சூர னறிந்து சிறைச்சா லையிலடைத் தான்
றுங்கக் கரிவெண் காடதனைத் தொழுது மருப்பும் பெற்றது வான்
றேயும் பொன்மா மலைமேவிச் சுரர்வேந் தனுமெய்த் தவம்புரிந்தா
னெங்கட் கரசே முன்னடந்த திவ்வா றெனவே தெய்வ குரு
விசைத்துக் குமரன் றிருப்புகழை யேத்தி வணங்கிப் போற்றினனே (௬௭)

(௫௭) கீர்த்தனம் இராகம் - செஞ்சுருட்டி—ஆதிதாளம்

பல்லவி

சரவணபவகுரு - பரனேயிதுதரு
ணங்கிருபைபுரிவாய்

அநுபல்லவி.

வஸ்ரமகவிருகர - வணைமிசைவளர்திரு
முகனே குகநைன் - முகனே கமழ்மிகு (சரவண)

சரணங்கள்.

(க) அனுதினமுமமர - குருகியே படுதுயர்தீர்க்கவும் - நன்று
யவரவர்பதவியி - லணிபெறவருள் செய்துகாக்கவும் - வே
றினியுனையலது - இனியெவர்பகர்வா
யிறைவா - மறைமலர் - நிறைவாய் - வளமுறு (சா)

(உ) அடலுறுமசுரர்க - ளடிகள்முடிகளற வீட்டியே - ரண
மதிர்சதையுதிரமுன் - அயின்முனைபருகிடவூட்டியே - கடல்
வடவையனலெனவே - முடுகிடேபொடிபட
மடியா - விடிவிடர் - விடியர - தெழின்மிகு (சர)

(ஙூ) மகபதிமகிழ்வுற - அணிமிகுமணிமுடி சூட்டியே - மரு
மலர்மருவியதரு - நிழலரசுரிமையை நாட்டியே - வானோர்
சகலமுனிவருன - தடியிணைதொழவுஞ்
சலெனச - சுகபல - னலனுற் - றிடவரு (சர்)

குமரக்கடவுள் தேவர்கட்கு அபயமளித்தல்.

விருத்தம்

நித்யபரி பூர்ணவத்து வாகி யெங்கு
 நிறைந்தகண்டாக் கரவுருவா யன்பர்க் கெல்லாம்
புத்தமுதாய்த் தோன்றியமெய்ப் பொருளே யெங்கள்
 புன்கவலை மாற்றியருள் புரிவா யென்று
பத்திமிகு தெய்வகுரு விந்த வாறு
 பாகசா தனனொடுசேர் பணிந்து நிற்கச்
சித்தமுவந் தருட்கண்ணா னோக்கி யையன்
 றேற்றினா னஞ்சலெனச் சாற்றி னானே (சுஇ)

அசுரகாண்டம் முற்றுப்பெற்றது.

விருத்தங்கள்	... ..	சுஇ.
வெண்பாக்கள்	.	உ.
கீர்த்தனங்கள்	... ...	இச.

வீரமஹேந்த்ர காண்டம்.

குமரக்கடவுள் தன் சகோதரா வீரபாகுதேவரை சூரனது மனதை யறிந்துவரச் சொல்லல.

விருத்தம்.

மருச்சிறந்த சந்தவரைக் கடல்வாய்ச்செந்தூர்
வந்துகந்த வயிற்குமரன் வானோர் மீதி
இருட்சிறந்தங் கருகிருந்த துணைவ னை
அடல்வீர வாகுதே வனைமுன் னோக்கி
மிருட்சிறந்த மனத்தசுரன் றனக்கு நீதி
யியமபியபின் போர்புரித லைது கீர்த்திப்
பொருட்கழகா மவனிடமிக கணமே தாது
போவென்றான் மனதறிநது வாவென் றனே (க)

(க) கீர்த்தனம் இராகம் - ஆரபி—ஆதிதாளம்

பல்லவி.

அந்த அவுணன் மனந்தனை நீகண்ட
றிநதெனிடம வருவாயே

அனுபல்லவி.

என்றனருமைத் துணைவோனே - உனக்
கிணையொருவருண்டோ சீமானே - நேரும்
எந்தவமரினும னந்தளராதகனவானே
இப்போதே நீதானே (அந்த)

சரணங்கள்

(க) மனத்தயிரியத்தை விடாமல் - செல்லும்
வழியானதுதவ றிடாமல் - மிகச
சினத்தொருவரையுந் தொடாமல் - வழுவில்
தேடிச்சிலுகுசெய் திடாமல் - சூரன்
சனத்தோடெதிர்த்துச்சண்டை தொடுக்கிலடிகொடுத்திட்
டாலும்பிடிகொடுத்திடாமல் - அரி
சட்டத்துடனே கினைவாயெதிர்
கிட்டிச்சமர்செய்து பினைமுதா
கட்டுப்பெயராயிலே வாள்கொடு
வெட்டிச்செயமானை புரிந்துநீ (அந்த)

(௨) தக்கவசுரனிடஞ் சென்று - சற்றும்
தயங்காமலவனெதிர்நின்று - தம்பி
உக்ர தாரகனையுங் கொன்று - புடை
யுற்றபடைக ளுயிர் தின்று - உன்னைத்
துக்கங்கொண்டாடச்செய்த - விக்ரமவேலவன் செந்
தூரில் வந்திருக்கிறானென்று - அதின்
றுப்புச்சொல்லியேயினி உன்னுயிர்
தப்பிக்கொளவே ஒரு நன்னெறி
கற்பித்திடவேயு னிடத்தில
னுப்பப்படு தூதனெனச் சொல்லி (அந்த)

(௩) பயந்த தேவர்கள் தம்மைக்கெடுத்து - வாதைப்
படுத்திடாமலே யின்று தொடுத்து - பாலன்
செயந்தன்றனையுஞ் சிறைவிடுத்து - இந்
திரனமராபதியுங் , கொடுத்து - பின்னும்
நயந்துவணங்கி மிகப் - பணிந்து நம்மிடத்தினில்
நம்பிக்கை சொல்லியே வந்தடுத்து - இந்த
ஞாலத்தினிலே யினிமேல் வெகு
சீலத்துடனே நடவாவிடில்
மூலத்துடனே யசுராதியென்
வேலுக்கிரையாய் விடுவீரென (அந்த)

வீரபாகுதேவர் ஸ்வாமி சொன்னதைக் கேட்டு மிக மகிழ்ந்து ஐயனடியைப்பணிந் தெழுந்து கந்தமாதன பர்வதத்தின்மேல் நின்று தென் கடலைத் தாண்டுதல்.

விருத்தம்.

சுரும்புலவு மருமலர்க்கண் கருணை பூத்துச்
சுவாமியிவ்வா றுரைத்திடக்கேட் டிருகை கூப்பி
யரும்பிறவித் துணைவீர வாகுத் தேவ
னகமகிழ்ந்து முகமலர்ந்தின் னமுதுண் டாற்போற்
பரும்புயங்கள் பூரித்தட் டாங்க மாகப்
பணிந்தெழுந்து கந்தமா தனமே னின்று
விரும்பியிலைத் திருநீறு மணிந்து கொண்டு
வேண்டினன் தென்கடலைத் தாண்டி னானே (௧)

(உ) கீர்த்தனம் இராகம் - காகரப்ரியா — ரூபகதாளம்.

பல்லவி.

தாவிச சென்றானே - வீரவாகு
தாவிச் சென்றானே

அனுபல்லவி.

பாவக்கடலுக்கு நாவத்தை யொத்தமெய்ப்
பானுகுமரன்ப தத்தைப்பணிந்துகொண்
டேவற்பணிவிடை நானேசெய்வேனென்று
எட்டிச்சின - முட்டிக்கனல்
கொட்டித்துடை - தட்டிக்கடல் (தாவி)

சரணங்கள்.

(க) திக்குக்கஜங்கள்ந வக்கிரகங்களும
சிலமிருந்திக்குப் பாலர்களுமிக
உக்கிக்கலங்கிம லங்கித்தளர்ந்துட
லுதறத்திசை - பதறக்கிரி
சிதறப்பணி - கதறக்கடல் (தாவி)

(உ) சுற்றியசத்தச முத்திரத்துள்ள
சுறாவுந்திமிங்கிலங் கண்முதலாகிய
நத்துஞ்சலசீவ சந்துக்களுங்கண்டு
நடுக்குற்றுயிர் - திடுக்குற்றிட
முடுக்குற்றுட - லொடுக்கிக்கடல் (தாவி)

(ங) சேனுறைநட்சத் திரங்களுதிர்ந்திடத்
தேவர்கள்சித்தவித் தியாதரருந்திகழ்
மாணெழில்சேர்நதி மாதர்களுஞ்சிந்தை
மறுகக்குடல் - கறுகக்கடை
சொருகப்புனல் - பெருககடல் (தாவி)

வீரபாகு தேவர் கடலைக்கடந்து இலங்கை முகப்பிற்செல்ல அங்கு வந்து எதிர்த்த வீரசிங்கனைச் சங்கரித்தல்.

விருத்தம்

வாரமிகு துணைவீர வாகு தேவன்
மணிக்கடலைக் கடந்திலங்கை முகப்பிற் செல்லக்
கோரமிகு யாளிமுகன் மைந்த னென்னுங்
குரூரவர மியற்றுமதி வீர னேவற்

தீரனைத் தடைவாசற் காவலான
இரண்டபடை யுடனருகில் வளைந்து கொண்ட
வீரசிங்கன் றனைமுதனுட் களப் பலிக்கு
மெய்ப்பித்தா னமன்வசமா யொப்பித் தானே. (௩)

(௩) கீர்த்தனம். இராகம் - சௌராஷ்டிரம்—ஆதிதாளம்

பல்லவி.

வீரசிங்காசுரனுமடிந்தானே - வந்த
மேற்படையுடன்கூட முடிந்தானே.

அனுபல்லவி.

ஆரடாவென்றதட்டிக் கார்முகிலென மேலே
அதிர்த்தட்ட காஸங்கள்செய் தெதிர்த்துவந்தொருக்காலே
வாராவழிக்கு முந்தி வழிகாட்டினது போலே
வாகைமிகுந்த வீரவாகு தேவன் கை யாலே (வீர)

சரணங்கள்.

(க) நத்துமென்காவலினில் சற்றுமெண்ணுமற்சென்று
நஞ்சவுணனென்றுநெஞ் சஞ்சாமலெதிர்நின்று
சுற்றுகின்றயுனையென் கைத்தலத்தாலேகொன்று
துடிக்கவெள்ளரிக்காய்போல் கடித்துத்தின்கிறேனென்று
முற்றிடும்படைகொண் டொறுத்துக் கடுகடுத்து
மூரியேபலசர மாரியெனத் தொடுத்து
சத்திதரன்தூதன் கைக்கத்திக்கிரை கொடுத்து
தானும் படையும்விரு தாவிலுயிர்விடுத்து (வீர)

(உ) தோயுஞ்சிங்கக் குட்டியை நாய்கள்திரண்டுபெற்றி
துள்ளினற்போலநூறு வெள்ளஞ்சேனையுஞ்சுற்றி
காயுங்கழுவுண்ணகை வாய்விட்டிரைந்துகத்தி
கடிக்கவந்தபடையை இடக்கையினுலேமொத்தி
ஈயுமெறும்புமெனத் தேய்த்துடலைச்சிதைத்து
இகல்செய் நூறுவெள்ளந்தை யகழினிற்குட்புதைத்து
மாயும்படைகளைகண் டேமனமும் பதைத்து
மயங்கித்தியங்கிவிட கால்கைகளுமுதைத்து (வீர)

(௩) சோராமலே பின்னொரு குலம்வீரன்மேற்றூக்க
துடிப்புற வீரன்வாளா லொடித்திரண்டுகூறாக்க
கோராயோர்குலிசத்தை மார்பிலுறவிட் டார்க்க
சித்தன்மகன்வாளா லறுத்துத்தனெனப் போக்க

சோரியில் ஈனைத்துரு மாறியே களைத்திட்டு
துலங்கும் வீரனைக்கண்டு கலங்கிப்பெருமூச்சிட்டு
கோரமுடனேவெகு நேரம்நின்று போரிட்டு
கொலைமண்டு வாளினாலே தலைதுண்டாயறுபட்டு (வீர)

பிறகு வீரவாகு தேவர் இலங்கைச் சிகரத்தை மிதித்துச்செல்லுகையில் இலங்கை கடற்குள் அமிழ அப்பொழுது எதிர்த்த அதிவீரனைச் சங்கரித்தல்.

விருத்தம்.

வீரசிங்கன் றலையற்நது கடலில் வீச
மீதமுற்ற வசுரரெல்லாம் பெருங்கால் கண்ட
காரினம்போல் விசும்பின்மறைந் தோடிப் போனார்
கடலிலங்கைக் கோட்டையின்மேல் வீர வாகுத்
தீரனந்தச் சிகரமிசை மிதித்துச் செல்லத்
திரிகூடா சலங்கடற்கு ளாழ்ந்தங் குற்ற
கோரவசு ரர்கள்பயத்துண் மூழ்கக் கண்டு
குதித்திட்டா னதிவீர னெதிர்த்திட் டானே. (௮)

(௮) சந்தத்தரு. இராகம் - காம்போதி—ஆதிதாளம்.

சலத்திலங்கைய மிழ்ந்திடலுமதி
சயித்துநின்றெதிர் கண்டுளமுந்தவி
தவித்துநொந்தவ மானமடைந்துட னதிவீரன்
சலத்துடன்குதி கொண்டுதிரண்டெதி
ரடுத்திரைந்து முனைந்தசுரன் விடு
தளத்தையுந்திரு மான்மருகன்விட வருதூதன்
மலைத்தமர்ந்து தெளிந்தொரு கந்தனை
நினைத்துவந்து வணங்கிமணங்கமழ்
மலர்க்கரந்தனிலே யொளிமிஞ்சிய வாள்வீசி
மலைப்புயங்கள்சி ரங்களுரங்களை
அறுத்தெறிந்துமி குந்ததளங்களை
வதைத்துவெஞ்சம ராடியமன்கையின் வசமாகத்
தொலைத்தவிக்கைய றிந்தசுரன்சின
மிகுத்தெழுந்தயி லுந்திடநின்றது
துணித்தபின்பவ னேவிய தண்டையு மெதிரோடித்

துணைக்கைகொண்டு பிடுங்கிநொறுங்கிட
முறித்தெறிந்தும கிழ்ந்திட லும்படு
துயர்ப்பெருங்கடன் மூழ்கியுளைந்தவ னொருவான்கைத்
தலத்தணிந்துது ணிந்துவிரைந்திவ
னூரத்தையொன்றி யெறிந்திடலும்பல
சமர்த்தனும்புவி மீதுதவழ்ந்தொரு விசையாலே
தனித்துவந்துபு குந்துகரந்தொடை
முறித்தெறிந்துதி றந்தபெருங்குடல்
சரிக்கவஞ்சன்ப டிந்திடயானவர் தொழுதாரோ

வீரபாகு தேவா வீரமகேந்திர நகர் சென்று அந்நகர்த்தெற்குக் கோட்டைக் காவல்செய்த கஜமுகனை சங்கரித்தல்.

விருத்தம்.

கடற்றனை வெள்ளமா யிரமொடதி வீரனையுங்
சணத்திற் கொன்று
ககனவழி யாகமயேந் திரநகர்க்கீ ரைந்நூறு
காதஞ் சென்று
வடக்குக்கோ புரவாயின் மீதிலா யிரவெள்ளம்
வளைந்து கோரன்
மகோர னிருவருங்காத் திருப்பதுகண் டுடன்வீர
வாகு தீரன்
விடுத்தப்பாற் கிழக்குவா சலிற்செல்ல வவ்விடத்தின்
மேதிக் கண்ணன்
வீரபா னுவும்வெள்ள மாயிரஞ்சே னையுங்காக்கும்
விவரங் கண்டு
திடத்துடன்வ வாயிலையுங் கடந்துதெற்கு வாயில்வழி
செல்லும் போது
சினத்தகஜ முகத்தனும்போர் கொடுத்திடக்கண் டொறுத்தவனைச்
சிதைத்திட் டானே. (௧)

(ரு) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

தந்திமுக னழிந்தானே - வீரன்கையாற்சி
ரந்துணிபட்டொழிந்தானே (தந்தி)

அனுபல்லவி.

மூந்துங்கொடு முடிகள்போ - லுஞ்சிரங்களாயிரமு
மூரிய கொம்பொடுமத - மீறியதுதிக்கரமுங்
கந்துறுமீராயிரங்க - ரந்தனின் மரம்பிடித்து
கந்தன்விடுதூதனைக்கண் - டுந்தியுந்துடிதுடித்து (தந்தி)

சரணங்கள்.

(௧) பற்றியேயிந்தத்திசையின் - முத்தொழிலோர்களுமெட்டி
பார்த்திடக்கூடாமலேநான் - காத்திடுங் காவிற்கிட்டி
அத்துமீறியேவந்தவ - னாடாவென்றே யதட்டி
ஆக்கினைசெய்குவேனென்று - தாக்கியேபுயங்கள் தட்டி
வெற்றிவீரன்மேன்மலைய - றிந்தவனெறிந்திடவும்
விட்டபருமலை பொடி - பட்டுடனுதிர்ந்திடவும்
மத்தகெஜங்கள் சிங்கங்கள் - மொய்த்திடும்படைவிடுத்து
வன்றிறல்வீரனுயிரைக் - குன்றுக்கிரையாய்க் கொடுத்து (தந்தி)

(௨) மிக்கமலையாயிரத்தைக் - கைக்கொண்டுபின்னவன் போட
வீறியம்மலைகளெல்லாம் - சூரையிற்பஞ்சுபோ லோட
தக்கபருந்தண்டொன்றெடுத் - துக்கிரவீரன் மேற்சாட
தத்திவீரனதைக்காலா - லெற்றிமுறித்துப் பந்தாட
அக்கணமவனுஞ்சூலத் தைக்கையாலெடுத்துத்தாக்கி
ஆர்ப்பரித்திட இவன்கை - யாற்பரித்துத் தூளியாக்கி
விக்ரமனோராயிந்துசிக்கையுஞ் செருக்கக் கண்டு
மெத்தஅருவிபோல்வரும் - ரத்தவெறியாலுருண்டு (தந்தி)

(௩) அங்கவன்தொங்குகை போயீ - ராயிரங்கைகளாற் கொட்ட
அண்டத்திலெழுங்கைகளைத் - துண்டித்துத்துண்டித்து வெட்ட
அங்கிப்பொறியெனக்கோபம் - பொங்கிவிழிகளின் முட்ட
ஆர்மேல் விழுந்து சாவோமென் - றேறியே வீரனைக்கிட்ட
உங்காரஞ்செய்திவனும் நெருங்கியோர் மிதிமிதிக்க
உற்றவுடலுங்குடலும் அற்றுவிழுந்துகுதிக்க
வன்கணன் மரணவலி - யுங்கொண்டு களைகள்பட்டு
மலங்கமலங்கவிழித்துக் - கலங்கியேதன்னுயிர்விட்டு (தந்தி)

பிறகு வீரவாகு தேவர் கந்தன் கிருபையால் அணு ரூபம் கொண்டு வீரமகேந்திர நகர்வளத்தைக்கண்டு பூரித்தல்.

விருத்தம்.

கெசமுகனை முடித்தபின்பு மதித்துக் கந்தன்
கிருபையினா லணுரூப மெடுத்துக் கொண்டே
யசைவொடுங்கீழ் வாசல்வழி செல்லும் போதி
லகண்டிதஞ்சேர் விராட்புருட னகடு போலத்
திசைகளண்ட சரவசர மனைத்துந் தோன்றுந்
திடநகர்ம யேந்திரத்தைக் கண்ணோக்கிப்
புசபலப ராக்ரமஞ்சேர் வீரன் சிந்தை
பூரித்தான் மகிழ்ந்தார வாரித் தானே. (கூ)

(கூ) கீர்த்தனம். இராகம் - தோடி—ஆதிதாளம்

பல்லவி.

வளங்கள் முழுவதுங்கண் - டுளங்களிகொண்டுவீர
வாகுதேவனுஞ்சென்றனே.

அனுபல்லவி.

களங்கமில்லாதமணி - ரதமுங்கசமுந்துர
கதமும்பதாதியினற் - புதமும்வகை வகையாய்
விளங்க அணிவகுத்துத் - தளங்களெல்லாம் பகுத்து
வீரமயேந்திர அலங் - காரஞ்சிறந்தபல (வளங்கள்)

சரணங்கள்.

(க) மொய்த்துவானுலகத்தைத் - தத்துங்கோட்டையும்வர்ண
முறையாயிரநிலைக்கோ புரங்களும் - அதில்
பத்தி பத்தியாகவே - சுத்தசாத கும்பமேற்
பதித்தநவரத்னச்சி கரங்களும் - திரை
கத்துங்கடலைப்போலச - சுற்றகழுந்தோரண
கம்பங்கள் துகிற்கொடி - மரங்களும் - மிகு
சித்ரப்பதுமைகளி சைத்தலங்காரஞ்செய்த
தேனுலவியபூஞ்சப் பரங்களும் - இன்னும்
மெத்தவுன்னதமாய்த்தொகுத்த கொத்தளங்களும்
விமரிசையாய் மல்லர்க - ளடர்செய்யுந்தளங்களும்
தத்தும்பரிகளை - கடத்துஞ்செங் களங்களும்
சதுக்கையுள்ள நீராவி - களுந்தெப்பக்குளங்களும்

சகத்ரதளமரை மலர்நிறைவாவிய
தனிற்பெடைகளொடு - நடையனமோவிய
மிகுத்தகிரீடைசெய் - திணிதுடன்மேவிய
விசித்ரவைபவ மகிழ்வொடுலாவிய (வளங்கள்)

(உ) சந்த்ரகாந்தஸ்தம்பங்க - ளிந்துவைக்கண்டமுதந்
தழைத்துறுஞ்சலவை மண்டபங்களும் - அகிற்
சந்தனம் புனுகு சவ்வாது பனிநீர்முதற்
சாடிகள்நிறைந்த மண்டபங்களும் - எழிற்
பைந்தொடியார்களெல்லாங் - கொந்துகொந்தாகசேர்ந்து
பந்துகள் பயிலு மண்டபங்களும் - மிதவ
நந்தருவர் முதலோர் - வந்துநின்றனுதினம்
கானங்கள்செயதிடு மண்டபங்களும் - உயர்
அந்தரத்தைமங்கையர் - குந்திப்போ யிடிப்பதும்
அங்கையினுலாகாச - கங்கைநீர் குடிப்பதும்
மங்கையர்களைப்பல - மந்தமாய்ப் பிடிப்பதும்
மேவிக்கலந்தப்பாலே போபோவென் றடிப்பதும்
வெடிக்கனையகுர லசுரர்கள்மது முறை
குடித்தவெறியொடு குரவைகள்பல பறை
யடித்துமதகஜ மொடுமொருவது டறை
கொடுத்திளமையொடு - புகழுறுவதும் நிறை (வளங்கள்)

(௩) ஆடவர்மங்கையரோ - டேல்செய்தணைந்திடும்
அணியரங்குநடன சாலையும்-சொர்ண
மாடங்கள்நவரத்ந - பீடங்களுங்கல்யாண
மண்டபங்களுமந்த்ர சாலையும் - ஒளி
நீடனவிசுவையோ டியற்றும்பாக சாலையும்
நிலவுமணிப்பொக்கிஷ சாலையும் - சூரன்
நாடியமைச்ச ரொடுங் கூடியந்த்ராலோசனை
நவிலுகின்றதந்திர சாலையும் - பல
பாடங்களோதும் வித்யாசாலை வஸ்திரசாலையும்
பளிங்கு மேடையு மொளிதுலங்கும் சஸ்திரசாலையும்
வாடுங்தேவர்க்குத் துன்பம் - சாடுஞ்சிறைச சாலையும்
வயித்தியசாலையும்நவ - மணிப்பண்டக சாலையும்
மறைத்தவமுனிவர் - மனுமுறை யாதிகள்
வழுத்தியவிசொரி - மகவனல் வேதிகள்
நிறைத்தபலமணி - யணிகல ஞாதிகள்
நிறுத்தமிதவில பகர்கடை வீதிகள் (வளங்கள்)

(௪) அக்கினிமுகனிர ணியன்பானுகோபனாவாக்
கழகுபெறவமைத்த அரண்மனையும் - அதி
முக்கியவச்சிரபுயத்தன் அரண்மனையும்சத
முகவசுரனிருக்கு மரண்மனையும் - என்னணி
லக்கமாயிரமுக வசுரனரண்மனையும்
நிஷ்கண்டகவமைச்ச ரரண்மனையும் - இன்னும்
மிக்கமூவாயிரங்குமாரர்களனைவர்க்கும
விதம்விதமாயமைத்த அரண்மனையும் - அஷ்ட
திக்கண்டபதிசூரன் - தனக்குப் பொற்கால்பொருத்தி
தினுசாயோராயிரம்யோ - சனையகலந் திருத்தி
தக்கவயிரத்திறற் சாளரமும விருத்தி
தலையாயிரஞ் சோ சிங்கா - சனமுமினி திருத்தி
தலத்தின்மாகத - சிலைமிசை யழகிய
தனிப்பனிநீரொடு - கலவைகள் மெழுகிய
நலத்தகைமைபெறு - நறுமண மொழுகிய
நயத்திலசுரர்கள் - உவகையில் முழுகிய (வளங்கள்)

வீரபாகுதேவா சிறைச்சாலைப்பக்கம் செல்லல.

விருத்தம

மணங்களின்றித் தடங்கணந்த வனங்க டோறு
மருவிநிரை யாய்ப்பூத்த மலர்கள் போலு
மிணங்கியதோர் மங்கலநா ணொன்றி லாம
லிலங்குபணி யணிந்தகுல மகளிர் போலுங்
குணங்கள்மனு நீதியொன்றி லாத சூரன்
கொளுமுகமும் நகர்வளமுங் கண்டு வீரன்
வணங்கியதே வரைவருத்துஞ் சிறைக்கூடத்தின்
வழிசென்றான் மறைந்துகொண்டவ் வழிநின்றானே (எ)

வீரபாகுதேவர் சிறைச்சாலையண்டை மறைந்துகொண்டு நிற்கையில் சிறைச்சாலைக்காவலாளர்கள் ஜயந்தனை வருத்த அவன் துன்புற்றிரங்கல.

பின்னும் விருத்தம்.

செயவீர வாகுவனங் கிருக்கும் போதிற்
சிறைச்சாலைக் காவலர்க்குத் தலைவரான
கயவனதி கண்டகன்று வகன்ற ளுசி
காரானன் சிங்கமா புலனுங் கூடி

வியனுறுஞ்ச யந்தனைப்பார் வளர்ந்து கொண்டு
பெருட்டியா ளோங்கியுன்றன் றகப்ப னெங்கே
வயணமதைச் சொல்லெனவே நெருக்கக் கண்டு
மயங்கினன் றுயரமுற்றுக் கயங்கி னனே (அ)

(எ) தீபதை இராகம் - காம்போதி--அடதாளம்.

(க) ஐயய்யோகானிந்த - வெய்யபாதகரான
அசுரர்செய்யுந்துன் பத்துக காளோ - என்றன்
தெய்வமேயினிமேலே - செவவையாக முன்போலே
க்ஷேமம் பெறுவதெந்த நாளோ

(உ) அகதிதனைப்பிடித்துப் - பகுதிக்கடித்தாற்போலுன்
அப்பனெங்கே காட்டென்கி றானே - பாவி
மிகுதுயரஞ்செய்வதற் - காற்றுபலவரெந்த
இடத்திலுற்றாரோ அறி யேனே

(ங) அகப்பட்டவனுககஷ்ட - மத்துசசனிபோலிந்த
அரங்கில்நின்று விழிக்கி றேனே - இந்த
யுகத்தினிலே யொன்பதாமடத்துப்ரகஸ்பதிபோ
லோடினவர்க்குச் சுகந் தானே

(ச) அன்னையுந்தந்தையு - மென்னைத்தவிககவிட்
டாறுலகிலிருக கின்றாரோ - அவர்
தன்னுயிர்மாத்திர - மின்னமுதாக வெண்ணித்
தரித்துடலை வளர்க கின்றாரோ

(ரு) பஞ்சதருநிழலின் - பஞ்சத்திற்பூவிரித்துப்
பள்ளிகொண்டுவந்திருந் தேனே - இப்போ
வஞ்சவவுணர்செய்யி - டஞ்சலுக்குள்ளாகியே
மண்ணிற்கிடந்துருளு றேனே

(சு) இந்த்ரபோகமென்றுப - கர்ந்திடுஞ்சுகமெல்லாம்
யான்பிறந்திடவீணாய்ப் போச்சே - தேவர்
சந்ததிபிழைத்திட - வாதுதம்பிபிறக்கத்
தரைமட்டமென்பதுபோ லாச்சே

(எ) கானிலவரைத்தேடிப் - போனதேவர்களின்னம்
கண்டுகொண்டாரோகா ணாரோ - பதவி
பானுகோபனென்றனைப் - பிடித்து வந்ததையாரும்
பார்த்தபேர்சொல்லத்தெரி யாரோ

(௮) தக்கன்வேள்வியற்றேனர் - புக்கியே நந்தியைநிந்
தனைவார்த்தை சொன்னதெல்லா பேனே - வேறு
பிக்கன்றித்தகப்பனெ - னக்கென்று தேடிவைத்த
பிராயச்சித்தமிது தானே

(௯) சயந்தன்சிறைப்பட்டானென் - றுயர்ந்தபூவுலகெங்குஞ்
சாற்றுமவமானப்போ சாதே - என்றன்
புயந்தனிலடிபட்ட - தழும்பாறி நான்செத்துப்
போனாலுமென்னெஞ்சம்வே காதே

(௰) அடித்தவர்க்கெல்லாமாளாய்ப் - பிடித்தவர்க்கெல்லாம்பெண்டா
யாச்சுதே நாங்கள்செய்த கன்மம் - ஆணி
எடுப்புண்டகலப்பைபோற் - கவைக்குதவாப
லெடுத்தோமே தேவரெனுஞ் சென்மம்

(௰௧) விடுத்ததக்கன்வேள்வியி - லடுத்துதவிசெய்தங்கே
வெகுமானம்பெறப்போன லாபம் - சும்மா
அடுப்பினிநெருப்புய்போய் - வாய்த்தவிடும்போனாற்போ
லாச்சுதேநாங்கள் செய்த பாவம்

(௧௨) பாவியவுணன்பானு - கோபன்கையினாலறை
பட்டயிராவதங்கொம் பொடிந்து - இந்தப்
பூவுலகினிலெந்தக் - காவினிலேயறைந்து
போயிருக்குதோபய மிடிந்து

(௧௩) அஷ்டகுணமூர்த்தி முன் - னிட்ட கடுஞ்சாபத்தை
அரியயனாற்றீர்க்க வொண்ணுதே - பொருள்
கெட்டுப்போனவிடத்தை - விட்டுவிட்டோடியுல
கெங்குந்தேடினாலு நண்ணுதே

(௧௪) திக்கண்டமாயிரமுங் - கைக்கொண்டவசுரர்கள்
செய்யுந்துன்பங்களையிப் போதே - அந்த
மைக்கருங்கண்டனல்லால் - மிக்கொருவர்களாலும்
மாற்றவுங்கூடுபோகா டாதே

(௧௫) கங்குகரையன்றிநான் , தாய்பிரிந்த கன்றுபோற்
கதறிப்புலம்புமோசை தானே -
எங்குஞ்செவியுடைய - புங்கவனே நின்செவி
ஏற்கவில்லையோபெரு யானே

(௧௬) நெரித்துத்திரிபுரத்தை - யெரித்துத்தேவரைமுன்னாள்
ரெக்ஷித்தருளும்பரா பரனே - நான்
தரிக்கவிடமில்லாமற் - றாமரையிலைநீர்போல்
தயங்குகின்றேனோக்ருபா கரனே

(௰எ) பதைத்துவிழுயமனை - யுதைத்துமிருகண்டன் தன்
பாலனைக்காத்தருள் சற்குணனே - அதுபோல்
வதைத்தசுரரைக்கொன்றெங் - களைப்ெ ரக்ஷிக்கவுனக்கு
வருத்தமோசொல்வாய் முக்கணனே

(௰அ) சாபத்தைப்பெற்றுமிகச் - சளைப்பட்டதெங்கள் சென்மாந்
தரத்துக்கும்போதுஞ்சங் கரனே - முன்பு
கோபித்தகண்ணலேநீ - யேறிட்டுப்பார்த்தெங்கள்
குடிகாக்கவேணும்பவ ஹரனே

ஜயந்தன்புலம்புவதைச் செந்தூர்க்குமரன் கேட்டு அவனுக்குச் சொப்பனத்தில் காக்ஷிகொடுத்து அவனைத்தேற்றுதல்.

விருத்தம்.

செயந்தனிந்த விதம்புலம்பிக் கதறு மோசை
திருச்செவியிற் கேட்டுடனே சென்று ரையன்
பயந்தகன்றைத் தேடிவரும் பசுவைப் போற்சொப்
பனத்திலவன் றனக்கெதிரே முகமோ ராறும்
புயங்களொரு நான்மூன்றுங் கருணை வெள்ளம்
பொழியுமலர்க் கண்களும்பொற் பதத்தி லிட்ட
வியன்சிலம்பு கலகலெனத் தோன்றி வந்து
மேவினு ரிதஞ்சொலிக்கு லாவி னரே (௧)

(அ) கீர்த்தனம். இராகம் - பியாகடை—ஆதிதாளம்.

பல்லவி.

சயந்தனே நானுனக்க - பயந்தந்தேனினியுன்றன்
பயந்தனை விட்டுவிடடா

அனுபல்லவி.

புயந்தனில் வாகைபுனைந் - துயர்ந்தவிண்ணுலகிலே
புரந்தரனுடைரசு - புரிந்திடுவாய் முன்போலே (சயந்தனே)

சரணங்கள்.

(௧) தொந்தவசுரர்கள்செ - யுந்துயரான் மெலிந்துன்
தந்தைமுதலானோர்கள் - வந்து முறையிடக்கண்
டெந்தைநுதற்கணிலெ - ழுந்தகனற்பொறிப
றந்துகங்கையில் வீழக்
கந்தமலர்ச்சரவ - ணந்தனிலேபிறந்து
பைந்தொடியாரறுவர் - கொந்துமுலையமுத
முந்தியுமையவள்க - ரந்தனிலேவளர்ந்த
மைந்தனென்றிருநாமம் - கந்தனுஞ்சொன்னேன் (சயந்தனே)

(உ) பத்திசேர்பதினொரு - ருத்திரப்படையொடு
சத்திவடிவேலும்பெற் - றுற்றதுணைவீரவா
குத்தலைவனொடிலக் - கத்தொன்பதின்மர்கள்பூ
தத்தலைவரோடெழுந்து
நத்திமாயாபுரியைப் - பற்றிவளைந்துகோட்டை
கொத்தளங்களையுமி - டித்துத்தாரகன்றன்னு
ரத்தையுங்க்ரவுஞ்சகி - ரித்தடவரையுந்த
கர்த்தவடிவேலனென் - றுற்றறிந்திடுசொன்னேன் (சயந்தனே)

(௩) காருறைந்திடுந்தெய்வப் - பேர்வரையினில்வந்து
வேரிநறுமாமலர் - மாரிசொரிந்துமகிழ்ந்
தாரணன்முதற்றேவர் - கோரியபடிதிருத்
தோமிசையெழுந்துசென்ற
ஏர்பரங்குன்றிலெதிர் - நேரும்பராசரர்கு
மாரர்கள்கண்டுகளி - கூரவரமுவந்து
சூரர்கள்குலங்களைக் - கூர்கொள்வடிவேலினால்
வேர்களைந்திடவேசெந் - தூரில்வந்திருக்கிறேன் (சயந்தனே)

ஜயந்தன் கனவிழித்தபிறகு வீரபாகுதேவா அவனிடம்
சென்று அவனைத்தேற்றுதல.

விருத்தம்.

இனிதுறுநந் துணைவனைச்சூ ரன்பாற் றூதுக்
கேவினோ மவனையுநீ காண்பா யென்று
கனவிலைய னுரைத்திடலுஞ் சயந்தன் கேட்டுக்
கண்விழித்தான் காவலரே வியம்போ லானோர்
தனிவீர வாகுவவ னெதிரே வந்து
ஷண்முகவேள் தூதனென்று பேருஞ் சொல்லித்
தினமொருபத் தினிசூரர் படும்பா டெல்லாந்
தெரியென்றான் கந்தனையுச் சரியென் றானே (ம)

(௬) கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

கண்டறிந்து பாரடா ஜயந்தா - இந்
கரவசுரர் படுந்துயரந்தான்

அநுபல்லவி.

அண்டருங்களுக்குற்ற - அவதியெல்லாம் தீர்ந்தது
அனுகூலகாலங்களடுத்து வந்துசேர்ந்தது
மண்டுவீரருடன்பிர - சண்டஷண்முகன் வந்து
மத்தர்புரத்தினை - யுற்றுவளைத்தெழு
சுற்றரணத்தையி - டித்துமுனைத்தமர்
பற்றியிழுத்துமு - தைத்துமுடித்தலை
யற்றுடலத்தை - வதைத்திடுசக்திதனைக் (கண்ட)

சரணங்கள்.

(க) தடத்திரதங்களெல்லாம் பொடித்து - யானைமத்
தகங்களைப்பிளந்து கொப்பொடித்து - போரில்
அடற்பரிகளைக் கையாலடித்து - நேருட
அசுரர்களுயிரினைக் குடித்து - கன
அக்கிரமக்கிரியை - மிக்கவுணக்குல
க்கனோடொக்கல்கள் - தக்கவுடற்கிடை
புக்கிமணிக்குட - லைக்கழுகுக்கிரை
வைக்குமயிற்கர - னுக்ரமதைக்கண்ணுற் (கண்ட)

(உ) விருதுகேதனங்களை யழித்து - வாளால
விசித்தசுரர்களுரங் கிழித்து - வலியச்
சருவிச்சூரனையேசிப் பழித்து - யாவும
சாங்கோபாங்கமாகவே யொழித்து - பூதர்
தண்டுகள்குண்டுகள் - பிண்டிமுசண் டிகள்
கொண்டுதிரண்டெதிர் - அண்டியுமண்டையின்
முண்டியகண்டகர் - மண்டைகள்தொண்டைகள்
பண்டிகள்பிண்டு - முருண்டிடுசண்டைதனைக (கண்ட)

(ங) அஷ்டதிசையெல்லாங் கொண்டாட - எழில்
அரம்பையர்கள் சோபனம் பாட - உயர்
சிஷ்டமுனிவர்கள் கூத் தாட வானில்
தேவர்பூமலர்மழை போட - ரெண
செங்களமெங்கினும் - வன்கணர்கண்கள்ப
னங்குலைநொங்கென - வுங்கெலியுங்கன
மங்கையர்பொங்கிய - மூங்குரலுங்கிளர்
புங்கவர்சங்க - வியங்கள்முழங்குவதுங் (கண்ட)

பிறகு வீரபாகுதேவர் சூரன் கொலுமண்டபத்தி னதிசயங்களை மறைந்திருந்து கண்டு வியத்தலும், அப்பொழுது சூரன் அமைச்சரோடும் கொலுவீற்றிருத்தலும்.

சயந்தனையிவ் வகைதேற்றி வீர வாகுத்
தலைவன்வெளி வழியாக விரைவிற் சென்று
சுயந்திறமை யயுதவெள்ளஞ் சேனை காக்குஞ்
சுற்றுபதி லாயிரயோ சனைவித் தார
முயர்ந்தமணி மண்டபத்தின் சூளி கைக்கு
ளொளித்திருந்தங் கதிசயங்கள் யாவுங் கண்டு
வியந்திடும்போ தமைச்சரொடுஞ் சூர னுள்ளம்
விரிந்திட்டான் திருக்கொலுவீற் றிருந்திட் டானே (௰௧)

(௰) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம். தாளமாலிகை திநபுடைதாளம்.

பல்லவி.

தாரணிதிண்புய சூரபதுமன்சிங்
காரக்கொடுங்கொலு விருந்தனன்

அநுபல்லவி.

கார்முகிலெனவே - பேரிமுரசுட
மாரங்களதிகெம் - பீரமாய் முழுங்கக்
கதித்தெழுந்தபொன் - மேருவின்மேலிருள்
புதைத்தமைந்தமை - மாமலைபோல்விலை
மதிக்கடங்கவொ ணுதவின்மாமணி
பதித்துயர்ந்தசிங் - காசனமீதினில் (தாரணி)

சரணங்கள்

(௧) இந்துவும்வருண னுந்துதிபுரிந்தங்
கிணக்கமுடன்முத்து மணிக்குடைகிழற்ற
செந்திருவைநிகர் பைந் தொடிமின்னார்கள்
திரண்டுகவரிகள் வீசவே - தேவ
கந்தருவர்மலர் முடிக்கவே - நாக
கன்னியரடப்பம் பிடிக்கவே - அதி
விந்தையர்கள் கீதம் படிக்கவே - ரம்பை
மேனகையூர்வசி நடிக்கவே
மந்தரத்தினை வாசுகிமேவிவ
ளைந்தவொப்பன வேயிருதோள்வலை
யந்தரித்துமன னந்தனிலேவெகு
கொந்தளிப்புடனே ஒயிலாகவே (தாரணி)

(௨) வீரமிகுமதி காரபுஜபல
நிரகரந்தரு மாரவிறல்செறி
காரவுணகுல சூர்பராக் கென்றெமன்
கட்டியங்கள் சொல்லிப் புகழவே - எதிர்
போர்புரியுமல்ல ரடுக்கவே - இரு
புயங்கள்தட்டி அமா தொடுக்கவே - கன
தூரியங்கள் செவி மடுக்கவே - செல்வித்
துணைவனும் கைலாகுகொடுக்கவே
ஈரெமெட்டிணையேனுமிலாதகு
ரூரமுற்ற மனத்தவர்கிய
கோரவுக்ரவமைச்சாகளோடதி
காரவர்த்தனையாண்மை செலுத்தியே (தாரணி)

(௩) பணிக்கரசானவ மணிக்குவைகொணர்ந்து
பாதகாணிக்கைவைத் தோதியெதிர்நிற்கத்
துணைககரங்கட்டிக்க ருணிகரண்டங்களின்
தொகைவகைசொல்லிவி வரிக்கவே - தேவர்
துணிக்குஞ்சம் பாவாடை விரிக்கவே - மாயன்
துதிகள் பகர்ந்துப சரிக்கவே - வேதன்
அணித்தினசுத்தியுச சரிக்கவே - நிதிக்
கதிபன்பணியலங் கரிக்கவே -
மணத்திடுங் களபங்களணிந்ததி
குணத்துறுங்குல மங்கையர் கொங்கையோ
டணைத்தழுந்திய குங்குமபந்திகள்
பணைத்தெழுந்த பொன்மார்பிலிலங்கவே (தாரணி)

அப்பொழுது குமரக்கடவுளது கிருபாகடாக்ஷத்தால் ஆகாயத்திலிருந்து வந்த சிங்காதனத்தில் வீரபாகுதேவர் ஏறியிருத்தல்.

மருவுசிங்கா சனத்தசுர னிருக்கும் போது
மலர்ச்சரவ ணத்துதித்த குமர நாதன்
அருட்சிறந்த வீட்சணக டாக்ஷத் தாலே
அருக்கரொரு கோடியொன்று யுதித்தாற் போலே
விரிவுறுவா னத்திருந்தங் கிழிந்து வந்த
விசித்ரமணி பிழைத்தசிங்கா சனத்தை வீரன்
பரவியுறு வுருசீங்கி மகிழ்ச்சி யோடன்
பாற்கண்டான் வணங்கியதன் மேற்கொண் டானே (௯)

(யக) கீர்த்தனம். இராகம் - பியாகடை—ஆதிதாளம்.

பல்லவி.

சிங்காசனத்திலிருந்தான்
வீரவாகுதேவனும் - சிங்கா

அனுபல்லவி.

பொங்காமணி மார்பினில்
துங்கவாரங்களி லங்கப்
பொற்புயர் சிற்பர - சுப்ரமண்யப்ரபு
நட்புடனனுப்பிய னுப்பிய அற்புத (சிங்கா)

சரணங்கள்.

(க) சோதிமகுடமுஞ் சொலிக்க - மகரகுண்டலத்
துருவொளியெங்கும் பிரபலிக்க
பூதியணிநுதலி - லேதிலகந்துலங்கப்
பொற்றகடெற்றெழு பத்திகள்சுற்றிய
சுத்தவிசித்ர ரெத்நமழுத்திய (சிங்கா)

(உ) வெற்றிவாளிடையிலிறுக்கி - கம்பீரமாக
வீரியமாய் மீசை முறுக்கி
சத்ருசங்காரஞ்செய்ய - முத்துமணிக்கரத்திற்
சத்திதரித்திடு கர்த்தன்மலர்ச்சர
ணத்தினில்வைத்தருள் பக்திமிகுத்தெழில் (சிங்கா)

(ங) காரவுணர்மனந் துடிக்க - சூரனுக்கிரு
கண்களனற் பொறிபொடிக்க
வீரவெண்டையமுங்கலீ ரெனவேயொலிக்க
மெய்த்தவமுற்றிய சித்தர்மலர்த்துணர்
கைத்தலமுற்று நிறைத்திடபெத்திர (சிங்கா)

சூரன் வீரனைப்பார்த்துறுமுதல்.

விருத்தம்.

ஆரென்ன விவனமது கோட்டை தாண்டி
யச்சமின்றி யாசனமீ திருப்ப தான
சீரென்ன ஆரென்ன பேர்தா னென்ன
சிங்குதவனுத் திறமதென்ன வொயிலென் னென்னக்

காரென்ன வுடல்குலுங்க வதட்டி யோங்கிக்
　　கனகசிங்கா சனத்திருக்குஞ் சூரன் சீறிப்
போரென்ன வருமோவென் றமர ரஞ்சப்
　　பொருமினன் வீரனைப்பார்த் துருமி னனே (மஅ)

சூரன் வீரனை நீயாரென வினவல்.

பின்னும் விருத்தம்

பத்திரசிங் காசனத்தி லிருக்கும வீர
　　பாகுதே வனைக்கண்ட சூர னேரிற்
சித்தநய னமுங்கலங்கிப் பெருமூச் சிட்டுச
　　சீறுவட வாக்கினிபோற் சினந்து நோக்கி
முத்தொழிலோர் களும்நெருங்கிப் பார்க்கொ ணாத
　　முரசறைவா யிலுங்கடந்து நமக்கு நேராய்
அத்தாணி தனிலிருக்கத் தகுமோ சொல்ல
　　டாவென்று னீயார டாவென் றனே (மசு)

(மஉ) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

பாயிரம்.

நீயாரடாசொல்லடா - அஞ்சாமல்வந்த
நீயாரடா

அனுபல்லவி

வாய்முனைவாளினால பாயமாயுனைவெட்டி
மடிக்குஞ் சூரனென்றெட்டித் திடுக்கிடாமலேமிக
மனத்திறமாகச் சிங்கா சனத்திலிருக்கிறவன் (நீயாரடா)

சரணங்கள்.

(க) கோட்டின் சிங்கத்தின்முன்னே - காட்டினுழைநரியோர்
மேட்டிலிருந்துவா - லாட்டுதல்போல்
தாட்டிகமுடன் வெகு - போட்டியா யொருக்காலே
தருக்கடைந்துகன்றலே - திருக்கியெனக்கெதிரே
சரிவென்னடையம் போட்டொரு - வெறிமிண்டன் போலிருக்கும்
(நீயாரடா)

(௨) ஆயிரம்பாம்பிலுக்குள் ளேயொருதவளைபோல்
மாயவோர் வந்தாய்சபை - மத்தியிலே என்றன்
மெய்யவசரனைக் - காயம்படக்கடித்து
மென்றனதுடலத்தைத் - தின்றிடுமுன்னேயுன்ன
மெய்ப்புலன்றனைச் சொல்லித்-தப்பிப்பிழைக்கவென்றால் (நீயாரடா)

(௩) வேதன் விடுக்கவந்த தூதனோவைகுந்த
மாதவனால் விடுக்கவந்த தூதனோ - அரு
ளாதிசிவன் விடுத்த - தூதனோவத னுண்மை
அறிந்துகொண்டு திரங்கள் - சுரந்தமணிக்குடலை
அரிந்திட்டெமன்றனக்கு - விருந்திட்டிடுவேனிப்போ (நீயாரடா)

வீரன் சூரனுக்கு விடைதரல்.

விருத்தம்.

மதத்தவுண னிந்தவித முரைக்க வீர
வாகுமன்னன் புன்னகைசெய் தவனை நோக்கித்
துதிக்குமயன் மான்முதலோர் விடுக்க வந்த
தூதனென்று நினையாதே சுயம்பிர காசம்
கதித்திடுந்தா ரகப்பிரமந் தானே யொன்றாக்
கஞ்சமலர்ச் சரவணத்து ளவத ரித்த
நிதிக்குமரன் விடுக்கவந்த தூத னென்றே
நினையென்பான் கேளென்போ தனையென் பானே (௰௪)

(௰௫) கீர்த்தனம். இராகம் - ஆரபி - ஆதிதாளம்

பல்லவி

என்வாக்கியங்கே ளடடா மூடா - அடடாமுரடா - தனி
ஏகதீரவீரவாகு நானுனக் - காகவேகமாகவந்தேனடா - என்

அனுபல்லவி.

சன்மார்க்கமி லாதினிமேலுநீ
துன்மார்க்கமதாய் நடந்தாற்கட
வின்வாய்ச்செந்தில் வாழ்குகனயின்முனை
யின்வாய்க்கிரையாய் விடுவாய்சொன்னேன் (என்)

சரணங்கள்

(௧) மனத்துயரஞ்சொன்ன வானவர்க் கபயப்பிரதங்கொடுத்து - தாரகன்
[றன்னை
வதைத்துக்ரவுஞ் சத்தையுஞ்சிதைத்துமாயாபுரியுங் கெடுத்து - வீரர்பூத
[ராம்
கணத்தபடையொடு சுந்தரக்குமரன் செந்திலவந் தடுத்து - நீதியோடு
[ன்றன்
கருத்தையறிந்துகொண்டுவரச் சொலியெனைத்தூதுவிடுத்து - முன்னை
[ஞ்செயந்தன்
தனைச்சிறையினில் வையாமலுமிடுதனை
தறித்தவனை யமராபதி யரியணை
தனிற்புனிதனொடு மகிழ்வுறவினிதுசெய்
எனச்சொலியமதி இது தவறுமலே (என்வாக்கியம்)

(௨) சிவகாருண்யமிலாப் பாவியெனப்பேர் படைக்காதே - அநி
[யாயமாகத்
திக்கண்டமாயிரமுங்கைக்கொண்ட வாழ்வைத்துடைக்காதே - மதங்
[கொண்டாலுன்
மாவலியுங்குலமும் போய்விடுமினிக்கிடைக்காதே - சமுத்
[திரம்போல
மடைகொண்ட குளமதைச்சுடுகெண்டைக்காக வுடைக்காதே - கற்பக
[நாட்டில்
யேவுமுத்தமர் யாவர்களுங்கடல்
நீனெடுத்தநியாயமதாகவே
கோவெனக் கதறுதினிமேலனு
கூலமுற்றவனுகி விவேகமாய் (என்வாக்கியம்)

(௩) மகத்தழலிலுடலைச் செகுத்துச சொரிந்துரிமையொத்தும் - சிவனை
[நோக்கி
யருகதித்தவம்புரிந்து சிறந்தவண்டமுதலனைத்தும் - அனே
[ககாலம்
மிகுத்ததொண்டுபுரியச - சகத்திலழியா வரம்பெற்றும் - மனு
[விக்ஞான
விதிமுறையின்றிகெடு - மதிகண்ணுக்குத்தோணுமல் முற்றும் - பாவி
[ஐயவேயா
அகத்திலுயர்மேன்மைகள் யாவையும்
அழித்தெலோருமதோகதியாக ந
ரகத்திலேமுழு காமலரன் அருளை
யடைத்துவாழ்வதுவேநிஜமாகில் நீ (என்வாக்கியம்)

தன்பெருமையைச் சூரன் கூறல்.

விருத்தம்

வனக்குமரன் றுணைவனித்த னாறு கூற
    லானவுண னெட்டப்பரிட்டி போலே மூந்து
சினக்கனல்கள் விழியிணையிற் சிந்த நோக்கித்
    திக்குமுதலயிரத்தெட் டண்டங் காக்கு
மெனக்கறியா மேற்புத்தி நீயோ சொல்வா
    யெட்டிரண்டு மறியாய்போ போடா வென்று
தனக்குரிய மகிமையெல்லா மெடுத்துச் சொல்லித்
    தடுத்திட்டா னசுரனவெடு வெடுத்திட் டானே (௰௩)

(௰௪) கீர்த்தனம் இராகம் - மோகனம்—அடதாளம்

பல்லவி

என்னசொன்னையடடா - எனக்குப் புத்தி
யென்னசொன்னையடடா

அநுபல்லவி

என்னசொன்னாயென்றன் முன்னிருந்துகைநீட்டி
ஏழமையைப் பாராட்டி - ஆழமு நீச்சுங்காட்டி (என்ன)

சரணங்கள்

(௧) சிற்பரனைசிவ - னைப்பூசைசெய்துப்பரும
கற்பம்வரையிலெனக - குப்பழுதுறாமல்
மெய்ப்புடன் வரமபெற்றி - ருப்பதையறிந்துமுன்
வெட்டினிறபணமபார்த் - திட்டிடலாமென்று
வியப்புடனே சற்றும் - பயப்படாமலின்று (என்ன)

(௨) என்னலாமெனையொரு - கிளருங்கரையாமெண்ணி
வெள்ளிமலையருகிற - றுள்ளித்திரியுஞ்சிறு
பிள்ளையோரெலிபோல் - வெள்ளை வீசியேசுமமா
பெருக்கமாகச்சொல்லி - முழுக்கியவன் கீர்த்திப்
பிலுக்கையென்னிடத்தி - லலுக்கிப்பயமேற்றி (என்ன)

(௩) பந்தயமாகச்சொல்வே - னென்றனுயிருள்ளள
வுந்தான் சயந்தன்சிறை - யுந்தான் விடுவதில்லை
உன்றனுயிர்பிழைகக - வந்தவழியைத்தேடி
யொப்புடன் றப்பியோ - டாமற்றலையாட்டி
உழக்குக்குள்ளேதானே - கிழக்குமேற்குங்காட்டி (என்ன)

[illegible] எடுத்துச்சொல்லல்.

விருத்தம்.

இக்கடின மொழியவுண னுரைக்க வீர
    னிரங்கியவன் முகநோக்கித் தடஞ்சீர்க் கங்கை
முக்காலும் பிழைபொறுக்குந் தன்மை போன்றும்
    மூர்த்திகட்கு முதலான குமரன் சொன்ன
தககமதி கேளாய லரியா யத்திற
    சகலவள மையுமிழந்து சமமூ லத்தோ
டொக்கலும்போய் யுடியாயற் பிழைக்குஞ் செய்கை
    யுணரெனறு னிருயுனககு ரிணறென றனே (மஎ)

(ரு) கீர்த்தனம் இராகம் - யமுனாகல்யாணி - ஆதிதாளம்

பல்லவி

பிழைக்கும் புத்தியைக்கேளடா - சூரபத்மா நீ
பிழைக்கும் புத்தியைக் கேளடா

அநுபல்லவி

மழைக்குதவியகுடை - யிடிக்குதவும் னென்றெ ணணி
மலைத்துமிகமனம்பால குடியாய் போல
குலத்துடனே சரியாயமடியாமலே (பிழைக்கும)

சரணங்கள்

(க) சினத்தைப்பொருளென்று கொள்ளாமல - வளா
செல்வத்தைபுதைந்து தள்ளாமல் - மிக
மனககளுவங்கொண்டு துள்ளாமல் - எனது
வார்த்தையை யிகழ்ந்து விள்ளாமல - உல
கனைத்துயிருந்தன்னுயிர் - தனைப்போலு மதித்து
அறநெறியொழுகக்த்தி - னிறையனபு பதித்து
இனத்தசுரர்க்குப்புத்தி - தனைசசொலலி விதித்து
இகலன்றியுலகெங்கும - புகழ்நலம கதித்து (பிழைக்கும்)

(உ) இடுக்கணுமபர்க்குச்செய் - திடாதே - சொன்னே
னென்றும்பாலைபழுத் - திடாதே - பெருங்
கடைக்கனலைமழை - தடாதே - கடந்த
காலிடறுமல் - விடாதே - வரவ
கொடுத்தவனேயழிக்க - நினைத்தென்னவி [illegible]
கொண்டுவெந்திருப்பதை - கண்டறி யாது
துடிக்கிறாயிதுவெல்லாம் - கனைப்பீருத யாது
சொன்னேனெசசரிக்கையா - யுன்னிநீயெயிப் பேர்து (பிழைக்கும்)

(௬) அத்துவிதப்பொருளு மவனே - ஸர்
வாந்தரியாமியு மவனே - மேலாம்
முத்தொழில் செய்பவனுமவனே - மறை
முடிவிலுறைபவனு மவனே - இப்போ
சித்திதரும்ஷண்முகத் துடனவதரித்து
திடப்பதினொருவராம் படைக்கலந்தரித்து
ஒத்துவந்திருப்பதை உகந்தனுசரித்து
உணர்ந்தவனடிசென்று பணிந்தின்றுபசரித்துப் (பிழைக்கும்)

வீரபாகுதேவர் சொன்ன புத்திமதியைச் சூரன் கேளாது வீரனைப்பிடிக்க அசுரரை ஆக்ஞாபிக்க அவர்களை யழித்து வீரன் விண்ணிற்செல்ல அங்குவந்து எதிர்த்த சதமுகனைச் சங்கரித்தல.

விருத்தம்.

காஞ்சிரங்காய்க் கமுதூட்டிச் சமைத்திட் டாலுங்
கடுங்கசப்பு மாறாத தன்மை போலும்
நீஞ்சறியா தவனைவெள்ளங் கொண்டு போதல்
நிலைவரமா மெனவுரைக்கு நியமம் போலும்
பூஞ்சரவ ணக்குமரன் றூதுவன் சொன்ன
புத்தியெலாஞ் சற்றுமவன் செவிக்கொ ளாம
லீஞ்சிமுள்ளூத் தைத்ததெனு வசுரரைப் பார்த்
தெட்டென்றான் பிடித்திவனைக் கட்டென் றானே (௰அ)

(௰௬) கீர்த்தனை. இராகம் - பைரவி—ஆதிதாளம்.

(௧) பிடிக்கச்சொல்லியுத்தரங் - கொடுத்தவுடனாயிரம்
பேர்களெழுந்துசினம் விளைத்தாரே - வம்பு
படித்துநெருங்கிக்கடு - கடுத்துவீரனிருக்கும்
பத்ராசனத்தைச்சுற்றி வளைத்தாரே

(௨) சுற்றிவளைந்தசுரர் - பற்றியிழுத்திடலுஞ்
சுயவீரன்விழிக்கனல் பொடித்தானே - பருங்
கத்திகொண்டு வீசிச்செ - குத்துச்சபையில்ரத்தக்
கணரிசித்தவவரை மடித்தானே

(௩) துடிக்கவாயிரத்தோரை - மடித்திட்டெதிரிருக்குஞ்
சூரனைநோக்கிமனஞ் சீறியே - ஞாய
மெடுத்துச்சொல்லியுங்கேளாப் - பாவி நீயையன்வேலுக்
கிரையாய்விடுவாயென்று கூறியே

(௪) பாரிலிருந்து விண்ணில் - வீரவாகுவுமேகப்
பத்ராசனமும் விண்ணின் மேவவே - கண்டு
கோரன் சதமுகனை - நோக்கித் தனைக்கட்டிக்
கொண்டுவாவென் றுசூர னேவவே

(௫) சூரரிலக்கம் பேர்கள் - தேர்கரிகள்பரிகள்
சூழச்சதமுகன்போய் மறித்தானே - அதி
தூரணபாகக்கணை - நூறுநூறாயிரங்கள்
தொடுத்து வீரன்மேல்விழத் தெறித்தானே

(௬) தெறித்தகணைகள்தீர - னூரத்திற்படவேதூளாய்த்
தெறிக்கத்திகைத்தசுர னின்றானே - வீரன்
திறத்தோடாயிரமோ - சனைமாளிகையைப்பறித்
தெறிந்திலக்கம் பேர்களைக் கொன்றானே

(௭) இலக்கம்பேர்களுமடிந் - திடக்கண்டுசதமுக
னெழுந்து சினந்து பல்லைக் கடித்தானே - என்ற
னிலக்காயுன்றனை நமன் - றனக்கிரை செய்வேனென்று
பிரங்கணையசுரன்விட் டடித்தானே

(௮) விட்டகணைகள்பொடி - பட்டுநொறுங்கும்படி
விசைக்கரத்தினால்வீரன் தாக்கினான் - பின்னும்
பொட்டெனவோடியந்தத் - துட்டன்வில்லையும்புப்
புட்டிலனைத்துந்தூ ளாக்கினான்

(௯) முறித்தவுடன்மறுவில் - எடுத்திடக்கண்டதையு
முனைவீரன்பாய்ந்துபறித் தெழுந்தானே - ஓங்கிக்
கரத்திலேந்தவில்லைக்கொண் - டடித்தவுடனே மண்ணைக்
கவ்விக்கொண்டசுரனும் விழுந்தானே

(௰) விழுந்தவன்மறுபடி - எழுந்திடவே முதுகில்
வீரவாகு தேவன்போய்க் குதித்தானே - முன்னம்
அழுந்தமுயலகன்மே - லுவந்து நடனஞ்செய்த
அரன்போலவே நடித்து மிதித்தானே

(௰௧) உன்னிவீரன் மிதிக்கச் - சென்னி நூறுகசங்கி
உதிரஞ்சதை வெவ்வேறாய் விண்டானே - சந்தும்
பின்னுஞ்சையன்றிச்சேனை - தன்னுடன் சதமுகன்
பெருமையழிவதைக் கண்டானே

(௧௨) எதிரிலக்கம் பேரையுஞ் - சதமுகன்றனையுங்கொன்
றிகல்வீரன் கந்தன்பதந் துதித்தானே - மனம்
பதையா மலின்னஞ்சண்டைக் - கெதிர்வருவோரை நோக்கிப்
பாலசூரியன் போலொளி கதித்தானே.

மறுபடியும் வீரவாகுதேவர் அந்நகர்க்காவல் செய்த ஐம்பது வெள்ளம் யுத்தவீரரையும் கொன்று நகரை இடித்தழித்தல்.

விருத்தம்

சதமுகனைக் கொன்றுதிரி விகர மனைப்போற்
றாரணியு மாமையுஞ்சே டனுந்தாங் கொண்ணுப்
பதமிரண்டோ டெழில்விசுவ ரூபங் கொண்டு
பதிக்காவற் சேனையைந்து பத்து வெள்ளங்
குதியுடன்வந் ததாதையும் கொன்று வீரன்
குலவியங்கோ ராயிரம்யோ சனைவித் தார
மெதிர்கொள்சபா மண்டபமா நகரம் யாவு
மடிக்கின்றான் மனக்கறுவ முடிக்கின்றானே. (௰௯)

(௰௭) கீர்த்தனை. இராகம் - தோடி — ஆதிதாளம்.

பல்லவி.

அடித்து மண்டபங்களை - இடித்து நகர்முழுது
மடித்தானே வீரன்

அநுபல்லவி.

முடித்தலையசுரன்றன் - கெடித்தல முதற்றளாய்ப்
பொடித்துக்கர்ச்சித்துநொடி - நொடித்துப்படித்துக்கொண்டான் (அடித்து)

சரணங்கள்.

(௧) நவமணியிழைத்த சிகரங்களும் - சாமபூ
நதமயமாகிய கோபுரங்களும் - விண்ணு
லவுமுபரிகையன் சாளரங்களும் - திவ்ய
லாவண்யமாகிய மந்திரங்களும் - சூரன்
தவளைந்தர்மனையுமு பானங்களும் - யாக
சாலைமண்டபங்கள் தானங்களும் - அங்குங்
குவிநிறையாகியசோ பானங்களும் - பெருங்
கோயின்மண்டபங்கள்வி மானங்களும் - கண்

டவசியமாக விரைந் தோடியே - தொட்
டலைத்தலைத்துப்பிடித்துச் சாடியே - மனத்
துவகைமிகுந்துகவி பாடியே - வானி
லுரங்கொண்டெழிந்தம்பரனை யாடியே - கையா
லுடைத்து நீறு நீறாக்கி
துடைத்து நின்றெதிர் நோக்கி
நடுக்கடலினிற் போக்கி
மடித்துத்திடல தாக்கி (அடித்து)

(உ) பணிநவமணி யாடகங்களுட - வைக்கும்
பண்டகசாலையும் பெட்டகங்களும் - சுப
மணவறைகளுஞ்செய பொன்னகங்களும் - துன்
மந்திரிகள்வசிக் குங்கிரகங்களும் - பகுந்
தணியணியாகத்தகத்தி நறுக்கியே - மிக
அதவகுதலுஞ்செய்த நொறுக்கியே - ஆ
வணங்களையுஞ்சூறையிட் டுறுக்கியே - நெரு
மசுரர்கள் தலைகிறு கிறுக்கியே - விழத்
துணிவுடனே பலங்கொண் டுதைத்திடவே - பலர்
துணுக்குத்துணுக்காயுடல் சிதைத்திடவே - சில
உணர்வுகளின்றியுயிர் வதைத்திடவே - சில
ருடல்கரங்கள் போயுளம் பதைத்திடவே இன்னம்
உக்கிரவேலன் பதத்தி
னைக்கருதியே கரத்.,
னிற்குலிசவாள்கொண் டெற்றி
சக்ரவாணம்போலே சுற்றி (அடித்து)

(ங) தேர்பரிகரிகளை யடைக்கவே - ஓசை
திக்கயங்கள் செவியை யடைக்கவே - நக
ரூர்முழுதும் பொட்டலாயத் துடைக்கவே - விழுந்
துளைந்தசுரர்கள் நெஞ்சம் புடைக்கவே - சிலர்
சீர்குலைந்து விழிகள் பிதுங்கிடவே - சிலர்
சிலையடிபட்டுடல மதுங்கிடவே - சிலர்
சிரிகண்டபாய்புபோற் பதுங்கிடவே - சிலர்
கெளிபிடித்தலமலக் தொதுங்கிடவே - சிலர்

பார்மலைவரைசென்று சுழப்பவரும் - சிலர்
பறக்கபறக்க நின்று விழிப்பவரும் - சிலர்
சூரன்றனையிகழ்ந்து பழிப்பவரும் - சிலர்
துறவிபோலுயிராசை யொழிப்பவரும் - ஆகத்
தொலைத்துறும்ப தட்டி
மலைத்தோடவே விரட்டி
பலத்தபுயத்தைத் தட்டி
அலைத்துக்கெக்கலி கொட்டி (அடித்து)

(௪) கருக்கொண்டல் கருத்த கணங்களும் - அஞ்சு
கங்கள்முதற்பறவை யினங்களும் - தங்கு
பருத்திகழகிலுஞ் சந்தனங்களும் - செழு
மலர்பலசெறிந்த நந்தனங்களும் - மா
மருக்கைகதலிக் கனிப்பாலைகளும் - பெண்கள்
மகிழ்ந்துபந்துபயிலு மாலைகளும் - குளிர்ச்
திருக்குஞ்சண்பகமலர்ச சோலைகளும் - வீதி
இருபுறங்களுநிறை சாலைகளும் - எட்டி
முறித்துமுறித்துவிழுத் தாட்டியே - அண்ட
முகட்டிலுலவும்படி கூட்டியே - பஞ்ச
தருக்கள்கண்டு மகிழ் காட்டியே - நகர்த்
தலமெங்கிலும்பரவ வோட்டியே - மிகத்
தட்டுண்ட சுரர்கள் திறந்
கெட்டுதென் றுடலுதற
முட்டுண்டு சூரன்பதறப்
பட்டினங் கேகாரகதற (அடித்து)

பிறகு வீரன் வசிரவாகுவை வதைத்தல்.

விருத்தம்

சர்வபவாநகர்முழுது மழித்து சேர்ந்த
சகத்திரவா குவர்க்கமா யிரம்பேர் தம்மை
விண்ணவின்மரா மரமதனைப் பிடுங்கி வீசி
விரட்டியடித் தவர்களையு மடித்த செய்தி
கரிமுகனைன் கேட்டுமனந் துடிக்கும் போது
கதிகொள்பரி ஞயிரங்கள் துகில்கள் பூண்ட
இரதமிசை யேறிவச்ர வாகு வன்வந்
தெதிர்த்திட்டான் வீரனைப்பார்த் ததிர்த்திட் டானே (௨௧)